இலட்சிய நோக்கம் - தீர்க்க தரிசனம்
அற்புதச் செயல்திறம்!

# புரட்சித்தலைவியின்

# ஈராண்டுப் பொற்கால ஆட்சியில்

## மக்கள் போற்றும், மகத்தான சாதனைகள்












# தமிழரசு

16.6.1993 & 1.7.1993 ரூ 6









பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR/2687/MS/92/CHARI
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

ஆனித் திங்கள் - 2, 17

மலர்:24 இதழ்: 1,

16-6-1993 இதழும் 1.7.93

இதழும் இணைந்தது

விலை: ரூபாய் ஆறு




## 24-வது ஆண்டில் 'தமிழரசு'

'தமிழரசு 24-வது ஆண்டில் அடி யெடுத்து வைக்கிறது. அரசின் அறிவிப் புகள், ஆக்கப்பணிகள், சாதனைகள் குறித்த செய்திகள், தமிழ்ச் சான் றோர்கள், தேசத் தலைவர்கள் ஆகி யோரின் வாழ்க்கை வரலாறுகள், அறிவியல் புதுமைகள், கவிதை மாலைகள், மாணவர்க்குரிய கட்டுரை, கவிதைகள் என இப்படிப் பல்வேறு பயனுள்ள எழுத்தோவியங்களை வழங் கித் தொண்டாற்றி வருகிறது 'தமிழரசு'.

அரசின் சார்பில் நடத்தப் பெறும் ஏடு என்ற போதிலும், பொதுமக்கள் விரும்பிப் படிக்கும் பொலிவு மிக்க ஏடாகத் தமிழரசு விளங்கி வருகிறது. ஆம். படிக்க-பயன்பெற- பாதுகாக்கத் தக்க வகையிலே மிக்க கவனத்துடன் தயாரிக்கப்படுகிறது.

'தமிழரசு' இதழுக்குத் தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் வாசகர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், சந்தா தாரர்கள், முகவர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எங்களது மனம் கனிந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகிறோம்.

- ஆசிரியர்.

## தமிழ்நாடு அரசின் ஈராண்டுச் சாதனைகளை விளக்கும் சிறப்புக் கட்டுரைகள்- செய்திகள்...



# பொற்கால வரலாறு உருவாக்குவோம்!

தமிழகச் சரித்திரத்தில்
புரட்சித் தலைவர் வழியில்
ஒரு நல்லரசு,
பொற்கால வரலாறு ஒன்றை உருவாக்கியது
என, நிகழ்காலத்தில் மட்டுமல்ல ;
வருங்காலத்திலும் வரலாறு நமக்கு
வாழ்த்துப்பா பாடிடும் அளவுக்கு
நமது இலக்கினை அடையத்
தொடர்ந்து பணிபுரிவோம்!

'அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்துக் குவியும் கடல்கள்
முகிலும், செந்நெல்லும் முழங்கு நஞ்செய்
முல்லைக் காடு மணக்கும் நாடு'
எனப் பாவேந்தர் விரும்பிய நல்ல நாடாகத்
தமிழகத்தைத் திகழ்ந்திடச் செய்வோம்!

அச்சீர்மிகு திசைநோக்கி,
தமிழகத்தை அழைத்துச் செல்ல
தமிழகம் முழுவதும் உள்ள
சான்றோர்கள், ஆன்றோர்கள்
அனைவரது நல்லாதரவையும்
வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

# நிதி நிர்வாகம் நிறைவேற்றிய திறன்மிகு சாதனை



மாண்புமிகு நிதியமைச்சர்

## டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

**1992-93-ஆம் ஆண்டு திட்டச் செலவுகளுக்கு ரூ.1,751 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபோதிலும், திட்டச் சாதனையாக ரூ.1,900 கோடி அளவுக்கு எட்டியது. இது, ஒப்புதல் அளிக்கப்பட்டத் தொகையைவிட ரூ.149 கோடி கூடுதலான சாதனையாகும்.**



**1991**-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் பொதுமக்களின் அன்பையும், ஆதரவையும், நம்பிக்கையும், நன்மதிப்பையும் பெற்று, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மாபெரும் வெற்றியை ஈட்டியது. அதன் காரணமாக, அது ஆளும் கட்சியாகும் தகுதியைப் பெற்றது. அதனையொட்டி, 1991, ஜூன் 24-ஆம் நாள், மாண்புமிகு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழக ஆட்சிப் பொறுப்பை மிகச் சிறப்பாக ஏற்றார்கள். 1993, ஜூன் 24-ஆம் நாளோடு, மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சி ஏற்பட்டு இரண்டு ஆண்டுக்காலம் வெற்றிகரமாக ஓடி விட்டது. இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சி செய்த சாதனைகள் அளப்பரியனவாகும்.

ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்டபோது, ஏற்பட்டிருந்த பல்வேறு நெருக்கடிகளைச் சமாளிக்க வேண்டிய அவசியம், மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுக்கு ஏற்பட்டது. அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது, சுமார் ரூ.900 கோடி அளவுக்கு நிதி நெருக்கடி நிலைமை நிலவி வந்தது. மதுவிலக்குக் காரணமாக ரூ.320 கோடி இழப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இவற்றின் காரணமாக மொத்தப் பற்றாக்குறை ரூ1220 கோடி அளவுக்கு ஏற்பட்டிருந்தது. அதனைச் சமாளித்து, 1991-92-ஆம் ஆண்டு, பற்றாக்குறையைச் சுமார் ரூ.600 கோடி அளவுக்குக் கொண்டுவந்து நிறுத்திய பெருமை மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் அரசைச் சார்ந்ததாகும்.

மிக நெருக்கடியான நிதிநிலை இருந்த போதிலும், அதனை அரசு சமாளிக்குமா? என்ற ஐயப்பாடு ஏற்பட்டபோதிலும், அரசு திட்டச் செலவுகளுக்கு, ரூ.1,605 கோடி ஒதுக்கியது. கடுமையான நிதி நெருக்கடி நிலைமை இருந்தபோதிலும், 1991- 92-ஆம் ஆண்டு திட்டச் சாதனை, ரூ.1,725 கோடி அளவுக்கு எட்டியது. இது ரூ.420 கோடி அளவுக்குக் கூடுதலான சாதனை

யாகும். 1992-93-ஆம் ஆண்டு திட்ட செலவுகளுக்கு ரூ.1,751 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபோதிலும், திட்டச் சாதனையாக ரூ.1,900 கோடி அளவுக்கு எட்டியது. இது ஒப்புதல் அளிக்கப்பட்டத் தொகையைவிட ரூ.149 கோடி கூடுதலான சாதனையாகும்.

இந்தியாவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டைக் காட்டிலும் அதிகமாக திட்டச் சாதனையைப் புரிந்துள்ள ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடு முன்னோடியாக இருந்து வருகிறது. அதேபோல, ஏழை எளிய மக்களின் நலன்களுக்கான, திட்ட நிதி ஒதுக்கீட்டில் எவ்விதக் குறையும் ஏற்படாமல் பாதுகாப்பதில், இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருந்து சிறப்பான வெற்றியைப் பெற்றுள்ளது. இந்த அரசு ஏழை எளிய மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை விரைவான முறையிலும், சிறப்பான வகையிலும், செம்மையாகச் செயல்படுத்தி வந்துள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவியின் அரசு பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்னால் இருந்து வந்த நிலையைக் காட்டிலும், இந்த இரண்டாண்டுக் காலத்தில், எல்லாத் துறைகளிலும் முன்னேற்றச் சாதனைகள் பலவற்றைச் செய்திருக்கிறது.

கல்வித் துறை செலவினங்களை ரூ.1,284 கோடியிலிருந்து, ரூ.1,820 கோடிக்கும், மருத்துவம், சுகாதாரம் பற்றிய பணிகளுக்கு ரூ.379 கோடியிலிருந்து, ரூ.557 கோடிக்கும், குடிநீர் வழங்கல் பணிகளைப் பொறுத்து ரூ.139 கோடியிலிருந்து, ரூ.205 கோடிக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியிர் பணிகளைப் பொறுத்து ரூ.132 கோடியிலிருந்து, ரூ.183 கோடிக்கும், சமூகப் பாதுகாப்பு நலனைப் பொறுத்து ரூ.139 கோடியிலிருந்து, ரூ.440 கோடிக்கும், சத்துணவு திட்டப் பணிகளைப் பொறுத்து ரூ.235 கோடியிலிருந்து, ரூ.312 கோடிக்கும், ஏனைய சமூகப் பணிகளைப் பொறுத்து ரூ.263 கோடியிலிருந்து, ரூ.440 கோடிக்கும், வேளாண்மைத் துறையைப் பொறுத்து ரூ.339 கோடியிலிருந்து, ரூ.637 கோடிக்கும், சாலைகள், பாலங்கள் பொறுத்து, ரூ.139 கோடியிலிருந்து, ரூ.236 கோடிக்கும், நுகர்பொருள் வழங்கத் துறையைப் பொறுத்து ரூ.270 கோடியிலிருந்து, ரூ.527 கோடிக்கும், இப்படியாக எல்லாத் துறைகளிலும் சாதனைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பெரும் நிதிப் பற்றாக்குறையை எதிர்நோக்கும் தமிழ்நாடு, கடந்த இரண்டாண்டுகளில் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் பெரும் சாதனைகளைப் புரிந்துள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் சிறு சேமிப்புத் துறையைப் பொறுத்து, ரூ.581 கோடி, முன்பெல்லாம் எப்போதும் இல்லாத வகையில் திரட்டப்பட்டுள்ளது. மத்திய அரசு வருமான வரிச் சலுகைகளைத் திரும்பப் பெற்றபோதிலும், சிறுசேமிப்பில், நடவடிக்கைகளை மிகத் திறமையாக மேற்கொண்டதன் காரணத்தினால் 1992-93-ஆம் ஆண்டில் ரூ.551 கோடி வசூல் செய்துள்ளது.



கடந்த இரண்டாண்டுகளில், மிகப் பெரிய அளவில் வரிச் சீரமைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1993-ஆம் ஆண்டு விற்பனை வரிச் சீரமைப்பு, 1959-ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு, செய்யப்பட்ட, மிகவும் நுணுக்கமான, விரிவான சீரமைப்பாகும்.

வணிக வங்கிகளோடு மிகத் திறமையாகத் தொடர்பு கொண்டு செயலாற்றியதன் பயனாக 1991-92-ஆம் ஆண்டில் முன்னுரிமைத் துறைகளுக்கு முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு ரூ.2,070 கோடியும், 1992-93-ஆம் ஆண்டில் ரூ.2,250 கோடியும் கடன்களாக வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய தலைமையின் கீழ் இயங்கிவரும் தமிழக அரசு பாராட்டத்தக்க வகையிலும், போற்றத் தக்க வகையிலும், நிதி நிருவாகத்தை மிகத் திறம்பட நிறைவேற்றி வருவது என்பது மகிழ்ச்சிக்கும், பாராட்டுதலுக்கும் உரிய செய்தியாகும்.

# நீதி பரிபாலனத்தில் புதிய சகாப்தம்

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்

## திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி

**டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டு களில் 27 புதிய நீதிமன்றங்கள் அமைக் கப்பட்டுள்ளன.**

**நலிந்த பிரிவினர் - தாய்மார்கள் - ஏழை எளிய மக்களுக்கு விரைவாக - சிக்கனமாக எளியமுறையில் நீதி கிடைக்க வேண்டும் என்பதே டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய வழிகாட்டும் நெறி.**

''சட்டம் என்பது நாகரிக சமூகத்தின் அடையாளம். மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ள உருவாக்கியிருக்கும் ஏற்பாடு தான் சட்டம்'' என்று பேரறிஞர் அண்ணா கூறினார்கள்.

சட்டம் என்பது மனித சமூ கத்தை ஒழுங்குபடுத்தும் கருவி. முறைப்படி எல்லாம் நடக்கவேண்டும் என்பதற்கான வழிவகைகளைச் சட்டம் தருகிறது.

எனவே, சட்டத்தின் ஆட்சி என்றுதான் நவீன கால ஆட்சி முறையைக் கூறுகிறோம்.

சட்டம் வகுத்துக் கொடுத்துள்ள வழியில் சமூகம் நடைபோடுகிறதா என்பதைக் கண்காணிக்கவும், சட்டத் துக்கு மாறாகவும் எதிராகவும் நடந்து சமூகத்திற்குக் கேடு ஏற்படுத்து வோரைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் ஆன கடமையைப் புரிவதே நீதித் துறையின் பொறுப்பு.

ஆக, ஜனநாயகத்தின் மிக முக்கியமான பொறுப்பு சட்டத்துறை யிடமும் – நீதித்துறையிடமும் விடப் பட்டுள்ளது.



இந்தப் பொறுப்பினை உணர்ந்து செயல்பட வேண்டிய இத்துறைகள் சமூக நீதிக்கும் இடம் தரவேண்டும். குற்றமிழைப்போர் திருந்திடவும் தண்டனை பெறுவோர் மறுவாழ்வு பெறவும் சீரிய முயற்சிகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

மேலே கூறப்பட்ட சீரிய குறிக் கோள்களைக் கொண்டு சட்டம் நீதித்துறைகளின் செயல்பாடுகளை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர் களுடைய அரசு நடத்தி வருகிறது.

''நீதி கிடைக்கவேண்டும், அது வும் தாமதமின்றி - விரைவாக வழங்கப்பட வேண்டும். செலவின்றி எளிய முறையில் ஏழைகளும் பெறு கின்ற வகையில் நீதி வழங்கப்பட வேண்டும்''.

-என்பதே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசின் குறிக்கோள் ஆகும்.

அவ்வகையில் சட்டம், நீதி ஆகிய துறைகளின் நிர்வாகத்தில் - புதிய பெரிய சாதனைகளை டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசு நிகழ்த்திக் காட்டியிருக்கிறது.

இந்தக் குறிக்கோளுக்கு ஏற்ப நீதி மன்றங்களுக்கான வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

நீதித்துறைக்கான நிதி ஒதுக்கீடு கூடுதல் ஆக்கப்பட்டுள்ளது. நீதிபதி களின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி களின் எண்ணிக்கையை 28-லிருந்து 32 ஆக உயர்த்திட மத்திய அரசிடம் வாதாடி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும், நீதிமன்றங்களில் உள்ள காலியிடங்களை நிரப்ப உயர் நீதி மன்றமும் அரசும் தீவிர நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளன. பல்வேறு மட்டங்களில் புதிய நிய மனங்களும், பதவி உயர்வுகளும் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத் தப்பட்டு வருகின்றன.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்

பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டுளில் 27 புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாகத் தென் மாவட்டங்களில் இருக்கும் மக்கள், மாவட்ட நீதிமன்றங்களை நாட மதுரைக்கு வரவேண்டிய நிலைமை நீண்ட நெடுங்காலமாக இருந்தது. அந்த நிலையை மாற்றி தூத்துக்குடி, நெல்லை, ஸ்ரீவில்லிபுத்தூர், இராமநாதபுரம் உள்ளிட்ட பல இடங்களில் மாவட்ட நீதிமன்றங்களை அமைத்தது டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசின் தனிப்பெரும் சாதனையாகும்.

மேலும் பல இடங்களில் சப் கோர்ட்டுகள் அமைத்து, மக்களுக்கு அதிக சிரமம் இன்றி நீதி கிடைக்கச் செய்திருப்பதும் இந்த அரசுதான்.

அதுமட்டுமன்றி தொழில் தகராறுகளை விசாரிக்க ஐந்து தொழிலாளர் நீதிமன்றங்களை சேலம், நெல்லை, திருச்சி, கடலூர், வேலூர் ஆகிய இடங்களில் இந்த அரசு நிறுவியுள்ளது.

நவீன சமூகத்தில், குடும்பங்களில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கும் குடும்ப நீதிமன்றத்தைச் சென்னைக்கு அடுத்தபடியாக மதுரையிலும் இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது.

மலைவாசிகள் பழங்குடி மக்கள் பயன்பெற்றிட கொடைக்கானல், கோத்தகிரி ஆகிய இரு நகரங்களிலும் இரண்டு நீதிமன்றங்களை இவ்வரசு அமைத்துள்ளது.

இவை தவிர சந்தனக்கட்டை கடத்தல் வழக்குகளை விசாரிக்க வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம் திருப்பத்தூரில் ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட்டது. இதேபோன்று சேலத்தில் ஒரு நீதிமன்றம் அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்புக்கு எதிரான குற்றங்கள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளை விசாரிக்கவும் இத்தகைய செயல்களில் ஈடுபடுவோரை அடைத்து வைக்கவும் தமிழக அரசு பல முக்கிய நடவடிக்கைகளை மிகக் கருத்தோடும் கவனத்தோடும் செயல்படுத்தி வருகிறது.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் பூவிருந்தவல்லியில் ஒரு தனித்தன்மை வாய்ந்த நீதிமன்ற வளாகம்-விசேட சிறை - இவை ரூ.49 இலட்சம் செலவில் மிகக் குறுகிய காலத்தில் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது.

பயங்கரவாதக் குற்றங்களை விசாரிக்கவும் தனித்தன்மை வாய்ந்த நீதி அமைப்புகளைத் தமிழக அரசு நிறுவியிருக்கிறது.

இதேபோல சென்னை உயர்நீதிமன்றம் தொடங்கி பல்வேறு மாவட்டங்களில் உள்ள நீதிமன்றங்கள் வரை பல இடங்களில் புதிய கட்டடங்கள் தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்றன.

சட்டத்தின் பயன் ஏழைகளுக்கு, நலிந்த மக்களுக்கு, ஏழைத்தாய்மார்



களுக்கு எளிதில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதில் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருவதற்கு ஏராள சான்றுகள் உள்ளன.

அவற்றில் ஒன்றுதான் முற்றிலும் பெண்களைக் கொண்டு இயங்கும் காவல் நிலையங்களை அமைத்திருப்பது ஆகும். சென்னையில் ஆயிரம் விளக்கில் அமைந்துள்ள மகளிர் காவல் நிலையம்-தாய்மார்களுடைய குறைகளைத் தீர்ப்பதிலும் - பெண்களுக்குப் பாதுகாப்பு நம்பிக்கை இவற்றை அளிப்பதிலும் வழிகாட்டியாக, முன்னோடியாகத் திகழ்கிறது.

இதேபோன்று மாவட்டத் தலைநகரங்களில் முழுவதும் பெண் காவலர்களைக் கொண்ட காவல் நிலையங்களை அமைத்திட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

இதன்வாயிலாக - நலிந்த பிரிவினருக்கு, குறிப்பாக ஏழைத் தாய்மார்களுக்கு உடனடித் தீர்வுகள் கிடைக்க வழி ஏற்படும்.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய சிறப்புமிக்க ஆட்சியின் மற்றுமொரு முனைப்புத் திட்டம் நீதித்துறையில் பணியாற்றுகிறவர்களுக்குப் பயிற்சி வழங்கும் திட்டமாகும்.

மக்கள் தொகைப் பெருக்கத்தினாலும் பல்வேறு நிலவரங்கள் சூழ்நிலைகள் காரணமாகவும் கிரிமினல் குற்றங்களின் விசாரணைகள் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுவிட்டன. எதேச்சையான செயல்கள் நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது-எவரும் விரும்பாத வகையில் குற்றவாளிகள் தப்பிவிட நேரலாம்.

இந்த நிலையைத் தடுக்க - சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குற்றங்களைப் பதிவு செய்யும் காவல்துறையினர் - வழக்குகளை நடத்தும் அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள் - வழக்குகளை விசாரிக்கும் பல்வேறுமட்ட நீதிபதிகள் ஆகியோருக்குப் பல நடைமுறைகள், இப்பயிற்சியின் வாயிலாக விளக்கப்படுகின்றன.

சட்டத்தின் தன்மை - சட்டத்தின்

வரம்பு - தண்டனைகளின் விவரம் நீதிமன்ற வரம்புகள் இவைபற்றி முழு அளவு தகவல் தெரிந்துகொண்டால் வழக்குகளைப் பதிவு செய்வது, விசாரிப்பது,

வழக்குத் தொடுப்பது
வாதாடுவது
தீர்ப்புக் கூறுவது

ஆகிய பல நிலைகளில் விவரமான முறையில் - செம்மையாகவும் சிறப்பாகவும் செயல்பட முடியும். வழக்குகள் தள்ளுபடி என்ற நிலையோ - சட்டத்தின் சந்துபொந்துகளைப் பயன்படுத்திக் கொண்டு குற்றவாளிகள் தப்பிக்கும் நிலையோ ஏற்படக்கூடாது என்பதில் இன்றைய தமிழக அரசு மிகத் தீவிரமான கவனம் செலுத்திவருகிறது.

அடுத்து நீதித்துறையின் செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடு இதுவரை திட்டமில்லாத செலவாகக் கணக்கிடப் பட்டு வந்தது.

மக்களின் அன்றாடத் தேவைகள் மற்றும் ஆதாரத் தேவைகள் போல நீதி பரிபாலனமும் ஒரு இன்றியமையாத துறை; எனவே, இதற்கான நிதி ஒதுக்கீட்டையும் திட்டம் சார்ந்த செலவாகவே கணக்கிட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தொடர்ந்து வாதாடி வலியுறுத்தினார்கள். இதன் பயனாக நீதித் துறைக்கான நிதி ஒதுக்கீடும் திட்டம் சார்ந்த செலவாக இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இது டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசின் பெரும் வெற்றியாகும்.

இந்த வெற்றியின் அடிப்படையில் 8-வது ஐந்தாண்டுத்திட்டத்தின் எஞ்சியுள்ள 4 ஆண்டுகளுக்கு என ஒரு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மைய அரசுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. நீதிமன்றங்களின் மேம்பாட்டுக்கென ரூ.123 கோடிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டு மைய அரசிடமிருந்து 50 சதவிகித உதவித் தொகை பெறவாய்ப்பாக இந்த முயற்சி அமையும்.

அப்படி அமையும்போது நீதிமன்றத்துக்குத் தேவைப்படுகிற அனைத்து வசதிகளையும் செய்ய இயலும் - நீதிமன்றத் துறையில் ஒரு புதிய சகாப்தம் எழுந்திடும்.



சட்டத்தில் பெண்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டு இருந்தபோதிலும், தனிப்பட்ட தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, அவர்கள் காவல் நிலையத்தை அணுகுவது அரிது. ஏனெனில், ஆண்களே பெரும்பாலும் பணிபுரியும் காவல் நிலையங்களில், தங்களது சோகக் கதையை, வெளிப்படையாக ஒளிவு மறைவின்றி எடுத்துச் சொல்லத் தயங்குகிறார்கள். எனவே, அங்கு செல்வதையே தவிர்க்கிறார்கள். எனவே, தலைவிதி இதுதான் என்று நொந்து, தங்கள் வாழ்க்கையைத் தொடர்கிறார்கள். இந்த அவல நிலையைப் போக்க வேண்டுமென்று எங்கள் அரசு கொண்டுள்ள எண்ணத்தின் வெளிப்பாடாகத் தான் 'மகளிர் காவல் நிலையங்கள்' உருவாக்கப் பட்டுள்ளன.

சிறைத்துறை நிர்வாகத்தைப் பொறுத்தவரை - கைதிகளாகச் சிறைக்குள் வருகின்றவர்கள் - தண்டனை முடிந்து வெளியேறிய பிறகு திருந்தி வாழ வாய்ப்புத் தரவேண்டும் என்பதே டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியின் கொள்கை.

சிறைகளை நவீன மயமாக்கல், கண்காணிப்புகளைப் பலப்படுத்துதல்- சிறை அலுவலர், ஊழியர் பணிகளைச் செம்மைப்படுத்துதல் - கைதிகளின் தேவைகளை மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் கவனித்தல் இவையெல்லாம் இந்த அரசின் சீரிய செயல்பாட்டுத் திட்டங்கள் ஆகும்.

பல்வேறு அடிப்படைகளைப் பரிசீலனை செய்த பிறகு - தண்டனைக் காலம் - குற்றங்களின் தன்மை - சிறையில் நன்னடத்தை - போன்ற பல அம்சங்களைச் சீர்தூக்கிப் பார்த்த பிறகு கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு (மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்த நாள் விழாவை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு) விடுவிக்கப் படுகிறார்கள். இது ஒரு குறிப்பிடத்தக்க மனிதாபிமான நடவடிக்கையோடு மட்டுமின்றி, சிறைவாசம் என்கிற பெயரில் ஒரு தீயநிழல் கைதிகளின் வாழ்வில் படிந்துவிடக் கூடாது என்கிற நல்லெண்ண வெளியீடு ஆகும்.

சிறையில் இருந்து வெளியேறும் கைதிகளுக்குத் தொழில் செய்யக் கருவிகள் வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோலக் கைதிகளின் மறுவாழ்வுக்கு இந்த அரசு ரூபாய் பத்து இலட்சம் ஒதுக்கி சாதனை புரிந்துள்ளது.

இப்படி நீதிபரிபாலனம் சட்ட அமல் - சிறை போன்ற - பல்வேறு துறைகள் சமூக நீதி - மனிதாபிமானம் ஆகிய குறிக்கோள்களுடன் செயல்பட்டு வருகிறது.

நலிந்த பிரிவினர்-தாய்மார்கள்- ஏழை எளிய மக்களுக்கு விரைவாக- சிக்கனமாக எளிய முறையில் நீதி கிடைக்க வேண்டும் என்பதே டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய வழிகாட்டும் நெறி.

அந்த நெறியினைப் பேணிடும் வண்ணம் கடந்த இரண்டு ஆண்டுகளில் நீதிபரிபாலனத்துறை, சட்டத் துறை, சிறைத்துறை இவற்றின் செயல்பாடுகள் சமூக நீதிக் கண்ணோட்டத்துடன் இயங்கி வருவது தமிழகமே பெருமைப்படக்கூடிய ஒன்றாகும். டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய தலைமையில் சட்டம் மற்றும் நீதிபரிபாலனத்துறையும் அகில இந்தியாவுக்கும் வழிகாட்டத்தக்க வகையில் வெற்றிகளைக் குவித்து புதிய சகாப்தத்தைப் படைத்து வருகிறது.

விளம்பர எண். 22/93

தமிழ்நாடு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி சார்நிலைப் பணியில் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் பயிற்சிப் பிரிவில் உதவிப் பயிற்சி அலுவலர் (சுருக்கெழுத்து- ஆங்கிலம்) பதவியில் இரண்டு காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினரிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் 12.7.1993 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப் படுகின்றன. (இந்த இரண்டு காலியிடங்களும் முன் தெரிவுகளில் நிரப்பப்படாத காலியிடங்களாகும்)

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.1600-50-2300-60-2660

**குறிப்பு:** இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள் அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டுத் தெரிவு செய்யப் படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**வயது:** 1.7.1993 அன்று 35 வயதிற்குக் குறைவாக. பட்டம்/புகுமுக வகுப்பு/மேல்நிலை வகுப்பு ஆகிய வற்றில் எந்தக் கல்வித் தகுதியேனும் பெற்றிருந்தால் அவர்களுக்கு வயது வரம்பு இல்லை. குறைந்தபட்ச பொதுக்கல்வித் தகுதியைக் காட்டிலும் மேற்பட்ட பொதுக் கல்வித்தகுதியைப் பெற்றிருக்காத விண்ணப்ப தாரர்களின் வயது வரம்பு ஐந்து ஆண்டுகள் உயர்த்தப்படும். (சலுகைகள் பற்றிய மேலும் சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.)

**தகுதி:** (3.6.1993 அன்றுள்ளபடி): கீழ்க் காண்பவை அல்லது அவைகளுக்கு இணையானவை.

1. Must have been declared eligible for admission to the College Course of study under the old 11 year schooling or must have been declared eligible for admission to the Higher Secondary course under the present 10 year schooling.

and

2. Must have passed the Government Technical Examination in Typewriting by the Higher Grade (English) and in Shorthand by the Higher Grade (English).

and

3. Must have passed the Government Technical Examination in Typewriting by the Lower Grade (Tamil) and in Shorthand by the Lower Grade (Tamil).

and

4. Must have experience as Stenographer in English for a period not less than two years.

Notes: (i) Other things being equalpref.erence will be given to candidates who posses teaching experience for a period of not less than one year.

(ii) Other things being equal preference will be given to candidates who have completed one year of Apprenticeship under the Government of India Scheme or one year training under the State Government Apprenticeship Scheme.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினரைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பிய வர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், பிணைத் தொழிலாளர்கள், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர் வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ள லாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.6.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவதொரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.6.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-600 006 ஆயிரம் விளக்கு, பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.



DIPR/929/MS/93

# வருவாய்த்துறையின் வளமான பணிகள்

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்

**திரு எஸ்.டி. சோமசுந்தரம்**

**அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போலவே, பணியில் இருக்கும்போதே இறந்த கிராம உதவியாளர் குடும்பங்களுக்குக் குடும்ப நல நிதி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. ஏழை எளியவர்களுக்கு, இலவசப் புடவை, வேட்டி வழங்கும் திட்டம், தமிழ்நாட்டில் முதன் முதலாக 1992-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 60 இலட்சம் பெண்களும், 60 இலட்சம் ஆண்களும் பயன்பெற்றனர்.**

**புயல் வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணப் பணிகள் செம்மையாக நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. நில ஆக்கிரமிப்புகளும் உடனுக்குடன் அகற்றப்பட்டு வருகின்றன...**



**மா**ண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டாண்டுக் காலங்களில், தமிழகம் பல்வேறு துறைகளில் முன்னேறி வருவதைப் பலரும் பாராட்டி வருகிறார்கள்.

குறிப்பாக, வருவாய்த்துறையின் அங்கங்களான வருவாய் நிர்வாகத் துறை, நில நிருவாகத் துறை, நிலச் சீர்திருத்தத் துறை, நில அளவை மற்றும் பதிவுருக்கள் துறை முதலானவை மக்கள் பணியில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு சிறப்பாகச் செயலாற்றி வருகிறது என்பதைப் பெருமையோடு குறிப்பிட வேண்டும்.

### வருவாய் நிர்வாகத்துறை

அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போலவே, பணியில் இருக்கும்போதே இறந்த கிராம உதவியாளர் குடும்பங்களுக்குக் குடும்ப நல நிதி ரூ.60,000 வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. கிராம ஊழியர்கள் இறந்த அன்றே அவர்களது ஈமக்கிரியைக்காக ரூ.2000 வழங்க வட்டாட்சியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கிராம உதவியாளர் பணிக்குப் பெண்களையும் நியமனம் செய்யலாம் என அரசு ஆணையிட்டுள்ளது. கிராம உதவியாளர்களுக்குப் பண்டிகை முன்பணம் ரூ.200-லிருந்து ரூ.300-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

கிராம உதவியாளர்களுக்குத் தற்போது வழங்கப்படும் ரூ.612 தொகுப்பூதியத்தை 1.7.92 முதல் 712 எனவும் 1.1.93 முதல் 745 மற்றும் அகவிலைப்படியாக ரூ.80-ஆக மொத்தம் ரூ.825 எனவும் உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

### வருவாய்த்துறை கட்டடங்கள்

நான்கு வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.8 இலட்சத்திற்கு, நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அவை:

காங்கேயம் வட்டம் .. (பெரியார் மாவட்டம்)
பென்னகரம் வட்டம் .. (தர்மபுரி மாவட்டம்),
கந்தர்வகோட்டை .. (புதுக்கோட்டை மாவட்டம்),
ஏர்க்காடு .. (சேலம் மாவட்டம்).

இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்ட ரூ.85 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அவை:

பரமத்தி வேலூர் .. (சேலம் மாவட்டம்), ராதாபுரம் (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்)

பரமக்குடி வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் (இராமநாதபுரம் மாவட்டம்) ரூ.33 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## வருவாய்த்துறை

தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் குடியிருப்பு மாளிகை முகாம் அலுவலகம் கட்ட ரூ.22.39 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டு உள்ளது. வருவாய் ஆய்வாளர்களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்ட நிர்வாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஐந்து வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டு உள்ளது.

இரண்டு வட்ட அலுவலகங்களுக்குப் புதிய அலுவலகக் கட்டடங்கள் ஒவ்வொன்றும் ரூ.46 இலட்சம் செலவில் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

கொடைக்கானல் கோட்டாட்சியருக்கும், பரமத்தி வேலூர் வட்டாட்சியருக்கும் குடியிருப்புகள் கட்ட ரூ.8.27 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டு உள்ளது.

திண்டுக்கல்லில் அரசு விருந்தினர் மாளிகை கட்ட அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம் அமைக்கும் பணிக்குச் சுமார் 30.34 ஏக்கர் புறம்போக்கு நிலத்தைப் பயன்படுத்திக் கொள்ள அரசு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் பெருந்திட்ட வளாகம் அமைக்கும் பணிக்கு சுமார் 137 ஏக்கர் பட்டா நிலம் 33 நாகூர் கிராமத்தில் கையகப்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## 1993-94-ஆம் ஆண்டுக்கான புதிய திட்டப் பணிகள் விவரம்

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.60 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி உள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை மற்றும் அரூர், நீலகிரி மாவட்டத்தில் கூடலூர், கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு ஆகிய இடங்களில் வட்ட அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.9.20 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி உள்ளது.

கோயம்புத்தூர் (வடக்கு), கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை, இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் ஆகிய இடங்களில் புதிய வட்ட அலுவலகங்கள் கட்ட ரூ.168 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி உள்ளது.

மலைப் பகுதிகளில் உள்ள கிராம நிருவாக அலுவலர்களுக்கு 25 குடியிருப்பு இல்லங்கள் கட்டுவதற்கு ரூ.50 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி உள்ளது.



**★ கடமைகளை இன்முகத்துடன் ஆற்றி உரிமைகளைப் பெற்றிடுவோம்! அமைதியும், ஒற்றுமையும் காத்து வளர்ச்சிக்கு வழி வகுப்போம்! புதிய சமத்துவ சமதர்ம அமைப்புக்காகத் தொடர்ந்து பாடுபடுவோம்!**

குறிப்பாகப் பெண் அலுவலர்கள் பயன்படுத்துவதற்காக அனைத்து வட்ட அலுவலகங்களிலும் கழிவறைகளைக் கட்டுவதற்காக ரூ.23 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி உள்ளது.

## மாவட்டப் பிரிவினை

அரசின் நலத் திட்டங்களின் பலன்கள் மக்களுக்கு விரைவில் கிடைத்திடவும், மக்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் இதர அதிகாரிகளை நேரில் சந்தித்து, தங்கள் குறைகளைத் தெரிவிக்க அதிகதூரம் சென்று நேரத்தை வீணாக்குவதைத் தவிர்க்கவும் பெரிய அளவிலுள்ள மாவட்டங்களை அதன் அளவைப் பொறுத்து இரண்டு அல்லது மூன்றாகப் பிரிக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்திலுள்ள பெரிய மாவட்டங்களில் ஒன்று தென்னார்க்காடு மாவட்டம் ஆகும். மாண்புமிகு புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, தென்னார்க்காடு மாவட்டத்தினை இரண்டாகப் பிரிவினை செய்து ஆணை பிறப்பித்துள்ளார். தென்னார்க்காடு மாவட்டத்தினைக் கீழ்க்கண்ட பெயர்களில் இரு மாவட்டங்களாகப் பிரிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1. தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டம் (இருப்பு) கடலூர்.

2. விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டம் (இருப்பு) விழுப்புரம்.

## இலவசப் புடவை வேட்டி வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டில் முதன் முதலாக 1992-ஆம் ஆண்டுதான் பொங்கல் பண்டிகைக்கு நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடிசைவாசிகளுக்கு இலவசமாகப் புடவை வேட்டி வழங்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தில் 60 இலட்சம் பெண்களும், 60 இலட்சம் ஆண்களும் பயன்பெற்றனர். 1993-ஆம் ஆண்டும் 60 இலட்சம் புடவைகள், 60 இலட்சம் வேட்டிகள் வழங்கப்பட்டன.

## வருவாய் நிருவாகத்துறை

## புயல் மற்றும் வெள்ள நிவாரணப் பணிகள்

1991-92-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ள நிவாரணத்திற்காக ரூ.36.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்து செலவழிக்கப்பட்டது. 1992-93-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல்

மற்றும் வெள்ள நிவாரணத்திற்காக ரூ.106.42 கோடி நிதி ஒதுக்கீடு செய்து செலவழிக்கப்பட்டது.

## வறட்சி நிவாரணப் பணிகள்

1991-92-ஆம் ஆண்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர்ப் பஞ்சத்தை போக்க ரூ.8.69 கோடி நிதி ஒதுக்கீடு செய்து செலவழிக்கப்பட்டது.

1992-93-ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ரூ.14.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்து செலவழிக்கப்பட்டது.

1993-94-ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ரூ.7 கோடி இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஆக்கிரமிப்பு அகற்றல்

நீர் நிலை புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்பு அறவே தடை செய்யப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு மாவட்ட ஆட்சியர்களால் ஆயக்கட்டுதாரர்களின் உரிமைகளைப் பாதுகாத்து விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கும், நீர் வளத்தைப் பேணிப் பாதுகாக்கவும் ஆக்கிரமிப்பு உடனுக்குடன் அகற்றப்பட்டு வருகின்றன.

ஆட்சேபணையற்ற ஆக்கிரமிப்புகளை வரன்முறைப் படுத்தவும், ஆட்சேபணையுள்ள ஆக்கிரமிப்புகள் உடனுக்குடன் அகற்றவும்படுகின்றன.

1992-93-ஆம் ஆண்டில் மாநில அளவில் 40,460 ஆட்சேபணையுள்ள பல்வேறு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு 18,000 ஏக்கர் நிலம் அரசால் மீள அகற்றப்பட்டது.

### மூன்று ஆண்டுகளில் வீட்டுமனை பெற்றவர்கள் விவரம்

தமிழக அரசு மாநிலத்தில் உள்ள அனைத்து வீட்டு மனையற்ற ஏழை எளியவர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்குள் மனை வழங்க முடிவெடுத்துள்ளது. அதன் அடிப்படையில் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மாவட்டங்களில் வீட்டுமனையற்றவர்களின் விவரங்கள் சேகரிக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அதன் அடிப்படையில் இவ்வாண்டு சுமார் 30 சதவிகிதத்தினருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். 1993-94-ஆம் ஆண்டு, 1.75 இலட்சம் வீட்டுமனை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



★ சேவை என்பது மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும், திருப்தியும் அடைவதற்காகவே செய்யப்படும் காரியம்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் (1991-92 மற்றும் 1992-93) ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டா குறித்த விவரம்

1991-92-ஆம் ஆண்டின் குறியீடு 4,56,000 - சாதனை அளவு 4,60,000.

1992-93-ஆம் ஆண்டின் குறியீடு 2,75,000 - சாதனை அளவு 3,06,000

மொத்தக் குறியீடு 7,31,000 - சாதனையளவு 7,66,000.

சாகுபடி செய்ய வழங்கப்பட்ட நிலப்பட்டா குறித்த விவரம்.

1991-92-ஆம் ஆண்டின் குறியீடு 5,500 (ஏக்கர்) - சாதனை அளவு 7,017

1992-93-ஆம் ஆண்டின் குறியீடு 5,500 - சாதனை அளவு 6,898

மொத்தக் குறியீடு 11,000 - சாதனையளவு 13,915.

### சாகுபடி செய்ய வழங்கப்பட்ட நிலப்பட்டா குறித்த விவரம்.

**நிலச்சீர்திருத்தத் துறை**

**மிகை நிலமாக அறிவிக்கப்பட்ட பரப்பு**

1991-92-ஆம் ஆண்டில் 3,720 ஏக்கர்; 1992-93-ஆம் ஆண்டில் 2,259 ஏக்கர்; 1993-94 (மே திங்கள் 1993 முடிய) 189 ஏக்கர். ஆக மொத்தம் 6,168 ஏக்கர்.

**மிகைநில ஒப்படைப்பு**

1991-92-இல் 2,500 ஏக்கர் குறியீடு. இதில் 4,524 ஏக்கர் சாதனைபடைக்கப்பட்டுள்ளது.

1992-93-இல் 2,500 ஏக்கர் குறியீடு. 3,444 ஏக்கர் சாதனைபடைக்கப்பட்டுள்ளது.

1993-94 (1993 மே திங்கள் முடிய) 2,500 ஏக்கர் குறியீடு; இதில் 265 ஏக்கர் சாதனை படைக்கப் பட்டுள்ளது.

மொத்தம் 8,233 ஏக்கர் சாதனை படைக்கப் பட்டுள்ளது.

**பயனடைந்தோர் விவரம்**

| ஆண்டு | பயனடைந்தோர் வகையினர் | பயனடைந்தோர் எண்ணிக்கை | ஒப்படை செய்யப்பட்ட பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1991-92 | ஆதிதிராவிடர் | 1652 | 1455 |
| | ஏனையோர் | 2545 | 3069 |
| | | 4197 | 4524 |
| 1992-93 | ஆதிதிராவிடர் | 1246 | 1157 |
| | பழங்குடியினர் | 81 | 85 |
| | ஏனையோர் | 1872 | 2202 |
| | | 3199 | 3444 |



ஏழைகளைக் கண்ணால் பார்ப்பதை விட, இதயத்தால் பார்க்க வேண்டும்', என்ற புரட்சித் தலைவரின் கொள்கைப்படி உதயமானது தான், நாங்கள் இன்றைக்கு நிறை வேற்றியுள்ள, ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற ஏழை எளியோருக்கான இலவச வேட்டி-சேலைத் திட்டமாகும்.

| | | | |
|---|---|---|---|
| 1993-94 | ஆதிதிராவிடர் | 37 | 51 |
| | ஏனையோர் | 137 | 214 |
| | மொத்தம் | 174 | 265 |

**மிகைநில ஒப்படைப்பில் சுவாதீனம் பெற்றவர்கள்**

| ஆண்டு | ஏக்கரில் |
|---|---|
| 1991-92 | 12,291 |
| 1992-93 | 6,554 |
| 1993-94 (1993 மே திங்கள் முடிய) | 320 |
| | 19,165 |

மிகைநில ஒப்படை பெற்றவர்களின் முன்னேற்றத்திற்காக நிதி உதவி செய்யப்படுகின்றது.

இத்தொகை மத்திய மற்றும் மாநில அரசுகளால் சரிசமமாக ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

**1991-92 மற்றும் 1992-93-இல் பயனடைந்தோர் விவரம் வருமாறு:**

1991-92-ஆம் ஆண்டில் மொத்த முதலீடு-34, செலவு-34, ஆதிதிராவிடர்-1478, மற்றவர்கள்-1851, மொத்தம்-3329, பயனடைந்தோர் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட பரப்பளவு-3400.

1992-93-ஆம் ஆண்டில் மொத்த முதலீடு-24, செலவு-24-04, ஆதிதிராவிடர்-986, பழங்குடியினர்-30, மற்றவர்கள்-1310, மொத்தம்-2326, பயனடைந்தோர் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட பரப்பளவு-2404.

**நில அளவை மற்றும் பதிவுருக்கள் துறையின் கடந்த இரண்டு ஆண்டு சாதனைகள்**

தமிழ்நாட்டில், நில அளவைப் பதிவுருக்கள் கட்டுமானம், 1923- ஆம் ஆண்டு தமிழ்நாடு நில அளவை மற்றும் எல்லைச் சட்டம் 8 என்ற தனிச் சட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சந்தேகத்திற்கோ, குழப்பத்திற்கோ இடமற்ற வகையில் நில உடமைகள் புலத்தின் அடையாளம் காணப்பட்டு, புலத்தின் சரியான இலக்கும் அதன் பரப்பளவும் வரையறுக்கப்படுகின்றன.

விற்பனை, பாகப்பிரிவினை, உரிமை வழி மாற்றம் மூலம் அன்றாடம் ஏற்பட்டு வரும் பதிவு மாற்றங்களைக் கிராம ஆவணங்களில் மேற்கொண்டும், நில அளவைக் கட்டுமானத்தைப் பராமரித்தும் வருவதுடன், தேவைக்கேற்ப, விவசாய நிலங்கள் மற்றும் நகர்ப்புறங்களிலும் நில அளவைப் பணி மேற்கொள்கிறது.

நிலச்சீர்திருத்தத்திற்கும், விவசாய, பொருளாதார வளர்ச்சிக்கும் நில உடமைகள் மேம்பாடு ஓர் அடிப்படைத் தேவையாகும். இதனைக் குறிக்கோளாகக் கொண்டு பின்வரும் திட்டங்கள் இம்மாநிலத்தில் அமல் செய்யப்பட்டு வருகின்றன.

நத்தம் நில அளவை மற்றும் விவசாயத்திற்குப் பயன்படுத்தாது பிற இனங்களில் உபயோகப்படுத்தும் விவசாய நிலங்களை அளத்தல்:

**நகரியம், நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் நகர அளவை செய்தல்:**

மலைக் கிராமங்கள் அளவை செய்தல்.

நத்தம் அளவை:

இத்திட்டப்பணி சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக, மாநிலத்தின் இதர மாவட்டங்களில் செயல் படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தினால் பயனடைந்தோர் தகுந்த குடியிருப்பு உரிமைகளைப் பெறுவதோடன்றி, வங்கிக் கடன் போன்ற சலுகைகளையும் பெற வாய்ப்புள்ளது.

இப்பணி இம்மாநிலத்தில் 163 வட்டங்களில் 16,800 கிராமங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது. இதுவரை 156 வட்டங்களில் 16,246 கிராமங்களை 3,972 ச.கி.மீ. பரப்பில் பணி எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 3,890 ச.கி.மீ. பரப்பில் அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

**நகர அளவை**

3 மாநகராட்சி மற்றும் 106 நகராட்சிகளையும் உள்ளடக்கி சுமார் 2,300 ச.கி.மீ. பரப்பில் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதுவரை 1,100 ச.கி.மீ. பரப்பை உள்ளடக்கி 3 மாநகராட்சி மற்றும் 61 நகராட்சிகளில் பணி இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனில் மொத்தம் 729 ச.கி.மீ. பரப்பு அளவைப் பணி இதுவரை முடிக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் இறுதித் தணிக்கைப்பணி 8 நகரங்களில் முன்னேற்றத்தில் உள்ளது.

**மலைக் கிராம அளவைப் பணி**

பின்தங்கிய பகுதி மக்களாகிய ஆதிவாசிகள் நல வாழ்வு திட்டமாக மலைக்கிராம அளவைப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் சமன் பகுதிகளில் உள்ள நில உடைமைகளுக்கு இணையாக மலைப் பகுதிகளில் உள்ள நில உடைமையாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட நில உடைமைகள் நாளது வரை கொணரப்பட்டுள்ளது.

அதனுடன் சட்ட விரோதமான ஆக்கிரமிப்புகள் தவிர்க்கப்படுகிறது. மேலும், மலைவாழ் மக்களால் இது காறும் செய்து வந்த சிவஜமா சாகுபடியினை ஒழுங்கு படுத்த வகை செய்கிறது.

இப்பணி ஏலகிரி மலை, ஜவ்வாது மலை, கொல்லி மலை, அரநூத்து மலை, பச்சை மலை மற்றும் ஆனை மலை ஆகிய ஆறு மலைகளில் 904 ச.கி.மீ. பரப்பை



உள்ளடக்கி 66 கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை 767 ச.கி.மீ. பரப்பில் அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

மேலும் நீலகிரி மாவட்டம் உதகமண்டலம் நகரத்தில் வருவாய்ப்பின் தொடர்பணி மேற்கொள்ளப்பட்டு 30 ச.கி.மீ. பரப்பில் பணி முடிக்கப்பட்டுள்ளது. இதன்கீழ் 8,502 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

### பட்டா பதிவுப் புத்தகத் திட்டம்

பட்டா பதிவுப் புத்தகத் திட்டம் முதல் கட்டமாக 1.4.93 முதல் இம்மாநிலத்தில், ஆறு மாவட்டங்களில் (வடஆர்க்காடு- அம்பேத்கர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சிதம்பரனார் மாவட்டங்கள்) செயல்படுத்தப்படுகிறது.

இப்புத்தகம் எவர் பெயரில் வழங்கப்பட்டுள்ளதோ, அவர் பெயருக்கு அந்நிலத்தின் உரிமைக்கு ஒரு சான்றாகவும், அவருக்குச் சொந்தமான நிலத்தின் விவரங்களுடன் அதனில் குறிக்கப்பட்ட வில்லங்கள் சான்று ஆவணமாகவும் பயன்படுகிறது. இது வருவாய் நிர்வாகத்திற்கு ஒரு அடிப்படை ஆதார ஆவணமாகவும், பலவகை அபிவிருத்திச் செயல்பாடுகளுக்கு முதுகெலும்பாகவும் உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பட்டாப் பதிவுப்புத்தகம் ஒவ்வொரு பட்டாதாரருக்கும், அவ்வட்டத்தில் அவருக்குச் சொந்தமான நிலங்கள் அனைத்தின் விவரங்களுடன் வழங்கப்படுகிறது.

### நிலப்பதிவுருக்கள் கணிணிமயமாக்குதல்

நிலப்பதிவுருக்கள் மேம்படுத்துதல் மூலம் மாவட்ட நிர்வாகத்தை நவீனமாக்கும் தொடர் திட்டத்தின் ஒரு பகுதியாகச் சேலம் மாவட்டத்தில் நிலப்பதிவுருக்களை கணிணிமயமாக்கும் ஒரு முன்னோடித் திட்டம் செயல் படுத்தப்படுகிறது.

இதற்கென 20 கணிணிபொறிகள் ரூ.25 இலட்சம் மதிப்பில் வாங்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட 9 கிராம கணக்குகளுக்கும் மற்றும் 15 வட்டப் பதிவேடுகளும் கணிணிமயமாக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

TNPSC

விளம்பர எண். 23/93

கீழ்க்காணும் பதவிகளுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் 19.7.1993 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன. (இக்காலியிடங்கள் ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர்களுக்கான நிலுவையில் உள்ள காலியிடங்களாகும்).

1. தமிழ்நாடு மாநில கருவூல மற்றும் கணக்குகள் பணியில் மூன்றாவது நிலை பதவி (அதாவது கணக்கு அலுவலர்கள் முதலியன)

(Class III Posts Viz. Accounts Officers etc.)

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.2,200-75-2,800-100-4,000.

**காலியிடங்கள்: 4**

**வயது:** வயது வரம்பு இல்லை.

**தகுதி:** 3.6.1993 அன்றுள்ளபடி கீழ்க்காண்பவை அல்லது அவைகளுக்கு இணையானவை:

A Pass in the final examination conducted by the Institute of Charted Accountants/Cost Accountants.

2. தமிழ்நாடு வேளாண் விரிவாக்கப் பணியில் வேளாண் அலுவலர் (விரிவாக்கம்).
(Agricultural Officer (Extension)

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.1,640-60-2,600-75-2,900.

**காலியிடங்கள்: 21**

**வயது:** வயது வரம்பு இல்லை.

**தகுதி:** 3.6.1993 அன்றுள்ளபடி கீழ்காண்பவை அல்லது அவைகளுக்கு இணையானவை.

i) A Bachalors degree in Agriculture; and
ii) Must possess adequate knowledge of Tamil.

**Explanation:** For this purpose, a person will be deemed to possess and aequate knowledge of Tamil, if he has passed the SSLC Public Eamination or its equivalant examination with Tamil as one of the languages or studied the High School Course in Tamil Medium and passed the SSLC Public Examination in Tamil Medium or passed the second class language test in Tamil conducted by the Tamil Nadu Public Service Commission.

(**Note:** under para 7 of the Commission's 'Instruction etc. to Candidates' will not apply to this recreuitment.)

**Common to both posts:**

**Note:** 'Destitute Widows' who possess the prescribed qualification and are found fit by getting the minimum for selection will be selected in preference to otheres who have secured even higher marks.

**Explanation:** 'Destitute Widow' means a widow who has neither any means by herself to live nor any dependent to protect her from starvation.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர்களைச் சேர்ந்த தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், போன்றவர்களுக்கு தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை'களில் தரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர், விளம்பர எண் மற்றும் இனத்தின் எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.6.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) ஏதாவதொரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.6.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-600 006 ஆயிரம் விளக்கு, பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

**குறிப்பு:** ஒவ்வொரு பதவிக்கும் பத்து ரூபாய்க்கான அஞ்சல் ஆணை அல்லது கேட்புக் காசோலையுடன் தனித்தனியாக கோரிக்கைகள் அனுப்பவேண்டும்.

DIPR/929/MS/93

# புரட்சித்தலைவியின் ஆட்சியில் நுகர் பொருள் வழங்குவதில் தமிழ்நாடு முன்னிலை!

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்

**திரு. இராம வீரப்பன்**

- **இந்தியாவிலேயே ரேஷன் அரிசி, தமிழ்நாட்டில்தான் குறைந்த விலையில் வழங்கப்படுகிறது.**
- **1992-93-க்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டை விஞ்சி 18.36 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல்.**
- **இரண்டாண்டுகளில் 7 இலட்சத்து 35 ஆயிரம் போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.**
- **ஒன்றேகால் கோடி குடும்ப அட்டைகள் குறித்த காலத்தில் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன.**

புகழின் புகழாக, பொன் மனச் செம்மலின் புகழ் மிக்க வாரிசாக விளங்கும் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், நாடு போற்ற நடத்தி வரும் பொற்கால ஆட்சியின் ஈராண்டு நிறையும் திருநாள் இப் பொன்னாள்.



இந்த இரண்டாண்டுகளில் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் படைத்துக் குவித்திருக்கும் சீர்மிகு சாதனைகள் எத்தனை எத்தனை என்பதை எண்ணிப் பார்த்தால் அவை கணக்கில் அடங்கா!

உணவுத் துறையைப் பொறுத்த மட்டில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் சுமார் ஒரு கோடியே 25 இலட்சம் குடும்ப உணவுப் பொருள் வழங்கல் அட்டைகளைப் புதுப்பித்து வழங்கி, தமிழகத்திலுள்ள 21,985 நியாய விலைக்கடைகள் மூலம் மக்களுக்குத் தேவையான அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்ற இன்றியமையாப் பொருட்களைப் புரட்சித்தலைவியின் அரசு முறையாக வழங்கி வருகிறது.

மைய அரசு சராசரியாக மாதந்தோறும் 70,000 டன் அரிசி ஒதுக்கீடு செய்து வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மக்களுக்கு வழங்கத் தேவைப்படும் அரிசியின் அளவு 1.45 இலட்சம் டன் ஆகும். எனவே, மைய அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலையைவிட அதிகமாக குவிண்டாலுக்கு ரூ.35 வீதம் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை அளித்து, தமிழக அரசு நெல் கொள்முதல் செய்து வருகிறது. புரட்சித்தலைவியின் அரசு அளிக்கும் இந்த ஊக்கத்தின் காரணமாக, நிர்ணயிக்கப்பட்ட இலக்கையும் விஞ்சி, இவ்வாண்டு ரூ.528.31 கோடி மதிப்புள்ள 18.36 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

மேலும், வர்த்தகர்களிடமிருந்து பெறப்பட்ட லெவியும், மாவட்டங்களுக்கிடையேயான நெல், அரிசிப் போக்குவரத்தில் இருந்த தடையும் துணிச்சலுடன் விலக்கிக் கொள்ளப் பட்டு, வெளி அங்காடியில் அரிசி விலை உயராமல் தடுக்கப்பட்டு, பற்றாக்குறை மாவட்டங்களான தென் மாவட்டங்களிலும் அரிசி



விலை குறைவாக உள்ளது ·குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் சுமார் ரூ.1,300 கோடி மதிப்புள்ள இன்றியமையாப் பொருட்களைக் கொள்முதல் செய்து வழங்கி, அகில இந்திய அளவில் முதன்மையாக விளங்கி, சாதனை படைத்துவருகிறது. மேலும் 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்' கீழ் தமிழகம் முழுவதுமுள்ள சத்துணவு மையங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமே கொள்முதல் செய்து விநியோகித்து வருகிறது. இதனால் வாணிபக் கழகத்திற்கு ஓராண்டில் ஏற்படும் ரூ.120 கோடி இழப்பினைத் தமிழக அரசு ஏற்று வருகிறது.

இதுதவிர, பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் தற்போது, இந்தியாவிலேயே குறைந்த விலையாக, அரிசியின் விலை கிலோ ஒன்றுக்குச் சாதா ரகம் ரூ.2.50, சன்ன ரகம் மற்றும் மிகச் சன்ன ரகம் ரூ.3.50 வீதம் வழங்கப்பட்டு வருவதால், வாணிபக் கழகத்திற்குக் கடந்த ஆண்டில் ஏற்பட்ட இழப்புத் தொகையான ரூ.360.65 கோடியை தமிழக அரசு மானியமாக வழங்கியுள்ளது.

புரட்சித்தலைவியின் அரசு, கடந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 7,35,000 போலிக் குடும்ப அட்டைகளைக் கண்டுபிடித்து பறிமுதல் செய்துள்ளது. இதனால் ஆண்டுக்கு ரூ.7.30 இலட்சம் மதிப்புள்ள உணவுப் பொருட்கள் தவறான முறையில் வழங்கப்பட்டு வந்ததைத் தடுத்து, சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. மேலும், குடும்ப அட்டைகள் தவறான முறையில் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்கும் வகையில் முதற்கட்டமாக, சென்னை மாநகரத்தில் உள்ள 10 உணவுப் பொருள் வழங்கல் மண்டலங்களில் உள்ள குடும்ப அட்டை வழங்குதல் மற்றும் பராமரித்தல் சம்பந்தப்பட்ட பணிகள் 'கணிப்பொறி' அமைப்பின்கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் நலன் கருதி, மாவட்ட அளவிலான நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றங்களும், மாநில அளவில் முறையீடுகளை விசாரணை செய்ய மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையமும் அமைக்கப்பட்டுச்செவ்வனே செயல்பட்டு வருகின்றன.



வாழ்க்கையில் நாம் உயர்ந்த பொருட்களைப் பெற வேண்டுமானால், சலியாத உழைப்பும், தளராத ஊக்கமும், விடாமுயற்சியும் மிகமிக அவசியமாகும்.

- பேரறிஞர் அண்ணா

மலை குலைந்தாலும் மனங்குலையாத ஒரே மக்கள் தலைவி நம் டாக்டர் புரட்சித்தலைவி தான் என்பது கோடானுகோடி மக்களின் குரல். இன்று மட்டுமல்ல-என்றுமே நம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் புகழ் மிக்க ஆட்சியே தமிழகத்தில் தழைக்கும்; நிலைக்கும். வான்கருணை கொண்ட அவர்தம் வள்ளல் கரங்களே தமிழகத்தின் பொற்காலச் சரித்திரத்தை எழுதும்... தொடர்ந்து முத்திரை பதிக்கும்.

# தமிழகத்தில் அனைவருக்கும் மருத்துவ வசதி

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

**திரு. எஸ். முத்துசாமி**

- **'புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத்திட்டம்' - ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 1000 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு ஒரு கோடி மக்கள் பயன்பெற்றனர்.**
- **எங்கோ ஒரு மூலையில் இருக்கும் ஏழைக்கும் பணிபுரிய 'ரயில் மருத்துவமனை'.**
- **குழந்தை நலம் மற்றும் சிறந்த தாய்மையைப் பலப்படுத்த விசேட மருத்துவ முகாம்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக நடத்தப்படுகின்றன.**

இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையில் ஆட்சிப் பொறுப் பேற்ற இந்த இரண்டு ஆண்டுகளில், மருத்துவத்துறையில் நாட்டில் அனைத்து மாநிலங்களைக் காட்டி லும் தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது.

மாநிலம் முழுவதும் சீராகச் செயல்பட்டு வருகின்ற சுகாதார மற்றும் மருத்துவ நிறுவனங்கள் மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பணிகளைச் சிறப்பாக ஆற்றி வருகின்றன. நவீன முறையில் நோய்களைக் கண்டறிந்து தக்க மருத்துவம் அளிப்பதற்கு வசதியாக நவீனக் கருவிகள் வாங்கப்பட்டு மருத்துவச் சிகிச்சை அளிப்பதில் டாக்டர் புரட்சித்தலைவி அரசு முன்னேற்றம் கண்டுள்ளது.



டாக்டர் புரட்சித்தலைவி அரசு பொறுப்பேற்ற பிறகு 1991-92-ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் மருத்துவ மற்றும் பொதுச் சுகா தாரத்திற்கு ரூ.411 கோடி ஒதுக்கீடு செய்தது. 1992-93-ஆம் ஆண்டில் இந்த நிதி ரூ.469 கோடியாகவும், 1993-94-ஆம் ஆண்டில் ரூ.557 கோடியாகவும் உயர்த்தப்பட்டு மருத்துவ வசதி அனைத்து மக்களுக் குக் கிடைக்கும் வகையில் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் மருத் துவத்துறைக்கு முக்கியத்துவம் அளித் துள்ளார்.

கடந்த ஆண்டு டாக்டர் புரட்சித் தலைவி மருத்துவ நலத்திட்டத்தின் கீழ் 10,000 மருத்துவ முகாம்களை நடத்தி மாபெரும் சாதனை படைத் தது. இதனால் ஒரு கோடி மக்கள் பயன்பெற்றனர்.

இந்த வெற்றித் திட்டத்தினைத் தொடர்ந்து டாக்டர் புரட்சித்தலைவி மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டம் என்று அழைக்கப்படும் இரண்டாவது சுற்று மருத்துவ முகாம்களை நடத்தி மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு வரக்கூடிய நோய் களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு மேற்கொண் டுள்ளது.

பொது நிறுவனமாகிய 'இன் பெக்ட்' இந்திய நிறுவனம் மற்றும் இந்திய இரயில்வே கூட்டு முயற்சி யுடன் தமிழ்நாடு அரசு நடமாடும் இரயில் மருத்துவமனை **என்று அழைக்கப்படுகின்ற ஒரு புதிய திட்** டம் தமிழக முதல்வர் டாக்டர்



புரட்சித்தலைவி அவர்களின் ஆலோசனை பேரில் தொடங்கப் பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் முக்கியக் குறிக்கோள் கிராமப் பகுதிகளில் மருத்துவச் சிகிச்சை வசதிகள் செய்து தருவதாகும்.

இந்த நடமாடும் ரயில் மருத்துவ மனைப் பெட்டியில் எல்லா வசதி களும் செய்யப்பட்டுள்ளன. இத் திட்டத்தில் இளம்பிள்ளைவாத முடம் நீக்கி அறுவைச் சிகிச்சை, கண் புரை நீக்கும் அறுவைச் சிகிச்சை, காது-மூக்கு-தொண்டை அறுவைச் சிகிச்சை போன்ற சிகிச்சை முறைகள் செய்யப்படு கின்றன.

இந்தத்திட்டம் ஒரு மாதம் வரை செயல்படும். இதில் சிகிச்சை பெறு கின்றவர்கள் சிகிச்சை மேற்கொண்டு தேவைப்படுமானால் அருகில் உள்ள அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்படும். இதனால் செங்கல் பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம், தர்மபுரி, திருவண்ணாமலை-சம்பு வராயர் மாவட்டங்களைச் சேர்ந்த கிராமப்பகுதி மக்கள் பயன்பெறு வார்கள்.

மாநிலத்தில் அரசு மருத்துவ நிலையங்களுக்கு மருத்துவப் பொருட்கள் கொள்முதல் செய்து வினியோகிப்பதில் சிக்கல் மற்றும் சிரமங்களும் இருந்தது. இதை நீக்கும் பொருட்டு சென்னையைத் தலைமை யிடமாகக் கொண்டு 'தமிழ்நாடு மருத்துவப் பணிக்கழகம்' ஒன்று நிறுவ அரசு ஆணை வழங்கியுள்ளது

மருந்துகளுக்காக 1990-91-இல் ரூ.38.78 கோடியாக இருந்ததை, 1993- 94-இல் ரூ.75 கோடியாக இரண்டு மடங்காக உயர்த்தி உள்ளது டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு.

பாதிக்கப்பட்ட நோயாளிகளுக் குச் சரியான முறையில் சிகிச்சை அளிக்க சென்னை அரசுப் பொது மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றிற்குத் தலா ஒரு முழு உடல் படம் பிடிக்கும் 'ஸ்கேன்னர்' வாங்கப்பட்டுள்ளது.

ஏழை புற்று நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்கு ஏதுவாகச் சென்னையிலுள்ள அரசுப் பொது மருத்துவமனை மற்றும் காஞ்சிபுரம் காரப்பேட்டை அறிஞர் அண்ணா நினைவுப் புற்று நோய் மருத்துவ மனை ஆகியவற்றிற்குத் தலா ஒரு கோபால்ட் டெலிதெரபி இயந்திரம் வாங்கி நிறுவப்பட்டுள்ளது.

குடும்ப நலத்திட்டத்தை ஏற் போருக்குக் குலுக்கல் முறையில் தங்கப்பதக்கம் வழங்கவும் ஆணை யிடப்பட்டுள்ளது.

50-க்கு மேலும் படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை களுக்கு இரண்டு ஊர்திகள் (ஆம்பு லன்ஸ்) வசதி அளிக்க அரசு முடிவெடுத்துள்ளது. இதன்படி 1991-92-இல் 28 ஊர்திகள் வாங் கப்பட்டு மருத்துவமனைக்கு அளிக் கப்பட்டன. 1992-93-இல் மேலும் 14 ஊர்திகள் வாங்க ஆணையிடப் பட்டுள்ளது.

இதுபோன்று பல்வேறு சாதனை களை டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு மக்கள் நல்வாழ் விற்கு ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில் செய்து கொடுத்துள்ளது. இதுபோன்று இன்னும் பல்வேறு சாதனைகளை மருத்துவத்துறையில் செய்து தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக்குப் பெருமை சேர்ப்போம்!



**மக்களின் நலன் காக்கவே இந்த அரசு பொறுப்பேற்றுள்ளது. சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட - புறக்கணிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்களின் உயர்வுக்கும், மாநிலத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கும் அடிகோலும் எங்கள் அரசு,**

# போக்குவரத்துத் துறையில் புதிய பொலிவு

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

## திரு. கே.ஏ. செங்கோட்டையன்

- **1000 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் போக்குவரத்து வசதி.**
- **டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம், டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகம், மகாகவி பாரதியார் போக்குவரத்துக் கழகம் ஆகிய புதிய போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கம்.**
- **மாநிலப் போக்குவரத்துக் கழகங்களில் 1,10,000 தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் புதிய ஒய்வூதியத் திட்டம்.**



இருண்ட தமிழகத்திற்கு ஒளி விளக்காகவும், தமிழகத்தின் நல்ல திட்டங்களுக்குக் கலங்கரை விளக்காகவும் போக்குவரத்துத் துறையின் சிறப்புக்கும், புகழுக்கும் தூண்டுகோலாகவும்; சாதனைச் சரித்திரம் படைத்துவரும் நம் இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஆட்சியில் -

'எங்கெங்கு நோக்கிலும் வளர்ச்சியடா' என்று குதூகலிக்கும் அளவுக்குத் தேங்கிக் கிடந்த துறைகளெல்லாம் புத்துயிர் பெற்று பீடுநடைபோட்டுப் பெருமைமிகு வளர்ச்சியை ஈட்டியதும் பொற்புடை நாயகியாம் டாக்டர் புரட்சித்தலைவியின் ஆட்சியிலே தான்.

அன்னை அரியணை ஏறி இருபத்தி நான்கு மாதங்களில் (2 ஆண்டுகளில்) போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சிகளையும், வழங்கியுள்ள திட்டங்களையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கிறேன். இதுவரை தமிழகம் கண்டறியாத திட்டங்கள்! இயலுமா? முடியுமா? என்று வினாக்குறிகளாகவே இதுவரை இருந்த திட்டங்களெல்லாம் அன்னையின் ஆட்சியில் அமலபடுத்தப்பட்டு வினாக்குறியெல்லாம் வியப்புக் குறிகளாக ஆக்கிக் காட்டிய வித்தகத் தலைவி நமது முத்தமிழ்த் தலைவி.

அந்த வகையில், அவரது ஆணைப்படி போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சிகளை இங்கே தொகுத்துக் கூறுவதில் நான் பெருமை அடைகிறேன்.

பொதுவாகவே தமிழகத்தின் போக்குவரத்துத் துறை இந்தியத் துணைக் கண்டத்திலேயே சிறப்பான இடத்தைப் பிடித்திருந்தாலும், அழகுக்கும் அழகு செய்யும் கைவண்ணமும் கனிவுள்ளமும் கொண்ட காவியத்தலைவி கடந்த 2 ஆண்டுகளில் படைத்த சாதனைகள் பலப்பல.

அவற்றில் சிலவற்றை மட்டுமே இங்கே படைக்க விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கட்டிலிலிருந்து அகற்றப்பட்டபோது (1991 ஜனவரி 31-ஆம் தேதி இருந்தவாறு) தமிழகப் போக்குவரத்துக் கழகங்கள் 15-ம் இயக்கி வந்த பேருந்துகளின் எண்ணிக்கை 13,594. இவற்றில் சுமார் 1000-க்கும் மேற்பட்ட பேருந்துகள் வளைகுடாப் போரையொட்டி ஏற்பட்ட டீசல் தட்டுப்பாட்டைக் காரணம் காட்டி நிறுத்தப்பட்டிருந்தன.

அன்னையின் ஆட்சி தொடங்கியதும், நிறுத்தப்பட்ட அனைத்துப் பேருந்துகளையும் உடனடியாக இயக்கி அல்லற்பட்ட தமிழக மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள ஆணையிட்டார். அதனையொட்டி குறுகிய காலத்திலேயே ஏறத்தாழ 37 பேருந்துகளைத் தவிர பிற பேருந்துகள் அனைத்தும் மீண்டும் பழையபடியே இயக்கப்பட்டன. இந்த 37 பாதைகளும் பாலங்களும் பழுதுபட்ட காரணத்தால் இயக்க முடியாமல் போனவையாகும்.

20.4.1990 அன்று தி.மு.க. அரசின் போக்குவரத்துத் துறை அமைச்சர் பணிக்காலத்தில் இறந்துவிடும்

போக்குவரத்துத் தொழிலாளியின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.20,000-லிருந்து ரூ.40,000 ஆக உயர்த்தி அளிக்கப்படும் என்று சட்டப் பேரவையிலேயே அறிவித்தார். ஆனால், அந்த அறிவிப்பு வெறும் அறிவிப்பாகவே இருந்துவிட்டதால் வேதனை யிலேயே உழன்று வந்த தொழிலாளர்களின் வாழ்வில் விடிவெள்ளியாக வந்த இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றப்படாமல் விடுபட்டுப் போன திமுக அரசின் வாக்குறுதியை நிறைவு செய்யும் வகையில் அத்தொகையை ரூ.40,000 ஆக உயர்த்திய தோடு அல்லாமல் 1.8.1991 முதல் அந்த உதவித் தொகையை ரூ.60,000 ஆக உயர்த்தி வரலாறு படைத்தார்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி தமிழகத்தில் அன்னையின் ஆட்சி மலருவதற்கு முன்பு சுமார் 13,594 பேருந்துகளே இயக்கப்பட்டு வந்த நிலைமையை மாற்றி, கடந்த இரண்டாண்டுகளில் இதன் எண்ணிக்கையை 14,536 ஆக உயர்த்தியுள்ளார். 687 கிராமங்களில் புதிதாக 6.74 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் 1000 பேர் வாழும் கிராமங்களுக்கெல்லாம் பேருந்து வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இரண்டாண்டுக் காலத்தில் புதிதாக 735 வழித்தடங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. 16 போக்குவரத்துக் கழகங்களின் மூலம் புதிதாக 4,007 பேருந்துகள் வாங்கப்பட்டு, பொது மக்களின் பயனுக்காக இயக்கப்பட்டன.

அதுமட்டுமல்ல, இரண்டாண்டுக் காலத்தில் போக்கு வரத்துக் கழகங்களில் 2,428 பணியிடங்கள் உருவாக்கப் பட்டு பணியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்தளித்த நாட்டு டைமையாக்கும் கொள்கையிலிருந்து ஒரு துளியும் பிறழாமல் செயல்பட்டு, தனியாருக்கு வந்த வகையிலும் புதிதாக உரிமங்கள் வழங்காமல் பாதுகாத்துள்ளதும் இந்த அரசு மட்டும்தான். பொதுவுடைமைக் கட்சியின் ஆட்சி யில் தொடர்ந்து 15 ஆண்டுக் காலமாக உள்ள மேற்கு வங்கத்தில்கூட மொத்தம் 2,078 பேருந்துகளே அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படுகின்ற நிலை யில், அதைப்போலவே பொதுவுடைமை ஆட்சியின் திட்டுப் பகுதியாக விளங்கி வந்த கேரளத்திலும் 3,534 பேருந்துகள் மட்டுமே அரசுப் போக்குவரத்துக் கழகங் களால் இயக்கப்படுகின்ற நிலையில் தமிழகத்தில் மட்டுமே 14,536 பேருந்துகள் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களாலும் இயக்கப்படுகிற பெருமையை உருவாக்கி யவர் நமது இதயதெய்வம், 20-ஆம் நூற்றாண்டின் இணையற்ற முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

இரண்டாண்டுக் கால ஆட்சியில் புதிதாக 4 போக்குவரத்துக் கழகங்கள்! ஆம் 1.4.1992 முதல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம் காஞ்சிப் பெருநகரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருவதும், விரைவிலேயே சென்னை நகரில் இயங்கும் பல்லவன் பிரிக்கப்பட்டு புதிதாக 'டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகமும்', திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலிருந்து அண்டை மாநிலங் களுக்குச் செல்லும் பேருந்துகள் பிரிக்கப்பட்டு புதிதாக 'டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகமும்' அதைப்போலவே சேரன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து மலைப்பகுதிகளில் இயங்கும் பேருந்துகள் பிரிக்கப்பட்டு, உதகமண்டலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு 'மகாகவி பாரதியார் போக்குவரத்துக் கழகமும்' செயல் பட இருப்பதும் அன்னை ஆட்சிக்கு அணி சேர்க்கும் வளர்ச்சிகள்!




நாளொன்றுக்கு 1½ கோடி மக்களைச் சுமந்து சென்று நாட்டின் போக்குவரத்தில் பெருமைமிக்க இடத் தைப் பெற்ற தமிழகப் போக்குவரத்துத் துறை கடந்த இரண்டாண்டுகளில் அதன் செயல் திறன், டீசல் சிக்கனம், இயக்க தூரம், டீசல் பயன்பாடு, பாதுகாப்பு, பராமரிப்பு போன்றவைகளுக்காக அகில இந்திய

அளவில் பாராட்டப்பட்டு ஏறத்தாழ 13 சிறப்பு விருதுகளைப் பெற்றதே தமிழகப் போக்குவரத்துத் துறையின் செயல்பாட்டிற்குக் கட்டியங்கூறும் நிகழ்ச்சி களாகும்.

அதுமட்டுமல்ல - போக்குவரத்துத் துறையில் புகுத்தப் பட்ட கணினி முறை மூலம் முன்கூட்டிய பயணப் பதிவு- தொலைத் தொடர்பு முறை மூலம் பாதுகாப்பும் பழுது நீக்குவதில் முன்னேற்றமும் உறுதி செய்யும் செயல்பாடு - சென்னை போன்ற பெருநகரங்களில் நெரிசலைத் தவிர்க்க திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந் துகள் புறப்படும் இடமும் வந்து சேரும் இடமும் தனித் தனியாக அமைந்திருத்தல் - மாதாந்திர, வாராந்திரப் பயணச் சீட்டில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் புதிய வசதிகள் - தூய்மையை உறுதி செய்ய டீசலுக்குப் பதிலாக இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி பேருந்து இயக்கம் - பேட்டரி - மின்கலங்கள் மூலம் பேருந்துகள் இயக்கம் - 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இலவசப் பயணம், 8-ஆம் வகுப்புக்கு மேல் பயிலும் மாணவர்களுக்கு 50 சதவிகித சலுகை அடிப்படையில் பயணச் சீட்டு - ஊனமுற்றோருக்குப் பயணச் சலுகை - விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் மொழிப்போர் வீரர்களுக்கும் - இயல் இசை நாடகக் கலைஞர்களுக்கு 50 சதவிகித சலுகைப் பயண முறை - ஊழியர் நலன் காக்க பல்வேறு நடவடிக்கைகள் - அவர்தம் குழந்தைகளின் கல்வி வசதிக்காகப் போக்கு வரத்துக் கழகங்களால் நடத்தப்படும் பொறியியல் கல் லூரியில் மாணவர் சேர்க்கையை 180-லிருந்து 210-ஆக உயர்த்தியது - பெருந்துறை மருத்துவக் கல்லூரியில் போக்குவரத்துத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு ஆகியவைகளையெல்லாம் விவரித் தால் பக்கங்கள் மிகுதியாகும்.

இருப்பினும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு அன்னையின் ஆணையில் ஏற்பட்ட சாதனைகளை இங்கே தெரிவிக்காமல் இருக்க முடியாது.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே மிகக் குறைந்த கட்டணத்தில் மிகச் சிறந்த முறையில் பேருந்துகளை இயக்கும் பெருமை தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகங்களையே சாரும். அதற்குக் காரணமாக இருந்து வரும் போக்குவரத்துத் தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கை, பணியிலிருந்து ஓய்வுபெறும்போது 'ஓய்வூதியம்' அளிக்கப்பட வேண்டும் என்பதாகும். ஏற்கெனவே கிராச்சுவிட்டி சலுகைகளையும் பிராவிடெண்ட் பண்டு சலுகையையும் பெறும் இத்தகைய தொழிலாளர்களுக்கு மூன்றாவது சலுகையாக ஓய்வூதியம் வழங்குவது என்பது நினைத்துப் பார்க்க முடியாது - விரும்பினாலும் செயல் படுத்த முடியாது திட்டமாக - கருவிலேயே உருவிழக்கும் நிலை பலமுறை ஏற்பட்டது.

நெப்போலியனின் இயல்புகளை தன்னிடத்தே வரித்துக்கொண்டு அரசியலிலும் ஆட்சியிலும் தனி வரலாறு படைக்கும் இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இதனை ஒரு சவாலாகவே ஏற்று எந்த வகையிலேனும் போக்குவரத்துத் தொழி லாளர்கள் ஓய்வு பெறும்போது 'ஓய்வுகாலச் சேமநிதி' ஒன்று வழங்கப்பட வேண்டுமென்று ஒரு திட்டத்தைத் தீட்டி, கடந்த செப்டம்பர் 1, 1992 முதல் அது




செயலுக்கு வரும் என்று அறிவித்தார்கள். இதுவரை எட்டாக் கனியாக இருந்தது, கற்பனையில் மட்டுமே இருந்தது அவரது கைவண்ணத்தால் கவன்மிகு வடிவம் பெற்று கடந்த 9 மாதங்களாக, பணியிலிருந்து ஓய்வு பெறும் தொழிலாளர்கள் தங்கள் பணிக்காலத்தில் மாதம் 50 ரூபாய் மட்டுமே அளிப்பதன் மூலம் மாதம் குறைந்த பட்சமாக ரூ.300 பெறும் வகையில் 'ஓய்வுகாலச் சேமநல நிதியுதவித் திட்டம்' என்னும் அற்புதத் திட்டத்தை அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் பணியிலிருக்கும் ஒவ்வொரு தொழிலாளியும் மாதம் ரூ.50 தனது பங்குத் தொகை யாகச் செலுத்துவதன் மூலமும், போக்குவரத்துக் கழகம் ஒவ்வொரு தொழிலாளிக்காகவும் தவணை முறையில் ரூ.1,000 அளிப்பதன் மூலமும் ஒவ்வொரு தொழிலாளி யும் அவர் ஓய்வு பெறும் நாளிலிருந்து இறக்கும் வரை கீழ்க்கண்டவாறு ஓய்வுக் காலச் சேமநல நிதியுதவி பெற வழி செய்துள்ளார்.

1.9.92 முதல் 31.8.1997 வரை ஓய்வு பெறுவோர் - மாதம் ரூ.300
1.9.97 முதல் 31.8.2002 வரை ஓய்வு பெறுவோர் - மாதம் ரூ.450
1.9.2002 முதல் 31.8.2007 வரை ஓய்வு பெறுவோர் - மாதம் ரூ.600
1.9.2007 முதல் 31.8.2012 வரை ஓய்வு பெறுவோர் - மாதம் ரூ.750
1.9.2012 முதல் 31.8.2017 வரை ஓய்வு பெறுவோர் - மாதம் ரூ.1000
1.9.2017 முதல் மற்றும் அதற்கு மேல் - ஓய்வு பெறுவோர் - மாதம் ரூ.1250

அதைப்போலவே பணி மூப்பு ஓய்வுபெற்ற 15 ஆண்டுக்குள் ஒரு தொழிலாளி இறந்துவிட்டால், அவருடைய வாரிசுதாரர் அவர் ஓய்வுபெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளில் எஞ்சியுள்ள ஆண்டுக்கு நிதி உதவி பெறவும் வகை செய்துள்ளார்.

அதுமட்டுமல்ல, 1.9.1992 அன்று முதல் அமலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள புதிய ஒப்பந்தத்தின் மூலம் தொழிலாளர்களுக்கு ஏறத்தாழ ஆண்டுக்கு ரூ.52 கோடி அளவுக்கு ஊதிய உயர்வும் பிற சலுகைகளும் அளிக்கப் பட்டுள்ளன. போக்குவரத்துத் தொழிலாளர்களின் வரலாற்றிலேயே இந்த அளவு ஊதிய உயர்வும் சலுகை

களும் இதுவரை வழங்கப்பட்டதில்லை என்பது வரலாற்று உண்மையாகும்.

தொழிலாளர்களின் குழந்தைகளைத் தரமான கல்வியை மிகுதியான அளவுக்குப் பெற்றிடும் வகையில் மிகுந்த தொலை நோக்கோடு அன்னையின் ஆணைப்படி தமிழகத்தில் 3 பாலிடெக்னிக்குகள் போக்குவரத்துத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகவே ஏற்படுத்தப் பட்டுள்ளன. சென்னையிலுள்ள குரோம்பேட்டையிலும், தர்மபுரி மாவட்டத்திலுள்ள பர்கூரிலும், நெல்லை மாவட்டத்திலுள்ள பாளையங்கோட்டையிலும் தற்போது செயல்படும் இந்த மூன்று பாலிடெக்னிக்குகளும் தொழிலாளர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதங்களாகும்.

நிலைமைகள் இவ்வாறு இருக்க அரசியல் காழ்ப் புணர்ச்சி காரணமாகவும் சில தொழிற்சங்கங்களின் தலைவர்களின் சுயலாபம் காரணமாகவும் கடந்த 5.6.1993 அன்று தமிழகத்தில் போக்குவரத்துத் துறையில் வேலை நிறுத்தம் ஒன்றை ஆர்ப்பாட்டமான முறையில் சிலர் அறிவித்தனர். போக்குவரத்துத் துறையைத் தனியாருக்குத் தாரை வார்ப்பதாகவும் போக்குவரத்துக் கழகங்களைப் பிரிப்பது அதற்கு முன்னோடியாக அமையும் என்றும் இல்லாத காரணங்களைக் - கற்பனையில் உதித்தவைகளை விற்பனை செய்வதற்கு முயற்சித்தார்கள். ஆனால், 5.6.1993 அன்று தமிழகத்தில் வழக்கமாக ஓட வேண்டிய பேருந்துகளைக் காட்டிலும், அதிகமான பேருந்துகளைப் போக்குவரத்துத் தொழிலாளப் பெருமக்கள் இயக்கி தாங்கள் புரட்சித்தலைவியின் பக்கமே நிற்பதாகவும், போலிக்காரணங்களைக் கூறி அரசியல் லாபம் தேட முயன்ற தலைவர்களைத் தாங்கள் நம்பத் தயாராக இல்லை என்றும் எடுத்துக் கூறும் வகையில், எந்த விதச் சிறு அசம்பாவிதங்களும் தமிழகத்தின் எந்த ஒரு பகுதியிலும் இல்லாத வகையில் இயக்கிக் காட்டியது அன்னையின் ஆட்சிக்குச் சேர்க்கப்பட்ட பெருமைகளில் தலையாயதாகும்.

இப்படி, சாதனைகளையெல்லாம் தொகுத்து அடுக்கிக் கொண்டே போனால் இதற்கென்றே ஒரு மலர் தயாரிக்க வேண்டி வரும் என்பதால் இந்த அளவோடு நிறுத்திக் கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையோடு தொடர்புடைய பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் சாதனையையும் இங்கே குறிப்பிடுவது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

தமிழகத்தின் அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியைக் கொண்டு வரும் பணியை தமிழக மின்வாரியத்தின் சார்பில் செயல்படுத்தும் இந்நிறுவனம் 1989-90- ல் 63.5 இலட்சம் டன் நிலக்கரியை மட்டுமே தமிழகத்திற்குக் கொண்டு வந்த நிலை மாறி கடந்த ஆண்டில் 69.83 டன் அளவுக்கு ஏற்றி வந்து சாதனை படைத்துள்ளது. இக்கழகம் கடந்த 2 ஆண்டுகிகளில் ஏறத்தாழ முறையே 8 கோடி ரூபாய் லாபமும் ரூ.10 கோடி லாபமும் பெற்றுள்ளது. அதைப்போலவே கடந்த ஆண்டில் இக்கழகம் கன்னியாகுமரிக்கும் கடலில் உள்ள விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும் 3 விசைப்படகுகள் மூலம் 15 இலட்சம் பயணிகளை ஏற்றிச் சென்று வந்துள்ளதும் ஒரு சாதனைப்படைப்பாகும்.

அதைப்போலவே தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் கடந்த ஆண்டில் அதன் வைப்பு நிதியாக ரூ.205 கோடியை எட்டிப்பிடித்தது வரலாற்றுச் சாதனையாகும். இக்கழகம் கடந்த ஆண்டு மட்டும் பல்வேறு போக்குவரத்துக் கழகங்களுக்கும் ரூ.123.84 கோடி அளவுக்குக் கடனுதவி அளித்திருப்பதும் ஒரு சாதனையாகும்.

இந்நிறுவனத்தின் மூலம் மேலும் வைப்பு நிதிகளைப் பெறும் வகையில் திருச்சி, மதுரை மற்றும் ஈரோட்டில் கிளைகள் தொடங்கப்பட உள்ளன.

பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு என்னும் அமைப்பும் சாலைப் போக்குவரத்துத் துறையிலும் கணினித் துறையிலும் சிறப்புமிக்க ஆலோசனைகளை வழங்கி சிறந்த, நம்பகமான நிறுவனம் என்று பெயரை ஈட்டியுள்ளது.

அதைப் போலவே சாலைப் போக்குவரத்து நிறுவனமும் பணியகப் பயிற்சித் திட்டங்கள், கணிணி பயிற்சித் திட்டங்கள், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் ஆகிய வகுப்புகளை நடத்தி வருவதுடன் ஒரு சிறப்பான ஆய்வு நிறுவனமாகவும் இயங்கி வருகிறது.

கும்மிடிப்பூண்டியில் செயல்பட்டு வரும் இந்நிறுவனத்தின் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியில் கனரக ஓட்டுநர் பயிற்சி பெற ஆண்டுதோறும் 1200 பேர் அனுமதிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகின்றனர். இதன்மூலம் தரமான ஓட்டுநர்களை உருவாக்கி தமிழகத்தில் விபத்துக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு சிறந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதும் கடந்த 2 ஆண்டுகளில் அடைந்த முன்னேற்றங்களாகும்.

இவ்வாறு நாளொரு முன்னேற்றமும், பொழுதொரு சாதனையையும் படைத்து வரும் தமிழக போக்குவரத்துத் துறை, தனது தொழிலாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் இன்னும் சிறந்த முறையில் பணியாற்றிட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தலைமையில் உறுதி பூண்டிருக்கிறது. கடந்த 2 ஆண்டுகளில் இத்துறைக்கு அனைத்துப் பிரிவு மக்களும் அளித்த ஆதரவைத், தொடர்ந்து அளிப்பதன் மூலம் அன்னையின் ஆட்சிக்கு வலிவூட்டவும் ஒளியூட்டவும் விரும்பி வேண்டிக் கேட்டு முடிக்கிறேன்.



# கைத்தறித் துறையில்

# இரண்டாண்டுச் சாதனைகள்


மாண்புமிகு கைத்தறி மற்றும் ஜவுளித்துறை அமைச்சர்

**திரு. இ. மதுசூதனன்**


**கைத்தறி நெசவாளர்கள் கூட்டுற வுத் துறையின் கீழ் கொண்டுவரப்பட்ட தன் பலனாக, இரண்டாண்டுக்கு முன்பு 220 கோடி ரூபாயாக இருந்த கைத் தறித் துணியின் உற்பத்தி, படிப்படியாக உயர்ந்து இந்த ஆண்டு (1992-93) 341 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது சாதனைக்குரியதாகும்.**

'**சி**ன்ன சின்ன இழை
பின்னிப்பின்னி வரும்
சித்திரக் கைத்தறிச் சேலையடி'

என்பார்கள். அத்தகைய கைத் தறிச் சேலைகளை உருவாக்கி எல்லாத் தரப்பு மக்களிடையே மகிழ்ச்சியை உண்டாக்கிப் பாராட் டைப் பெற்று வரும் தமிழகக் கைத் தறித் துறை மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற் கால ஆட்சியில் சீரோடும் சிறப் போடும் வளர்ந்து நெசவாளர் வாழ் வில் நல்லதொரு விடியலை ஏற் படுத்தியுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்கும் முன்பாகக் கூட்டுறவுத் துறையின் கீழ் 3 இலட் சத்து 25 ஆயிரம் நெசவாளர் மட்டுமே பதிவு பெற்று இருந்தனர். இரண்டாண்டுக் காலத்தில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு எடுத்த முயற்சி யால் இன்றைக்குக் கூடுதலாக 54 ஆயிரம் நெசவாளர்கள், கூட்டுறவுத்



துறையின் கீழ் கொண்டுவரப்பட்டு, தற்போது 3 இலட்சத்து 79 ஆயிரம் நபர்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டதன் பலனாக, இரண் டாண்டுக்கு முன்பு 220 கோடி ரூபாயாக இருந்த கைத்தறித் துணி யின் உற்பத்தி, படிப்படியாக உயர்ந்து இந்த ஆண்டு (1992-93) 341 கோடி ரூபாயாக அதிகரித் துள்ளது சாதனைக்குரியதாகும்.

உற்பத்தி அதிகரித்துவிட்டால் மட்டும் போதுமா? விற்பனையும் அதிகரிக்க வேண்டாமா? என்ற கேள்வி எழுவது இயற்கை தானே! பிரதம நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் 1991-ஆம் ஆண்டு 247 கோடி ரூபாய் அளவுக்கு இருந்த விற்பனை மதிப்பு இரண் டாண்டுக் காலத்தில் 348 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. நெச வாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 734-இல் இருந்து 876 ஆக உயர்ந்துள்ளது. சுமார் 60 சதவிகித நெசவாளர் கூட்டுறவுச் சங் கங்கள் லாபம் ஈட்டும் திறனை அடைந்துள்ளன. இதற்கெல்லாம் காரணம், மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இத் துறைக்கு அளித்த ஊக்கமும், ஆக்க மும் தான். அவரது ஆலோசனை யின் கீழ் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளைச் சீர மைத்து மேற்பார்வை செய்ததால், கைத்தறி நெசவாளர் வாழ்வு வளம் பெற்றுள்ளது.

மக்களுக்குத் தரமான துணிகளைத் தரும் சேவை அடிப்படையிலும், நெசவாளர்ககளின் வாழ்க்கை



உத்தரவாதத்திற்கும் பணியாற்றும் கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனம் 1991-ஆம் ஆண்டு 138 கோடி ரூபாய் விற்பனை செய்தது. இரண்டாண்டுக் காலத்தில் படிப்படியாக (1992-93) 193 கோடி ரூபாய் விற்பனை அளவு எட்டியுள்ளது.

உள்ளூர் விற்பனை மட்டுமன்றி இரண்டாண்டுகளில் 3 கோடியே 59 இலட்ச ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகளை கோ-ஆப்டெக்ஸ் ஏற்றுமதி செய்துள்ளது என்பது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசின் சாதனையாகும்.

நெசவாளர் வாழ்வு வளம் பெற, கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனையினை மேம்படுத்தி அதன் மூலம் நெசவாளர் சங்க உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேரவேண்டிய தள்ளுபடிக் கால நிலுவைத் தொகையை அளிப்பதில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு மிக அதிமுக்கியத்துவம் அளித்து வருகிறது.

1990-91-ஆம் ஆண்டில் 33 கோடியே 4 இலட்சம் ரூபாய் மட்டுமே அனுமதிக்கப்பட்ட தள்ளுபடி தொகை, இந்த அரசில் 1991-92-ஆம் ஆண்டு 42 கோடியே 2 இலட்ச ரூபாயாகவும், 1992-93-ஆம் ஆண்டில் 40 கோடியே 86 இலட்ச ரூபாயாகவும் உயர்த்தி அளிக்கப்பட்டுள்ளது.

வள்ளுவர் காலத்துக் கைத்தறியை நவீனப்படுத்தி அதன் மூலம் நெசவாளர்களின் வேலைப்பளுவினைக் குறைத்து, உற்பத்தித் திறனை அதிகப்படுத்தவும், மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அதிமுக்கியத்துவம் அளித்து வருகிறார். அதன்படி 1991-92-ஆம் ஆண்டில் 10 ஆயிரத்து 338 தறிகள், 88 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல், 1992-93-ஆம் ஆண்டில் 8582 தறிகள் 99 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

உலக நாடுகளில் காஞ்சிப் பட்டுக்கென ஒரு தனி இடம் உண்டு. அத்தகைய தரம் மிக்க பட்டுச்சேலைகளைத் தயாரிக்கும் காஞ்சி மாநகரில் பட்டு வகைத் துணிகளுக்கென தனி விற்பனை வளாகமும், ஈரோடு நகரில் பருத்தி வகைத் துணிகளுக்கென்றே விற்பனை . வளாகம் ஒன்றும் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

பருத்தி வகைத் துணி விற்பனை வளாகத்தில் 52 பிரதம நெசவாளர் சங்கங்களும் விற்பனை நிலையங்களை அமைக்கும். இத்தகைய ஏற்பாடு மாறுபட்ட விருப்பம் கொண்ட மக்களுக்கு ஒரே கூரையின் கீழ் சேவை செய்ய இயலும்.

இதைப்போன்றே காஞ்சிபுரத்தில் அமைய இருக்கும் பட்டுத் துணி விற்பனை வளாகத்தில் காஞ்சிபுரம், கும்பகோணம், ஆரணி, சேலம் மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள இதரப் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் பங்குகொள்ளும்.

கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நூலை உற்பத்தி செய்து வழங்குவதில் கூட்டுறவு நூற்பாலைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. 1991-ஆம் ஆண்டு 161 கோடியே 63 இலட்சம் ரூபாயாக இருந்த உற்பத்தி இரண்டாண்டுக் காலத்தில் 208 கோடியே 18 இலட்ச ரூபாயாக உயர்ந்துள்ளது. இதைப்போலவே, விற்பனையும் ·157 கோடியே 77 இலட்ச ரூபாயாக இருந்தது, 199 கோடி 50 இலட்ச ரூபாயாக அதிகரித்துள்ளது. கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழங்கப்பட்ட நடைமுறை மூலதனத்தின் அளவு 24 கோடியே 48 இலட்ச ரூபாயில் இருந்து, 32 கோடி 35 இலட்ச ரூபாயாக அதிகரித்துள்ளது.

கடந்த 30 ஆண்டுகளாக இயங்கி வரும் கூட்டுறவு நூற்பாலைகளை

நவீனப்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு புதிய ஊக்கத்தை அளித்துள்ளது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சலுகை விலையில் சிட்ட நூலை வினியோகிப்பதில் விற்பனை இடர்ப்பாடுகள் இருந்த போதிலும், தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் மட்டுமே சிட்டநூல் தேவையைப் பூர்த்தி செய்து வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். கூட்டுறவு நூற்பாலைகளின் இந்த முக்கியப் பங்கினைக் கருத்தில் கொண்டு, கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு திட்டமிட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் காஞ்சிபுரம், தென்னார்க்காடு, வடார்க்காடு, தஞ்சாவூர், மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், திருச்சி, திருச்செந்தூர் ஆகிய 8 நலிந்த கூட்டுறவு நூற்பாலைகளுக்கு 16 கோடியே 25 இலட்ச ரூபாய் செலவில் புதிய அளவு நவீனப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இருக்க இடம், உடுக்க உடை, உண்ண உணவு என்ற பேரறிஞர் அண்ணாவின் இலட்சியங்களை நிறைவேற்ற அரசோச்சும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், அடித்தட்டு மக்களான நிலமற்ற விவசாயிகள், நகர்ப்புற ஏழைகளுக்கு இலவச சேலை, வேட்டி வழங்கும் சிறப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தார். இதனால், ஏழை மக்களும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் பயன்பெறும் இரண்டு இலக்கச் சமூக நலத்திட்டத்தை நிறைவேற்ற ஆண்டுக்கு 45 கோடி ரூபாயைச் செலவழித்து வருகிறார். இத்திட்டத்திற்காக சுமார் இருபது முதல் இருபத்தைந்தாயிரம் தறிகள் ஜனதா ரகத் துணிகளைத் தயாரித்து வருகின்றன. கைத்தறி நெசவாளர்கள் இதனால் தொடர்ச்சியாக வேலை வாய்ப்புப் பெற்று வருகின்றனர்.

சத்துணவுத் திட்டத்தின் கீழ் கல்விபெறும் 1 முதல் 8-வது வகுப்பு வரை பயிலும் 65 இலட்சம் மாணவ மாணவிகளுக்கு இலவசச் சீருடை வழங்குவதற்காக 121 கோடியே 2 இலட்சம் மீட்டர் துணி ரகங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் துணிகளின் மதிப்பு 21 கோடியே 82 இலட்ச ரூபாயாகும்.

தமிழ்நாடு கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாது காப்புத் திட்டத்திற்காக, நெசவாளர்கள் பெறும் ஊதியத்தில் 12 காசு பங்குத் தொகையை 16 காசாக உயர்த்தியுள்ளது இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு. இதனால் நெசவாளர்கள் ஓய்வுபெறும் போது அடைகிற பயன் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இத்திட்டத்தினால் ஒரு இலட்சத்து 13 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறுகிறார்கள். இத்திட்டத்தில் சேர்ந்துள்ள நெசவாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் தொகை 1991-இல் 12 ஆயிரம் ரூபாயாக இருந்ததை, இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசு 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியுள்ளது. இதனால், நெசவாளரை இழந்து தவிக்கும் குடும்பங்கள் கூடுதலாகப் பயன் பெறும்.

வீடில்லாத நெசவாளர்களுக்குத் தறிக்கூடத்துடன் இணைந்த 2,100 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அதிக அளவில் வீடுகள்





கட்டி வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு செயல்பட்டு வருகிறது.

கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் கடந்த 1.1.92 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர்கள் 58 வயதுக்கு முன் இயற்கை எய்தினால், அவரது வாரிசுதாரர்கள் 10 ஆண்டுகளுக்கு மாதம் 250 வீதம் குடும்ப ஓய்வூதியமாகப் பெறுவார்கள்.

கிராமப்புறத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு ஒருங்கிணைந்த கைத்தறி கிராம அபிவிருத்தித் திட்டம் 37 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் செலவில் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள விளாகம் என்னும் கிராமத்தில் 1991-92-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. இதைப்போன்று, தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள புதுப்பேட்டைக் கிராமம் தேர்வு செய்யப்பட்டு, அங்கு 62 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

விசைத்தறி மற்றும் விசைத்தறியில் உற்பத்தி செய்யப்படும் துணிகள், தமிழகத்தில் துணி நூல் தொழிலை மேம்பாடு அடையச் செய்கின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 2 இலட்சமாக இருந்து விசைத்தறிகளின் எண்ணிக்கை தற்போது 2 இலட்சத்து 27 ஆயிரமாக அதிகரித்துள்ளது. விசைத்தறி உற்பத்தி அதிகரித்துள்ளதால், தற்போது விசைத்தறித் தொழிலில் வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளது. இதுவரையிலும், 5,032 விசைத்தறிகள், 56 விசைத்தறி நெசவாளர் சங்கங்களின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

பட்டுச் சேலைகள் மதிப்பினை உயர்த்திடும் சரிகையைத் தமிழ்நாடு சரிகை ஆலை உற்பத்தி செய்து வருகிறது. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சரிகைத் தேவையில் பத்து சதவிகிதத்தை, காஞ்சிபுரத்தில் உள்ள தமிழ்நாடு சரிகை ஆலை பூர்த்தி செய்து வருகிறது. சரிகை ஆலையின் உற்பத்தித் திறனை மேலும் விரிவாக்கத் திட்டப்பணி செயலாக்கப்பட்டு வருகிறது. இதனால், இந்த நிறுவனத்தின் உற்பத்தித் திறன் மேலும் 40 சதவிகிதம் அதிகரிக்கும், 1992-93-ல் தமிழ்நாடு சரிகை நிறுவனம் 22 ஆயிரம் மார்க்குகள் உற்பத்தி செய்து, தமிழகத்திலுள்ள பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்துள்ளது.

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் கோவை மாவட்டத்தில் உள்ள திருப்பூர் நகரம் பின்னலாடைத் (பனியன்) தொழிலுக்குப் புகழ்பெற்ற நகரமாகும். பின்னலாடைத் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் சுமார் 1,200 கோடி ரூபாயளவில் நமது நாட்டுக்கு அன்னியச் செலாவணி ஈட்டப்படுகிறது. இத்தொழிலில் சுமார் 50 ஆயிரம் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். திருப்பூர் நகருக்குத் தேவைப்படும் உள்ளமைப்பு வசதிகளைச் செய்து கொடுக்கும் 'மாஸ்டர் பிளான்' ஒன்றை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு தயாரித்து, மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. திருப்பூர் நகரில் சாயம் மற்றும் பின்னலாடைத் தொழில் வளர்ச்சி அடைய ஒரு பெரிய தண்ணீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் திட்டம் வரையப்பட்டு, செயல்படுத்தப்படவுள்ளது.

இந்திய நாட்டின் இரு கண்களில் ஒன்றாக விளங்கும் நெசவாளர்களின் துயர்துடைக்கும் எங்களின் தாய், இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசின் சாதனைகள் அளப்பரியன. நெசவாளர்களின் வேதனை தீர்த்திடும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் மலரடி போற்றுவோம்!

# இதயதெய்வம் புரட்சித்தலைவி ஆட்சியில் பொலிவுபெறும் பொதுப்பணித்துறை

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

## திரு எஸ். கண்ணப்பன்

***1991-92-ஆம் ஆண்டில், வரலாறு படைக்கும் அளவில் 41 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டன. 419.9 கி.மீ. நீளப் புதிய வெகு உயர் அழுத்த மின் பாதைகள் மின்விசையூட்டப்பட்டன. 1992- 93-ஆம் ஆண்டில் 30 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 481.83 கி.மீ. நீளப் புதிய வெகு உயர் அழுத்த மின் பாதைகள் மின்விசையூட்டப்பட்டன.***



பொதுப்பணித்துறை என்பது நாட்டின் ஜீவாதாரமான பணிகளைக் கவனிக்கின்ற துறையாகும். பாசனத் திட்டங்கள், அணைகள், கட்டடப் பணிகள், சாலைகள், நெடுஞ்சாலைகள், மின்சார வாரியம் இவை அனைத்தும் பொதுப்பணித்துறையின் பொறுப்பில் வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய சீரிய ஆட்சியில் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இடுகின்ற ஆணைகளை நிறைவேற்றி நலன் குவிக்கும் துறையாகப் பொதுப்பணித்துறை விளங்குகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலில் தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை கடந்த இரண்டு ஆண்டுகளில் சாதித்த சாதனைகள் மகத்தானவை ஆகும். இந்த மேலான கண்ணோட்டத்தில் மின்வாரியத்தின் இரண்டு ஆண்டுச் சாதனைகளைக் காண்போம்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மின்வெட்டு உச்சத் தேவையில் 30 சதவிகிதமும், மின் சக்தியில் 25 சதவிகிதமும் இருந்தது. இந்த அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக மின்வெட்டு படிப்படியாகக் குறைக்கப்பட்டு 26.3.92 முதல் மின்வெட்டு முழுவதுமாக விலக்கப்பட்டது. தமிழ்நாடு, ஏனைய எல்லா மாநிலங்களுடனும் ஒப்பிடுகையில் மின்வெட்டிலிருந்து அறவே விடுபட்ட மாநிலமாகத் திகழ்கிறது.

மின் உச்சத் தேவை மற்றும் நாள் ஒன்றிற்கு உபயோகப்படுத்தப்படும் மின் சக்தியின் அளவு 3717 மெகாவாட் ஆகவும் 80.65 மில்லியன் யூனிட்டுகளாகவும் 1.4.93 அன்று எட்டி உள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இது எப்போதும் இல்லாத நிலவரம் ஆகும்.

**மின் நிலையங்களின் நிறுவுதிறன் அதிகரிப்பு**

பல்வேறு மின்நிலையங்கள் வாயிலாகப் புதியதாக 226.02 மெகாவாட் அளவு நிறுவு திறன் கூடுதலாக்கப்பட்டது. இதைத் தவிர தனியார் துறை காற்றாலைகள் 11.75 மெ.வா. திறனில் நிறுவப்பட்டுள்ளன.

### மின் அனுப்புகை மின் பகிர்வில் சாதனைகள்

1991-92-ஆம் ஆண்டில் வரலாறு படைக்கும் அளவில் 41 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டன. 419.9 கிலோ மீட்டர் நீள புதிய வெகு உயர் அழுத்த மின் பாதைகள் மின் விசையூட்டப்பட்டன. 1992-93-இல் 30 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டன. 481.83 கி.மீ. நீள புதிய வெகு உயர் அழுத்த மின் பாதைகள் மின் விசையூட்டப்பட்டன.

### புதிய மின் இணைப்புகள்

இந்த அரசில் கடந்த 1992 ஜூலை முதல் ஏப்ரல் 1993 முடிய 7,48,480 புதிய மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 26,146 உயர் அழுத்தத் தாழ் மின் அழுத்தத் தொழிற்சாலைகளுக்குப் புதிய மின் இணைப்பு கொடுத்ததும் அடங்கும்.

### புதிய மின் உற்பத்தித் திட்டங்கள்

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதிக்குள் கீழ்க்கண்ட மின் உற்பத்தித் திட்டங்கள் முடிவுற அனைத்துப் பணிகளும் முடுக்கிவிடப் பட்டுள்ளன.

1. வட சென்னை அனல் மின் திட்டம் முதல் கட்டம் 630 மெ.வா.

2. பேசின்பாலம் எரிவாயுச் சுழலி மின் திட்டம் 120 மெ.வா.

3. சாத்தனூர் புனல் மின் திட்டம் 7.5 மெ.வா.

4. கீழ் பவானி வடகரைக் கால்வாய் புனல் மின் திட்டம் 8 மெ.வா.

5. காற்றாலைகள் (தனியார் துறை) 100 மெ.வா.

மொத்தம் 865.5 மெ.வா.

இவற்றைத் தவிர மேலும் கீழ்க் குறிப்பிட்டுள்ள இரண்டு புனல் மின் திட்டங்களின் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பைக்காரா இறுதி நிலை புனல் மின் திட்டம் 150 மெ.வா., பார்சன் பள்ளத்தாக்குப் புனல் மின் திட்டம் 30 மெ.வா., மொத்தம் 180 மெ.வா.



ஏழை எளியோர் மற்றும் சாதாரண மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான எங்கள் அரசின் இயக்கம், அவர்களது நியாயமான வாழ்க்கைக்கு உத்தரவாதம் தர எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராய் இருக்கிறது.

### விவசாயிகளுக்கான சிறப்புச் சுயநிதித் திட்டம்

ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கும் கட்டுப்பாடான நிதி நிலையைக் கருத்திற் கொண்டு 40,000 வேளாண்மைப் பம்புசெட்டுகளுக்குப் புதிதாக மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. மின்சார வாரியத்தின் நிதி நிலைமைகளைக் கருதி, சென்ற ஆண்டு தொடங்கப்பட்ட சுயநிதித் திட்டம் இந்த ஆண்டும் தொடரப்படுகிறது.

### தெரு விளக்குகளுக்கான சிறப்புச் சுய தன்னிறைவுத் திட்டம்

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக 1993-ஆம் ஆண்டு மே வரை 51,219 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 86,061 தெருவிளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட உள்ளது.

மின் உற்பத்தியில் தனியார் துறை முதலீட்டை ஊக்குவிக்கும் வண்ணம் ரூ.12,600 கோடி அளவில் 3300 மெ.வா. மின் உற்பத்தித் திறன் கொண்ட புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. கூட்டுத் துறையில் ரூ.7000 கோடி முதலீட்டுடன் 1500 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட ஜெயங்கொண்ட சோழபுரம் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மின் உற்பத்தித் திட்டம், தனியார் துறையில் ரூ.3000 கோடி முதலீட்டுடன் 1000 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட கடலூர் அனல் மின் நிலையம், ரூ.1000 கோடி முதலீட்டுடன் 300 மெ.வா. பிள்ளைபெருமாள் நல்லூர் வாயுச் சுழலித் திட்டம், நெய்வேலி பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி ரூ.1600 கோடி செலவில் ஒவ்வொன்றும் 250 மெ.வா. மின் உற்பத்தி செய்யும் 2 அனல் மின் நிலையங்கள் ஆகியவை அப்புதிய திட்டங்களாகும். மேலும் ரூ.3000 கோடி அளவில் வட சென்னை அனல் மின் நிலைய 1000 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட 3-ஆம் நிலை விரிவாக்கத் திட்டம், தூத்துக்குடியில் ரூ.1500 கோடி அளவில் 500 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட 4-ஆம் நிலை விரிவாக்கத் திட்டம், தனியார் துறையிடம் ஒப்படைக்க அரசின் பரிசீலனையில் உள்ளன.

### தொழில் நிறுவனங்களுக்குச் சலுகைகள்

மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அறிவித்துள்ள புதிய தொழில் கொள்கையின்படி உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மின் கட்டணத்தில் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் வகுத்து அளித்துள்ள இலக்குகளை எய்திட, அயராது பாடுபடுகின்ற வகையில் பொதுப்பணித்துறையின் அங்கங்களான நெடுஞ்சாலைத்துறை, பாசனத் துறை ஆகியவை சிறப்பாகப் பணிபுரிந்து வருகின்றன.



★ நம்பிக்கை எதன்மீது ஏற்பட்டாலும் சரிதான்; அது உண்மையில் நம்பிக்கைக்கு உரியதாக இருக்கவேண்டும்; அப்போதுதான் வெற்றி கிட்டும்.

**காவிரி நீர்**

பாசனத்துறையைப் பொறுத்தவரை டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில், மேட்டூர் அணையில் இருந்து காவிரி நீர்ப் பாசனத்திற்கு இரண்டாவது முறையாக ஜூன் 12-ந் தேதியே திறந்துவிடப்பட்டது. இது வரலாறு காணாத சாதனையாகும். பல்வேறு மாறுபட்ட சூழ்நிலைகளையும் வென்றுகாட்டி டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சி இந்த மாபெரும் செயலைச் சாதித்துள்ளது.

அதேபோல உச்ச நீதிமன்ற தீர்ப்பினை யொட்டி, தமிழகத்தின் காவிரி நீர்ப் பாசன உரிமைகளைக் காத்திட அயராது போராடி வருகிறது.

சென்னைக்குக் குடிநீர் வழங்கும் கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை விரைவுபடுத்தவும், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

**பாசனத்துறை**

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய சீரிய இரண்டு ஆண்டுக்கால ஆட்சியில் ரூ.251 கோடி செலவில் 17 பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன.

இவை தவிர ரூ.66.32 கோடி மதிப்புள்ள 4 புதிய பிரதானப் பாசனத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**வீராணம் திட்டம்**

புதிய வீராணம் திட்டத்தின் அடிப்படையில் வீராணம் ஏரியையும் அதன் நீர் வரத்துக் கால் வாய்களையும் மேம்படுத்த ரூ.60 கோடிக்கான திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. ரூ.22.50 கோடி செலவில் வடக்கு-பச்சையாறு திட்டமும் தயாராகி வருகின்றது. உலக வங்கியின் உதவியுடன் ரூ.804 கோடி செலவில் பாசன நீர் ஆதாரச் செம்மைக் கான திட்டம் தயார் ஆகி வருகிறது.

**அணைகள் பாதுகாப்பு**

உலக வங்கி உதவியுடன் அணைகளைப் பாது காக்கவும் மேம்படுத்தவும் ரூ.42 கோடிக்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. கடல் அரிப்பினால் நெடுஞ்சாலைகளையும் மக்களின் வீடு களையும் பாதுகாக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. வடசென்னையில் எண்ணூர் நெடுஞ்சாலையைப் பாதுகாக்க ரூ.4.24 கோடியில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும். இவை தவிர ஏராளமான மேம்பாட்டுப் பணிகளும் சிறு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், பாசன வசதிகளை விரிவுபடுத்தவும் மேம்படுத்தவும் ஏராளமான திட்டங்கள் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றன. பல்வேறு நீர்ப் பாசன ஏற்பாட்டு அமைப்புகளின் கீழ் மொத்தம் 1,52,942 எக்டேர் ஆயக்கட்டுப் பகுதிக்குப் பாசன வசதி அளிக்க ஒட்டு மொத்தமாக ரூ.52.70 கோடிக்குத் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும் இத் திட்டங்களின் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ.74 கோடியாகக் கணக்கிடப்பட்டு தமிழக அரசின் மறுநிர்வாக ஒப்புதலும் பெறப் பட்டுள்ளது.

**நெடுஞ்சாலை ஊரகப்பணித்துறை**

கடந்த இரண்டு ஆண்டுகளில் 52,100 கி.மீ. நீளமுள்ள அரசுச் சாலைகள் பராமரிக்கப் பட்டுள்ளன. இதற்கு முன்பிருந்த ஆட்சியில் ஒவ்வொரு ஆண்டும் 3000 கி.மீ. நீளமுள்ள அரசுச் சாலைகள் மட்டுமே புதுப்பிக்கப்பட்டன. ஆனால், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியில் 9,122 கி.மீ. நீளமுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட்டன. சுமார் 8000 கி.மீ. நீள முள்ள மோசமான நிலையில் உள்ள அரசுச் சாலைப் பகுதிகளை ரூ.150 கோடி மூலதனத்தில் ஐந்து ஆண்டுகளில் புனரமைத்திட ஓர் புதிய சிறப்புச் சீரமைப்புத் திட்டம் தொடங்கப்பட்டுள் ளது. இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய இரண்டாண்டு ஆட்சியில் 174 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. 282 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டன.

**கிழக்குக் கடற்கரைச் சாலை மேம்பாடு**

சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை 737 கி.மீ. நீளமுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையில் முதல் கட்டமாக சென்னை முதல் கடலூர் வரை கி.மீ. 11/8 முதல் 178/4 வரை ரூபாய் 75 கோடி செலவில் தேசீய நெடுஞ்சாலைத் தரத்திற்கு மேம் பாடு பணி ஆசிய வளர்ச்சி வங்கிக் கடன் உதவியுடன் தொடங்கிச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சாலையில் 249 சிறுபாலங்களைத் திருப்பிக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் பல சாதனைகள் நிகழ்ந்துள்ளன. தற்போது உள்ள டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியானது நெடுஞ்சாலைத் திட்டப் பணிகளைக் கருத்தில்

கொண்டு திட்ட மதிப்பை ரூ.150 கோடியாக உயர்த்தி உள்ளது.

மொத்தம் ரூ.5057 இலட்சங்கள் மதிப்பிலான 15 பணிகளுக்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், தூத்துக்குடி, ஈரோடு, சேலம், வேலூர் ஆகிய நகரங்களில் கட்டப்படவுள்ள ஐந்து பாலப் பணிகளும் எட்டுச் சாலை மேம்பாட்டுப் பணிகளும், ஒரு சாலை மேம்பாட்டுப் பணியும் இவற்றுள் அடங்கும்.

ஜூன் 1991 முதல் ஜூன் 1993 வரையிலான கால கட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சென்னை மற்றும் தூத்துக்குடியில் தலா ஒரு பணியும், மதுரையில் இரண்டு பணிகளும் ரூ.15.70 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டன.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இத்திட்டத்திற்காக ரூ.36.50 கோடி செலவிடப்பட்டுள்ளது. நடப்பு 1993-94-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.24.30 கோடியாகும்.

தேசிய நெடுஞ்சாலைத் துறையில் கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் தாம்பரம்-விழுப்புரம் சாலை மேம்பாட்டுப் பணி ரூ.72 கோடியில் மேற்கொள்ளப்பட்டது. 74 சிறுபாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவை தவிர சென்னை-திருச்சி-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையிலும் பல மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், கடந்த இரண்டு ஆண்டுக்கால ஆட்சியில் தமிழகத்தில் பல்வேறு தேசிய நெடுஞ்சாலைகளில் 5 பாலங்கள், 22 சிறிய பாலங்கள், கட்டி முடிக்கப்பட்டன. மேலும் 10 சாலைச் சந்திப்புகளில் மேம்பாட்டுப் பணிகள் செய்து முடிக்கப்பட்டன.

இவ்வாறு தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறையானது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சுட்டிக் காட்டுகின்ற திசை வழியில் நடந்து இலக்குகளை நிறைவேற்றி சாதனையை நடத்தி வருகிறது. மக்கள் பணியில் மேலும் முனைப்போடு செயலாற்றிடப் பொதுப் பணித்துறை உறுதி ஏற்கிறது.



## நல்வாழ்த்துக்கள்



**1. எஸ். கண்ணன்**
சகுந்தலா அண்ட் கோ
மண்ணெண்ணெய் மொத்த வணிகர்
கள்ளக்குறிச்சி

**2. கே.பி. ராமையா அண்டு சன்ஸ்**
மண்ணெண்ணெய் மொத்த வணிகர்
கள்ளக்குறிச்சி



**3. தங்கவேல் ஃப்யூல் சர்வீஸ்**
மண்ணெண்ணெய் மொத்த வணிகர்
சின்னசேலம்

# தென்னார்க்காடு மாவட்டத்தில் கூட்டுறவு நகர வங்கிகளின் சேவைகள்

**இனிய வரவேற்பு!** **இன்முகத்துடன் துரித சேவை!!**

**வாடிக்கையாளர்களின் திருப்தியே**
**எங்கள் முதலீடு!**

**எங்கள் கூட்டுறவு நகர வங்கிகளின் சிறப்புச் சேவைகள்**

**உங்கள் முதலீடுகளுக்குக் கவர்ச்சியான வட்டி விகிதங்கள்**

**பிக்சட் டெபாசிட் 46 நாட்களுக்கும், அதற்கு மேலும் 11½%**
**சேமிப்புக் கணக்கு 7%**

**சிறப்புப் பணிகள்**

- உங்கள் முதலீடுகளுக்குத் தேசிய மற்றும் வர்த்தக வங்கிகளைவிட ½ சதவிகிதம் கூடுதல் வட்டி அளிக்கிறது.
- சிறந்த பாதுகாப்புப் பெட்டக வசதிகள்
- அனைத்து டெபாசிட்டுகளுக்கும் இன்சூரன்ஸ் அளிக்கப்படுகிறது.
- செக், டிராப்ட், பில்ஸ் குறைந்த செலவில் அதிவிரைவில் வசூலித்துத் தரப்படுகிறது.
- இந்தியா முழுவதும் உள்ள முக்கிய நகரங்களுக்குக் குறைந்த கமிஷனில் டிராப்டுகளை வழங்குகிறது.
- சிறுதொழில் கடன்கள், சுயவேலை வாய்ப்புக் கடன், வாகனக் கடன்கள், பிற்படுத்தப்பட்ட நலிந்த சமுதாயத்தவர் முதலானவர்களுக்கும் நிதி உதவி செய்து வருகிறது.
- ரிசர்வ் வங்கியின் உரிமம் பெற்றது.

இன்னும் பல புதுமையான கவர்ச்சியான பிக்சட் டெபாசிட் திட்டங்கள்,
ரெக்கரிங் டெபாசிட் திட்டங்கள், ரொக்கச் சான்றிதழ்த் திட்டங்கள்

உங்கள் வருங்காலக் கனவுகள் நனவாக இன்றே உங்கள்
அருகாமையிலுள்ள கூட்டுறவு நகர வங்கிகளை அணுகுவீர்!

1. விழுப்புரம் கூட்டுறவு நகர வங்கி
   149, திரு.வி.க. ரோடு, விழுப்புரம்
   தொலைபேசி எண்: 2539
2. சிதம்பரம் கூட்டுறவு நகர வங்கி
   101, வடக்கு வீதி, சிதம்பரம்
   தொலைபேசி எண்: 2380
3. திருக்கோயிலூர் கூட்டுறவு நகர வங்கி
   9, மார்க்கட் தெரு, திருக்கோயிலூர்
   தொலைபேசி எண்: 332
4. விருத்தாசலம் கூட்டுறவு நகர வங்கி
   64, தென் கோட்டை வீதி, விருத்தாசலம்
   தொலைபேசி எண்: 534
5. திண்டிவனம் கூட்டுறவு நகர வங்கி
   நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டிவனம்
   தொலைபேசி எண்: 2130



# குடும்பத்திற்கு ஒரு வீடு

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும்
நகர்ப்புற வளர்ச்சி அமைச்சர்
**திரு சே. ரகுபதி**

**தங்குவதற்கு வீடு இல்லாதவர் தமிழகத்தில் இல்லை என்று சொல்லும் வண்ணம் 'குடும்பத்திற்கு ஒரு வீடு' வழங்குவதை அரசு, குறிக்கோளாகச் செயல்படுத்தி வருகின்றது.**

உலகின் உன்னதத் தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தமிழகத்தின் அரியா சனத்தை அலங்கரித்து இரண் டாண்டுகள் ஆகிவிட்டன. ஆண்டுகள் இரண்டேயெனினும் அவர்கள் நிகழ்த்திய அற்புதங்கள் எண்ணில டங்காதவை. இந்தியத் துணைக் கண்டத்தின் மற்ற மாநிலங்களை ஆள்வோரைக் காட்டிலும் விரைந்து செயல்படும் ஆற்றலும், எண்ணி யதை முடிக்கும் நெஞ்சுரமும் நம் முடைய இதயதெய்வத்திற்கு இருப்ப தால்தான் சாதனைப் பாதையிலே தமிழகம் முந்தி நிற்கிறது.

எத்தனையோ ஆண்டுகளில் சாதிக்க வேண்டிய மகத்தான சாதனைகளையெல்லாம் இரண்டே ஆண்டுகளுக்குள் சாதித்துப் புதிய சரித்திரம் படைத்திருக்கும் நம் முடைய மாண்புமிகு தமிழக முதல் வரின் ஆட்சித் திறனையும், நிர்வாக நேர்மையையும் பாராட்டாதவர்கள் பாரில் இருக்க முடியாது.

ஈராண்டுச் சாதனைகளை இனி தாக முடித்து, மூன்றாம் ஆண்டு சாதனைக் காப்பியத்திற்கு முகவுரை எழுதத் தொடங்கியிருக்கும் நாம் சென்ற ஈராண்டுகளைத் திரும்பிப் பார்க்கிறோம், சிந்தையிலே மகிழ்ச்சி



மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. அப்படிப்பட்ட சாதனைகளைத்தான் புரட்சித்தலைவியின் புனித அரசின் எல்லாத் துறைகளும் இனிதாக ஆற்றியிருக்கின்றன. அதிலே வீட்டு வசதித் துறை நாட்டிற்கு ஆற்றிய நற்பணிகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கல்லாதவர் நாட்டில் இல்லா தவர் என்று இனிய இலட்சியத் தோடு எல்லாருக்கும் கல்வி தரும் இந்த இனிய அரசு, தங்குவதற்கு வீடு இல்லாதவர் தமிழகத்தில் இல்லை என்று சொல்லும் வண்ணம் "குடும்பத்திற்கு ஒரு வீடு" வழங்கு வதைக் குறிக்கோளாகச் செயல் படுத்தி வருகின்றது.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை என்ற பேராறு,

1. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
2. தமிழ்நாடு குடிசைப்பகுதி வாரியம்
3. வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள்

என்ற மூன்று கிளை நதிகளாகப் பிரிந்து மக்களுக்கு மகத்தான சாத னைப் படைத்து வருகின்றது.

சென்னை மாநகரில் நகர மேம் பாட்டுத் திட்டப்பணி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இம்மாநிலத்தின் இதரப் பகுதிகள் நகர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கத் தால் செயல்படுத்தப்பட்டு வரு கின்றன.

1991-92-ஆம் ஆண்டில் ரூ.245.01 கோடி செலவில் 81,828 ஏற்றமிகு வீடுகள் மேற் கூறிய முகமைகளால் கட்டப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன. 1992-93 -ஆம் ஆண்டில் 255.02 கோடி செலவில் 82,992 எழில்மிகு வீடுகள் அந்த முகமைகளால் கட்டப் பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற முகமைகளால் ஆற்றப்பட்டுள்ள அரும்பணிகள் பற்றியும் அவற்றிக் குச் செலவிடப்பட்ட நிதி விவரம்

பற்றியும் கீழே காணலாம்.

**1. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்:**

1991-93-ஆம் ஆண்டுகளில், குறைந்த வருவாய், நடுத்தர வருவாய் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர்களுக்கு ரூ.167.61 கோடி செலவில் 13,867 வீடுகள் இவ்வாரியத்தால் கட்டப்பட்டுள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீட்டுவசதியை ஊக்குவிக்கும் பொருட்டு, 1991-ஆம் ஆண்டு முதல் நடப்பு ஐந்தாண்டுகளில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டும் உன்னதத் திட்டத்தை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. 1991-93-ஆம் ஆண்டுகளில், இத்திட்டத்தின்கீழ் 26 சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ.62 கோடி செலவில் 6,548 வீடுகள் கட்டுவதற்கும் மற்றும் 2,729 மனைகள் மேம்படுத்துவதற்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இத்திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கும் வீடுகள் வழங்கப்படும் வகையில் அமைக்கப்படும் ஒரு உயரிய திட்டமாகும். இரண்டாவது கட்டமாக அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் 10,361 வீடுகளை ரூ.43 கோடி செலவில் மேலும் 31 நகரங்களில் இத்திட்டம் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 1991-93-ஆம் ஆண்டுகளில், 29,000 வீட்டு மனைகள் ரூ.70 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளன. நலிவுற்றோர் வாழ்வை மேம்படுத்த முற்படும் இவ்வரவு இதில் 50 விழுக்காடு பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

மாநில அரசு ஊழியர்களுக்கு வீடுகள் வழங்குவதை முக்கியக் கருத்தில் கொண்டு, 1991-93-ஆம் ஆண்டுகளில் ரூ.10 கோடி செலவில் 970 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**2. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்:**

குடிசைவாழ் மக்களின் நலத்தினைக் கருத்தில் கொள்ளுவதே இந்த அரசின் சிறப்புக் கொள்கையாகும். 1991-93-ஆம் ஆண்டுகளில் எல்லாவித இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் இன்னல்களையும் தாங்கும் விதத்தில், ரூ.23.60 கோடி செலவில் குடிசைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில் 8,473 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இது தவிர, 1991-93-ஆம் ஆண்டுகளில், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், குடிசைப்பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு, 59,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.6.56 கோடி செலவிடப்பட்டுள்ளது.

விரைவுபடுத்தப்பட்ட குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், குடிசைவாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகள் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ், 1991-93-ஆம் ஆண்டுகளில், ரூ.3 கோடி செலவிடப்பட்டு, 20,000 குடும்பங்கள் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளன.

நடைபாதைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில், ரூ.1.78 கோடி செலவிடப்பட்டு 1996 நடைபாதைவாசிகளுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான திட்டத்தின்கீழ், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் ரூ.8.52 கோடி செலவில் 7,108 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

**3. வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள்:**

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், கூட்டுறவு வீட்டுவசதிப் பிரிவின் கீழ் வீடுகட்டும் பணியில் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களிலும் முதன்மை நிறுவனமாக இயங்கி வருகின்றது. தமிழக அரசின் நிர்வாகத்திறன் இந்தியாவிலேயே சிறந்து விளங்குவதற்கு இது ஓர் இனிய எடுத்துக்காட்டு.

1991-93-ஆம் ஆண்டுகளில் இந்த இணையம், கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டங்களின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு ரூ.239 கோடி கடனாக வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 1959-ஆம் ஆண்டு முதல் 1991-ஆம் ஆண்டு வரை இந்த இணையத்தால் வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.594 கோடியாகும். எனவே, கடந்த 1991-93-ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடனுதவியானது, கடந்த 32 ஆண்டுகளில், அதாவது 1959-ஆம் ஆண்டு முதல் 1991-ஆம் ஆண்டு வரை இவ்விணையத்தால் வழங்கப்பட்ட கடன் தொகையில் 40 விழுக்காடு ஆகும் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இந்த அரசு, இந்தியாவிலேயே முதன்முறையாக, கிராமப்புறங்



களில் வீட்டுவசதியை மேம்படுத்துவதற்கு ஒரு திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 1991-93-ஆம் ஆண்டுகளில் ரூ.10 கோடி செலவில் 40,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

1991-92-ஆம் ஆண்டில், கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில், ரூ.111.38 கோடி செலவில் 42,350 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதைப் போன்று, 1992-93-ஆம் ஆண்டில் இத்திட்டங்களின் கீழ் ரூ.117.02 கோடி செலவில் 43,016 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.



★ நமது சமுதாயத்தின் அனைத்துப் பகுதி மக்களும் நல்லிணக்கமான முறையில் சீரான முன்னேற்றம் பெற உத்தரவாதம் தரப்பட வேண்டும்; சமநிலைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் வளர்ச்சிகள் அமைய வேண்டும்.

**4. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்:**

சென்னை மாநகரின் சீரான வளர்ச்சிக்கு ரூ.54 கோடி செலவில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி ரூ.6 கோடி செலவில் மாதவரம் சரக்கு மற்றும் பேருந்து நிலையம், ரூ.17 கோடி செலவில் சாத்தங்காடு இரும்பு மற்றும் எஃகு அங்காடி ஆகிய நெரிசலைக் குறைக்கும் திட்டங்களைச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சிறப்பங்காடி தொடங்கிச் செயல்படுத்தி வருகிறது.

இந்த அரசு சுமார் ரூ.400 கோடி செலவில் திட்டமிடப்பட்டுள்ள லஸ் முதல் தரமணி வரையில் துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தினைச் செயல்படுத்த தனியாகக் கூட்டுமுயற்சி மூலம் வாரியம் ஒன்றினை அமைக்கும் மாபெரும் முடிவினை எடுத்துள்ளது. தற்பொழுது சென்னை பீச் முதல் லஸ் வரையிலான பகுதி- துரித இரயில் திட்டத்தினை மத்திய அரசின் இரயில்வே துறை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தரமணி வரை நீடிப்பதில் மத்திய அரசு ஆர்வம் இல்லாததால், இந்த அரசு இத்திட்டத்தினை லஸ் முனையிலிருந்து தரமணி வரை நீடிக்கும் முடிவினை எடுத்துள்ளது.

1991-93-ஆம் ஆண்டுகளில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி மாதவரம் சரக்கு மற்றும் பேருந்து நிலையம் சாத்தங்காடு இரும்பு மற்றும் எஃகு அங்காடி ஆகிய திட்டங்களுக்காக ரூ.21.57 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**5. நகர் ஊரமைப்பு இயக்ககம்:**

பேருந்து நிலையம், தினச்சந்தை, வடிகால் வசதி ஆகிய நகர அடிப்படை வசதிகளை மேம்படுத்த நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு உதவும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், ரூ.11.67 கோடி செலவில் 12 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மாநில அரசு முதன்முறையாக ரூ.33 கோடி முதலீட்டில் நகர் ஊரமைப்பு நிதி ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் உள்ளாட்சி நிறுவனங்கள், வணிக வளாகம் மற்றும் நகர அடிப்படை வசதித் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்க இயலும்.

இந்த இனிய திட்டங்களெல்லாம் செவ்வனே செயல்படுத்த, ரூ.5.76 கோடி, முதல் தவணையாக மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டுள்ளது. திட்டப் பணிகளை நிறைவேற்ற சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளுக்கு ரூ.1.79 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற ரூ.4.66 கோடி உள்ளாட்சிக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், புதிய 16 உள்ளாட்சிகளுக்கு வருவாய் பெருக்கும் திட்டங்களை மேற்கொள்வதற்கான ரூ 2.85 கோடி முதலீட்டில் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

1991-92-ஆம் ஆண்டில், 42 திட்டங்கள் முடிக்கப்பட வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அவற்றில் 39 திட்டங்கள் முடிக்கப்பட்டுப் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

1992-93-ஆம் ஆண்டில் பெரம்பலூர் பேரூராட்சி, அத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டு, முதல் கட்டமாக ரூ.40 இலட்சம் மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டுள்ளது. இத்தொகை பேரூராட்சியில் பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகம் கட்டப் பயன்படுத்தப்படும். பேருந்து நிலைய முதற் கட்டப் பணிக்காக ரூ.30 இலட்சம் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு ரூ.15 இலட்சம் விடுவிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் ரூ.3.64 முதலீட்டில் பார்கூர் பேரூராட்சியில் திட்டப் பணிகளை அங்கீகரிக்க கருத்துக்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, அவை பரிசீலனையில் உள்ளன.

1992-93-ஆம் ஆண்டில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 39 திட்டங்கள் முடிப்பதற்காக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை, இத்திட்டங்களுக்கு ரூ.1.61 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் அனைத்தும் நிர்ணயிக்கப்பட்டபடி நிச்சயம் நிறைவேற்றப்படும் என்பது உறுதி.

மக்கள் சேவையே மகேசன் சேவையெனச் செயல்படும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு எல்லோரும் இனிதாக மகிழ்ந்து வாழும் விதத்தில், ஏற்ற குடியிருப்புக்களை உருவாக்கித்தரும் என்ற இனிய உணர்வோடு, மூன்றாம் ஆண்டில் முக மலர்ச்சியோடு அடிவைப்போம்!

# ஓங்கி வளரும் ஊரகத் தொழில்கள்!

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்
திரு. துரை ராமசாமி

**1991-92-ஆம் ஆண்டிலிருந்து அடுத்த ஐந்தாண்டுகளில் ஒரு இலட்சம் சிறு தொழில்கள் அமைத்திட வேண்டுமென நிர்ணயித்துள்ள இலக்கின் அடிப்படையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 40,999 நிரந்தரச் சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டுள்ளன.**

நாட்டின் தொழில் முன்னேற்றத்தில் தமிழகம் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. 2000 பெரும் தொழில்களையும் 1.5 இலட்சம் பதிவு செய்யப்பட்ட சிறிய தொழில்களையும் கொண்டு நாட்டின் தேவைகளைத் தன்னிறைவு செய்திடும் பணியில் சிறப்புப் பெற்றுள்ளது.

பதப்படுத்தப்பட்ட தோல், பின்னலாடைகள், பருத்தித் துணிகள், பொறியியல் சாதனங்கள், சர்க்கரை, எரிசாராயம் ஆகியவற்றின் உற்பத்தியில் தமிழகம் முக்கியப் பங்கினை ஏற்றுள்ளது. நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 12.5 சதவிகிதம் தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. தோல், தோல் பொருட்கள், பருத்தித் துணிகள், கிரானைட் பாறைகள், கடற்பொருட்கள், ஆயத்த ஆடைகள் ஏற்றுமதியில் முன்னணியில் உள்ளன.

நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்களின் தலைமையின்கீழ், தமிழ்நாடு நாட்டின் தொழில் துறையில் முன்னணி வகிக்கும் வகையிலும் மற்றும் தொழில் முன்னேற்றத்திலும் முக்கிய அம்சம் வகிக்கிறது.

நமது புரட்சித்தலைவி அவர்கள் பல்வேறு துறைகளைச் சார்ந்த தொழில் அதிபர்களுடன் ஆலோசனை நடத்தி அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றைக் களைவதிலும், முன்னேற்றத்தை ஊக்குவிப்பதிலும் அதற்குத் தேவையான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜனவரி, 1992-இல் புதிய தொழில் கொள்கையை அறிவித்துள்ளார்.

கீழ்க்காணும் தொழில்கள் வளர்ச்சிக்குரிய சிறப்புத் தொழில்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.



தோல், துணிகள் மற்றும் பின்னலாடைகள், மின்னணுப் பொருள் மற்றும் சாப்ட்வேர், இயந்திரப் பாகங்கள், மருந்து மற்றும் மருந்துப் பொருள்கள், பெட்ரோலிய இரசாயனங்கள் - மணலி மற்றும் தஞ்சாவூரில் செயல்படும் திட்டங்கள், தொழில் உபயோகத்திற்கான எரிசாராயம், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள், உப்பு மற்றும் கடல் சார்ந்த தொழில்கள், நகைகள் மற்றும் செயற்கை வைரங்கள், பொறியியல் பொருட்கள், கடல் உணவுப் பண்டப் பொருட்கள், ஏற்றுமதிக்கான பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிலகங்கள்.

வேகமான தொழில் முன்னேற்றத்திற்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதைக் குறித்தும் மற்றும் தொழில்மயம் ஆக்குவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் கொள்கை விளக்கக் குறிப்பில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மின் வசதியினை முன்னேற்றம் செய்யும் வகையிலும் மின் உற்பத்தியில் தனியார் துறையினர் ஈடுபடுத்துவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

## புதிய செயல்நோக்கம்

மாநிலத்தில் கடுமையான நிதிப் பற்றாக்குறை இருந்த போதிலும், வளர்ச்சிக்கு மேலும் என்ன முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும் என்ற அரசின் செயல் வேகத்தை இது பாதிக்கவில்லை. புதிய தொழில் ஊக்குவிப்புத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, புதிய மற்றும் விரிவாக்கத் தொழிலுக்கான 15 சதவிகித மூலதன ஊக்கத்தொகை அளிக்கப்படுகின்ற பிற்பட்ட வட்டங்களின் எண்ணிக்கை 76-லிருந்து 82-ஆக உயர்ந்துள்ளது.

இந்த 82 பிற்பட்ட வட்டங்கள் தவிர, எல்லாத் தொழில் மேம்பாட்டுப் பகுதி

களிலும் மற்றும் அரசினால் மேம்படுத்தப்படும் கூட்டுறவுத் தொழில் பேட்டைகளுக்கு மற்றும் திருப்பூர் அருகிலுள்ள முதலிபாளையம் பின்னலாடைத் தொழிற்கூடங்களுக்கும் 15 சதவிகித மாநில மூலதன ஊக்கத்தொகை கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த ஊக்கத்தொகை மதுரை மாவட்டம் வேடத்துக்குளம் பகுதியில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தினால் நிறுவப்படும் பின்னலாடைத் தொழிற்பேட்டைக்கும் இந்த ஊக்குவிப்புத் தொகை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மிகவும் பிற்படுத்தப்பட்ட 31 வட்டங்களுக்கு மூலதன ஊக்குவிப்புத் தொகை 20 சதவிகிதத்திலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஊக்குவிப்புத்தொகை ரூ.20 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும். சிறு தொழிலுக்கான மூலதன ஊக்குவிப்புத் தொகை, பகுதி பகுதியாகத் தொழில் முனைவோருக்கு உதவும் வகையில் அளிக்கப்படுகிறது.

### குறைந்த மின் அழுத்த இணைப்பிற்கான மின்சார மானியம் உயர்வு

குறைந்த மின் அழுத்த இணைப்பிற்கான மின்சார மானியம் முதல் ஆண்டில் 10 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாகவும், இரண்டாவது ஆண்டில் 20 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதமாகவும், மூன்றாவது ஆண்டில் 30 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாகவும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

### தெரிவு செய்யப்பட்ட மின்னணு தொழிற்பேட்டைக்கான விற்பனை வரி தள்ளுபடித் திட்டம்

மிகவும் பிற்படுத்தப்பட்ட 31 வட்டங்களில் நிறுவப்படும் புதிய தொழிலகங்கள் அல்லது விரிவாக்கத்தில் ஈடுபட்டுள்ள தொழிலகங்கள் மற்றும் கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரையில் உள்ள சிப்காட் தொழில் மையங்களுக்கு முதல் ஐந்தாண்டுகளுக்கு மூலதனம் செய்யப்பட்டுள்ள தொகையில் 100 சதவிகித விற்பனை வரி தள்ளுபடித்திட்டத்திற்குத் தகுதியுடையதாகிறது. இந்தச் சலுகை சோளிங்கநல்லூரிலுள்ள மின்னணு நகரத்திற்கும், டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னணுத் தொழிற்பேட்டைக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### தொழில் துறையில் மகளிருக்கென வேலைவாய்ப்பினை ஏற்படுத்த சிறப்பு நடவடிக்கைகள்



மகளிருக்கென வேலைவாய்ப்பினை அதிகப்படுத்த, சிறப்பு ஊக்குவிப்புத் தொகை புதிய தொழிலகங்களுக்கு அளிக்கப்படுகிறது. மேலும் இந்தத் தொழிலகங்களுக்கு 5 சதவிகித மூலதன ஊக்குவிப்புத்தொகை அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரை 19.9.91 முதல் அளிக்கப்பட்டுவருகிறது. புதிய தொழிற்பேட்டை தொழில் மையங்களில் 30 சதவிகித தொழிற்கூடங்களும்/மனைகளும் மகளிர் தொழில் முனைவோர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறப்புத் தொழில் முனைவோருக்கான மேம்பாட்டுத் திட்டம், மதுரை-காமராசர் பல்கலைக்கழகம், அன்னை தெரசா பல்கலைக்கழகம், தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைக் கழகம் ஆகிய நிறுவனங்களின் தீவிர ஈடுபாட்டுடன் செயல்படுத்தப்படுகிறது. 1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் 800 மகளிர் தொழில் முனைவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

சிறு மற்றும் மிகச்சிறிய தொழில்களுக்கெனப் பல சிறப்புக் கொள்கை நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். தொழில்களுக்குத் தேவைப்படும் பல்வேறு சட்ட ரீதியான உரிமங்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் வழங்கிட ஒரு முனைத் திட்ட அமைப்பினை ஏற்படுத்திடவும் உத்தேசித்துள்ளோம். சிறு தொழில்கள் நலிவுறுவதற்குரிய பல்வேறு காரணங்களில் அவற்றிடமிருந்த பொதுத் துறை நிறுவனங்கள் பெற்றுக் கொள்ளும் வசதிகளுக்கு வழங்க வேண்டிய கட்டணத் தொகைகள் செலுத்துவதில் ஏற்படும் தாமதங்கள் மிகவும் முக்கியமான ஒன்று என்பதைக் கண்டறிந்தவுடன் தொழிற்துறையின் அரசு முதன்மைச் செயலரின் தலைமையின் கீழ் ஒரு உயர்மட்டக் குழுவினை ஏற்படுத்தி சிறு தொழில்களுக்குச் சேரவேண்டிய கட்டணத்தொகைகளைத் தாமதமின்றிச் செலுத்தப்படுவதனைக் கண்காணித்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மிகச் சிறிய தொழில்களுக்குத் தேவைப்படும் நிதி ஆதாரங்கள் அவற்றிற்குத் தாமதமின்றிக் கிடைத்திடுவதை உறுதிப்படுத்திட ஒரு சிறப்புக் குழுவையும் அமைத்திருக்கிறோம். தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் நிதி வசதியை அளிப்பதோடு மிகச் சிறு தொழில் துறை முழுவதற்கும் தேவைப்படும் நிதி வசதியையும் அளித்திடும் ஒரு ஆதார அமைப்பாகத் 'தாய்கோ' வங்கியை மாற்றியமைத்திடவும் எண்ணியிருக்கிறோம். சிறு தொழில்களுக்குச் சான்றிதழ் வழங்குமுறையினை எளிதாக்கிட அரசு சிறப்புக் கவனம் செலுத்தி சிறு தொழில்களுக்குத் தற்காலிக மற்றும் நிரந்தரப் பதிவுச் சான்றுகள் உடனுக்குடன் வழங்கிடும் வகையில் சீரமைக்கப்பட்டுள்ளது.

### குறிப்பிடத்தக்க முன்னேற்றம்

கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாக மாநிலத்தில் சிறு தொழில்களின் வளர்ச்சியில் புதிய வேகம் ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1991-92-லிருந்து அடுத்த ஐந்தாண்டுகளில் ஒரு இலட்சம் சிறு தொழில்கள் அமைத்திட வேண்டுமென நிர்ணயித்துள்ள இலக்கின் அடிப்படையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 40,999 நிரந்தரச்சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ள. 1991-92, 1992-93-ஆம் ஆண்டுகளில் மகளிர் தொழில் முனைவர் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்ட 1500 மகளிரில் 225 மகளிர் தமது சொந்தத் தொழிற்கூடங்களை அமைத்துள்ளனர். மேலும் 686 மகளிர் அதுபோன்ற சொந்தத் தொழிற்கூடங்கள் அமைத்திட ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

### தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

நலிவடைந்த பிரிவினர் மற்றும் கிராமப்புறக் கைவினைஞர்களின் மேம்பாட்டிற்காகவும் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பங்காற்றி வருகின்றன. கிராமப்புறக் கைவினைஞர்களுக்கென அமைப்பு ரீதியிலான ஏற்பாடு ஏதும் இல்லாமல் இருக்கிறது. இதுபோன்ற நலி

வுற்ற கைவினைஞர்களின் தனித் திறமையை ஊக்குவித்திட தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு நல்ல அமைப் பாக அமைந்துள்ளன.

தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள், தேயிலை, தீப்பெட்டி, கயிறு, சவ்வரிசி, தோல் பதனிடுதல், உலோகத்தகடுகள் பொறியியல், கைத்தொழில், தையல், பாலிதீன் போன்ற பல்வேறு தொழில் களை உள்ளடக்கியுள்ளன. 1993 மார்ச் திங்கள் இறுதியில் செயல்பட்டு வந்த 386 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.142.93 கோடி அளவிற்கு உற்பத்தி செய்து ரூ.169.53 கோடி அளவிற்கு விற்பனை செய்துள்ளன.

கூட்டுறவு முறையில் அமைக்கப்பட்ட தொழிற்பேட்டைகள், சிறு மற்றும் மிகச் சிறிய தொழில்களுக்குத் தேவைப்படும் தொழிற்கூடங்கள், செப்பனிட்ட மனைகள், நீர்வசதி மற்றும் இதர அடிப்படைத் தேவைகளைச் சகாயமாகக் கிடைத்திடச் செய்வதன் மூலம் அவற்றின் வளர்ச்சிக் கும் மேம்பாட்டிற்கும் உதவிடுகின்றன.

தமிழ்நாடு அரசும், ஆயுள் காப்பீட்டுக் கழகமும் கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள் அமைப்பதற்குத் தேவைப்படும் நிதி வசதியை மிகக் குறைந்த வட்டி வீதத்தில் வழங்கியுள்ளன. தொழிற்கூடங்களையும், செப்பனிட்ட மனைகளையும் கூட்டுறவுத் தொழிற்பேட்டைகளின் உறுப்பினர்களா கவுள்ள தொழில் முனைவர்களுக்குத் தவணைகள் அடிப்படையில் அளிக்கப் பட்டுள்ளன.

இதுவரை 10 கூட்டுறவுத் தொழிற் பேட்டைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 5 இயங்கி வருகின்றன. இதரத் தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டு வரு கின்றன.

## தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி

தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கென்றே 1961-ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி பதிவு செய்யப்பட்டது. இவ்வங்கி, தற்பொழுது 13 கிளைகளுடன் செயல் பட்டு வருகிறது. 1970-ஆம் ஆண்டில் ரூ.0.36 கோடியாக இருந்த, இதன் வைப்புத் தொகை, 1993-ஆம் ஆண்டில் ரூ.10.49 கோடியாக அதிகரித்துள்ளது. இது, ஒவ்வொரு ஆண்டும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.14 கோடி கடனுதவி அளிக்கின்றது. சின்னஞ்சிறு தொழில்களுக்கு நடைமுறை மூலதனம் மற்றும் தவணைக் கடன் வழங்கும் பொருட்டு, 'தாய்கோ' வங்கியின் அமைப்பு முறை மாற்றியமைக்கப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பங்கு

தமிழ்நாட்டில் சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு, சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) கீழ்க்கண்ட உதவி களை அளித்து வருகிறது.

1. புதிய தொழிற்பேட்டைகளை ஏற் படுத்துவது

2. சிறு தொழில் நிலையங்களுக்குக் கிடைத்தற்கரிய மூலப்பொருள்களை வழங்குவது.

3. சிறு தொழில்களின் உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனை வசதியனை ஏற்படுத்தித் தருவது.

கடந்த இரண்டாண்டுகளில், சிட்கோ, திருப்பூருக்கருகில் முதலிபாளையம், ஊரப்புளி இராமநாதபுரம், ஆண்டிப் பட்டி, கணபதிபாளையம், வீரபாண்டி, கரூர், குடிமங்களம், பல்லடம், மானா மதுரை, பரமக்குடி, வி.காங்கேயன் பாளையம், மதுரை, நாமக்கல் ஆகிய இடங்களில் 12 புதிய தொழிற்பேட்டை களை அமைத்துள்ளது. தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் 282 தொழிற் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. சிட்கோ, இதுவரை மாநிலத்தில் மொத்தம் 5,050 ஏக்கர் பரப்பளவில் 58 தொழிற்பேட்டை களை அமைத்து ரூ.140 கோடி மொத்த மதிப்பில் 3,440 தொழிற்கூடங்களைக் கட்டியுள்ளது.

தொழில் முனைவர்களுக்குத் தொழிற் கூடங்கள் தவணைக் கொள்முதல் அடிப் படையிலும், ஒட்டு மொத்த கொள்முதல் அடிப்படையிலும் ஒதுக்கப்படுகின்றன. இதுவரை, 2,200 தொழிற்கூடங்கள் ஒட்டு மொத்த கொள்முதல் அடிப்படை யின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளன. 1,200 தொழிற்கூடங்கள் தவணைக் கொள்முதல் முறையின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் 50 தொழிற்கூடங்கள் விரைவில் அம்பத்தூரில் வர இருக்கின்றன.

சென்னையிலிருந்து 17 கி.மீ. தூரத்திலுள்ள திருமுடிவாக்கத்தில் 400 ஏக்கரில் தோல் தொழில் வளாகம் ஒன்றும், கிண்டி தொழிற்பேட்டையில் மின்னணுத் தொழில் வளாகம் ஒன்றும் அமைக்கப்பட உள்ளன.

இரும்பு மற்றும் எஃகு நிலக்கரி, தீக்குச்சி மெழுகு, பாரபின் மெழுகு பொட்டாசியம் குளோரேட், துத்தநாகம் மற்றும் கொழுப்பு அமிலம் முதலிய கிடைத்தற்கரிய மூலப்பொருள்களைச் சிறு தொழில்களுக்கு சிட்கோ வழங்கு கிறது. தமிழ்நாட்டில் 1991-92-இல் ரூ.95 கோடி மதிப்பில் மூலப்பொருள் களும், 1992-93-ஆம் ஆண்டில் ரூ.76 கோடி மதிப்பில் மூலப்பொருள்களும் சிறு தொழில்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சிட்கோ நிறுவனம், சிறு தொழில் நிலையங்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு உதவியளித்து வரு கிறது. சிறு தொழில் நிலையங்களுக்காக 1991-92-ஆம் ஆண்டில் ரூ5.5 கோடி மதிப்புள்ள பொருள்களும், 1992-93-ஆம் ஆண்டில் 25.5. கோடி மதிப்புள்ள பொருள்களும் விற்பனை செய்வதற்கு ஆணைகள் பெற்றுத் தரப்பட்டன.

கடந்த ஆண்டில், ஜப்பானிய நாட்டு உதவியுடன் சிட்கோ நிறுவனம் அதி நுட்பத் தனித் தொழிற்பேட்டைகளைத் துவக்கி செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின்கீழ், சிட்கோ நிறுவனம், சிறுதொழில் துறையின் தொழில் நுட்ப வியலை மேம்படுத்தி 3 அதிநுட்பத்தனித் தொழிற்பேட்டைகளை அமைத்து வருகிறது. இத்தொழிற்பேட்டைகளில் அமைக்கப்படும் தொழில் நிலையங்களின் நலனுக்கெனப் பொதுப்பணி வசதிகளும் அளிக்கப்படும். தவணைக் கொள்முதல் மற்றும் குத்தகைத் திட்டத்தின்கீழ், இயந்திரச் சாதனங்கள் வாங்குவதற்குத் தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில்களுக்குப் புதிய சலுகைத் திட்டத்தினை சிட்கோ வகுத்துள்ளது.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் இதுவரை எந்த ஆண் டிலும் இல்லாத அளவிற்கு 1991-92 மற்றும் 1992- 93-ஆம் ஆண்டுகளில் முறையே ரூ.20 மற்றும் ரூ.30 இலட் சங்கள் இலாபம் ஈட்டியுள்ளது. மேலும் ஏற்றுமதி செய்ய வாய்ப்புள்ளதா என் பதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு தோல் நிறுவனம் நட்டத் தில் இயங்கிக் கொண்டிருந்தது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப் பேற்ற பிறகு இரண்டு ஆண்டுகளில் சுமார் ரூ.87 இலட்சம் இலாபம் ஈட்டி யுள்ளது.

ஏனவே, ஆர்வமுள்ள தொழில் முனைவர்கள், மாநிலத்தில் முதலீடு செய்வதற்குத் தமிழ்நாடு நல்ல வாய்ப் பைப் பெற்றுள்ளது என்பது தெளி வாகிறது.

நல்ல தொழிலியல் அடிப்படைப் பயிற்சி பெற்ற மனித சக்தி, நல்ல அத்தியாவசிய வசதிகள், கட்டுப்பாட்டுக் குட்பட்ட தொழிலாளர்கள் இவற்றால் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் உகந்த மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது.

# ஈராண்டுகளில் இருபதாண்டுச் சாதனைகள்

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்
**திரு. கு.ப. கிருஷ்ணன்**

> 'பாட்டுடைத் தலைவியாம் புரட்சித் தலைவியின் ஆட்சியில்- சாதிமத உணர்வுகள் ஒருசேரக் கைகோத்து நடந்தன; வேளாண்மைத் துறையில் பசுமைப் புரட்சி பார்போற்ற நடக்கிறது; ஈராண்டுகளில் இருபதாண்டுச் சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன...'



பரந்த சமவெளியும், பாய்ந்து வரும் ஆறுகளும்,
காற்றைக் கிழித்துப் புள்ளினங்கள்
கடக்க முடியாத ஏரிகளும்,
ஊர்தோறும் ஊருணிகளும்
கணக்கில்லாமல் பெற்றிருந்தும்,
காடுகள் விளையவில்லை,
கழனிகள் செழிக்கவில்லை,
ஆதிக்க வெறியரிடமிருந்து அடிமைத் தளைதனை நீக்கி
அனைவரும் சுதந்திரத்தை அனுபவிக்கச் செய்துவிட்டு,
தடியை மட்டுமே தன் கையில் கொண்டிருக்கும்
கஸ்தூரிபாய் கணவனைப் போல்,
நாட்டில் அனைவருக்கும் உய்ய உணவளித்து,
பிறஉயிரைத் தம்முயிர் போல் எண்ணும் பேதை மகன்,
ஏர் மோழியை மட்டும் தன் தோளில் சுமந்தவன்
வாழ்வும் வதங்கிக் கொண்டிருக்க,
ஆலைகள் மூட, அற நிலையங்கள் வெறிச்சோட,
'பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்' என்னும்
பாரதியின் அக்கினி வரிகள் அரங்கேறிக்கொண்டிருக்க,
அல்லலுற்ற மக்கள்,
''இவர்கள் ஆண்டதும் போதும்,
மக்கள் மாண்டதும் போதும்'' 'என்று,
பஞ்சையாய்ப் பராரியாய் வாழ்வதற்கு
முற்றுப்புள்ளி வைக்க முடிவு தேடியலைந்தார்கள்,
புதுவாழ்வு பிறக்க
புரட்சிப் பூவாய்,
புதியதோர் புறநானூற்றுப் பாடலாய்,
மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மனம் கவர்ந்த தலைவி
மக்களைப் புரிந்துகொண்ட தலைவி
புவியாள வந்தாலொழிய
புலராது பொழுது என ஏங்கி நிற்க,
கொடுங்கோலராட்சி கோட்டையில் இருந்து சரிந்தது,



பூத்தது தேர்தல்,
பொழிந்தன வெற்றிப்பூக்கள்
வாழ்த்தொலிகள் விண்ணைப் பிளக்க,
தமிழர் இல்லமெல்லாம்
மாவிலையும் தோரணமும்
மாக்கோலமும் பூண்டிருக்க,
நெஞ்சமெலாம் நெகிழ்ந்துருக,
கோடியிலே வாழ்பவர்களின் குணங்களை அறிந்தவரும்,
குன்றாக நெஞ்சுறுதி, குலையாத கொள்கை உள்ளம்,
மாறாத - மாற்ற முடியாத,
மனப்பக்குவம் பெற்றவரும்,
மக்கள் சக்தியாய், மாதர்களின் குலவிளக்காய்,
ஏழை எளியோரின் எதிரொலியாய்,
பாட்டாளி மக்களின் பாதுகாப்பு அரணாய்,
உழைக்கும் வர்க்கத்தின் உரிமைக் குரலாய்,
இளைஞர்களின் கலங்கரை விளக்காய்,
புவியே போற்றும் பூபாளமாய்,
பொதிகையில் இருந்து புறப்பட்ட சந்தனத் தென்றலாய்,
தந்தை பெரியாரின் தவமாய்,
அண்ணாவின் பேரறிவாய்,
புரட்சித்தலைவரின் பொன்மனமாய்,
புவியாள
எங்கள் புரட்சித்தலைவி அவர்கள் தம் படைசூழ
ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார்கள்
ஜூன் திங்கள் 24-ஆம் நாள் - அந்நாள்
இந்நாள்!
முத்தமிழும் பூரிக்கும் வண்ணம் தம்
மூன்றாவது ஆண்டின் முதற்படியில்
அடியெடுத்து வைக்கிறார்கள்,
அன்று அலங்கோலமாய்க் காட்சி தந்த ஆட்சித் தேர்,
கயமைத் தனத்தால் தலைகவிழ்ந்த செங்கோல்,
நிதியென்னும் நீருற்று வற்றிய பொய்கையாய்,
சட்டம் ஒழுங்கு தறிகெட்டு ஓடிய காளையாய்,
சாதிமதப் பிணக்குகள் மத யானையாய்
பிரிவினை வாதமும் துப்பாக்கிக் கலாசாரமும்
தலைவிரித்தாடிய வேளையில்
எம் அன்னை ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார்கள்.
இத்துணைச் சீர்கேடுகளையும் இவரால் சீர்படுத்த முடியுமா?
இவருக்குப்போதிய அளவு சிந்தையில் தெளிவுள்ளதா?
அங்குசத்தைக் கையிலெடுத்து அடக்கும் வல்லமை
கைவரப் பெற்றவரா? என
எக்காளமிட்ட எதிர்க்கட்சி நுவளைகளும் வாயடைத்துப் போக,
வசை பாடியே வாழ்க்கை ஓட்டியோர் மூர்ச்சையாகிச் சாக,
ஆளும் திறமை அனைத்தும் தமக்கே உரியதென
தற்பெருமைக் கொண்டவர்கள் தலை கவிழ,
ஆட்சித் தேர் சீர் செய்யப்பட்டது.
நிதியென்னும் நீருற்று தூர் வாரப்பட்டது.
மாசுபடிந்த செங்கோல் புதுமாட்சிமை பூண்டது.
சட்டம் ஒழுங்கு சாட்டைக்கு அடங்கிய சிறுத்தையாய்
கட்டுப்பாட்டிற்கடங்கியது.
சாதி, மத உணர்வுகள்,
ஒருசேர கைகோத்து நடந்தன.
எம்மதமும் தம் மதமாக அரவணைக்கப்பட்டது.
ஈராண்டுகளில் இருபது ஆண்டுச் சாதனைகள் படைத்தது கண்டு
பாரே போற்றி மகிழ்கிறது.
வேளாண்மைத் துறையில் பசுமைப் புரட்சி கண்டது,
நம் பாட்டுடைத் தலைவியாம் புரட்சித்தலைவியின் ஆட்சியிலே!







தொலைநோக்குத் திட்டங்களும்,
தொய்வில்லா நடவடிக்கையும்,
அள்ள அள்ளக்குறையாத மானியச் சலுகைகளும்,
மதிநுட்பத் தொழிற்பயிற்சியும்
நம் உழவர் மக்களுக்குத் தொகை தொகையாய் வழங்கப்பட்டது.
மக்களின் சக்தி மட்டுமே மகத்துவமாய்
நம் தலைவிக்கு அமைந்தது போல்
வான்மகளும் தன் பங்கை வற்றாது வழங்கினாள்.
வறண்ட ஆறுகள் அனைத்தும் பொங்கும் புதுப்புனலாய்ச்
சுற்றி எங்கும் வலம் வந்தன.
வறண்ட ஏரிகளின் கண்மாய்கள் திறந்தன,
ஊருணிகள் யாவும் கடைவழியே ஓடின.
காடுகள் எல்லாம் களித்துச் செழித்தன.
கழனிகள் யாவும் பட்டாடை பூண்டு
செந்நெல் சிரிக்க தங்க நிறம் பரப்பின.
காலியான களஞ்சியங்கள் கழுத்து வரை நிறைந்தன.
இருப்பு வைக்க இடமின்றித் தடுக்கப்பட்டிருந்த
சோதனைச் சாவடிகள் தளர்த்தப்பட்டன.
செல்விருந்தோம்பி வருவிருந்துக்காகக் காத்திருக்கும்
காலம் கனிந்தது.







★ கனிந்திடத் தலைவி
கணித்திட்ட திட்டங்கள் பல.

★ ஆறாம் வகுப்புபயிலும்
அனைத்து மாணவர்க்கும்
உயர் ரகத் தென்னங்கன்றுகள்-இலவசமாய்
உவப்புடன் வழங்கும்
டாக்டர் புரட்சித் தலைவி தென்னை வளர்ப்புத் திட்டம்.
ஆண்டுக்கு ஐந்து இலட்சம் கன்றுகள் நட்டு
இதனால் ஆண்டுதோறும்
நாட்டுக்கு ஐந்து கோடித் தேங்காய்கள் கிட்டும்.

★ பாமர மக்கள் துய்க்கும்
பாமாயில் எண்ணெய் நாட்டில்
தாராளமாய்க் கிடைக்கச் செய்ய,
தரணிக்குத் தந்த திட்டம்
செம்பனை வளர்ப்புத் திட்டம்.
காவிரிப் படுகை எங்கும்
கோஸ்டாரிக்கா நாற்று கொண்டு
ஈராயிரம் எக்டர் பரப்பில்
ஈடேறும் இந்தப்புதுமைத் திட்டம்.

★ சிறு குறு விவசாயிகளின்
சிறப்பான வேளாண்பணிக்கு
ரூபாய் 12,000 மான்யத்தில்
ஈராயிரம் பவர் டில்லர் வழங்கும் திட்டம்

★ உயர்விளைச்சல் காண்போருக்கு
ஊக்கம் அளிக்கும் வகை
பயிர் விளைச்சல் போட்டி வைத்து
பணப்பரிசு வழங்கும் திட்டம்.

★ பரிசு வழங்கினால் மட்டும் போதாது-
உழவர்தம்
பரிகாச வாழ்வும் மாறவேண்டும்
அவர்கள்
பொருளீட்டிப்பெருவாழ்வு வாழவேண்டும்-என
ஜெ.ஜெ.92. வாசனைநெல் உற்பத்தி செய்து
ஏற்றுமதி வாய்ப்புகளைப் பெருக்கும் திட்டம்.

★ ஆலயம் செல்வோர் மனம்
அமைதியில் திளைத்திடப்
பெரும் கோயில்கள் எங்கும் - நல்

நந்தவனம் அமைக்கும் திட்டம்.

★ சுதந்திரக் காற்றைச் சுவாசித்த பின்
முதன்முறையாய்த் தமிழகத்தில்
அகில இந்திய அளவில்
வாழை ஆராய்ச்சி மையம்
வகையாய்க் கொணர்ந்த திட்டம்.

★ தரமான பொருள்களையே
தமிழக உழவர்பெற
தரக்கட்டுப்பாட்டுக்கெனத்
தனி இயக்ககம் அமைக்கும் திட்டம்.

★ உழவர்க்குத் தொழில் நுட்பமது
உடனுக்குடன் சென்றடைய-
வேளாண் அலுவலர்க்கு
ஊக்கம் தரும் பரிசுத் திட்டம்.

★ விளைநிலத்தின் நலன் காத்து
விவசாயிகளின் நிலை உயர்த்த வழிகாணும்
விஞ்ஞானிக்குப் பரிசுத் திட்டம்.

★ விளை நிலங்கள் விலை நிலமாகி
வீடு, மனை, நகரங்களாகி - மக்கள்
உணவுக்குப் பெரும் பஞ்சம்
உருவாகும் நிலை தவிர்க்க
விளைநிலத்தில் வீட்டுமனைத் தடுப்புத்திட்டம்.

★ காளைகளின் துயர் நீக்கி
சாலைகளின்நிலை காக்க
பாட்டாளி மக்கள் பயனடைய
புத்தம் புது டயர் வண்டி
மான்யத்தில் வழங்கும்
டாக்டர் புரட்சித் தலைவி டயர்வண்டி வழங்கும் திட்டம்.
தீட்டிய திட்டங்கள் யாவுக்கும்
சட்டங்கள் உடன் செய்து
படைத்த சாதனைக்கோர் சான்று
இரண்டு ஆண்டுகளில் இணையற்ற உணவு உற்பத்தி
முதலாண்டில் அரிசி உற்பத்தி 70.4 இலட்சம் மெட்ரிக் டன்.
இரண்டாம் ஆண்டில்
அரிசி உற்பத்தி 76.0 இலட்சம் மெட்ரிக் டன்.
முதலாண்டின் மொத்த அளவு உற்பத்தி 94
இலட்சம் மெட்ரிக் டன்.
இரண்டாம் ஆண்டின் மொத்த
உணவு உற்பத்தி 101 இலட்சம் மெட்ரிக் டன்.
''தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில்
ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்றான்
பாட்டுத் தீ பாரதி
சாதனைச் சரித்திரங்கள்
சளைக்காமல் தான் எழுதி
ஜெகம் வாழ வழியமைக்கும்
எங்கள் அன்னை
ஜெ. ஜெயலலிதா ஆட்சி வாழ்கவே!










# தமிழகத்தில் கால்நடை வளமும் பால் வளமும்

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்
**திரு தே. ஜனார்த்தனன்**

> **சிறு, மிகச் சிறு விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள் நலனுக்கெனச் சிறப்புக் கால்நடைப் பெருக்குத் திட்டத்தின்கீழ், 4,575 குடும்பங்களுக்கு, ரூ.225 செலவில், 1,050 ஆட்டு அலகுகளும், 3,500 கன்று வளர்ப்பு அலகுகளும், 25 பன்றி அலகுகளும் வழங்கப்பட்டுள்ளன.**



'ஊருக்கு நல்லது சொல்வேன் - எனக்கு உண்மை தெரிந்தது சொல்வேன்.'

என்ற பாரதியார் வரிகளுக்கிணங்கவும்,

'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.'

என்ற தாயுமானவரின் வரிகளுக்கிணங்கவும், தமிழக அரசு தனிமனிதனை முன்னிலைப்படுத்தியே நற்காரியங்களைச் செய்து வருகிறது. ஏனெனில் தனிமனிதனுடைய விரிவே சமூகம். தனிமனிதனில்லாத சமூகமும், சமூகத்தில் ஒட்டாத தனிமனிதனும் கிடையாது, என்றாலும் சமூகமாக வியாபித்து வருகின்ற தன்மை எல்லாத் தனி மனிதர்களிடமும் கிடையாது. டாக்டர் புரட்சித் தலைவி போன்ற தனிமனிதர்கள் மனித ஜாதி முழுவதுக்குமே எண்ணிச் செயல் புரிந்து வாழ்கிறார்கள்.

இரண்டாண்டு இருண்ட காலத்திற்குப்பின் உதித்த புரட்சித்தலைவியின் ஆட்சி தமிழர்கள் தினம் தாம் உச்சரிக்கும் வார்த்தைகளில் ஒன்றாய் மாறிவிட்டது.

எனது துறையில் இவ்வரசு எண்ணற்ற சாதனைகள் செய்திருந்தாலும், ஒரு சிலவற்றைப் பற்றி மட்டுமே இங்கே விவரித்துள்ளேன்.

**கால்நடைப் பராமரிப்பு**

நம் மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளும் நோய் பாதுகாப்பு வசதிகளும், தரமான மேனாட்டுப் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு செயற்கை முறை கருத்தரிப்பு மூலம் கால்நடைகள் இனப்பெருக்கமும், விவசாயிகளின் நன்மைக்கென இவ்வரசால் செயல்படுத்தப்படுகின்றன. தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரைகளின்படி இவ்வரசு கால்நடை மருத்துவ நிலையங்களையும் மருந்தகங்களையும் 930-லிருந்து அதிகரிக்க ஆவன செய்து வருகிறது. இதன் முதற்கட்டமாக 400 கால்நடை மருந்தகங்களைத் திறக்கச் சென்ற ஆண்டு ஆணையிட்டது. வெறிநாய்க் கடியின் கொடுமையிலிருந்து தீர்வு காண மதுரை, சென்னை, கோவை போன்ற இடங்களில் வெறி நாய்க்கடி நோய்க் கட்டுப்பாடு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மாநிலத்தில் கால்நடைத் துறையின் செயல்பாட்டினை அறிந்த உலக வங்கி வெவ்வேறு திட்டங்கள் செயலாக்கத்திற்கு ரூ.46 கோடி கடன் வழங்க முன்வந்துள்ளது. இக்கடன் உதவியால் கீழ்க்கண்ட திட்டங்கள் அமலில் உள்ளன.



அ) மதுரை, வேலூர், கோவை, திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி, தர்மபுரி நகரங்களில் உறைவிந்து வங்கிகள் நிறுவுதல்.

ஆ) மதுரை, கோவை, திருச்சி, வேலூர் நகரங்களில் வட்டார நோய்ப் புலனாய்வு ஆய்வகங்கள் நிறுவுதல்.

இ) தீவன உற்பத்திக்கான மூலப் பொருட்கள் இலவசமாக விநியோகித்தல்.

இத்திட்டங்களின் செயல்பாட்டினால் மாநிலத்தில் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குத் தேவையான மருத்துவச வசதிகளும் நோய்ப் பாதுகாப்பு வசதிகளும் உரிய நேரத்தில் கிடைக்கின்றன. சிறு/மிக சிறு விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள் நலனுக்கெனச் சிறப்புக் கால்நடைப் பெருக்குத் திட்டத்தால் 4,575 குடும்பங்களுக்கு ரூ.225 இலட்சம் செலவில் 1,050 ஆட்டு அலகுகளும், 3,500 கன்று வளர்ப்பு அலகுகளும், 25 பன்றி அலகுகளும் வழங்கப்பட்டுள்ளன.

5,000 இந்து ஆதிதிராவிடக் குடும்பங்கள் பயன்பெறும் விதத்தில் சுமார் 144.18 இலட்சம் செலவில் 3,450 ஆட்டு அலகுகள் சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தைப் பொறுத்தவரையில், காமராசர் மாவட்டம் அனுப்பங்குளத்தில் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் குஞ்சுகள் பொரிக்க வைப்பதற்காகக் குஞ்சு பொரிப்பகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசூரிலுள்ள குஞ்சு பொரிப்பகத்தை மேலும் திறம்படச் செய்து ஆண்டொன்றுக்கு 9 இலட்சம் கறிக் கோழிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**பால் வளம்**

பால் உற்பத்தியினைக் கருத்தில் கொண்டு இவ்வரசு சென்ற இரண்டாண்டுகளில் 1,165 புதிய பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டு ஒன்றிய அளவில் ஆன பால் கொள்முதல் நாள் ஒன்றுக்குச் சுமார் 11.83 இலட்சம் லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. இத்துறையின் மூலம் ஆதிதிராவிட மக்களின் வாழ்க்கைத் தர முன்னேற்றத்தில் மிகவும் தனிக் கவனம் செலுத்துவதால் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலமைந்த அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் 34,516 ஆதிதிராவிடர்கள் பயன்பெறும் வகையில் கறவை மாடுகள் வழங்கியுள்ளது.

அ) சென்னையை அடுத்த சோழிங்கநல்லூரில் 4 இலட்சம் லிட்டர் கொள்திறன் கொண்ட பால்பண்ணை ரூ.21 கோடி செலவிலும்,

ஆ) திருச்சியில் 1,50,000 லிட்டர் கொள்திறன் கொண்ட புதிய பால்பண்ணை ரூ.6 கோடி செலவிலும்,

இ) தென்னார்க்காடு மாவட்டம் விழுப்புரத்தில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்திறன் கொண்ட பால்பண்ணை ரூ2.90 கோடி செலவிலும்,

ஈ) திருவண்ணாமலையில் உள்ள பால் குளிரூட்டும் நிலையம் 30,000 லிட்டர் கொள்திறனிலிருந்து ஒரு இலட்சம் லிட்டர் கொள்திறன் கொண்டதாக மாற்றியும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார், காமராசர் மாவட்டங்களில் புதிய

பால்பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**

'மண்மீதுள்ள மக்கள் பறவைகள்
விலங்குகள் பூச்சிகள் புற்பூண்டு மரங்கள்
யாவும் என் வினையால் இடும்பை தீர்ந்தே
இன்ப முற்றன்புடன் இணங்கி வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும் தேவ தேவா.'

என்ற பாரதியின் கூற்றினைப்போல் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவியின் அரசு விலங்கின சுகத்தைக் கருத்தில்கொண்டு இப்பல்கலைக்கழகத்தின் மூலம் விலங்கின மேம்பாட்டிற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது.

இவ்வரசின் தீவிர விடா முயற்சியின் பயனாக, 1992-ஆம் ஆண்டில், இந்தப் பல்கலைக்கழகத்தை, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும், பல்கலைக்கழக மானியக் குழுவும் அங்கீகரித்துள்ளன.

உலக அளவில் இந்தப் பல்கலைக்கழகம், பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து ஆராய்ச்சிகளை நடத்தி வருகின்றது. அவை வெப்ப மண்டலக் கால்நடை மருத்துவ மையம், கடல் கடந்த வளர்ச்சி முகமை, குயின்ஸ் பல்கலைக்கழகம், இயற்கை வளவாய்ப்பு நிறுவனம், மைய கால்நடை மருத்துவ ஆய்வுக்கூடம், இங்கிலாந்து, ரிஷ்க் கால்நடை மருத்துவ நிறுவனம், நெதர்லாந்து, கால்நடை மருத்துவக் கலைப்புலம், அமெரிக்கா, ஜாக்ராப் பல்கலைக்கழகம், யுகோஸ்லாவியா, ஆசிய மீன்வளக்கழகம், மணிலா தேசியப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர் மற்றும் அமெரிக்க வேளாண்மை வளர்ச்சி நிறுவனம் ஆகியவை ஆகும்.

சென்ற ஆண்டு, பட்ட மேற்படிப்புப் படிப்பதற்காக, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் படித்த 14 மாணவர்களும், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் படித்த 7 மாணவர்களும், தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் படித்த 4 மாணவர்களும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தில் இளநிலை ஆராய்ச்சி உதவித் தொகைக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் மருத்துவமனை, பிரிய மற்றும் செல்லப் பிராணிகளுக்குச் சிறந்த முறையில் சிகிச்சை அளிப்பதன் மூலம் நற்பெயர் பெற்றுள்ளது.





கால்நடை வளர்ப்பிலும், கோழி வளர்ப்பிலும், ஆடவர், மகளிர் உட்பட, 6,534 உழவர் பெருமக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இது தவிர, கால்நடை மற்றும் மீன் உற்பத்தியை அதிகரிக்கவும், வேளாண் காடு வளர்ப்பில் உழவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், தேசிய தரிசுநில மேம்பாட்டுக் கழகத்தின் நிதி உதவியுடன் இப்பல்கலைக்கழகம், 'முன் மாதிரி வேளாண் காடுகளை' உருவாக்கியுள்ளது. ஐ.ஆர்.டி.பி. - ட்ரைசம் திட்டத்தின்கீழ், கடலோர மீன்வளர்ப்பு, மீன்பிடிப்பு, மீன் பதனம் செய்தல் போன்றவற்றில் மீனவர் மற்றும் மீனவ மகளிர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பசுக்களில் கருமாற்றம் செய்து 6-க்கும் மேற்பட்ட கன்றுகளைப் பெறும் முறையும், செம்மறி ஆட்டு விந்துவை உறைய வைத்து, செயற்கை முறைக் கருவூட்டலில் வெற்றியும் காணப்பட்டுள்ளன.

இவ்வாறு நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் கொண்டு, கொண்ட கொள்கையில் இம்மி அளவும் பிறழாது டாக்டர் புரட்சித்தலைவியின் சீரிய தலைமையில் அமைந்துள்ள இவ்வரசு, இன்னும் பல அரிய திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டம் தீட்டி உள்ளது.

# வணிகவரித் துறையில் வளம் சேர்க்கும் சாதனைகள்


மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்

**திரு வி. சத்தியமூர்த்தி**


- **சாமான்ய மக்கள் பயன்படுத்தும் பெரும்பான்மைப் பொருட்களுக்கு வரிக்குறைப்பு.**
- **ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் விற்பனைத் தொகை இல்லாத எல்லா வணிகர்களுக்கும் வரிவிலக்கு.**

இரண்டு ஆண்டுச் சாதனைகளை உற்று நோக்கும்போது டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தன் பெயரில் ஜெயத்தைப் பெற்றிருப்பதுபோல் முதல்வர் என்ற நிலையில் அனைத்துத் துறையிலும் ஜெயத்தைப் பெற்றிருக்கின்றார் என்பதைக் காணலாம். முதல்வர் ஆனதால் தன் பெயருக்கு முன்பு மாண்பைப் பெற்றதுபோல், தமிழ் நாட்டிற்கும் மாண்மைப் தேடித் தந்துள்ளார். இரண்டு ஆண்டுக் காலத்தில் ஏனைய எந்த மாநிலத்தையும் விட, தமிழ் மாநிலம் அனைத்துத் துறையிலும் வெற்றி நடை போட்டுள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

ஆட்சிப் பொறுப்பேற்கும்போது 1000 கோடிக்கு மேல் பற்றாக்குறை. பற்றாக்குறைக்கு மலிவு விஜல மது ஒழிப்பால் நிதி இழப்பு வேறு. அந்நிலையில் நடைமுறை வளர்ச்சித் திட்டங்கள், நலத் திட்டங்கள் ஏதும் கைவிடப் படாமல், சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்திற்கு 365 கோடி ஒதுக்கியதோடு வெற்றிகரமாகச் செயல்படுத்திக் காட்டிய பெருமை புரட்சித்தலைவி ஒருவரையே சாரும்.

பல்வேறு துறைகளில் முன்னேற்றம் கண்டு மக்கள் பாராட்டைப் பெற்றுள்ள புரட்சித்தலைவி அவர்கள், வணிகவரித் துறையிலும் தன் நிர்வாகத் திறமையைப் பதித்துள்ளார்கள். மூடிக்கிடந்த பல தொழிற்சாலைகளின் கடந்த கால வரிச்சுமையை நிறுத்தி வைத்து, தொழில் தொடங்க செய்ததன் மூலம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இழந்த வேலையைப் பெற்றுள்ளனர்.



### 1991-92-ஆம் ஆண்டுச் சாதனைகள்

1991-92-இல் வரிவிலக்கு பல்வேறு பொருட்களுக்கு அளிக்கப்பட்டது. உதாரணமாக, சில உயிர்க்காப்பு மருந்து வகைகள், பார்லி, மாட்டு வண்டி, சைக்கிள் ரிக்ஷா (மோட்டார் இன்றி), மந்தார இலை, முயல் தீவனம், குரங்குத் தீவனம், பன்றித் தீவனம் மனிதமுடி (விக்குகள்), கடல் கிளிஞ்சல்களால் செய்யப்பட்ட பொருட்கள் போன்றவைகட்கு வரிவிலக்கு அளிக்கப் பட்டது.

### 1992-93-ஆம் ஆண்டுச் சாதனைகள்

1992-93-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், குங்குமம், கண்மை, கோதுமை, கணிப்பொறி சாஃப்ட்வேர், தங்கத்தாலி (இணைப்புகளுடன் எட்டு கிராமிற்கு மிகாமல்) போன்ற பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. மேலும், அதே நிதியாண்டில், கீழ்க்கண்ட பொருட்களுக்கு வரிக்குறைப்புச் செய்யப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

நெய் மற்றும் பால் பொருட்கள் (வாணிபக் குறியீட்டுச் சட்டத்தின்கீழ் பதிவு இடாதது). குச்சிக்கிழங்கு, சிப்சுகள், மாவு, சேமியா, போலி நகைகள், லேமினேட் செய்யப்பட்ட சாக்குப் பைகள், சில மளிகைப் பொருட்கள், வாடகைச் சீருந்து, பதனிடப்பட்ட தோல் உரிவைகள், வெந்தயம், கிராம்பு முதலியன. தமிழ்நாடு ஜாரி நிறுவனத்திலிருந்து விற்கப்படும் ஜாரிகளுக்குக் கொள்முதல் வரிநீக்கமும் செய்யப் பட்டுள்ளது.

### 1992-93-இல் அனுமதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

விருதுநகர் வணிகவரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, புதிதாக சிவகாசியைத் தலைமையிடமாகக் கொண்டு உதவி ஆணையரின் தலைமை

யில் சிவகாசி வணிகவரி மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

சென்னை செயலாக்கப் பிரிவில் சுற்றும் படைகளைப் பலப்படுத்தும் நோக்குடன் இரண்டு புதிய துணை வணிகவரி அலுவலர் பணியிடங்களும், ஐந்து புதிய உதவி வணிகவரி அலுவலர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டன.

கோவை (தெற்கு) மற்றும் கோவை (வடக்கு) வணிகவரி மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, புதியதாக உதவி ஆணையரின் தலைமையில் ஒரு வணிகவரி மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டது. வணிக வரி மாவட்டங்கள் கோவை சரகம் 1 (தெற்கு), கோவை சரகம் 2 (வடக்கு), கோவை 3 (புதியது) எனப் பெயரிடப் பட்டது.

வரிவிதிப்பு வட்ட அலுவலகங்களைப் பலப்படுத்தும் நோக்குடன் துணை வணிக வரி அலுவலர்களைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வந்த பத்து வரிவிதிப்பு வட்ட அலுவலகங்களுக்கு, பத்து வணிகவரி அலுவலர் பணியிடங்கள் வழங்கப்பட்டு அவைகள் வணிகவரி அலுவலர் அலுவலகங்களாக உயர்த்தப்பட்டன.

மேல்முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்களில் பணிப்பதிவை சீர் படுத்தி, மேல்முறையீடுகளை விரைந்து முடிக்கும் நோக்குடன் சென்னையில் கூடுதலாக ஒரு மேல்முறையீட்டு உதவி ஆணையர் பணியிடம் தோற்றுவிக்கப் பட்டது.

***1993-94-ஆம் ஆண்டுச் சாதனைகள்***

1993-94-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை 12.3.1993 அன்று தாக்கல் செய்யப்பட்டதில், விற்பனை வரிவிதிப்பில் கீழ்க்கண்ட வரிக் குறைப்பு/சலுகைகளை அரசு அறிவித்துள்ளது.

முன்னர் அமலில் இருந்த 17 வரிவிகிதங்கள், 9 வரிவிகிதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பொருட்கள் 5 வரிவிகிதங்களில் கொண்டு வரப்பட்டன. வரிவிகித வாரியாகப் பொருட்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

சாமான்ய மக்களால் பயன்படுத்தப் படும் பெரும்பான்மையான பொருட்களின் மீதான வரிவிகிதம் குறைக்கப் பட்டுள்ளது. உதாரணமாக, காப்பிக் கொட்டை, மண்ணெண்ணெய், தாவர எண்ணெய்கள், மஞ்சள், மிளகாய், தனியா, சிகைக்காய், புளி, [illegible]கு, வெல்லம், கோதுமைப் பொருட்கள், கையினால் தயாரிக்கப்பட்ட சோப்புகள் ஆகியவற்றின் மீதான வரிவிகிதம் குறைக் கப்பட்டுள்ளன.

இதேபோன்று மருந்துவகைகள், பிளாஸ்டிக் பொருட்கள், அலுமினியப் பாத்திரங்கள், உலர் மின்கலங்கள் ஆகிய உபயோகப் பொருட்களின் மீதான வரி விகிதம் குறைக்கப்பட்டுள்ளன.

தொழில்துறை பொருட்கள், இயந் திரங்கள், உபகரணங்கள் கச்சா திரைப் படச்சுருள், எலக்ட்ரோட்ஸ், மற்றும் உருளைகள் மீதான விற்பனை வரிவிகிதம் குறைக்கப்பட்டுள்ளன.

ஒரு இலட்சம் ரூபாய்க்குமேல் விற் பனைத் தொகை இல்லாத அனைத்து

**மருந்துப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், அலுமினியப் பாத்திரங்கள் போன்ற அன்றாடம் பயன் படுத்தப்படும் பொருட்களின் மீதான வரி குறைக்கப் பட்டுள்ளது.**




வணிகர்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப் பட்டுள்ளது. இதனால் 60,000 வணிகர் களுக்கும் மேலாகப் பயன்பெறுகின்றனர்.

பொதுவாக, ஒருசில தனியே குறிப் பிட்ட இனங்களைத் தவிர துணைப் பொருட்கள், உதிரிகள், கூட்டு உறுப்புகள் ஆகியவற்றின் மீதான வரிவிகிதமும், அவற்றின் மூலப் பொருட்களுக்கான வரி விகிதத்திற்கு இணையாக அமைத்திட வழி வகை செய்யப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கான உற்பத்திச் செலவை மேலும் குறைக்கும் வகையில் ஒருசில பெட்ரோலியம் சம்பந்தப்பட்ட பொருட்கள் தவிர (எரிசாராயம், நாப்தா, மினரல் ஆயில், மசகு எண்ணெய், கிரீஸ்) அனைத்து வாயு (கேஸ்) உற்பத்தி நிறு வனங்களுக்குத் தேவைப்பட்ட அனைத்து மூலப் பொருட்களுக்கும் பிரிவு 3(3)-ன் கீழ் விதிக்கப்படும் 3 சதவிகித சலுகை வரி, விற்பனைப் பொருட்களுக்கான பேக்கிங் பொருட்கள், பெயர் வில்லைகள் மற்றும் பயன்படு பொருட்கள் ஆகிய வற்றிற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

பணி ஒப்பந்தங்கள் மற்றும் குத்தகை மீதான வரிவிதிப்பு தொடர்பாக உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்புக்கிணங்க வரிவிதிக்கும் முறை மாற்றியமைக்கப்படுகிறது. ஏற்கெனவே, வரிவிதிக்கப்பட்ட பொருட்கள் மீது மீண்டும் வரிவிதிக்கப்படமாட்டாது. மேலும், கட்டடப்பணி ஒப்பந்ததாரர் களுக்கு இணக்க முறையில் இரண்டு சத விகித வரி செலுத்தும் முறை அமலாக்கப் பட்டுள்ளது.

சுயவரிவிதிப்புமுறை 68,000 வணிகர்கள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

ரூபாய் 75,000 வரை விற்பனைத் தொகையுள்ள அனைத்து வணிகர் களுக்கும், 'வணிகராகப் பதிவு செய்து' கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.

1993-94-ஆம் ஆண்டில் கீழ்வரும், திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங் களில் வேலைப்பளு அதிகமாக உள்ள வரிவிதிப்பு வட்டங்களைப் பிரித்து

இரண்டு புதிய வரிவிதிப்பு வட்டங்களை உருவாக்குதல்.

சென்னையில் சரகம்-4 மற்றும் சரகம்-6 இரண்டையும் பிரித்து, புதிதாக உதவி ஆணையர் சரகம்-11 ஏற்படுத்துதல்.

திருவள்ளூர், பூந்தமல்லி, செங்கல்பட்டு ஆகிய இடங்களில் சுற்றும் படைகள் ஏற்படுத்தவும், காரைக்குடி மற்றும் நாகர்கோவிலிலுள்ள சுற்றும் படைகளை வலுப்படுத்தவும், 5 துணை வணிகவரி அலுவலர்கள், 5 உதவி வணிகவரி அலுவலர்கள் மற்றும் 3 ஓட்டுநர் பதவிகள் அனுமதித்தல்.

கணியூர் வணிகவரி சோதனைச் சாவடியில் வெளியே செல்லும் வாகனங்களைத் தணிக்கை செய்யச் சோதனைச் சாவடி ஏற்படுத்துதல்.

வணிகவரி கணிமப்பொறி மையத்தில் தற்போதுள்ள பொறியின் நிலை உயர்த்துதல்.

கோயம்புத்தூர் செயலாக்கக் கோட்ட பன்னாரி சோதனைச் சாவடிக்குக் கட்டடம் கட்டுதல்.

வாணியம்பாடி மற்றும் ஆரணியில் அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட திட்டங்களுக்குச் செலவினத் தொகையாக ரூபாய் 90.09 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இவைகளைத் தவிர, கீழ்க்கண்ட திட்டங்களை அனுமதிப்பது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

பழைய ஈப்பு வாகனங்களைக் கழிவு செய்து, 29 புதிய ஈப்பு வாகனங்களைச் செயலாக்கப் பிரிவிலுள்ள சுற்றுப்படைகளின் உபயோகத்திற்கு வழங்குதல்.




**ஏழை எளிய மக்களால் பெரிதும் பயன்படுத்தப்படும் காப்பிக்கொட்டை, மண்ணெண்ணெய், புளி, மிளகு, கோதுமைப் பொருட்கள், கையினால் தயாரிக்கப்படும் சோப்பு** முதலியனவற்றிற்கு **வரி குறைக்கப்பட்டுள்ளன.**

கோயம்புத்தூர் செயலாக்கப் பிரிவிற்கு உட்பட்ட பள்ளிபாளையத்தில் ஒரு சோதனைச் சாவடி ஏற்படுத்துதல்.

சென்னை புறநகரைச் சுற்றி நான்கு புதிய சோதனைச் சாவடிகளும், பாண்டிச்சேரி மற்றும் காரைக்கால் எல்லைப் பகுதிகளில் 11 புதிய சோதனைச் சாவடிகளும் ஏற்படுத்துதல்.

பொதுவாக அரசு செயல்படுத்தும் நல்ல பல வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் சமுதாய நலத்திட்டங்களுக்கு வணிகவரித் துறை நிதி ஆதாரம் ஈட்டித் தருகிறது. 1990-91-இல் வணிகவரித்துறையின் வருவாய் ரூ.2,167 கோடியிலிருந்து 1992-93-இல் ரூ.3,017 கோடியாக, அதாவது 39.2 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இதைப் பயன்படுத்தி அரசு மேலும் பல வளர்ச்சித் திட்டங்களையும், சமுதாய நலத்திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

இந்த வகையில், எல்லோருக்கும் தொல்லை இல்லாத அரசு, யாருக்கும் இல்லை எனா அரசு, வளர்ச்சிக்கு வழி காட்டும் அரசு, வறியவர்க்கு வாரி வழங்கும் பாரி வள்ளல் அரசு, மனித நெறி காக்கும் புனித அரசு, இன பேதமில்லா சமநீதி காக்கும் அரசு, நாளைய நாகரீக உலகை நோக்கி நடைபோடும் அரசு, தமிழ் காக்கும் அரசு, தமிழர்தம் உரிமை காக்கும் அரசு, மதியுடன் நீதி தவறாமல் நிதி காக்கும் அரசு, தேச நேசம் கொண்ட அரசு, நாட்டின் அமைதி காத்த அரசு, புல்லுருவிகள் கருவருத்த அரசு, வீரமும், விவேகமும் உள்ள தலைமையைக் கொண்ட அரசு, இன்றும் என்றும் நிலைத்து நிற்கும் அரசு, புரட்சித்தலைவியின் அரசே!

---

**வணிகவரித் துறையில் தற்பொழுது கணக்குகள் பராமரிப்பதில் கணிப்பொறி இயந்திரங்கள் (Computer) பெருமளவில் பயன்படுத்தப் படுகின்றன இதன் காரணமாக வணிகவரித்துறை அலுவலர்கள் கணிப்பொறி இயந்திரங்களின் பயன்பற்றி அதிகம் தெரிந்துகொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு வணிகவரித் துறை பயிற்சி நிலையத்தில் அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்க ரூ.5 இலட்சம் செலவில் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. உதவி ஆணையர்கள், வணிகவரி அலுவலர்கள், துணை வணிகவரி அலுவலர்கள் ஆகியோருக்குக் கணிப்பொறி மூலம் கணக்குகளைப் பராமரிப்பது சம்பந்தமான பயிற்சிகள் அளிக்கப்படும்.**



# தமிழகத்தில் தொழிற்புரட்சி

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்

**திரு ம. சின்னசாமி**

- **ரூ.20,000 கோடி முதலீட்டில் புதிய தொழில்களுக்கு உடனடி அனுமதி.**
- **ரூ.2000 கோடி முதலீட்டில் சென்னைக்கருகே ஆரோமெடிக் தொழிற்சாலை துவக்கம்.**
- **ஜெயங்கொண்ட சோழபுரத்தில் ரூ.7,000 கோடியில் நிலக்கரிச் சுரங்கம்–1500 மெகாவாட் மின் உற்பத்தித் திட்டம்.**

''எங்கும் தமிழ், எதிலும் தமிழ்'' என்பது தமிழக அரசின் கொள்கை.

''தமிழகம் எங்கும் தொழில் மயம்'' என்பது நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் வேட்கை.

தாம் முதலமைச்சராகப் பொறுப் பேற்ற நன்னாளிலிருந்து இந்நாள் வரையிலும் தமிழகத்தைத் தொழில் வளம் நிறைந்த பொன்னாடாக மாற்றுவதில் மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகிறார் நமது புரட்சித்தலைவி அவர்கள். இதன் காரணமாகத் தமிழகத் தொழில் அதிபர்களின் கூட்டமைப்புகளை இரண்டு முறை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டினார்.

கடந்த 23.6.1993 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் கூட்டப்பட்ட 'தமிழகத்தில் தொழில் வாய்ப்புகள்' குறித்த கருத்தரங்கில் தொழில் துறையில் சாதனைகள் புரிந்த சிறந்த தொழிலதிபர் களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப் பித்தார்கள்.

### புதிய தொழில் கொள்கை

1992 ஜனவரியில் புதிய தொழில் கொள்கை ஒன்று அறிவிக் கப்பட்டது. இக்கொள்கையின் ஒரு பகுதியாக, புதிதாகத் தொடங்கப் படும் தொழில்களுக்கும் ஏற் கெனவே தொடங்கி நடைபெற்று வருகின்ற தொழில்களை விரிவுபடுத் துவதற்கும் பல கவர்ச்சிகரமான ஊக்க உதவிச் சலுகைகள் அறிவிக் கப்பட்டுள்ளன. மாநிலப் பொருளா தார வளர்ச்சிக்குப் பெரிதும் தேவைப்படுகிற பன்மடங்குப் பலனை உருவாக்குமென எதிர் பார்க்கப்படுகிற இப்புதிய தொழில் கொள்கையைச் செயல்படுத்து வதற்கு அரசு தேவையான நடவடிக் கைகளை எடுத்துவருகிறது.



### புதிய தொழில் திட்டங்களுக்கு அனுமதி

கூட்டு/இணை/வழிகாட்டுத் துறை யிலும், தனியார் துறையிலும் தொடங்கப்படக்கூடிய புதிய தொழில் திட்டங்களிலும் மின் உற்பத்தித் திட்டங்களிலும் ரூ.20,000 கோடி முதலீடு செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

### தொழில் அடிப்படை வசதி மேம்பாடு

தொழில் அடிப்படை வசதி மேம் பாட்டில் கவனம் செலுத்துவதற் காகத் தமிழ்நாடு தொழில் அடிப் படை வசதி மேம்பாட்டுக் கழகம் என்கிற புதிய கழகம் அமைக்கப் பட்டுள்ளது. இக்கழகம், கங்கை கொண்டான் (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்), பெருந் துறை (பெரியார் மாவட்டம்), பர்கூர் (தர்மபுரி மாவட்டம்), நிலக்கோட்டை (திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்) ஆகிய இடங் களில் 4 தொழில் வளர்ச்சி மையங் களை அமைப்பதில் தற்பொழுது





மும்முரமாக உள்ளது. காயிதே மில்லத் மாவட்டம் நாகப்பட்டினத்திலும் ஒரு தொழில் வளர்ச்சி மையம் அமைக்கப்பட உள்ளது.

**மேகா முதலீடுகள்**

மாண்புமிகு முதலமைச்சரின் சோர்வுறா முயற்சிகளின் பயனாக, சென்னை சுத்திகரிப்பு நிறுவனம், சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் கூட்டு முயற்சியுடன் ரூ.2000 கோடி செலவில் 'ஆரோகெம்' என்ற நறுமணப் பொருள் தயாரிப்புத் தொழிற்சாலை அமைப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப் பட்டுள்ளது. துணைப் பொருள் தயாரிக்கும் பல தொழில்களை மேம்படுத்துவதற்கு அடிப்படையாகவும் சுமார் 70,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் இத்திட்டம் வகை செய்யும்.

ஜெயங்கொண்டசோழபுரத்தில், கூட்டுத்துறையில் ரூ.7,000 கோடியில் மிகப் பெரிய அளவிலான நிலக்கரி வெட்டும் பணியும் மற்றும் மின் உற்பத்தித் திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. இங்கு கிடைக்கும் நிலக்கரி, தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டு முடிவில், 1500 மெ.வா. மின் உற்பத்திக்கு வகை செய்யும். கூட்டுத்துறையில் நிலக்கரிச் சுரங்கம் வெட்டும் பணிக்கான அனுமதியைப் பெற மத்திய அரசிடம் கேட்கப் பட்டுள்ளது.

இந்திய-சிங்கப்பூர் வர்த்தக மையம் அமைப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. சென்னைக்கு அருகே சோளிங்கநல்லூரில் வர்த்தக மையம் அமைக்க சுமார் 700 எக்டேர் நிலப்பரப்பு தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. தொடக்க சாத்தியக் கூறு ஆய்வுகள் நடந்தேறி வருகின்றன. மத்திய அரசு அறிவித்துள்ள திட்டத்தின் கீழ் மின்னணுப் பொருள் தொழில் நுட்ப மையம் அமைக்கவும் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் தற்காலிக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**புதிய முதலீடுகளை ஊக்குவித்தல்**

இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து இன்றுவரை தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், இணை/ கூட்டுத் துறைகளில் ரூ.9111.53 கோடி மொத்த முதலீட்டுடன் 26 புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு அனுமதியளித்துள்ளது.

தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் கூட்டுத்துறையில் ரூ.99.25 கோடி முதலீட்டுடன் 9 புதிய திட்டங்களைத் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் நிதியுதவியுடன் ரூ.525 கோடி செலவில் தமிழ்நாடு செய்தித்தாள்

'இன்றுள்ள பொருளாதார நெருக்கடியில் புதிய திட்டங்கள் எதனையும், எந்த மாநில அரசும் தொடங்க முடியாத ஓர் இக்கட்டான நிலை உள்ளதை அவர்களும் நன்கு அறிவார்கள். அத்தகைய இக்கட்டான அவல நிலை சூழ்ந்துள்ள நேரத்தில்தான் தமிழகத்தைத் தொழில் துறையில் முதல் மாநில மாக்கும் எங்கள் இலக்கு நோக்கி நாங்கள் விரைந்து பணியாற்றி வருகிறோம்.





காகித நிறுவனம் விரிவாக்கத் திட்ட மொன்றைச் செயல்படுத்துகிறது.

இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை ஊக்குவித்து, ஏற்று மதியை மேம்படுத்தும் நோக்குடன், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் என்ற புதிய அமைப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

**நலிவுற்ற தொழில்பிரிவுகளைப் புதுப்பித்தல்**

நீண்ட காலமாக மூடப்பட்டி ருந்த 'பின்னி நிறுவனம்' மற்றும் 'ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம்' மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. நலிந்த தொழிற்சாலைகளைச் சீர மைப்பதற்குத் தொழில்-நிதி மறுசீர மைப்பு வாரியம் எடுத்துக் கொண்ட குறிப்பிட்ட சில தொழில் பிரிவு களுக்கு விற்பனை வரி தள்ளி வைக்கும் கால அளவை 3 ஆண்டி லிருந்து 5 ஆண்டுகளுக்கு அரசு நீட்டித் துள்ளது.

**சிறு தொழில்கள்**

சிறு தொழில்களுக்கு முதன்மைத் துவம் அளிக்கப்பட்டுள்ளது. தொழில் பிரிவுகளுக்குத் தற்காலிக, நிலையான பதிவுச் சான்றிதழ் களைப்.பெற விண்ணப்பிப்பதற்குத் திருத்தப் படிவம் ஒன்றை வரை யறுத்து 1992 அக்டோபரில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1991-92-ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி ஐந்தாண்டுகளில் ஓர் இலட்சம் சிறு தொழில்களைத் தொடங்கவேண்டுமென்று அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. 31.3.93 வரை 40,999 நிலையான பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொழில் பிரிவுகளுக்கு அனுமதி அளிக்கும் நடைமுறையை மேலும் சீரமைக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின் கீழ் அனைத்து வசதிகளையும் ஒரே இடத்தில் அளிக்கும் அதிகார அமைப்பு ஒன்றை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**சுரங்கங்களும் கனிமங்களும்**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 21.8.1992-ஆம் நாளன்று தருமபுரி மாவட்டம், பர்கூர், மதப்பள்ளி கிராமத்தில், தமிழ்நாடு கனிம நிறு வனத்தின் 'கிரானைட் வளாகத் திற்கு' அடிக்கல் நாட்டினார்.

கிரானைட் வளாகம் கீழ்க் காணும் மூன்று திட்டங்களைக் கொண்டது.

1. கிரானைட் ஓடு தயாரிப்புத் திட்டம்.

2. கிரானைட் வெட்டுதல் மற்றும் மெருகூட்டும் திட்டம்.

3. பாவு கற்கள் தயாரிப்புத் திட்டம்.

இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.1,500 இலட்சம் ஆகும். எந் திரம், கட்டுமானம், தற்காலிக மற்றும் நிலையான மின் இணைப் புப் பெறுதல், பல்வகைப் பணிகள் ஆகியவை தொடர்பான செலவு வகையில் 31.3.93 வரையிலான கால அளவில் ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ.382.25 இலட்சம் ஆகும்.

**சிவகங்கை கிராபைட் திட்டம்**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 21.10.92-ஆம் நாளன்று சிவ கங்கையில் கிராபைட் வெட்டி யெடுக்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இத்தொழிற்சாலை அமைக்கும் பணி நடைபெற்று வரு கிறது. இத் தொழிற்சாலை 1994 மத்தியில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 500 பேர்களுக்கு நேரடியாக வேலை வாய்ப்பு வசதிகளை அளிக்கும்.

# சமூக நலத்துறையின் சரித்திரச் சாதனைகள்


மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்

**புலவர் திருமதி இந்திரகுமாரி**


**சமூக நலத்திட்டங்களில் - புதிய நோக்கு.**

- **'புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்' - பெண் குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கவும், திருமணத்திற்கு உதவவும் ஓர் ஒப்பற்ற திட்டம்.**
- **'தொட்டில் குழந்தைத் திட்டம்' பெண் சிசுவதைத் தவிர்க்க, டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் விடைகண்ட கற்பனைக்கெட்டா அற்புதத் திட்டம்.**

**புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்**

பெண் குழந்தைகளின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு அரசு 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்' ஒன்றைத் தொடங்கியுள்ளது. இத் திட்டத்தின்படி கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பெற்றோரின் முதலாவது அல்லது இரண்டாவது பெண் குழந்தையின் பெயரில் பொதுக் கணக்கில் 2000 ரூபாய் வைப்பீடு செய்யப்படும். இத் திட்டம் 1.10.1992-ஆம் நாளிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.



**பெண் சிசுவதைத் தடுப்பு**

பெண் குழந்தைகள் பிறந்த உடனேயே கொல்லப்படுகின்ற கொடுமையிலிருந்து அவர்களைக் காக்க, பெண் குழந்தைகளைத் தாய்மார்களே வேண்டாமென்று விட்டுச் செல்கின்ற பகுதிகளில் அரசுத் தொட்டில்கள் அமைக்கப் பட்டுள்ளன. இதுவரை 54 பெண் குழந்தைகள் இத்தொட்டில்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட இயக்குநர், குழந்தை ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் தலைவர் ஆகியோரின் பெயர்களில் கணக்கு ஒன்றைத் தொடங்கி, மீட்கப்பட்ட ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ.5,000 வைப்பீடு செய்ய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. குழந்தை ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனத்திற்கு 6 திங்களுக்கொரு முறை வட்டித் தொகையை வழங்க, சமூகநல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. நிறுனத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள குழந்தை, தத்தெடுக்கும் முறையின்கீழ் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டால் அக்குழந்தைக்காக வைப்பீடு செய்யப்படும் தொகை வட்டித் தொகையுடன் சேர்ந்து வளர அனுமதிக்கப்பட்டு, அந்தக் குழந்தை 21 வயதடையும் போது அந்தப் பெண்ணிடம் வழங்கப்படும்.

**மகளிர் மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் மகளிருக்கு சுய வேலை வாய்ப்பு**

மகளிர் பொருளாதார நடவடிக்கைகளை சமூக நலம், ஊரக வளர்ச்சி, சுகாதாரம், கல்வித்துறையினருடன் ஒருங்கிணைந்து, மகளிர் மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் மகளிருக்குச் சுய வேலை வாய்ப்பு வசதியினை ஏற்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் விரிவுபடுத்துதல்**

வேளாண் வளர்ச்சிக்கான பன்



னாட்டு நிதி உதவி பெறும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை, மதுரை இராமநாதபுரம் மாவட்டங் களுக்கும் விரிவுபடுத்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10,000 மகளிர் வீதம் மொத்தம் 20,000 மகளிர் சுய வேலை வாய்ப்பு வசதியினைப் பெறுவர்.

**ஆதரவற்ற பெண்களுக்குத் திருமண உதவித் தொகை உயர்வு**

ஆதரவற்ற பெண்கள் திருமணத் திற்காக வழங்கப்படும் உதவித் தொகையை 1992-93-ஆம் ஆண்டி லிருந்து 1000 ரூபாயிலிருந்து 2000 ரூபாயாக உயர்த்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**சத்துணவுத் திட்டப் பணியாளர்களின் நலன்**

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு ஒருங் கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் ஆகியவற்றில் பணிபுரியும் பணி யாளர்களுக்குக் கொடுக்கப்படும் மதிப்பூதியத் தொகையை முதன் முறையாக 1992-ஆம் ஆண்டில் உயர்த்தியுள்ளது. 150 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் மதிப்பூதியம் பெறுகின்ற பணியாளர்களுக்கு 20 ரூபாயும் 150 ரூபாய்க்கு குறைவாக மதிப்பூதியம் பெற்று வந்த பணி யாளர்களுக்கு 10 ரூபாயும் 1.4.92-ஆம் நாளிலிருந்து உயர்த் தப்பட்டது. இதேபோன்ற மதிப் பூதிய உயர்வு, மீண்டும் 1.7.92-ஆம் நாளன்று வழங்கப்பட்டது. பின்னர் 1.12.92-ஆம் நாளிலிருந்து அனைத்துத் திட்டங்களையும் சேர்ந்த பணியாளரின் மதிப்பூதியங்கள் மாதமொன்றுக்கு 85 ரூபாய் வரை யில் உயர்த்தித் திருத்தியமைக்கப் பட்டுள்ளன. ஒருங்கிணைந்த குழந் தைகள் வளர்ச்சிப் பணியாளர் களுக்கு மட்டும் மத்திய அரசு பரிந் துரைத்தபடி சம்பள வீதங்களைச் செயல்படுத்தவும் முடிவு செய்யப் பட்டுள்ளது.

**மகளிருக்கான ஏனைய பலன்கள்**

சத்துணவுத் திட்ட அமைப்பாளர் பதவிக்கும், உதவியாளர் பதவிக்கும் மகளிரை மட்டுமே நியமிப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது.

அரசிடமிருந்து திருமண நிதி உதவி பெற வேண்டுமெனில், திருமணத்தைப் பதிவு செய்ய வேண்டுமென்பதை அரசு கட்டாய மாக்கியுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் என்கிற அமைப்பிற்கு அரசு 'மகம்' என்கிற சுருக்கப் பெயரைச் சூட்டியுள்ளது.

**சத்துணவுத் திட்டத்திற்குத் தனித்துறைத் தலைவரை நியமித்தல்**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப் படுவதைக் கவனிக்க, தனித்துறைத் தலைவர் பதவியை ஏற்படுத்துவது குறித்த அப்பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவு செய்யும் பொருட்டு, ஊரக வளர்ச் சித் துறை இயக்குநரின் கட்டுப் பாட்டில் பணிபுரிந்த மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கள் (சத்துணவுத் திட்டம்), சமூக நலத்துறை இயக்குநரின் கட்டுப் பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள் ளார்கள். சமூக நலத்துறை இயக்குநர் பதவியும் 'சமூக நலம் மற்றும் சத் துணவுத் திட்ட இயக்குநர்' என மாற்றிப் பெயரிடப்பட்டுள்ளது.

**சத்துணவு மையங்களைப் பழுதுபார்த்தல் - புதுப்பித்தல்**

சத்துணவு மையங்களைப் பழுது பார்க்க - புதுப்பிப்பதற்கான செலவை மேற்கொள்ள புகழ்பெற்ற தொழில் அதிபர்கள், கொடை யாளிகள் ஆகியோரின் ஒத்துழைப் பைப் பெறுமாறு அரசு, மாவட்ட ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொண் டது. மாவட்ட ஆட்சியாளர்கள் இவ் விஷயத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளனர். ரூ.1.50 கோடி செலவில் 2500-க்கு மேற்பட்ட மையங்களுக்குப் புதுப்



பொலிவு அளிக்கப்பட்டுள்ளது.

**சத்துணவுத் திட்ட மையங்களைப் பழுதுபார்ப்பதற்கு - புதுப்பிப்பதற்கு நிதி வழங்குதல்**

மாவட்டங்களில் நகர்ப் பகுதிகளில் அமைந்திருக்கும் சத்துணவுத் திட்ட மையங்களைப் பழுதுபார்ப்பதற்கு - புதுப்பிப்பதற்கு ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. அனைத்து மாவட்டங்களில் ஊரகப் பகுதிகளில் அமைந்திருக்கும் சத்துணவு மையங்களைப் பழுது பார்க்க- புதுப்பிக்க ரூ.73 இலட்சம் வரையில்தமிழ்நாடு ஊரக சீரமைப்பு முகவரமைப்பு (TARRA) (முதலமைச்சர் சத்துணவுத் திட்டம்) நிதியிலிருந்து நிதி ஒதுக்கீட்டிற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு - கல்வி வசதி வளாகத்தை ஏற்படுத்துதல்**

கோயம்புத்தூரில் அன்னை சந்தியா குழந்தைகள் உலகத்தை ஏற்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. அங்கு குழந்தைகளுக்கான அனைத்துப் பொழுதுபோக்குக் கல்வி வசதி வளாகம் ஒன்று ஏற்படுத்தப்படும். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் (TNCDW Ltd) ஒத்துழைப்புடன் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் இதற்கான முன்னேற்பாடுகளை ஏற்கெனவே தொடங்கிவைத்துள்ளார்.

**அனாதைகளுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் சலுகைகள் வழங்குதல்**

அனாதைக் குழந்தைகளும், ஆதரவற்ற குழந்தைகளும், கல்வி மற்றும் வேலை வாய்ப்புச் சலுகைகளைப் பெறுவதற்காகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அரசினர் அனாதை இல்லங்களிலும் பணி இல்லங்களிலும் தங்கியிருப்போருக்கான சீருடைப்படி முறையே ரூ.60-யிலிருந்து ரூ.100 ஆகவும்,ரூ.100-லிருந்து ரூ.150 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

அரசினர் அனாதை இல்லங்களில் தங்கியிருப்போருக்கு 18 வயது முடிவடைந்த பின்னரும் கூட அவர்களை இல்லங்களிலே தங்க வைத்து அவர்களுக்குத் திருமணத்திற்கு உதவி செய்யவும், வேலை வாய்ப்பளிக்கவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது.

சத்துணவுத் திட்ட மையங்களிலும், அரசினர் அனாதை இல்லங்களிலுமுள்ள குழந்தைகளுக்குக் கம்பளி 'ஸ்வெட்டர்கள்' வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

உணவுக் கட்டணங்கள் மாதமொன்றுக்கு ரூ.90-லிருந்து ரூ.120 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**உடல் ஊனமுற்றோர் நலம் புதிய இயக்ககம் ஏற்படுத்துதல்**

அரசு, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் 15.3.1993-ஆம் நாளிட்ட 69-ஆம் எண் அரசாணையில் உடல் ஊனமுற்றோர் புதுவாழ்வு இயக்கத்தைப் புதிதாக ஏற்படுத்துவதற்கு ஆணை பிறப்பித்தது. உடல் ஊனமுற்றோர் புதுவாழ்வுத் திட்டங்களைச் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டிலிருந்து உடல் ஊனமுற்றோர் புதுவாழ்வுத் துறை இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டுக்குப் பணியாளர்களுடனும் ஒப்பதலளிக்கப்பட்ட கூடுதல் பணியாளர்களுடனும் செலவுக்குரிய தொகையுடனும் மாற்ற அரசு ஆணை பிறப்பித்தது.

**மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா பெயரிலான பரிசு**

நடப்பாண்டில், உடல் ஊனமுற்றவர்களில் அதிகம் பேருக்கு வேலை வாய்ப்பளித்துள்ள தொழிலதிபர்களை ஊக்குவிக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா பெயரிலான சிறப்புப் பரிசை ஏற்படுத்தி அரசு உத்தரவிட்டுள்ளது. இப்பரிசினை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒவ்வொரு குடியரசு தினத்தன்றும் வழங்குவார்கள்.

**பயணக் கட்டணச் சலுகை நீட்டிப்பு**

மூளை வளர்ச்சி குன்றியவர்களுக்கும், பார்வையற்றோருக்கும், அவர்களுடைய வயது வரம்பைப் பாராமல் அனைவருக்கும் இலவசச் சலுகைப் பயணச் சீட்டு வழங்கப்படுகிறது. இவர்கள் நீங்கலாக உடல் ஊனமுற்ற ஏனையோருக்கு 20 வயது வரையில் 50 சதவிகித ஊனமுற்றவர்களுக்கும் இலவசப் பயணச் சீட்டு வழங்கப்பட்டு வந்தது. அரசு, தற்போது, பார்வையற்றோர், மூளை வளர்ச்சி குன்றியவர்கள் தவிர ஏனைய உடல் ஊனமுற்றோருக்கும் வயது வரம்பின்றி 50 சதவிகித உடல் ஊனமுற்றோருக்கும் சலுகை கட்டணத்தில் இலவசப் பயணச் சலுகை அளிக்க அனுமதித்துள்ளது.

**அரசுப் பணிகளில் இட ஒதுக்கீட்டை உயர்த்துதல்**

ஊனமுற்றோருக்கு அரசு மற்றும் அரசுத்துறை நிறுவனங்களிலும் அளிக்கப்படும் இட ஒதுக்கீடு, 3 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதி திராவிட/பழங்குடியினர் ஆகியோருக்கான இட ஒதுக்கீட்டு விகிதாச்சாரத்தைப் பாதிக்காவண்ணம் உயர்த்தப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசுத்துறை நிறுவனங்களிலும் பணிபுரியும் ஊனமுற்றோர்களை அவர்களின் இசைவின்றி வேறு இடங்களுக்கு மாற்றம் செய்வதைத் தடை செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**முதலமைச்சர் விருது**

உடல் ஊனமுற்றோர் மற்றும் மகளிரின் நலனுக்காகப் பாராட்டத்தக்க வகையில் பணிபுரிவோருக்கான முதலமைச்சரின் விருது ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெண் குழந்தைகளின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு அரசு, 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்' தொடங்கியுள்ளது.

பெண் சிசுவதைத் தடுப்பு, ஒரு இலட்சம் மகளிருக்கு வேலை வாய்ப்பு, சத்துணவுத் திட்டப் பணியாளர்களின் நலன், உடல் ஊனமுற்றோர் நலன் முதலான பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

# நல்வாழ்த்துக்கள்

## சமூக நலத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள பெண்கள் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

1. ராஜவல்லிபுரம் இணை உணவு உற்பத்தி பெண்கள் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிட். ச.ந.எண்.64, ராஜவல்லிபுரம்.

2. சுத்தமல்லி பராசக்தி ஊட்டச் சத்து உணவுத் தயாரிக்கும் மகளிர் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், லிட். ச.ந.எண்.63, சுத்தமல்லி.

3. அன்னை இந்திராகாந்தி சாக்குக்கட்டி உற்பத்தியாளர் பெண்கள் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிட். ச.ந.எண்.62, கூனியூர், சேர்மாதேவி (வழி)

4. திருநெல்வேலி அண்ணா மகளிர் காகித அட்டை மற்றும் எழுது பொருள் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம் இண்ட். எண்.1192 திருநெல்வேலி-7.

5. திருநெல்வேலி மகளிர் தையற் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிட். இண்ட் எண்.1704/26, புதுப்பேட்டை நடுத்தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி-2.

6. வள்ளியூர் யூனியன் தையற் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், லிட், இண்ட். எண்.1631 பெருமாள்கோவில் தெரு, வள்ளியூர், நாங்குநேரி தாலுகா.

7. குருக்கள் பட்டி காலணி தயாரிக்கும் பெண்கள் மேம்பாட்டுக் குடிசைக் கூட்டுறவுச் சங்கம் லிட். ச.ந.எண்.6, குருக்கள்பட்டி, சங்கரன்கோவில் தாலுகா.

8. வாசுதேவநல்லூர் காலணி தயாரிக்கும் பெண்கள் மேம்பாட்டுக் குடிசைக் கூட்டுறவுச் சங்கம் லிட். ச.ந.எண்.7 வாசுதேவநல்லூர், சிவகிரி தாலுகா.

Gram: ASSEFA-MADRAS
Phone: 044 - 475 843
044 - 475763

எங்கள் இனிய நல்வாழ்த்துக்கள்

**பண்ருட்டி தாலுக்கா விவசாய இடுபொருள்**
**வியாபாரிகள் சங்கம்**
**பண்ருட்டி**

மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்



**தேவிரத்னா ஏசி தியேட்டர்**

**ராஜாஜி சாலை**

**பிளாக் - 12**

**நெய்வேலி - 3.**

# வனத்துறை வளர்ச்சியில் வானுயரச் சாதனை

மாண்புமிகு வனத்துறை அமைச்சர்

## திரு கு. லாரன்ஸ்

**வனத்துறை, ஏழாவது திட்டக்காலச் சாதனை அளவான ரூ. 138.77 கோடிக்கெதிராக, எட்டாவது ஐந்தாண்டுக் காலத்திற்கென (1992-97) ரூ. 222 கோடி ஒதுக்கீடு பெற்றது மற்றொரு சாதனையாகும். இதில் மாநில-மத்திய அரசு உதவி பெறும் திட்டங்கள் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டங்களும் அடங்கும்.**

இதயதெய்வம் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டாண்டுக் காலத்தில், வனத்துறை வளமான பணிகள் பலவற்றைச் செய்து வந்திருக்கின்றது. அவற்றைக் கோடிட்டுக் காட்டுவதன் மூலம், வனத்துறையின் வளர்ச்சி தெற்றெனப் புலப்படும்.

85,350 எக்டேர் பரப்பளவில் தோட்டங்கள் எழுப்புதல் என்ற குறியீட்டினை, 54,660 எக்டேர் பரப்பளவில் தோட்டங்கள் அமைத்தலாலும் 37,100 எக்டேர் பரப்பில் சமூகக் காடுகள் வளர்த்தல் மூலமும் அடைந்தது.



பதினொன்று வனக் கோட்டங்களிலுள்ள தரந்தாழ்ந்த வனப் பகுதிகளில் 36,500 எக்டேர் நிலப்பரப்பில் வான் வழி மூலம் விதை தெளித்துத் தோட்டம் அமைத்தல் செய்யப்பட்டது.

இருபது அம்சத் திட்டத்தில் அம்சம் 16-இல் கருதப்பட்டவாறு பொதுமக்களின் தீவிர ஈடுபாட்டுடன் மிகுந்த அளவில் மரங்கள் வளர்த்து, காடுகளை உருவாக்கும் திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 1,675 இலட்சம் மரக்கன்றுகள் மற்றும் 1,19,000 எக்டேர் பரப்பளவில் மரம் நடுவதற்கு எதிராக, 2051.18 இலட்சம் கன்றுகள் வளர்க்கப்பட்டன. 1,81,690 எக்டேரில் மரங்கள் நடப்பட்டன.

காடுகளைச் செம்மையான முறையில் பாதுகாப்பதற்காக ரூ. 140 இலட்சம் செலவில் சிறந்த தகவல் தொடர்புச் சாதனங்கள் நவீன ஆயுதங்கள், ஆகியவற்றை வாங்க அனுமதிக்கப்பட்டு செலவிடப்பட்டன. இந்த இரண்டாண்டுகளில் 117 வாகனங்கள் வாங்கப்பட்டன.

சந்தன மரக்குற்றங்கள் பிடித்ததற்கும், கடத்தலுக்குப் பயன்படுத்திய வண்டிகளைப் பறிமுதல் செய்ததற்கும் பல்வேறு வன அலுவலர்களுக்கு மொத்தம் ரூ. 25.25 இலட்சம் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளன. வனத் திருட்டுச் சம்பந்தமான தகவல் கொடுத்தவர்களுக்கும், அலுவலர்களுக்கும் ரூ. 5 இலட்சம் பரிசுத் தொகை வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு செலவிடப்பட்டது.

இயற்கைக் காடுகளின் மீதான சுமையைக் குறைக்கும் நோக்குடன் காப்புக் காடுகளில் கள்ளத்தனமாக விறகு சேகரிப்பதும், மரங்களை வெட்டுவதும் திறமையான முறையில் கட்டுப்படுத்த நீலகிரி மாவட்டத்தில் எட்டு இடங்களில் விறகு விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டன. மேலும் 1991-92-இல்

மூன்று விற்பனை நிலையங்கள் பெரியகுளம், மேட்டுப்பாளையம் துடியலூர் ஆகிய இடங்களிலும் புதிதாக அமைக்கப்பட்டன.

வண்டலூரில் தமிழ்நாடு வன ஆராய்ச்சி நிலையத்தை உருவாக்க ரூ.17.50 இலட்சம் அனுமதிக்கப் பட்டு அதில் 16.70 இலட்சம் செல விடப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மை மேம் பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த 1991-92-ஆம் ஆண்டில் ஐந்து புதிய தோட்டங்களும் மூன்று ஆராய்ச்சித் தோட்டங்களும் ஏற் படுத்தப்பட்டன.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் ரூ.60 கோடி செலவில் 3,200 எக்டேர் பரப்பளவில் தேயிலைத் தோட்டம் உருவாக்கத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள் ளது. 1991-92-ஆம் ஆண்டில் 130 எக்டேர் பரப்பளவில் தேயிலைத் தோட்டம் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தில் 6 ஆண்டுகளில் ரூ.85 கோடி அளவில் 30,000 எக்டேர் பரப்பளவில் கூழ் மரத்தோட்டம் வளர்க்கும் ஒரு பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டு 5,150 எக்டேர் பரப்பள வில் தோட்டம் எழுப்பப்பட்டது.

ரூ.2347 இலட்சம் மதிப்புள்ள 1351.5 டன் சந்தன மரங்கள் சம் பந்தப்பட்ட 4054 வனக்குற்றங்கள் ஏப்ரல் 1991 முதல் மே 1993 முடிய கண்டுபிடிக்கப்பட்டதுடன் 1,176 வாகனங்களும் கைப்பற்றப் பட்டுள்ளன.

சந்தன மரக்கட்டைகளைக் கடத்து தலைத் தொழிலாகக் கொண்டுள்ள 128 சந்தன மரக் கடத்தல்காரர்கள் 1991-92-ஆம் ஆண்டிலும், 194 சந்தன மரக் கடத்தல்காரர்கள் 1992-93-ஆம் ஆண்டிலும், 9 சந்தன மரக் கடத்தல்காரர்கள் 1993-ஆம் ஆண்டு மே மாதம் 1993 வரை குண்டர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.



வனக் குற்றங்கள் மட்டும் நடத்த தனி நீதிமன்றம் ஒன்று வடார்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரில் 21.3.93 முதல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

1992-93-ஆம் ஆண்டில் பல் வேறு திட்டங்களுக்கும் ரூ.5,045 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. வனத்துறையின் 130 ஆண்டுக்கால வரலாற்றில் வளர்ச்சித் திட்டங்களுக் கென ரூ.50 கோடிக்கும் மிகுதியாக நிதி ஒதுக்கீடு பெற்றுள்ளது ஒரு சிறந்த சாதனையாகும்.

வனத்துறை, ஏழாவது திட்ட காலச் சாதனை அளவான ரூ.138.77 கோடிக்கெதிராக, எட்டாவது ஐந் தாண்டுக் காலத்திற்கென (1992-97) ரூ.222 கோடி ஒதுக்கீடு பெற்றது மற்றொரு சாதனையாகும் இதில் மாநில-மத்திய அரசு உதவி பெறும் திட்டங்கள் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத் தொடர் அபிவிருத்தித் திட்டங்களும் அடங்கும்.

இதைப் போலவே காடு வளர்க் கும் பணியில் ஏழாவது திட்டக் காலச் சாதனை 1,80,000 எக்டே ருக்கு எதிராக எட்டாவது ஐந் தாண்டுத் திட்டக் காலத்திற்கு இலக்கு 2,20,000 எக்டேராக உயர்த்தப்பட்டுள்ளது.

1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் இலக்கு ரூ.93.48 கோடிக்கு எதிராக ரூ.93.63 கோடி செலவிடப்பட்டது.

1991-92-ஆம் ஆண்டில் ரூ.50.45 இலட்சம் நிதி அளவில் பத்துப் பகுதி- 2 திட்டங்களும், 1992-93-ஆம் ஆண்டில் ரூ.83.51 இலட்சம் நிதி அளவில் எட்டுப்

★ மதம் பகுத்தறிவுக்கு மேலானதாக மதிக்கப்படும் மனப்பான்மை ஒழிந்து, பகுத்தறிவை மதத்துக்கு மேலானதாக மதிக்கும் மனப்பான்மை எல்லோருக்கும் தோன்றவேண்டும்.



பகுதி-2 திட்டங்களும் ஒப்புதலளிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன.

முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு கையினால் விதை தெளிக்கும் முறையில் காடு வளர்ப்புப் பணி 1992-93-இல் மீண்டும் மேற்கொள்ளப்பட்டு, 4,000 எக்டேர் பரப்பளவில் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., வடார்க்காடு-அம்பேத்கர், திருவண்ணாமலை- சம்புவராயர், தென்னார்க்காடு, சேலம் மற்றும் பெரியார் மாவட்டங்களில் செயல்ப் படுத்தப்பட்டது.

வனக் காவலர், வனக்காப்பாளர், வனவர் மற்றும் வனச் சரகர்களுக்கு மாதம் ரூ.20 வீதம் இன்னல் ஈட்டுப்படி (Risk allowance) வழங்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு வனப் பாதுகாப்புச் சட்டம் 1882-ஐ செவ்வனே நடைமுறைப்படுத்த, திருத்தச் சட்டம் 44/1992 இயற்றப்பட்டு, சந்தன மரம் மற்றும் அட்டவணை மரங்கள் கடத்தலில் ஈடுபடும் வாகனங்களைக் கையகப்படுத்த வனத்துறை அலுவலர்கள் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் செயல்பட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டத் திருத்தம் 1.10.92 முதல் அமலில் உள்ளது.

வடார்க்காடு-அம்பேத்கர் மாவட்டம் ஜமுனாமாத்தூரில் உள்ள பழங்குடியினர் உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளித் தேர்வுகளில் ஊக்கம் தரும் சாதனை பெற்றுள்ளன.

நமது அரசு பொறுப்பேற்கும் போது, இத்துறையில் 309 வாகனங்கள் இருந்தன. தற்போது துறையில் 489 வாகனங்கள் உள்ளன. அதைப்போலவே 286 பல்வேறு ஆயுதங்கள் இருந்தன. துறையில் தற்போது 384 ஆயுதங்கள் உள்ளன. ரூ.27 இலட்சம் நிதியளவில் 177 ஆயுதங்கள் வாங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதில் 91 ஆயுதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. சேலம், சென்னை, வேலூர் ஆகிய இடங்களில் நாய்ப்படை அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வனத்துறை வரலாற்றில் இடம்பெறத்தக்க வகையிலே, தம் பணியைத் தொடர்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## கட்டடத் தொழிலாளர்க்கான சிறப்புத் திட்டம்

**இந்தியாவிலேயே முதன் முறையாக**

இந்தியாவிலேயே முதன் முறையாக, கட்டடத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் ஒரு சிறப்புத் திட்டத்தைத் தமிழ்நாட்டில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிமுகம் செய்ய உத்தரவிட்டு, அதன்படி ''தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் - வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப் படுத்தும் சட்டத்திற்கு'' ஒரு சட்டத் திருத்தம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆலோசனைப்படி கொண்டு வரப் பட்டது.

முதல் கட்டமாக இப்புதிய சட்டம் சென்னை, மதுரை, கோவை மாநகராட்சி எல்லைகளுக்குள் பணிசெய்யும் கட்டடத் தொழிலாளர்க்குப் பொருந்தும். இதன்படி ஒரு கட்டடமோ அல்லது கட்டுமானப் பணியோ அதாவது கட்டடம் அல்லாத சாலை வேலை, பாலங்கள் அமைப்பதற்கான வேலைகளின் திட்டமதிப்பீட்டில் 1 சதவீதத்திற்கு மிகைப் படாத தொகை 'உடல் உழைப்புத் தொழிலாளர் நல வாரியத்திற்குச்' செலுத்தப் படுதல் வேண்டும்.

அரசு வேலையாக இருந்தாலும் அல்லது தனியார் வேலையாக இருந்தாலும் உள்ளாட்சி நகரமைப்புகளுக்குக்கீழ் அந்தக் கட்டடத் திட்டத்திற்கோ அல்லது சாலை போடும் வேலைக்கோ அல்லது பாலங்கள் மற்றும் பிற கட்டடங்கள் கட்டும் வேலைக்கோ அனுமதி கோரும்போது அந்தத் திட்ட மதிப்பீட்டில் ஒரு சதவீதத்திற்கு மிகாமல் ஒரு தொகையினைத் தொழிலாளர் நல வாரியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

தொழிலாளர் நல வாரியம் தொகையினை அடிப்படையாகக் கொண்டு அனைத்துக் கட்டடத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அமல்படுத்தும். அதன்படி அந்தக் கட்டடத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், பணிக்கொடை, இ.எஸ்.ஐ. வருங்கால வைப்பு நிதி (பிஎஃப்) முதலான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்கும்.

இதுவரை கொண்டுவரப்பட்ட திட்டங்கள் அனைத்தும், அமைப்பு ரீதியான தொழிலாளர்களுக்கு (Organised Labour Force) மட்டும்தான் உதவி புரிந்தன. இப்புதிய திட்டத்தின்படி, இப்பொழுதுதான் இந்தியாவிலேயே முதன் முறையாக, தமிழ்நாட்டில்தான் எந்தவித அமைப்பிலும் சாராத தொழிலாளர்களுக்கு (Unorganised Labour Force) பயன்படும் வகையில் இத்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

இந்தப் புதிய சட்டம் தமிழ்நாட்டிலுள்ள பல்லாயிரக்கணக்கான கட்டடத் தொழிலாளர் களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் 'மேதினப் பரிசாக' வழங்கப்படுகிறது.

# செய்தித் துறையின் சிறப்புமிகு சாதனைகள்

மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர்

**திரு. மு. தென்னவன்**

- **புரட்சித்தலைவியின் சிந்தனையில் உதித்த திரைப்பட நகரம் ரூ.14.93 கோடி திட்ட மதிப்பீட்டில் உரு வாக்கம்.**
- **திரைப்பட விருது வழங்குவதில், டாக்டர் புரட்சித்தலைவியின் பெயரால் 'ஜெ. ஜெயலலிதா விருது' வழங்கப் படும்.**
- **பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். - வாழ்க்கை வரலாறு பற்றி ஒளி-ஒலிக்காட்சி நடத் தப்படும்.**



மக்கள் தொடர்புச் சாதனங்களைச் சிறப் பாகப் பயன்படுத்தி அரசின் கொள்கைகளையும், சாதனைகளையும் மக்களுக்கு விளக்கி, அரசின் வளர்ச்சிப் பணிகளில் மக்களை ஈடுபடுத்துவதிலும், ஒவ்வொரு நாளும் சாதனைச் சரித்திரம் படைக் கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் தொடர்ந்து முன்னேறி வரும் அனைத்துத் துறைகளைப் பற்றி மக்களி டையே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதிலும், செய்தி விளம்பரத்துறை பெரும் வெற்றி பெற் றுள்ளது. மக்களையும், அரசையும் இணைக்கும் சிறந்த தொடர்புச் சங்கிலியாக இத்துறை பணி யாற்றி வருகிறது. செய்தி மக்கள் தொடர்புத் துறையானது, திட்டங்களைச் செயல்படுத்துகின்ற அரசுக்கும் அவற்றின் பயன்களைப் பெறுகின்ற மக்களுக்கும் இடையே அமைந்துள்ள ஜனநாயகப் பாலமாக இயங்க வேண்டும் என்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் செம்மை யான வழிகாட்டுதலில் இயங்கி வருகின்ற வலு வான அரசுத் துறையாகும். ''அரசின் எண்ணங் களையும் திட்டங்களையும் செயல்பாடுகளையும் பிரதிபலிக்கின்ற சக்தி வாய்ந்த துறையாகும்'', என மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையில் குறிப்பிட்டதற்கிணங்க, செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்ந்து சாதனை களைப் படைத்து வருகிறது.

**நினைவகங்கள்:**

நாட்டுக்கு உழைத்த நல்லோரின் நினைவு களைப் போற்றி தகுந்த மரியாதை செலுத்துவதில் புரட்சித்தலைவியின் அரசு மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறது.

**பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம்:**

மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஏற் கெனவே அறிவிக்கப்பட்டபடி, பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம் ரூ. 1.965 கோடி செலவில் மாற்றியமைக்கப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்களால் 24.12.92 அன்று திறந்து வைக்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அவர் களும், அமைச்சர் பெருமக்களும் இலட்சக்கணக் கான பொதுமக்களும் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவு நாளான 24.12.92 அன்று அங்கு சென்று அஞ்சலி செலுத்தினர்.

**மகாகவி பாரதியார் இல்லம்:**

திருவல்லிக்கேணியில் பாரதியார் வாழ்ந்த வீட்டை ரூ.5.7 இலட்சம் செலவில் அரசு

விலைக்கு வாங்கியுள்ளது. அவசியமான பழுது பார்ப்புப் பணிகளும் மேம்பாட்டுப் பணிகளும் முடிவு பெற்றுத் திறக்கப்படத் தயாராக உள்ளது.

**கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை:**

தமிழக அரசு கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறைக்கு அருகில் உள்ள சிறிய மலைப்பாறையில் கிரானைட் கல்லால் ஆன 133 அடி திருவள்ளுவர் சிலையை நிறுவ முடிவு செய்துள்ளது. சிலை செய்ய ரூ.3.60 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. சிலை நிறுவப்பட உள்ள சிறிய பாறையைத் தயார் செய்ய சுமார் ரூ.84 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.1.605 கோடி இதுவரை கொடுக்கப்பட்டுள்ளது. கல் வேலைக்காக இதுவரை ரூ.48 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இப்பணி இன்னும் 1½ ஆண்டுகளில் நிறைவு பெறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

**சென்னை மாநகர முன்னாள் மேயர் சிவராஜ் சிலை:**

சென்னை மாநகரத்தின் முன்னாள் மேயர் திரு. சிவராஜ் அவர்களுக்குச் சிலை அமைக்க அரசு முடிவு செய்து அதற்காக ரூ.2.02 இலட்சம் அனுமதித்துள்ளது.

**வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை சிறப்பிக்கும் வகையில் ஒரு நினைவுத்தூண் நிறுவுதல்:**

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் பொன்விழா ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் கிண்டி காந்தி மண்டபத்தில் ரூ.3 இலட்சம் செலவில் ஒரு நினைவுத்தூண் நிறுவ அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**நாமக்கல் கவிஞர் இல்லத்தை அரசுடைமையாக்குதல்:**

''கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது'', என சுதந்திர கீதத்தை முழங்கிய நாமக்கல் கவிஞர் திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நினைவையும், நாடு விடுதலை அடையப் பாடிய அவர்களைப் போற்றும் வகையிலும் நாமக்கல் நகரில் அவர் வாழ்ந்த இல்லத்தினை அரசுடைமையாக்கி நினைவகம் ஆக்க அரசு முடிவு செய்துள்ளது.

**சர்.பிட்டி தியாகராயர் நினைவிடத்தை அரசு ஏற்றல்:**

திராவிட இயக்கத்தின் வரலாற்றில் முக்கியத் தலைவர்களில் ஒருவராக விளங்கியவரும், நீதிக் கட்சியில் முக்கிய அங்கம் வகித்தவருமான சர். பிட்டி தியாகராயர் அவர்களின் நினைவிடம் சென்னை வண்ணாரப்பேட்டையில் அமைந்துள்ளது. அந்த நினைவிடத்தை அரசு ஏற்றுக் கொண்டு, அதைப் புதுப்பித்து, அரசு நினைவிடமாக ஆக்க முடிவு செய்துள்ளது.



**பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றிய ஒலி-ஒளிக் காட்சி:**

தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை மற்றும் அறிவுரைகளை விளக்கும் விதமாக நடத்தப்பட்ட ஒலி-ஒளி காட்சி நிகழ்ச்சியைப் போன்று பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கை மற்றும் சாதனைகளை விளக்கும் வகையில் ஒலி-ஒளிக் காட்சி நடத்திட அரசு முடிவு செய்துள்ளது.

**கவியரசு கண்ணதாசன் பிறந்த நாள் விழா:**

''புரட்சித் தலைவர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களது ஆட்சிக் காலத்தில் அரசவைக் கவிஞராகச் சிறப்பிக்கப்பட்ட கவியரசு கண்ணதாசன் அவர்களுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் அவர்களது பிறந்த நாள் விழா அரசு விழாவாக இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படும்'' என மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார்கள். அதன்படி கவியரசரின் பிறந்த நாள் விழா அரசு சார்பில் காரைக்குடியில் நடத்தப்பட்டது.

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம்:**

மறைந்த மாபெரும் கவிஞர் திரு. பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் நினைவாக, பட்டுக்கோட்டையில் ஒரு மணிமண்டபம் கட்ட புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்



**தமிழ் வளர வேண்டுமென்றால், முத்தமிழ்க் கலைகள் உயர வேண்டுமென்றால், மலர்ந்து வரும் தமிழ் அறிஞர்களும், கலை மேதைகளும் போற்றப்பட வேண்டும். போற்றுதலும், போற்றப்படுதலும்தான், மனித சமுதாயத்தின் உயர்வுக்குக் காரணமான இரு முக்கிய உந்து சக்திகள் என்பது உலகியல் உண்மை.**

**திரைப்பட நகரம்:**

இந்த அரசு ரூ.14.93 கோடி செலவில் தரமணியில் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக் காட்சி பற்றிய நிலைய வளாகத்தில் ஒரு திரைப் பட நகரை உருவாக்கி வருகிறது.

இத்திரைப்பட நகர் திரைப்படம் எடுக்கத் தேவையான கிராமியச் சூழல், நகர்ப்புறம், கோவில், மசூதி, தேவாலயம், பள்ளி, இரயில் நிலையம், பூங்கா போன்ற பல்வேறு இடங்களை உருவாக்கி ஒரே இடத்தில் செய்தித் துறையின்கீழ் இயங்கும் தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகம் இத்திரைப்பட நகர்த் திட்டத்தை நிறைவேற்ற ஓர் ஒருங்கிணைப்பு மையமாகத் திகழும்.

இத்திட்டம் முழுமையாக நிறைவேறும்போது, இந்த அரசால் உருவாக்கப்படுகிற திரைப்பட நகர் இந்தியாவிலேயே சிறந்ததாகவும், சர்வதேசத் தரத் தில் உள்ள பிற எந்தத் திரைப்பட நகருக்கும் ஈடுகொடுக்கத் தக்கதாகவும் அமையும்.

பல்வேறு திறந்தவெளிப் படப்பிடிப்புத் தளங்கள் மட்டுமில்லாது படப்பிடிப்பு நிலையம், ஒலிப்பதிவு அரங்கம், மறு ஒலிப்பதிவு அரங்கம், ஒளிநாடா படப்பிடிப்பு நிலையம் போன்றவற்றுடன் படப் பிடிப்பு முடிந்த பிறகும் பயன்படக்கூடிய பல்வேறு அமைப்புகளும், சாதனங்களும் இங்கே சர்வதேசத் தரத்திற்கேற்ப அமைக்கப்படும். திரைப்படத் தயாரிப்பாளர்கள், ஒளிநாடாத் தயாரிப்பாளர்கள், திரைப்படத் தொலைக்காட்சிப் பயிற்சி மாணவர்கள் ஆகிய அனைவரும் ஒரே இடத்தில் படங்களைத் தயாரிப்பதற்கு இத்திரைப்பட நகர் உதவும்.

**பொருட்காட்சிகள்:**

அரசுக்கு அதிக அளவில் வருவாயை ஈட்டித் தரும் அரசுப் பொருட்காட்சிகள் தற்போது கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. அவை மூலமாக 1991-92-ஆம் ஆண்டில் 27.40 இலட்சம் ரூபாயும், 1992-93-ஆம் ஆண்டில் 46.11 இலட்சம் ரூபாயும் இலாபமாக அரசுக்கு கிடைத்துள்ளது. ''மேலும் அரசு பொருட்காட்சி களைப் பல்வேறு தரப்பட்ட மக்களும் விரும்பிப் பார்த்துப் பயன்பெறும் காரணத்தினால் இந்த ஆண்டு அரசு பொருட்காட்சிகள் திருச்சி மற்றும் திருநெல்வேலி நகரங்களிலே நடத்தப்படும்'' என மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டப்பேரவை யில் மானியக் கோரிக்கையின்போது அறிவித்தபடி அரசு முடிவு செய்துள்ளது.

**புதுடெல்லியில் செய்தி நிலையம்:**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னதாக வெளியிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் சார்பில் புதுடெல்லியில் செய்தி நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டு வரு கிறது. செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் கீழ் ஏற்கெனவே, சென்னை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, கோவை ஆகிய ஐந்து நகரங்களில் செய்தி நிலையங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வரு கின்றன.

புதுடெல்லியில் நிறுவப்படும் இச்செய்தி நிலையம் டெல்லியில் உள்ள செய்தித் தாள்கள் வாயிலாகவும், மற்ற மக்கள் தொடர்புச் சாத னங்கள் மூலமாகவும், தமிழ்நாடு அரசின் நலத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை வெளிப் படுத்த மிகவும் உதவியாக இருக்கும்.

மேலும், இச்செய்தி நிலையமானது, தமிழ் நாட்டிலுள்ள கலை, பண்பாடு மற்றும் சுற்றுலா மையங்கள், விடுமுறைக் கால ஓய்விடங்கள் ஆகிய வைகளைப் பற்றிய தகவல்களை முழுமையாக வழங்குவதன் மூலமாகவும் டெல்லியில் தமிழ் மாநிலத்தைப் பற்றி செவ்வனே அறிந்து கொண்டு நல்லதொரு கணிப்பை ஏற்படுத்த ஏதுவாக வும் இருக்கும். தவிரவும், தமிழ்நாடு பற்றிய முக்கிய செய்திகளை டெல்லியிலுள்ள செய்தியாளர் களுக்கு இச்செய்திகளை வேறு வழிகளில் பெற ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்க்கின்ற வகையில், இச்செய்தி நிலையம் உடனுக்குடன் செய்திகளை நேரடியாக வழங்குகின்ற மையமா கவும் விளங்கும்.

**சிறந்த தமிழ்ப்படங்கள், கலைஞர்களுக்கு விருது வழங்கும் திட்டம்:**

1990 மற்றும் 91-ஆம் ஆண்டுகளிலிருந்து சிறந்த திரைப்படங்களுக்கான பரிசுத் தொகையை மாண்புமிகு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பின்வருமாறு உயர்த்தி வழங்கிட ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

அதனடிப்படையில் முதல் பரிசு ரூ.1 இலட்சத் திலிருந்து ரூ.1.25 இலட்சமாகவும், 2-ஆம் பரிசு ரூ.50 ஆயிரத்திலிருந்து ரூ.75 ஆயிரமாகவும், 3-ஆம் பரிசு ரூ.25 ஆயிரத்திலிருந்து ரூ.50 ஆயிரமாகவும், சிறப்புப் பரிசு ரூ.25 ஆயிரத் திலிருந்து ரூ.50 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப் படுகிறது.

1990 மற்றும் 1991-ஆம் ஆண்டுகளுக்கான திரைப்பட விருது வழங்கும் விழா 21.1.93 அன்று சென்னையில் மிகச் சிறப்பாக நடை பெற்றது. அவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்துகொண்டு விருது பெற்றவர் களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை முதன் முறையாக அரசின் இவ்விருது வழங்கு விழா வினை விளம்பர நிறுவனங்கள் மூலம் சென்னை

தொலைக்காட்சியில் ஒளிபரப்பியது. இதன் மூலம் செலவுகள் போக ரூ.3 இலட்சம் அரசுக்கு வருவாய் கிட்டியது. இனி வருங்காலத்தில் முக்கிய நிகழ்ச்சிகளை விளம்பர நிறுவனங்கள் மூலம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பச் செய்து, தமிழ்நாடு திரைப்படப்பிரிவு வர்த்தக நிறுவனமாகவும் செயல்படவுள்ளது. 1992-ஆம் ஆண்டுக்கான சிறந்த திரைப்படங்கள், கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வு செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

**ஜெ. ஜெயலலிதா விருது**

மேலும், சிறந்த திரைப்படங்களுக்கும், நடிக நடிகையருக்கும், இயக்குநர் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும் முன்பு வழங்கப்பட்டு வந்த மூன்று சவரன்-ஐந்து சவரன் என்பவற்றை மாற்றி, பாகுபாடின்றி அனைவரும் ஐந்து சவரன் தங்கப்பதக்கம் பெறும் வகையில் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும் - சிறந்த கலை வித்தகர்களுக்காக அறிஞர் அண்ணா, பாவேந்தர், இராஜா சாண்டோ, கலைவாணர், எம்.ஜி.ஆர். ஆகியோர்களின் பெயரால் வழங்கப்பட்ட விருதுகளுடன் 1992 முதல் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பெயரால் 'ஜெ. ஜெயலலிதா விருது'ம் சேர்த்து, கலைவித்தகர்களுக்கு வழங்கப்படும்.

**குறைந்த செலவில் தயாரிக்கும் தமிழ்ப்படங்களுக்கு உதவித் தொகை அதிகரிப்பு:**

குறைந்த செலவில் நல்ல தரமான தமிழ்த் திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், அத்தகைய தமிழ்த் திரைப் படங்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசு செயல் படுத்தி வருகிறது. இந்த உதவித் தொகையை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக உயர்த்தி 50 படங்களுக்கு 1992-ஆம் ஆண்டிலிருந்து வழங்க அரசு முடிவு செய்தது. குறைந்த செலவில் தயாரிக் கப்பட்டு 12 முதல் 30 பிரதிகள் வரை எடுக்கப் படும் தமிழ்த் திரைப்படங்கள் இந்த உதவித் தொகை பெறத் தகுதியுடையனவாகும் என மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் அறிவித் திருந்தார்கள். இதற்கென ரூ.1.50 கோடியை அரசு ஏற்கெனவே ஒதுக்கியிருக்கிறது. சமீபத்தில் திரையுலகில் ஏற்பட்டிருந்த சிக்கலைத் தீர்க்க 21.6.93 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் கலைத்துறையினரோடு கலந்து பேசி அனைவரும் வியந்து பாராட்டத்தக்க நல்லதொரு சுமுகமான முடிவினை அறிவித்தார்கள். அதன்படி இதுவரை குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட 50 தமிழ்த் திரைப்படங்களுக்கு மட்டும் அரசு மானியமாக ரூ.3 இலட்சம் வழங்கப்பட ஆணை பிறப்பிக்கப் பட்டது. இந்த ஆண்டு முதல், மானியத்தொகை பெறும் படங்களின் எண்ணிக்கை 75 ஆக உயர்த்தப்படுகிறது.

இதற்காக 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

இனிமேல், குறைந்தது 6 பிரதிகள் எடுக்கப் படும் படங்களுக்கு இந்த உதவித்தொகை வழங்கப் படும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறி வித்துள்ளார். இந்த அறிவிப்பு, திரையுலகினரின் ஒருமித்த பாராட்டுதலைப் பெற்றது.

மேலும், தமிழ்த்திரைப்படங்களில் நடக்கும் வீடியோ, கேபிள் டி.வி. திருட்டுச் செயல்களை, தீவிரமாகத் தடுத்து நிறுத்த, இதற்கென ஒரு தனிக் காவல்படை உருவாக்கப்பட்டு, கேபிள் டி.வி. திருட்டுகள் தடுக்கப்படும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

**வீடியோ வாகனம்:**

செய்தி-மக்கள் தொடர்புத் துறையில், தலை நகரிலும் மாவட்டங்களிலும் களவிளம்பரப் பணிக் காக, 10 வீடியோ வாகனங்கள் சமீபத்தில் வாங்கப் பட்டுள்ளன. அரசின் சாதனைகள், திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் நலப்பணிகள் குறித்த வீடியோ படங்கள் காண்பிப்பதற்காக, இந்த வாகனங்கள் ஆண்டு முழுவதும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வீடியோ வாகனம் மூலமாக நடத்தப்படும் களவிளம்பரப் பணி மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. இந்தப் பணிக்காக மேலும் 10 வாக னங்கள் இந்த நடப்பாண்டில் வாங்கப்படும்.

**மேற்கோள் பிரிவு:**

உடனடி மேற்கோளுக்காகச் செய்தித்தாள் களைத் தொகுத்து அட்டையிட்டுக் காக்கின்ற முறை இக்காலத்திற்கு ஒவ்வாததாகவும், அதிக கால விரயத்தை ஏற்படுத்துவதாகவும் இருப்பதால், செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் இப்பிரிவை நவீனப்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 16.50 இலட்சம் ரூபாய் செலவில் கேமரா பிராசசர் மற்றும் ரீடர் பிரிண்டர் ஆகிய வற்றை உள்ளடக்கிய ஒரு முழுமையான மைக்ரோ பிலிம் சாதனத்தை விலைக்கு வாங்கி, பல்வேறு செய்தித்தாள் கவடிகள், பருவ இதழ்கள் மற்றும் பிற முக்கிய செய்திக் குறிப்புகள் நுண்படம் எடுக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அரசின் வளர்ச்சிப் பணிகள் - அவற்றால் மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் ஆகியவற்றை யும், அரசின் சாதனைகளையும் மக்கள் அறியவும், அதன் பயனைத் துய்க்கவும், பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் துணையுடன் செயல் படுத்துவது அரசு நலத்திட்ட விளக்க முகாமின் நோக்கமாகும்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அரசின் கொள்கைகளையும் குறிக்கோள்களையும் பொது மக்களுக்குக் கொண்டு செல்லுகின்ற சீரிய பணி களைச் செய்தி விளம்பரத்துறை தொடர்ந்து நிறைவேற்றும்.

# கல்வியெனும் கலங்கரை விளக்கம்



மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர்

**பேராசிரியர் க. பொன்னுசாமி**

- **'ஐநூறு மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் ஒரு கல்விக்கூடம்' எனும் புரட்சித்தலைவியின் நாளும் தொடரும் கல்விச் சாதனை.**
- **'தமிழகத்தில் கட்டாய ஆரம்பக்கல்வி' இந்தியா முழுமைக்கே எடுத்துக்காட்டாக விளங்கும் முதல் திட்டம்.**
- **உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.76 கோடியில் 55 தொழில்நுட்பப் பள்ளிகளை நவீனமயமாக்குதல்.**
- அனைத்துலகத் தரத்தினை விஞ்சிடும் வகையில் ரூ.40 கோடி செலவில் நேரு விளையாட்டரங்கம்.

மனிதனை முழு மனிதாக்குவது கல்வியறிவு ஒன்றே. அறிவுடையார் எல்லாம் உடையார். வாழ்க்கையில் எத்தகைய சூழ்நிலைகளையும் அறைகூவலையும் எதிர் கொண்டு போராடி வெற்றிபெற உதவுவது கல்வியே.

கல்விக்குச் செலவிடப்படும் தொகை, நாட்டின் எதிர் கால வளத்துக்கு, ஆற்றலுக்குச் செய்யப்படும் முதலீடு. இந்த உண்மையை நன்கு உணர்ந்துள்ள காரணத்தினால், கன்னித் தமிழகத்திற்குக் கல்விக்கண் கொடுக்கும் கடமைப் பொறுப்பை மிகுந்த அக்கறையுடன் நிறைவேற்றி வரும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், கல்விக்காகச் செலவிடப்படும் தொகையை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வந்துள்ளார்கள்.

மழலைக் குழந்தைகளிலிருந்து, தொழிலியல் ஆற்றல் பயிலும் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் வரை எந்த இடர்ப் பாடும் இன்றித் தொய்வின்றித் தொடர்ந்து கல்வி பயின்றுவர எல்லா ஏற்பாடுகளையும் செவ்வனே செய்து வருகிறார்கள்.

கடந்த மூன்று ஆண்டுகளில் கல்வித் துறைக்கு அளிக்கப்பட்ட நிதி விவரம் இந்த உண்மையினை நன்கு புலப்படுத்தும்.

*1991-92-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு ரூ.1299 கோடி*
*1992-93-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு ரூ.1517.78 கோடி*
*1993-94-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு ரூ.1820.32 கோடி*

**அரும்புகளுக்கு வரப்பிரசாதம்**

அறச் செல்வியின் ஆட்சியில் அனைவருக்கும் கல்வி யளித்தல் ஓர் அறக்கடமையாக நிறைவேற்றப்பட்டு



வருவதில் ஆச்சரியம் இல்லைதான். 14-வயது வரை யிலான குழந்தைகள் பழுதின்றிக் கல்வி பயிலவும், இடையில் நின்றுவிடுவதைத் தவிர்க்கவும், புதுப்பள்ளிகள் துவக்கவும் உதவும் வகையில் கடந்த இரண்டாண்டுகளில் 2,478 இடைநிலை ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

மகளிர் மேம்பாட்டுக்கு உதவும் வகையில் தொடக்கப் பள்ளிகளில் அனைத்து ஆசிரியர் பணியிடங்களுக்கும் மகளிர் மட்டுமே நியமிக்கப்படுகின்றனர்.

கடந்த இரண்டாண்டுகளில் 464 புதிய ஆரம்பப் பள்ளிகள் துவக்கப்பட்டன. 44 ஆரம்பப் பள்ளிகள் நடு நிலைப் பள்ளிகளாகவும், 67 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 59 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப் பட்டன. புரட்சித்தலைவி அவர்கள் மேற்கொண்ட இந்த

முயற்சிகளின் பயனாக இன்று, தமிழகத்தில் 500 மக்கள் தொகையுள்ள கிராமம் எதிலும் பள்ளி இல்லாத நிலை இல்லை. அதுமட்டுமல்லாமல், எந்த மாணவனும் தான் படிப்பதற்காக, அதிகப்பட்சம் ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குமேல் போக வேண்டியதில்லை. அன்னையின் அருளாட்சியில் அரும்புகளுக்கு இது ஓர் வரப்பிரசாதம் அல்லவா?

ஒப்பந்த முறையில் ஆசிரியர் நியமிக்கப்பட்டு, குறிப்பிட்ட அளவு ஊதியம் அளிக்கும் முறை நீக்கப்பட்டு, அனைத்து ஆசிரியர்களும் தற்பொழுது காலமுறை ஊதிய முறையில் முறையாக நியமிக்கப்படுகின்றனர். பாடம் போதிக்கும் ஆசிரியர் பெருமக்களின் வயிற்றில் புரட்சித் தலைவி அவர்கள், பால் வார்த்துள்ளதாகவே இதைத் தமிழ்ப் பெருமக்கள் கருதுகிறார்கள்.

### கிராமப்புற மாணவர் மேம்பாடு

தமிழ்நாடு கிராமப்பகுதி மாணவர்களின் அறிவுத் திறன் திட்டம் என்ற புதிய திட்டம் 1991-92-ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, அதன்கீழ் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் 100 மாணவ மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1000 வீதம் 9-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு முடிய 4 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஏழை எளிய கிராமப்புற மாணவர்களின் அறிவுத்திறன் செழுமை பெற இத்திட்டம் உதவியாக வுள்ளது.

மகளிர் கல்வி மேம்பாட்டுக்காக, 1992-93-இல் மகளிருக்கென 100 அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளிகளில் 'இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்பு' தொடங்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் பயிற்சிக் கல்வியின் நிலையையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் ரூ.7.76 கோடி செலவில் 14 அரசினர் ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களை மாவட்ட ஆசிரியப் பயிற்சி மையங்களாக அரசு உயர்த்தியுள்ளது. மேலும் 7 புதிய மாவட்ட ஆசிரியப் பயிற்சி மையங்களைத் திறக்க அரசு ஒப்பளித்துள்ளது.

1993-94-ஆம் ஆண்டிலிருந்து கிராமப்புறங்களிலுள்ள திறமையான மாணவர்களுக்கென மூன்று குடியிருப்புப் பள்ளிகளைத் திறக்கவும் அரசு தீர்மானித்துள்ளது.

### தொழில்நுட்பக் கல்வி செழிக்க

அரசு மற்றும் தனியார் துறைகளின் கீழ் இயங்கும் 55 தொழில்நுட்ப பயிலகங்களை நவீனப்படுத்தும் நோக்குடன், 5 ஆண்டுகளுக்குள் செயல்படுத்தப்படுவதற்கான உலக வங்கி உதவித் திட்டம் ஒன்றை ரூ.76 கோடி செலவில் அரசு ஆரம்பித்துள்ளது. இதற்காக 1991-92-ஆம் ஆண்டில் ரூ.2 கோடியும், 1992-93-ஆம் ஆண்டில் ரூ.10 கோடியும் ஒதுக்கப்பட்டது.

தொழில் நுட்ப பயிலகங்களில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் சேர்வதற்கான வயது வரம்பை 22 வயதிலிருந்து 25 ஆகவும், பிற இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு 20-லிருந்து 22-ஆகவும் அரசு உயர்த்தியுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துச் சுயநிதி தொழில்



நுட்பப் பயிலகங்கள் மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர்கள் அவர்களின் இருப்பிடங்களிலிருந்து கல்லூரிகளுக்குச் சென்றுவர அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில 50 சதவிகிதக் கட்டணச் சலுகையை அரசு அளித்துள்ளது.

### அறிவொளி இயக்கம் - ஓர் அற்புதச் சாதனை

'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்'

என்பது பொய்யாமொழி. கல்வி' என்ற அகக்கண்ணைத்தான் உண்மையில் கண்ணாகக் கருதினார் திருவள்ளுவப் பெருந்தகை.

'கல்வி கல்லாதவர்களே இல்லை கன்னித் தமிழ் நாட்டில்' என்ற பெருமையை நிலைநாட்டிடப் புரட்சித் தலைவி அவர்களின் வழிகாட்டலின் கீழ்த் தமிழகக் கல்வித் துறை 'அறிவொளி இயக்கம்' கண்டு அயராது உழைத்து வருவது அனைவரும் அறிந்த ஒன்றே. கல்லாதவர்கள் கற்கவும் கற்றவர்கள் அத்துடன் நின்றுவிடாமல், தாம்பெற்ற கல்விச் செல்வத்தை மற்றவர்களுக்கு வாரி வழங்கிட வழிவகை செய்து தரவும் உருவாக்கப்பட்ட திட்டமே 'அறிவொளி இயக்கம்'.

'இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த் தண்சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர்விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'

-என்ற மகாகவி பாரதி முழங்கிய புண்ணிய அறத்தை, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் முழு மனத்துடன் நிறைவேற்ற உத்தரவிட்டதன் பலனாக, கல்விப் புரட்சியில் இன்று தமிழகம் பெருமைமிகு பீடு நடை போடுவதைக் காண்கிறோம்.





தமிழகத்தை முழுமையான எழுத்தறிவு பெற்ற மாநில மாக மாற்ற அரசு மூன்று கட்டங்களில் எழுத்தறிவுத் திட்டமொன்றை நிறைவேற்றி வருகிறது. அதன்படி, 1991-92, 1992-93 ஆகிய இரண்டாண்டுகளில் 7 மாவட்டங்கள் அறிவொளி இயக்கத்தில் ஈடுபடுத்தப் பட்டன.

இரண்டாவது கட்டமாக, 10 மாவட்டங்களில் 45 இலட்சம் பேர் கல்வியறிவு பெறும் வண்ணம் செய்யப் பட்டது. எனவே, தமிழகத்தில் எஞ்சியுள்ள 5 மாவட்டங் களில் 1993-94-இல் அறிவொளி இயக்கம் அமலாக்கப் படும்.

இதுவரை புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராம லிங்கத் தேவர், காமராசர் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்கள் முழுமையான கல்வியறிவு பெற்ற மாவட் டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சாதனை மகுடத்தில் மற்றுமொரு மாணிக்கக் கல்லாக ஒளி வீசுகிறது.

## இளைஞர்களின் விளையாட்டுத் திறன் வளர

இளைஞர்களின் விளையாட்டு ஆர்வத்தினை வழி முறைப்படுத்தவும் விளையாட்டு வளர்ச்சிக்கு முக்கியத் துவத்தினை அளிக்கவும் அரசு ஜூலை 1992-இல் 'விளையாட்டு வளர்ச்சி நிறுவனத்தினை' ஏற்படுத்தி உள்ளது.

இவ்வாண்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் பெண்களை ஊக்கப்படுத்தும் வகையில் தர்மபுரியில் பெண்களுக்கென தனியாக ஒரு விளை யாட்டு விடுதி கட்டப்பட்டு சிறப்புப் பயிற்சி அளிக்கப் படுகிறது. தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி நிறுவனத்தால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட தமிழக விளையாட்டு பெண்கள் அணி தேசிய விளையாட்டு விழாக்களில் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுள்ளது.

22.1.1992-அன்று மாண்புமிகு முதல்வர் அவர் களால் ஈரோட்டில் ரூபாய் 62 இலட்சம் செலவில் ஒரு பல்நோக்கு பயனுடைய விளையாட்டரங்கு திறந்து வைக்கப்பட்டது. தூத்துக்குடியில் தருவை மைதானத்தில் ஒரு பன்நோக்கு பயனுடைய விளையாட்டரங்கு ரூ.54.65 இலட்ச மதிப்பில் கட்டி முடிவடையும் தரு வாயில் உள்ளது. ரூபாய் 32 இலட்சம் செலவில் உதகமண்டலத்தில் திறந்தவெளி விளையாட்டரங்கம் ஒன்று கட்டப்பட்டது.

10-வது நேரு தங்கக் கோப்பைக்கான அகில உலக கால்பந்தாட்டப் போட்டியினை ஜனவரி 1993-இல் நடத்தும் சிறப்புமிக்க வாய்ப்பினைத் தமிழ்நாடு பெற்றது. இந்தப் போட்டியானது சென்னை நேரு விளையாட்டரங் கில் நடைபெற்றது. நேரு விளையாட்டரங்கு அகில உலக அளவில் ரூ.40 கோடி செலவில் திருத்தி கட்டப்பட்டது.

1993-94 முதல் ஓர் புதிய விளையாட்டுக் கொள்கை யினைச்செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. அதன்படி சிறந்த விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகள் ஆகி யோருக்கு ஊக்குவிப்புத் திட்டங்கள் ஏற்படுத்தப்படும்.

அரசு அங்கீகாரம் பெற்ற, தனியார் நடத்திவரும் உடல் ஊனமுற்றோர் பள்ளிகளில் பயின்றுவரும் குழந் தைகளுக்கு ஒவ்வொரு மாதமும் உணவுச் செலவுக்காக மானியமாக ரூ.30 மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. இத்தொகை மிகவும் குறைவாக இருப்பதாகவும், உயர்த் தித் தர வேண்டும் என்றும் கோரிக்கைகள் வைக்கப் பட்டன. அதன் நியாயத்தை உணர்ந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் மிகுந்த தாயுள்ளத்தோடும், பரிவோடும் இந்த மானியத் தொகையை ரூ.30-லிருந்து ரூ.90-ஆக மும்மடங்கு உயர்த்தி உத்தரவிட்டார்கள். இதன்மூலம் 1.8.1992- முதல் 1,200 ஊனமுற்ற குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர்.

அறிஞர்களின் அனுபவப் பெட்டகமாகவும், சான்றோர் களின் தோன்றாத் துணைவனாகவும், விளங்கும் நூலகங் களின் வளர்ச்சியிலும் கல்வித் துறை தனிக்கவனம் செலுத்தி வருகிறது. 1992-93 நிதியாண்டில் 17 இலட்சம் ரூபாய் செலவில் 130 கிளை நூலகங்கள் திறக்கப்பட்டன. மாநிலத்திலுள்ள நூலகங்களில் மக்கள் படித்துப் பயன்பெற பல்வேறு வகைப்பட்ட 1890 நூல்கள் ரூ.148 இலட்சம் செலவில் வாங்கப்படவும், 300 பகுதிநேர நூலகங்கள் திறக்கப்படவும் உள்ளன.

சுருங்கச் சொன்னால், தமிழக மக்களின் காவல் தெய்வமாக விளங்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில், கல்வித் துறை ஒரு கலங்கரை விளக்கமாக அமைந்து, தனி நபர்களுக்கும், மாணவர், ஆசிரியர், இளைஞர், முதி யோர் போன்ற பல்வேறு பகுதியினருக்கும் மொத்தத்தில் மக்கள் அனைவருக்கும் ஒளிமிக்க எதிர்காலத்திற்கு நல் வழி காட்டி வருகிறது.

# தொழிலாளர் நலம்

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

## திரு. மேலூர் அ.மா. பரமசிவன்

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பதவி ஏற்ற பிறகு, தொழில் உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க தாகும். 1991-ஆம் ஆண்டில் வீணான மனித உழைப்பு நாட்கள் 72,78,969 ஆகும். 1992-இல் இது 28,68,472 ஆகக் குறைந்தது.**

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தமிழ்நாட்டின் ஆட்சி பொறுப் பேற்ற பிறகு, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையில் நிகழ்ந்த சாதனைப் பட்டியலைத் தமிழக மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

**தொழில் உறவு**

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பதவி ஏற்ற பிறகு, தொழில் உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என் பது குறிப்பிடத்தக்கதாகும். 1991-ஆம் ஆண்டில் வீணான மனித உழைப்பு நாட்கள் 72,78,969 ஆகும்., 1992-இல் இது 28,68,472 ஆகக் குறைந்தது. இதனால் தொழி லாளர்கள் பயனடைவதுமல்லாமல், தொழில் மேம்பாடு ஏற்பட்டு தமிழ்நாடு முன்னேற வழிவகை செய்கிறது என்பதை இங்கு தெரி வித்துக்கொள்கிறேன். இன்றைய தினம் பல்லாயிரம் தொழிற் சாலைகள் இயங்கும் வேலையில் 12 தொழிற்சாலைகளில் மட்டும் கத



வடைப்பு அல்லது வேலை நிறுத்தத் தால் வேலை பாதிக்கப்பட்டுள்ளது. இதனையும் தீர்க்க இந்த அரசு முயற் சித்து வருகிறது.

1992-ஆம் ஆண்டில் 11,856 தொழிற் தகராறுகள் எழுப்பப்பட்ட தில் தொழிலாளர் துறை அதிகாரிகள் 10,113 தகராறுகளைத் தீர்த்து வைத்துள்ளனர்.

**இவற்றில் குறிப்பிடத்தக்கவை**

பின்னி ஆலை திறக்கப்பட்டு 8,000 தொழிலாளர்கள் நன்மை யடைந்தனர். 30.9.92 அன்று ஏற் பட்ட உடன்பாட்டின்படி தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் 1.05 இலட்சம் தொழி லாளர்கள் பயனடைந்துள்ளனர்.

2 இலடசம் பீடித் தொழி லாளர்கள் ஊதிய உயர்வு மற்றும் போனஸ் கிடைக்க வகை செய்யப் பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆலோசனையின் பேரில் எனது முன்னிலையில் சென்னை, ஸ்டாண் டர்ட் மோட்டார் புராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட் எனும் நிறுவனத் தின் தொழிலாளர்களுக்கு, தன்னிச்சை ஓய்வு திட்டத்தின்கீழ் வழங்க வேண்டிய நிலுவைத் தொகை, சம்பளம் மற்றும் நிலுவைத் தொகைகள், அதிக வேலை அளிப் பது மற்றும் உற்பத்தி ஆகியவை பற்றி நிர்வாகம் மற்றும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் 10.6.93 மற்றும் 16.6.93 ஆகிய நாட்களில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அதன் அடிப்படையில், தொழி லாளர்களுக்கு 8 நாட்களிலிருந்து 12 நாட்கள் வரை வேலை அளிப்ப தற்கும், நிலுவைத் தொகை மாதம் ஒன்றிற்கு ரூ.200 வீதம் 2 ஆண்டு களில் முழுமையாகத் தொழிலாளர் களுக்கு வழங்கவும், ஓய்வு பெற்றவர் களுக்கு அளிக்கப்படவேண்டிய நிலுவைத் தொகையான ரூ.2 கோடியை 30.9.93, 31.12.93, 31.3.94 மற்றும் 30.6.94 ஆகிய



தேதிகளில் ரூ.50 இலட்சம் வீதம் நான்கு தவணைகளில் அளிக்கவும், உற்பத்தியை ஒரு ஷிப்டிற்கு 12 வண்டிகள் வீதம் பெருக்கவும் இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டு அதன்படி செயல்பட்டு வருகின்றனர். இது மாபெரும் சாதனையாகும்.

**நலத் திட்டங்கள்**

தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் ஒரு நாளைக்கு ரூ.20-க்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்றும், ஊதியம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தி அமைக்க வேண்டியும் அரசு கொள்கை முடிவெடுத்தது. இதனால் அமைப்பு ரீதி அல்லாத தொழில்களில் பணிபுரியும் நலிந்த தொழிலாளர்கள் பயனடைகிறார்கள்.

பீடித் தொழிலாளர்களுக்கு ரூ.22,000 செலவில் 1000 வீடுகள் கட்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அரசு அனுமதி வழங்கியுள்ளது என்பதைப் பெருமையோடு இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்டடத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும், அவர்கள் வேலையின் காரணமாக விபத்திற்குட்பட்டால் அவர்களுக்கு நஷ்டஈடு அளிப்பதற்கும் 30.4.93 அன்று சட்டம் நிறைவேற்றப்பட்டது.

5 ஆண்டுகளில் குழந்தைத் தொழிலாளர்களைப் பணியில் அமர்த்துவதைத் தவிர்க்கப்படும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

**வேலை வாய்ப்பு**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அரசின் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் கம்ப்யூட்டர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் வேலைக்காகக் காத்திருப்போர் முறையாகப் பயன்பெற்று வருகிறார்கள்.

பணியிலிருக்கும்போது உயிர் விட்ட அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு உடனடியாக வேலை அளிக்க வேண்டி, புதியதாக 500 பதவிகள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அரசில் ஏற்படுத்த ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதையும் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**பயிற்சி**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அரசில் பெண்களுக்காகப் புதியதாக இரண்டு தொழிற்பயிற்சிப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. கோவையில் புதிய கட்டடம் கட்டப்பட்டு, 17.6.93 அன்று திறக்கப்பட்டுள்ளது, என்பதையும் இங்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அயல்நாட்டில் வேலை வாய்ப்பு**

அயல்நாட்டில் வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க அமைக்கப்பட்ட நிறுவனம் இதுவரை இலாபம் இல்லாமல் இருந்து வந்தது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி பதவி ஏற்ற இந்த இரண்டு ஆண்டுகளில் முதன்முறையாக இலாபம் ஈட்டியுள்ளது என்பதையும், சுமார் 500 நபர்களுக்கு அயல்நாட்டில் வேலைத் தரப்பட்டுள்து என்பதையு பெருமையோடு இங்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# புரட்சித்தலைவியின் ஆட்சியில் கூட்டுறவுத் துறையின் பொற்காலம்

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்

**திரு. சு.ப. பட்டாபிராமன்**

**கடந்த இரண்டாண்டுகளில் 2,16,000 பச்சை வண்ண அட்டை பெற்ற விவசாயிகளுக்கு ரூ.66.92 கோடி அளவிற்குக் குறுகிய கால வேளாண்மைக் கடன்கள் வழங்கப்பட்டு ஒரு மாபெரும் சாதனையைப் புரட்சித்தலைவியின் ஆட்சி உருவாக்கியிருக்கிறது.**

தமிழகத்து மக்களால் நாள் தோறும் நாமணக்கப் புரட்சித் தலைவி என்று புகழ்பாடும் கீதங்கள் தொடர்ந்து ஒலித்துக்கொண்டு இருக்கின்றன. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழி நின்று புனித ஆட்சியைப் புகழ் மணக்க இந்நாட்டில் நடத்திவரும் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் தனிப்பெரும் முதல் அமைச்சராய் பெரும்பான்மை மக்களின் ஒருமித்த ஆதரவினைப் பெற்று ஜூன் 24, 1991 அன்று பொறுப்பேற்று, அரிய பல திட்டங்களை இந்நாட் டிற்கே தந்து, அளப்பரிய சாதனை களைப் படைத்து உலக அரங்கிற்கே வழி காட்டியாய்த் திகழ்கின்றார்.



இந்நாட்டின் வளத்தைப் பெருக்கு தற்கும், தொழில் வளத்தைப் பெருக்குதற்கும், ஏழை எளியோர் வாழ்வில் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓடச்செய்யவும், புரட்சித் தலைவி அவர்களின் அயராத உழைப்பு, தமிழகத்திற்கே அரிய படைப்பாய் கடந்த இரண்டாண் டாய்க்கிடைப்பதைப் பாராட்டாதார் யார் உளர்? அவர் எடுக்கின்ற திட் டங்கள் அனைத்தும் தமிழகத்தின் மக்களுக்கு என்றென்றும் வாழ் வளிக்கும் வகையிலும், வறுமையை விரட்டி, வளமான வாழ்வை உரு வாக்கி, இந்திய உப கண்டத்திற்கே வழிகாட்டியாகவும், திகழ்தல் காண லாம்.

'மக்கள் ஒருமைப்பாட்டின் மறு உருவம் ஆக விளங்குவது கூட்டுறவு. மக்கள் ஆட்சி மலர்ச்சி அடையும் போது கூட்டுறவு உணர்வும் மலர்ச்சி அடைகிறது. வேளாண்மையில் முனைப்பாக ஈடுபட்டுள்ள நேரத் தில் கூட்டுறவு இயக்கப்பணிகளும் விரிவடைய வேண்டும்' எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டியதையும் நினைவில் நிறுத்தி, கூட்டுறவியக்கத்தின் மேன் மையைப் பாராட்டி, போற்றி, இவ் வியக்கத்தின் மூலம் தமிழ்நாட்டு மக்களெல்லாம் அனைத்து வசதி களையும் வாய்ப்புகளையும் பெறு வதற்குப் புரட்சித்தலைவியின் கடந்த இரண்டு ஆண்டு ஆட்சி வழிகோலி நிற்கிறது.

கடன் வழங்கும் முறையை எளி தாக்கியும், கடன் தவணை தவறிய உறுப்பினர்களுக்கு பயிர்க் கடன் களைத் துரிதமாக வழங்கி உறுதிப் படுத்தியும், தேர்ந்தெடுக்கப்பட்ட சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உடனடியாகக் கடன் வழங்கும் திட்டம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் அறிவிக்கப் பட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 2,16,000 பச்சை வண்ண அட்டை உடைய விவசாயிகளுக்கு ரூ.66.92 கோடி அளவிற்குக் குறுகியகால வேளாண்மைக் கடன்கள் வழங்கப் பட்டு, ஒரு மாபெரும் சாதனையைப்









புரட்சித்தலைவியின் ஆட்சி உருவாக்கியிருக்கிறது.

1.7.91 அன்றுள்ள குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்களின் தவணை நிலுவையினை 30.2.92-க்குள் திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்கு அபராத வட்டிக்குச் சமமான தொகையை அரசே வழங்குவதெனத் தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் அறிவித்து ஏறத்தாழ 4,48,327 விவசாயிகள் பயன் அடையும் விதத்தில் ரூ.55.73 கோடி ரூபாயினை அரசு போனசாக வழங்கியிருக்கிறது என்றால், அந்த அளவிற்குப் புரட்சித்தலைவி அவர்கள் இந்த நாட்டு மக்களின் மீது, விவசாயப் பெருங்குடிமக்கள் மீது ஆர்வமும், அக்கறையும் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு அடையாளச் சின்னமாகும்.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் வழிமுறைகளின்படி வழங்கப்படுகின்ற மொத்தக் குறுகிய காலக் கடன்களில் 20 சதவிகிதம் நலிந்த பிரிவினரான சிறு விவசாயிகளுக்கு - அதாவது 5 ஏக்கர் அல்லது அதற்குக் குறைந்த நஞ்சை அல்லது புஞ்சை நிலத்தைச் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் கடன் வழங்கப்பட வேண்டும், என்கிற அரிய திட்டத்தை இந்த நாட்டிற்கு அறிவித்து தமிழக முதலமைச்சர் அவர்கள் வாழ்வில் நலிவுற்றவர்களுக்கெல்லாம் வாழ்வு அளிக்கிறார்கள். அந்த வகையில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுவங்கிகளால் தமிழகத்திலுள்ள நலிந்த பிரிவினர்களுக்கு, குறுகிய காலக் கடனாக ரூ.210.27 கோடி 1992-93-ஆம் ஆண்டில் வழங்கப்படுகின்றது.

ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு மாத்திரம் குறுகிய காலக் கடன் ரூ.10.1 கோடியும், மத்தியக் காலக் கடனாக ரூ24.8 கோடியும் வழங்கப்பட்டு, ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள் பெரும் பயன் அடைந்திருக்கிறார்கள்.

ஆதிதிராவிட வகுப்பினரின் குடும்பத்தில் ஒருவரைத்' தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் உறுப்பினர்களாக ஆக்கும் நோக்கத்துடன் புரட்சித்தலைவியின் அரசு 1991-92-ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிட விவசாயிகளை அதிக அளவில் கூட்டுறவில் சேர்க்கும் திட்டம் தீட்டி, ஒவ்வொரு ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த நபர் ஒருவர் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்வதற்குப் பங்குத்தொகை ரூ.100-ஐ அரசு மானியமாக வழங்கி வருகிறது. இதுவரை இத்தகைய புரட்சிகரமான திட்டத்தில் தமிழகத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 1,10,000 ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள் உறுப்பினராகச் சேர்ந்து இருக்கிறார்கள். இந்த வகையில் ரூ.110 இலட்சம் புரட்சித்தலைவியின் அரசு மானியத் தொகையாக வழங்கியிருக்கிறது.

சிறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள மகளிருக்கு உதவி புரிய அதிகபட்சமாக ரூ.500 வரை தேவையின் அடிப்படையில் ஒரு பெண்ணிற்குச் சிறு கடன் வழங்கிட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அறிவுரை வழங்கினார்கள். இதன்படி மத்தியக் கூட்டுறவு வங்கியிலும் ரு மகளிர் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 1992-93-ஆம் ஆண்டில் மட்டும் 3,200 பெண்மணிகளுக்கு ரூ.14,93,000 கடனாக வழங்கப்பட்டிருக்கிறது.

பெண்கட்கு முக்கியத்துவம் கொடுத்து, மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் ஒரு கிளையும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் 9 கிளைகளும் தற்பொழுது பெண்களால் நடத்தப்பட்டு வருகிறது. 1993-94-ஆம் ஆண்டில் 7 மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பெண்களால் நடத்தப்படும் கிளைகள் மாண்புமிகு புரட்சித்தலைவியின் ஆணைக்கேற்பத் திறக்கப்பட இருக்கின்றன.

பண்ணை சாராத் தொழில்கள், கூட்டுறவு வங்கிகளிடம் கடன் பெற்று, தொடங்குகின்ற வகையில் தேவையான அறிவுரைகள் வழங்கிட கோயம்புத்தூர், சேலம், வேலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சென்னை ஆகிய இடங்களில் தலா ஒரு தொழில் நுட்பக்குழு ஏற்படுத்துவதற்கான கொள்கை முடிவு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவியின் அறிவுரைக்கேற்ப எடுக்கப்பட்டிருக்கிறது.

நியாயவிலைக் கடைகளில் பணி புரியும் பணியாளர்களுக்குக் குறைவான சம்பளம் தருவதால் தவறுகள் மலிந்துவிடுகின்றன என்கிற நிலையைப் புரட்சித்தலைவியின் அரசு தீர்க்கமாக ஆய்ந்து 1.3.92 முதல் ரூ.350-லிருந்து ரூ.500 ஆக உயர்த்தியும் 1993 முதல் மேலும் ரூ.100 உயர்த்தி ஒவ்வொருவருக்கும் ரூ.600 சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது.

விழாக் காலங்களில் நுகர்வோரின் 27 பொருட்களின் விலை ஏற்றத்தைத் தடுக்கின்ற வகையில் விழாக் காலக் குறைவு விலைக் கடைகளைத் திறப்பது என்ற முடிவு எடுத்து ஆயிரம் இடங்களில் விழாக் காலக் குறைவு விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்குச் செம்மையான சரியான முறையில் எடைக் குறைவு இல்லாமல் கட்டுப்பாட்டுப் பொருள்கள் வழங்குவதை உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் அறிவுரை வழங்கியதற்கேற்ப வட்டாரக் குழுக்கள் அமைக்கப்பட்டன. வட்டார அளவில் பொது விநியோகத் திட்டத்தை மேலும் சிறந்த முறையில் கண் காணிப்பதற்குக் கூட்டுறவு இளநிலை ஆய்வாளர் நியமிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை முடிவினை எடுத்து அதற்காக 693 கூட்டுறவு இளநிலை ஆய்வாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழக 3-வது திட்டத்தின்கீழ் மாதாவரத்தில் ரூ.2.22 கோடி செலவில் ஒரு வேளாண்மைக் கூட்டுறவுப் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவியின் ஆணைக்குட்பட்டு இது ஓராண்டுக் காலத்தில் முடிக்கப்பட்டுள்ளது, குறிப்பிடத்தக்கதாகும். இந்தப் பயிற்சி நிலையம் தற்போது தொடங்கி வைக்கப்பட்டு நடத்தப்படுகின்றது.



• ஒரு கை தட்டினால் ஓசை எழாது. இரு கைகளும் இணைந்தால்தான், ஒலி எழும்பும். அரசு ஒரு கை; மக்கள் மறு கை. ஆகவே, அரசோடு மக்கள் ஒத்துழைத்தால்தான், மக்களின் நல்வாழ்விற்குரிய நல்ல பல திட்டங்கள் காலத்தோடு செயல்படுத்தப்பட்டு அதன் பலன் மக்களைச் சென்றடையும். எந்த காரணத்திற்காகத் திட்டங்கள் தொடங்கப்படுகின்றனவோ, அதனை நாம் நிறைவு செய்ய இயலும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுடைய ஆணைக்கேற்ப தர்மபுரி மாவட்டத்தில் பர்கூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் இரண்டு தொழில் பயிற்சி நிலையங்களில் துணிவெட்டுதல் மற்றும் தையற்கலை ஆடை தயாரிக்கும் கலை, கணிப்பொறிப் பயிற்சி ஆகிய பயிற்சிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சி நிலையங்களில் பயிலுகின்ற மாணவர்களுக்கு இலவசமாகத் தங்கும் வசதியும் இலவசமாகப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த மூன்று பயிற்சி வகுப்புகளிலும் பட்டுக்கோட்டையில் 88 மாணவர்களும் பர்கூரில் 88 மாணவர்களும் கடந்த ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். நடப்பாண்டில் இதே முறையில் பயிற்சி நடைபெறவிருக்கிறது. இந்தப் பயிற்சிக் கேந்திரங்களை நடத்துவதற்குக் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.150 இலட்சம் வழங்கிட தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்குப் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி அளித்துள்ளார். இதற்கான செலவினங்களுக்கான ரூ.125 இலட்சத்திற்குக் குவிப்பு நிதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தத் தொகைகளை முதலீடு செய்யும் வகையில் கிடைக்கின்ற வட்டித் தொகையினைக் கொண்டு இரண்டு தொழில் பயிற்சி நிலையங்களும் நடத்தப்பெற்று வருகின்றன. பர்கூரில் உருவாக்கப்பட்டுள்ள பயிற்சி நிலையத்திற்கு 5 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி, ரூ.70 இலட்சம் செலவில் கட்டடங்கள் கட்டுகின்ற பணியும் தொடங்கப்பட்டுவிட்டது.



எங்களை வழிநடத்திச் செல்வது - எங்களை இத்தகைய உயர்வுக்கு ஆளாக்கியுள்ள ஏழை, எளிய பின்தங்கிய, தாழ்த்தப்பட்டவர்களாக உள்ள மனித தெய்வங்கள் எங்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கையும் - மாமனிதர்களாக வாழ்ந்து மறைந்த, பேரறிஞர் பெருந்தகை அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் நல்ல தத்துவங்களும் தான் ஆகும்.

# ஊரக வளர்ச்சித் துறையின் ஒப்பற்ற சாதனைகள்

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்

## திரு டி.எம். செல்வகணபதி

**● கிராமங்களுக்கு அடிப்படை வசதிகள் அளித்திட ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்.**

**● ரூ. 1,100 கோடி திட்ட மதிப்பீட்டில் 'எழில்மிகு சென்னை-2000'.**

**கி**ராம மக்களின் சமூகப் பொருளாதார மறுமலர்ச்சிக்கெனப் பல்வேறு சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலம் முதல் ஊரக வளர்ச்சித்துறை மூலம் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளன. அதன் விளைவாகக் கிராமங்களில் அடிப்படை வசதிகள் பெருகியிருப்பினும், அம்மக்களின் அடிப்படைத் தேவைகளும் பெருகிக்கொண்டே வந்துள்ளன. பல கிராமங்கள் அடிப்படை வசதிகள் ஏதும் பெறாமலும் இருந்து வந்துள்ளன.

எனவே, ஏற்கெனவே செயற்படுத்தப்பட்டு வந்த திட்டங்களைத் தொடர்ந்ததோடு மட்டுமல்லாது கிராம மக்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் வேலைவாய்ப்பைக் கூடுதலாக்கவும் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தவும் வல்ல பல்வேறு சிறப்புத் திட்டங்களைக் கடந்த இரண்டு ஆண்டுகளில் (1991-92 மற்றும் 1992-93) அரசு முனைப்புடன் செயற்படுத்திச் சாதனைகளைப் புரிந்துள்ளது.

குறிப்பாகச் சொன்னால், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், கிராமப்புற மகளிர் மற்றும் சிறார் மேம்பாட்டுத் திட்டம், கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம், சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை உறுதித் திட்டம் ஆகியவை சிறப்புற நிறைவேற்றப் பட்டுள்ளன.



### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் வருமானத்தைப் பெருக்க அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் சொத்துக்களை அவர்கள் உருவாக்க அரசு மானியம் மற்றும் நிறுவனக் கடன் வழங்க வகை செய்கின்றது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் கிராமியக் கைவினைஞர்களுக்கும் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும் இத்திட்டத்தின்மூலம் உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான மானியம், மத்திய மற்றும் மாநில அரசால் சமமாகப் பங்கேற்கப்படுகிறது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ.6,400-க்குக் குறைவாக ஆண்டு வருமானம் பெறும் ஊரகக் குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருப்பதாகக் கொள்ளப்பட்டது. பின்னர் இந்த உச்ச வரம்பு ரூ.11,900-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆண்டு வருமானம் ரூ.8,500-க்குக் குறைவாகப் பெறும் குடும்பங்களுக்கு மட்டும் முதற்கண் உதவி வழங்கவும் அதில் ரூ.6,000 வரை வருமானம் பெறும் குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் எனவும் வரையறுக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்தில் தாழ்த்தப்பட்டோர் மலைச் சாதியினருக்கான ஒதுக்கீடு மொத்த பயனாளிகளின் எண்ணிக்கையில் 50 சதவிகிதமாகும். பெண் பயனாளிகளுக்காக ஒதுக்கீடு 40 சதவிகிதமாகும். உடல் ஊனமுற்றோர்களுக்கு 3 சதவிகிதமாகும்.

1993-94-ஆம் ஆண்டு மைய அரசு இத்திட்டத்தின் மானியத் தொகையை ரூ.3,000-லிருந்து ரூ.4,000 ஆகவும் வறட்சிப் பகுதி மற்றும் பாலைவனப் பகுதியில் உள்ள பயனாளிகளுக்கு ரூ.4,000- லிருந்து ரூ.5,000 ஆகவும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் ஊனமுற்றோர் ஆகியோருக்கு மானியத் தொகை ரூ.5,000-லிருந்து ரூ.6,000 ஆக உயர்த்தி உள்ளது.

1991-92-ஆம் ஆண்டு, 1,61,603 குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் அடைந்து உள்ளன. இதில் தாழ்த்தப் பட்டோர், பழங்குடியினர், பெண்கள் மற்றும் ஊனமுற்றோர் இடம் பெற்றுள் ளனர். இத்திட்டத்திற்காக மைய மற்றும் மாநில அரசு மானியமாக வழங்கிய தொகை ரூ.4527.750 இலட்சம் ஆகும். இதைத் தவிர, வங்கி நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளது.

1992-93-ஆம் ஆண்டில் இத்திட்டத் தின்கீழ் 1,44,937 குடும்பங்கள் பயன டைந்துள்ளன. இதில் தாழ்த்தப் பட்டோர், பழங்குடியினர், ஊனமுற் றோர் மற்றும் பெண்கள் இடம் பெற் றுள்ளனர். வங்கிக் கடன் தவிர மைய, மற்றும் மாநில அரசு மானியமாக வழங் கப்பட்ட தொகை ரூ.4534.480 இலட்சம். 1993-94-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டைவிடக் கூடுதல் தொகை ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

### சுய வேலைவாய்ப்புத் திட்டம்

ஊரக இளைஞர்களுக்குத் தொழில் நுட்ப அறிவை வளர்த்து அல்லது கூலி வேலை பெறுவதற்குப் பயிற்சியளிக்கும் தேசியத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் கிராமத்தில் பயிற்சி பெறுகின்ற நபர்களுக்கு மாதம் ரூ.150 உதவித் தொகை வழங்கப்படுகிறது. தொலைவில் பயிற்சி பெற உள்ள இளைஞர்களுக்கு ரூ.250 உதவித் தொகையும் தங்குவதற்கு வசதியும் செய்து கொடுக்கப்படுகிறது. தங்குவதற்கு வசதி அளிக்கப்படாவிடில் ரூ.300 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. மேலும், பயிற்சியாளர்களுக்கு ரூ.600 மதிப்புள்ள உபகரணங்கள் பயிற்சி பெறும்போது இலவசமாக வழங்கப்படுகிறது. பயிற்சி பெற்ற பின்னர் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இப்பயிற்சி யாளர்களுக்குக் கடன் மற்றும் மானியம் வழங்கப்பட்டு, சுயமாக வேலைவாய்ப்பு தொடங்கத் வசதி அளிக்கப்படுகிறது.



இதற்கு மைய அரசும் மாநில அரசும் சம மாக நிதி வழங்கி வருகின்றன.

1991-92-ஆம் ஆண்டில், 17,950 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டது. இதில் தாழ்த்தப்பட்டோர் பழங் குடியினர், பெண்கள் மற்றும் ஊனமுற் றோர் இடம் பெற்றுள்ளனர். இதற்காக மைய, மாநில அரசு மானியமாக வழங் கிய தொகை ரூ.316.780 இலட்சம் ஆகும்.

1992-93-ஆம் ஆண்டு 19,935 இளைஞர்களுக்குப் பயிற்சி வழங்கப் பட்டது. இதில் தாழ்த்தப்பட்டோர், பழங் குடியினர், பெண்கள் மற்றும் ஊன முற்றோர் இடம் பெற்றுள்ளனர். இதற் காக மைய அரசும் மற்றும் மாநில அரசும் மானியமாக வழங்கிய தொகை ரூ.497.190 இலட்சம். 1993-94-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு முந்திய ஆண்டைவிட கூடுதலான தொகை ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராமப்புற மகளிர் மற்றும் குழந் தைகள் மேம்பாட்டுத் திட்டம் (டோக்ரா) என்பது மகளிர் பொருளாதார நிலையை உயர்த்த வகுக்கப்பட்ட ஓர் உன்னதத் திட்டமாகும்.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வசிப்ப வர்கள் என்று கண்டறியப்பட்ட கிராமக் குடும்பங்களைச் சேர்ந்த மகளிர், கிராமப் பகுதிகளில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் உறுப்பினர்களா கலாம். ஊரகப் பகுதிகளில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத் தின்கீழ்- மகளிர் அவரவருடைய திறமை, ஆற்றல், உள்ளூர் நிலைமை ஆகியவற் றுக்கு ஏற்ப பொருளாதாரப் பணிகளை மேற்கொள்ளுவதற்காகத் தம்மை 15-20 பேர் அடங்கிய சிறு குழுக்களாக அமைத் துக்கொள்கின்றனர். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மகளிர் குழுவினருக்கும் சுழல் நிதியாக ரூ.15,000 ஒட்டுமொத்த மானியம் வழங்கப்படுகிறது. இத் தொகையை, மத்திய அரசு, மாநில அரசு, 'யுனிசெப்' நிறுவனம் ஆகிய மூன்றும் சேர்ந்து சம அளவில் வழங்குகின்றன. இச்சுழல் நிதி குழு உறுப்பினர்கள் மூலப் பொருட்கள் வாங்குவது போன்றவற் றிற்குப் பயன்படுத்தப்படும்.

1983-ஆம் ஆண்டு முதல் தேர்ந் தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயற் படுத்தப்பட்டு வந்த இத்திட்டம் இராம நாதபுரம், கன்னியாகுமரி, மதுரை, சிதம்பரனார் மாவட்டங்கள் நீங்கலாக மற்ற மாவட்டங்களில் 1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளிலும் செயல் படுத்தப்பட்டது. மத்திய அரசு 1992-93 வரை 4103 குழுக்கள் அமைக்க அனுமதி வழங்கியுள்ளது. இதில் 4065 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1991-92-இல் 650 குழுக்களும், 1992-93-இல் 522 குழுக்களும் அமைக்கப்பட்டு நிதி உதவி வழங்கப்பட்டது.

நடப்பு ஆண்டு 1993-94-இல்

இத்திட்டம் காமராசர் மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

## ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் 1.4.89 முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் தீவிரமாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. கிராமப் புறங்களில் வாழும் வேலைவாய்ப்பற்ற அல்லது போதிய வேலைவாய்ப்பற்ற ஆண்களுக்கும் பெண்களுக்கும் இலாபகரமான கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள உழைக்கும் ஆர்வமுடைய மக்களே இத்திட்டத்தின் மூலம் பயன்பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். இத்திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் மொத்த வேலைவாய்ப்பில் குறைந்தபட்சம் 30 சதவிகித வேலைவாய்ப்பு பெண்களுக்கு வழங்கப்படுகிறது.

1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் பல சமுதாயச் சொத்துக்களாகத் தொகுப்பு வீடுகள் 55,171 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பள்ளிக் கட்டடங்கள் 2,073, ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் 1,135, கசிவு நீர்க்குட்டைகள் 1,724 உருவாக்கப்பட்டன.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டப் பணிகளில் ஈடுபடும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தினக் கூலி ரூ.20 வீதம் வழங்கப்படுகிறது. தினக் கூலியாது 2 கிலோ அரிசி மற்றும் பணமாக ஆக மொத்தம் ரூ.20 வழங்கப்பட்டு வருகிறது.

## சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்

கிராமங்களில் அடிப்படை வசதிகளை அளித்திட ரூ.386 கோடி ஒதுக்கீட்டில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி வீதம் வழங்க சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் 1991-92 மற்றும் 1992- 93 நிதியாண்டுகளில் அரசால் செயல்படுத்தப்பட்டு, மார்ச் 1993-க்குள் முழுமைப்படுத்தப்படும்.

## தேசிய கரிமவாயுத் திட்டம்

இத்திட்டம் மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் 1991-92-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மாற்று எரிசக்தியின் முக்கியப் பங்கு வகிப்பதால் இது 20 அம்சத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில் மத்திய அரசு நிர்ணயித்த 8,000 கலன்கள் இலக்குக்கு 8,015 கரிமவாயுக் கலன்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றை அமைக்க ரூ.217,90,550 செலவிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு, உபயோகிக்கப்பட்டதற்கான சான்றிதழ் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1992-93-ஆம் ஆண்டில் மத்திய அரசு நிர்ணயித்த 7,500 கலன்கள் இலக்குக்கு 8,112 கரிம வாயுக் கலன்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றை அமைக்க ரூ.2,43,36,000 செலவிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு, உபயோகிக்கப்பட்டதற்கான சான்றிதழ் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்

வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 1992-ஆம் ஆண்டு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான பதிலுரையின்போது அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் வறட்சிக்கு இலக்காகும் மாவட்டங்களான புதுக்கோட்டை, இராமநாதபுரம், தர்மபுரி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் 1992-93- ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1992-93-ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.9.72 கோடி 4 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 1993-94-ஆம் ஆண்டில் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலும் செயல்படுத்தப்படும்.

1993-94-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.15.81 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில் மத்திய அரசு நிர்ணயித்த 1,20,000 இலக்குக்கு 1,29,106 அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை அமைக்க ரூ.98,67,183.50 செலவிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு, உபயோகிக்கப்பட்டதற்கான சான்றிதழ் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1992-93-ஆம் ஆண்டில் மத்திய அரசு நிர்ணயித்த 1,50,000 இலக்குக்கு 1,50,105 அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை அமைக்க ரூ.15,76,420 செலவிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு, உபயோகிக்கப்பட்டதற்கான சான்றிதழ் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## குடிநீர் விநியோகம்

உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு விவசாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் ஆண்டில் சுமார் 202 இலட்சம் ரூபாய்க்கு 500 ஆழ்குழாய்கள் போடுவதற்கும், கைப்பம்புகள் பராமரிப்பதற்கும் திட்டம் வகுக்கப்பட்டு இவ்வாண்டிலேயே நிறைவேற்றப்பட்டது. 1992-93-ஆம் ஆண்டில் 911 இலட்சம் மதிப்பீட்டில் 3000 ஆழ்குழாய்க் கிணறுகள் (இந்தியன் மார்க் II) போடுவதற்கும், ரூபாய் 157 இலட்சம் மதிப்பீட்டில் 500 (இந்தியன் மார்க் III) ஆழ்குழாய்க் கிணறுகள் போடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு துரிதமாக நடைபெற்று வருகிறது.

அரசு நிதியுதவியுடன் 1992-93-ஆம் ஆண்டு சுமார் 74 இலட்சம் ரூபாய் செலவில் 493 ஆழ்குழாய் கிணறுகள் திட்டமிடப்பட்டு செயலாக்கம் பெற்றுக் கொண்டு இருக்கிறது.

## ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டம்

ஊரகப் பகுதி மக்களில் 25 சதவிகித மக்களுக்குத் துப்புரவு வசதிகள் அளிப்பது 7-வது மற்றும் 8-வது ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒரு நோக்கமாகும். ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் துப்புரவுக் கழிவறைகளை ஊரகப் பகுதிகளில் கட்டுகின்ற ஒருங்கிணைந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் 1991-92-ஆம் ஆண்டு 4,889 துப்புரவுக் கழிவறைகள்



**பெண்களானாலும், ஆண்களானாலும், தங்களது சொந்தக் காலில் நின்றால்தான் எந்தத் துயரமும் வராது, எவருக்கும் பாரமாக இருக்கும் நிலை உருவாகாது என்பது உலக நடப்பு!**

ரூ.21,51,160 செலவிலும், 1992-93-ஆம் ஆண்டில் 5,000 துப்புரவுக் கழிவறைகள் ரூ.80,00,000 செலவிலும் பெரியார் மாவட்டத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 1993-94-ஆம் ஆண்டில் பெரியார் மாவட்டத்தில் மேலும் 5,000 துப்புரவுக் கழிவறைகள் ரூபாய் ஒரு கோடி திட்டத்திலும், மற்ற மாவட்டங்களில் 50,000 துப்புரவுக் கழிவறைகளும் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தமிழகம் முழுவதும் உள்ள கிராமங்கள் அனைத்தும் நல்ல சாலை வசதியும், சுகாதாரம், குடிநீர், தெரு விளக்குகள் போன்ற அடிப்படைத் தேவைகளையும் பெற்றிடும் வகையில், தேர்தல் வாக்குறுதியில் சொன்னபடி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதல்வர்**

## பேரூராட்சித் துறையின் சாதனைகள்

தமிழ்நாட்டில் 646 பேரூராட்சிகள் உள்ளன. கடந்த 1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் பேரூராட்சிகளில் வாழும் மக்களுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் சிறந்த வாழ்க்கைத்தரம் அளிப்பதற்காகப் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் சிறப்புத் திட்டங்களைப் பயன்படுத்த தாராளமாக மானியங்கள் வழங்கப்பட்டுள்ளது.

1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில், சாலை வசதி, தார்ச் சாலை போட, வடிகால் வசதி, சிறு குடிநீர்த் திட்டம், தெருவிளக்குகளைப் பராமரித்தல் முதலான திட்டங்களுக்கு வழங்கப்பட்ட மானியம் ரூ.521.55 இலட்சம் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

பேரூராட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்காகவும், பேருந்து நிலையம், பேரூராட்சிக்கு வருமானம் தரக்கூடிய வணிக வளாகம் மற்றும் சந்தைகள் ஏற்படுத்துவதற்காகவும் ரூ.1822.90 இலட்சம் மதிப்பீட்டில் 125 பேரூராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்

இந்தத் திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் ஆண்டில் பேருந்து நிலையம் கட்டுதல் வணிக வளாகம் கட்டுதல், ஓய்வு இல்லங்கள் கட்டுதல் போன்ற பணிகள் ரூ.628 இலட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதுபோன்ற பணிகள் ரூ.732.41 இலட்சம் செலவில் 8 பேரூராட்சிகளில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

### சிறப்புச் சுகாதாரத் திட்டங்கள்

மனித மலத்தைச் சுமக்கும் வேலையிலிருந்து துப்புரவுப் பணியாளர்கள் விடுதலை பெறவும், அவர்கள் சமுதாயத்தில் உரிய கண்ணியம் பெறவும் 1991-92-இல் 10 பேரூராட்சிகளில் 2534 உலர் கழிப்பறைகள் நவீன நீரடிக் கழிப்பறைகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. சுகாதாரப் பணியாளர்களுக்கு 5,137 மழைக்கான மேலாடைகள் வழங்க 50 சதவிகித மானியத்துடன் ரூ.5.14 இலட்சம் பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்

பேரூராட்சிகளில் வாழும் மக்களின் அவசர மற்றும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற 1992-93-இல் இத்திட்டம் 221 பேரூராட்சிகளில் ரூ.50 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் ரூ.4 கோடி அரசு மானியமாகவும் 17 கோடி ரூபாய் மற்ற திட்டத்தின்கீழ் மானியமாகவும் வாங்கப்பட்டுள்ளது. மீதித் தொகை, பேரூராட்சிகளிலிருந்தும் நிறுவன நிதியிலிருந்தும் வழங்கப்படவேண்டும்.

1991-92-இல், 92 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும், 1992-93-இல் 142 வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளும் அரசு செலவில் பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தொழில்வரியை ஈடுசெய்வதற்காக ரூ.762.26 இலட்சம் பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### நகராட்சி நிர்வாகமும் குடிநீர்த் திட்டங்களும்

இந்த இரண்டு ஆண்டுகளில் தமிழகத்தின் தன்மானத்தை உயர்த்தி, இந்திய அளவில் எல்லாத் துறைகளிலும் ஏற்றம் காணச் செய்துள்ளார், நமது இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள்.

அரசியல் சாதுரியமும், தொலை நோக்குப் பார்வையும் மக்களின் நலனே கருத்தாகக் கொண்ட பொதுநல நோக்கமும் கொண்ட புரட்சித்தலைவி அவர்களின் ஒப்பற்ற தலைமையின்கீழ் இயங்கும் தமிழக அரசு, இந்த இரண்டாண்டுகளில் ஆற்றிய அளப்பரிய சாதனைகளை எண்ணிப் பெருமிதம் கொள்ள இயலும். பல்வேறு துறைகளில் வியத்தகு முன்னேற்றம் எய்தியுள்ளது போன்று நகராட்சி நிர்வாகத்திலும் குடிநீர் வழங்கு துறையிலும் எழுச்சிமிகு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

நாடே வியக்கும்வண்ணம் சென்னை மாநகரை அழகும், தூய்மையும் கொண்ட பசுமை மிளிரும் நகராக ஆக்கிட புரட்சித் தலைவி அவர்கள் அரிய திட்டத்தை வகுத்துள்ளார்கள்.

### எழில்மிகு சென்னை '2000'

சென்னை மாநகரத்தில் திட்டமிட்ட மேம்பாட்டுப் பணிகளுக்காக ஐந்து ஆண்டுகளில் ரூ.1,100 கோடி செலவில் அமலபடுத்துவதற்கான 'எழில்மிகு சென்னை 2000' என்னும் பெரும் திட்டம் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. முதலில் இத்திட்டத்தின்கீழ் சென்னை மாநகராட்சி செய்யும் செலவு 240 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டது. எனினும் மாநகராட்சி நிதி வருவாய்கள் கடந்த இரண்டாண்டுகளில் அதிகரித்துள்ளபடியால் 'எழில்மிகு சென்னை 2000' திட்டத்தின்கீழ் சென்னை மாநகராட்சி செய்யும் செலவு 435 கோடி அளவில் இருக்கும் என இப்பொழுது மதிப்பிடப்படுகிறது.

### மதுரை மாநகராட்சி

மதுரை மாநகராட்சியின் வருமானம் 1990-91-இல் ரூ.28 கோடியாக இருந்தது. 1992-93-இல் ரூ.37 கோடியாக அதிகரித்துள்ளது. இதற்கேற்ப மாநகராட்சியின் பணிகளும் விரிவடைந்துள்ளன. மதுரை நகரை அழகுபடுத்தும் திட்டம் என்னும் புதிய திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.10 கோடி செலவில் மதுரை மாநகரின் பூங்காக்களை மேம்படுத்துதல், மரம் நடுதல், சாலை சீரமைப்புப் பணி, தெரு விளக்குகள், நீரூற்றுகள் அமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும்.

### புதிய நகராட்சிகள்

ஒசூர், திருத்துறைப்பூண்டி ஆகிய நகரப் பஞ்சாயத்துக்கள் இரண்டும் 15.1.92 மற்றும் 1.4.92-லிருந்து நகராட்சிகளாக அமைக்கப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி

> சமுதாயத்தின் நலிந்த மற்றும் பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் நல்வாழ்வு பெற உரிய பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.
>
> — மாண்புமிகு முதல்வர்

ஆகிய நகரங்களில் மாநகராட்சிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

நிதி வசதி குறைந்த நகராட்சிகளுக்கு அரசு நிதிநிலை இடம்தரும் அளவுக்கு அரசு மானிய உதவி வழங்கிவருகிறது. 1992- 93-இல் நிதி வசதி குறைந்த 70 நகராட்சிகளுக்குத் தெரு விளக்குகள் (குறிப்பாக விரிவாக்கப்பட்ட பகுதிகளில்) போடுவதற்காக ரூபாய் ஒரு கோடி மானியம் தரப்பட்டது.

1993-94-இல் நிதி வசதி குறைந்த நகராட்சிகளுக்கு, சாலைப்பணிகளுக்காக ரூ.3 கோடி மானியம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### நகராட்சிகள் செயல்படுத்தும் முக்கியமான வளர்ச்சிப் பணித் திட்டங்கள்

ஹட்கோ கடன், மைய அரசு மானியம், நகராட்சிகள் பங்குத்தொகை ஆகிய ஆதாரங்களைக் கொண்டு 1991 மார்ச் முதல் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் 'குறைந்த செலவிலான கழிப்பறை கட்டும் திட்டத்தின்கீழ் இதுவரை ரூ.13.78 கோடி செலவில் 49,700 தனியார் கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. வரும் 1993-94-ஆம் ஆண்டில் ரூ.27 கோடி செலவில் 80,000 தனியார் கழிப்பிடங்கள் கட்டப்படும். 1994-95- ஆம் ஆண்டிற்குள் நகராட்சிகளின் உலர் கழிப்பிடங்கள் அறவே அகற்றப்படும்.

மனிதக் கழிவை அகற்றும் பணியிலிருந்து துப்புரவுப் பணியாளர்கள் விடுவிக்கப்பட்டு அவரவர் வேலை செய்யும் நகராட்சியிலேயே மாற்றுப் பணியில் அமர்த்தப்படுவர்.

### நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நகர்ப்புற வளர்ச்சி நிதியிலிருந்து உதவிபெற்று 44 நகராட்சிகளும், 3 மாநகராட்சிகளும் மொத்தம் ரூ.96.35 கோடி அளவிலான வருவாய் தரத்தக்க மற்றும் பல்வேறு திட்டங்களைச் செயற்பாட்டுக்கு எடுத்துக்கொண்டுள்ளன. இதன்கீழ் 8 நகராட்சிகளில் திருமண மண்டபங்கள்/சமுதாயக் கூடங்கள் கட்டும் பணியும் நடத்தி வருகிறது. 1993-94-இல் மேலும் ரூ.40 கோடி அளவுக்குப் பதிய திட்டங்கள் உருவாக்கப்படவிருக்கின்றன.

### நகர்ப்புற ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்வதற்கான திட்டம்

'நகர்ப்புற ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்வதற்கான திட்டம்' 1992 செப்டம்பர் முதல் 15 நகராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வரும் 1993-94- ஆம் ஆண்டில் ரூ.3 கோடி செலவில் இத்திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதிவாழ் மக்கள் 5,50,000 பேர் பயனடைவர்.

### நகராட்சிப் பணியாளர் நலன்

பணிக் காலத்தில் இறந்துவிடும் நகராட்சி ஊழியர்களின் வாரிசுக்குக் கருணை அடிப்படை நியமனம் காலந்தாழ்வின்றிக் கிடைக்கச் செய்யும் வகையில் நடைமுறைகள் சீரமைக்கப்பட்டுள்ளன. நகராட்சிப் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் உடனுக்குடன் தரப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் வழங்கும் வாரியம் ஆகியவற்றின் பணியாளர்கள் ஆகியோரின் குழந்தைகள் பயன்பெறுவதற்காக-

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு பொறியியற் கல்லூரி

தருமபுரி மாவட்டம் பர்கூரில் ஒரு வேளாண்மைக் கல்லூரி

ஆகியவற்றைத் தொடங்குவதற்கான முடிவை அரசு அறிவித்துள்ளது. அக்கல்லூரிகள் உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கும் வாரியம் ஆகியவற்றின் பணியாளர்கள் ஆகியோர் மனமுவந்து நன்கொடைத் தொகைகளைக் கொண்டு தொடங்கி நடத்தப்படும்.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

ஊரகப் பகுதிகளைப் பொறுத்தவரை கடந்த இரண்டு ஆண்டுகளில் 7928 ஊரகக் குடியிருப்புகளுக்கு மொத்தம் ரூ.145.99 இலட்சம் செலவில் குடிநீர் வசதி செய்யப்பட்டது. இதனால், 40 இலட்சம் மக்கள் பயன்பெற்றனர். இதுவரை குடிநீர் வசதி ஒன்றுகூட பெறாத ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி உடனடியாகச் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட 'மாண்புமிகு முதலமைச்சரின் மிகுவிரைவுத் திட்டத்தின்' கீழ் குடிநீர் வசதி செய்துதரப்பட்ட 2483 குடியிருப்புகள் மற்றும் அவ்வாறு குடிநீர் வசதி செய்து தரப்பட்ட ஆதிதிராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகள் 1358 ஆகியவையும் இதில் அடங்கும். டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு விழா திட்டத்தின்கீழ் மைய அரசு நிதி உதவியுடன் ஆதிதிராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகள் 358-க்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டது.

நகர்ப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டங்களின்கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் மொத்தம் ரூ.35.31 கோடி செலவில் 20 நகரங்களுக்குக் குடிநீர் வசதி செய்யப்பட்டது. பயன்பெற்றவர்கள் எண்ணிக்கை 8 இலட்சமாகும். இது போக மேலும் பத்து நகரங்களுக்கு மொத்தம் 4 இலட்சம் பேர் பயன்பெறும் வகையில் ரூ.47.36 கோடி செலவில் குடிநீர் வழங்குவதற்கான திட்டங்களுக்கும் அரசு புதிதாக ஏற்பளித்துள்ளது.

உலக வங்கி உதவியுடன் திருத்திய மதிப்பீடு ரூ.321.86 கோடி செலவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒரு மாபெரும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதன்கீழ் பெருநகரங்கள் 3-இல் குடிநீர் வழங்கு நிலை அபிவிருத்தி செய்யப்படும். நடுத்தர மற்றும் சிறு நகரங்கள் 85, ஊரகக் குடியிருப்புகள் 955 ஆகியவற்றுக்குப் புதிய குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படும். மேலும் நடுத்தர/சிறிய நகரங்கள் 14-இல் குறைந்த செலவில் கழிப்பிடத் திட்டம் நிறைவேற்றப்படும். இதுவரை இத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.233 கோடி செலவில் 44 நகரங்களுக்குக் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளதுடன் 14 நகரங்களுக்குக் குறைந்த செலவிலான வசதிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில் மணப்பாறை, பொள்ளாச்சி, காஞ்சிபுரம் ஆகிய நகரங்களுக்கான




குடிநீர் வழங்கு திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்படும்.

தர்மபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல்லிலிருந்து குடிநீர் கொண்டுசென்று நகராட்சிகள் 2, நகர பஞ்சாயத்துக்கள் 14, ஊரகக் குடியிருப்புகள் 4152 ஆகியவற்றுக்குக் குடிநீர் வழங்குவதற்கான பெரும் திட்டம் ஒன்று ரூ.400 கோடி மதிப்பீட்டில் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 26.04 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

1991-92-ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி வடிகால் திட்டம் ரூ.6.76 கோடி செலவில், ஆறு இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டது. கோயம்புத்தூர் வடிகால் திட்டம் விரைந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின்கீழ், சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்திற்கான இரண்டாவது திட்டம்:**

கிருஷ்ணா நீர் மூலம் பயன்பெறும் மாநிலங்களுக்கிடையே 1976-இல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்கீழ் கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டத்தில் சென்னைக்குக் குடிநீர் வசதிக்காக 15 டி.எம்.சி. குடிநீர் வழங்க இசைவு தரப்பட்டது. சென்னை நகரத்திற்குக் கிருஷ்ணா குடிநீர் 1995-ஜூன் முதல் வழங்கத் தொடங்க வேண்டும் என்ற காலவரையறையைத் தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநில முதலமைச்சர்கள் ஏற்றுள்ளனர். உலக வங்கி உதவியுடன் 'சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் நிறைவேற்ற இருக்கிறது. கிருஷ்ணா குடிநீர் சென்னைக்கு வரத்தொடங்கியதும் அதை நகர் முழுவதும் விநியோகிப்பதற்கு ஏற்ற வகையில் சென்னை நகரத்தில் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வசதிகளை வலுப்படுத்தி விரிவாக்குவதற்கானது இத்திட்டம். குடிநீர் வழங்கும் வசதிகளை மேம்படுத்துவதற்கான பணிகள் 1991-92-இல் தொடங்கப்பட்டு நல்ல முன்னேற்றம் நிகழ்ந்துள்ளது. இதுவரை ரூ.13.13 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## சென்னை நகரத்துக்குக் குடிநீர் வழங்குதல்

1992-இல் பருவமழை கணிசமான அளவு இல்லாததால் சென்னையில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசு ரூ.23.22 கோடி மதிப்பீட்டில் உடனடித் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. சென்னை வாழ் மக்களுக்குக் குடிநீர் வசதிகளை வழங்க அரசு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியத்திற்கு ரூ.12.32 கோடி தந்துள்ளது. லாரிகள் மூலம் தண்ணீர் வழங்குதல், இந்தியா மார்க் II இறைப்பான்களை அமைத்தல், நெய்வேலி, ஈரோடு போன்ற இடங்களிலிருந்து இரயில் மூலம் குடிநீர் கொணர்ந்து வழங்குதல் ஆகியவற்றின் மூலம் சென்னை மாநகரத்திற்குக் குடிநீர் வழங்கும் பிரச்சினை சமாளிக்கப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாகம் செம்மையுறவும், குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள் விரைந்து செயல்பட்டு மக்களின் தேவைகள் முழுமையுறவும் புரட்சித் தலைவி அவர்கள் அறிவுரை நல்கி ஆக்கம் அளித்து வருகின்றார்கள். சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கிட அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொண்டு ஆவன செய்திட ஆணையிட்டுள்ளார்கள். புரட்சித்தலைவி அவர்களின் சீரிய முயற்சியாலும் நல்லுரைகளாலும் இத்துறைகளின் பணிகள் மேலும் ஏற்றம்பெற்று உயர்ந்திடும் என்பதில் ஐயமில்லை.

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்

மாண்புமிகு ஆதிதிராவிடர் நல அமைச்சர்

**திரு எம். ஆனந்தன்**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் வளம்பெற புரட்சித்தலைவியின் புதிய 10 அம்சத் திட்டம்.**

- **ஐ.ஆர்.டி.பி. மற்றும் இதர திட்டங்களின் மூலம் 1,37,598 குடும்பங்களுக்கு உதவி.**
- **7,162 புதிய கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டுள்ளன.**
- **3,86,000 வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.**
- **ஓலைக்குடிசைகளுக்குப் பதிலாக 49,909 கான்கிரீட் வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.**
- **790 ஆதிதிராவிடர் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 419 கி.மீ. நீளத்திற்கு இணைப்புச் சாலைகள் போடப்பட்டுள்ளன.**



தமிழகத்தில் ஐந்தரைக் கோடி மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கிற்குச் சற்று கூடுதலாக உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், அவர்களுக்கு அடிப்படை வசதிகளை உருவாக்கித்தரவும் பல்வேறு நலத் திட்டங்கள் இத்துறை யின் மூலம் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிட மக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, அம்மக்கள் பிற இன மக்களுக்கு இணையாகப் பொருளாதாரத்திலும், கல்வி மற்றும் சமூக அந்தஸ்திலும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றது. குறிப்பாக, இந்திய வரலாறு காணாத அளவு ஆதிதிராவிடர்களுக்கு என்றே இரண்டு பின்னலாடை சார்ந்த தொழிற்பேட்டைகளை அமைக்க முடிவு செய்து, அதற்கான அனைத்துப் பூர் வாங்க வேலைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மிக விரைவில் ஆதிதிராவிட மக்களிடையே இருந்து 200 தொழில் முனைவோர்களைத் தேர்ந்து எடுப்பதற்கான நேர்காணல் தேர்வுகள் நடைபெற இருக்கின்றன.

குறிப்பாக, இந்தத் தொழிற்பேட்டைகள் ஒவ்வொன்றி லும், 100 தொழிற்கூடங்கள் ஏற்படுத்தப்பட இருக் கின்றன. ஒவ்வொரு தொழிற்கூடமும் குறைந்தபட்சம் ரூ.40 இலட்சம் முதல் ரூ.150 இலட்சம் வரை முதலீட் டுடன் தொடங்கப்படும். இதற்காக அரசு ரூ.15 இலட்சமோ அல்லது முதலீட்டின் 15 சதவிகிதமோ, அதில் எது குறைவாக உள்ளதோ, அதை ஒவ்வொரு தொழில் முனைவோருக்கும் மானியமாக வழங்கும்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மொத்த முதலீட்டில் 55 முதல் 65 சதவிகிதம் வரை கடனாக (Term Loan) வழங்கும். தாட்கோ நிறுவனம்/தேசியத் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (NSFDC) முதலீட்டில் 20 சதவிகிதம் வரை விளிம்புத் தொகை (Margin Money), (Seed Capital) ஆக வழங்கும். எஞ்சியுள்ள 5 சதவிகிதத் தொகை பயனாளிகளிடமிருந்து பெறப்படும்.

இதுவரை தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களி லிருந்தும் இந்தத் தொழில் பேட்டைகளில் பங்குகொண்டு தொழில் முனைவோர்களாக ஆகவேண்டும என்பதற்காக 1784 ஆதிதிராவிடர்களிடமிருந்து மனுக்கள் பெறப் பட்டுள்ளன. இவர்களை நேர்காணல் தேர்விற்கு அழைப் பதற்கு முன்னால் இந்தப் பின்னலாடைத் தொழில் பற்றி அவர்கள் ஓரளவேனும் தெரிந்து கொள்வதற்காக அவர்கள் அத்தனைப் பேர்களுக்கும் திருப்பூரில், தேர்ந் தெடுக்கப்பட்ட பின்னலாடைத் தொழிற்கூடங்களில், பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு அந்தப் பயனாளிகள் அனைவரும் கடந்த 17.5.93 முதல் 4.6.93 அன்று வரை பயிற்சி பெற்றனர். நேர்காணல் தேர்வு முடிந்த பின்னர்

அவர்களுக்கு இன்னும் ஆழ்ந்த பயிற்சிகள் வழங்கப் பட இருக்கின்றன.

அனைத்துப் பணிகளும் முடிவு பெற்று டிசம்பர் 1994 அன்று இந்தத் தொழிற்கூடங்களில் முழு அளவில் உற்பத்தி தொடங்குவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்தக் குறிக்கோளை அடைவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

## இறால் வளர்ப்பு

இறால் வளர்ப்பு மிகுந்த இலாபம் ஈட்டித்தரக்கூடிய தொழிலாக இருப்பதாலும், கணிசமான அன்னியச் செலாவணியை ஈட்டித்தருவதாக இருப்பதாலும், ஆதிதிராவிட மக்களையும் இதில் ஈடுபடுத்தி அதன் பயன்களை அவர்களும் அடைய வேண்டும் என்று இவ்வரசு விரும்புகிறது.

இதைச் செயல்படுத்துவதற்காகத் தமிழ்நாட்டில் கடற்கரை ஓரங்களில் உள்ள 8 மாவட்டங்களில் தகுதி வாய்ந்த 1000 எக்டேர் நிலங்களை விலைக்கு வாங்கித் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒரு ஆதிதிராவிடர் குடும்பத்திற்கு ஒரு எக்டேர் என்ற அளவில் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் இத்தொழிலில் ஈடுபட இருக்கும் குடும்பங்கள் ஒவ்வொன்றும் ஆண்டொன்றுக்குக் குறைந்தது ரூ.2 இலட்சம் முதல் ரூ.3 இலட்சம் வரை நிகர லாபம் பெற வாய்ப்புள்ளது.

நடப்பு நிதியாண்டில் 500 ஆதிதிராவிடர்கள் பயனடைவர். எஞ்சியுள்ள 500 ஆதிதிராவிடர்கள் 1994-95-ஆம் ஆண்டில் பயனடைவர்.



- ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தில் கீழ் 60,242 குடிசைகளுக்கு இலவச மின் விளக்கு.
- ஆதிதிராவிடர் தொழில் முனைவோர்க்கென்றே பிரத்யேகமான 2 தொழிற்பேட்டைகள்.
- கடற்கரை மாவட்டங்களில் ஆதிதிராவிடர்களுக்கென பிரத்யேகமாக இறால் வளர்ப்புப் பண்ணைக்காக 1000 எக்டேர் இலவச நில ஒதுக்கீடு.
- பட்டு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 10,000 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயனடையும் வகையில் மானியம் மற்றும் இலவச நில ஒதுக்கீடு.

## பட்டுப்புழு வளர்ப்பு

நீர்ப்பாசன வசதியுடன் கூடிய நிலத்தில் மல்பெரி சாகுபடி செய்து பட்டுப்புழு வளர்ப்பதன் மூலம் ஒரு ஆண்டில் சுமார் ரூ.30,000 வரை இலாபம் அடையலாம். இத்திட்டத்தில் ஏழை ஆதிதிராவிட மக்கள் பங்குகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு அரசு கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

தமிழ்நாட்டில், சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக எஞ்சியுள்ள மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு பஞ்சாயத்து ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும் 100 நிலமற்ற வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழுகின்ற ஆதிதிராவிட மக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மொத்தம் 4000 பயனாளிகள் பயன்பெறுகின்ற வகையில் ஒரு திட்டமும், ஏற்கெனவே பாசன வசதியுடன் கூடிய நிலம் சொந்தமாக வைத்திருக்கின்ற 6000 ஆதிதிராவிட மக்கள் பயன்பெறுகின்ற வகையில் இன்னொரு திட்டமுமாக இந்தப் பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகின்றது. ஏற்கெனவே நிலமுள்ள ஆதிதிராவிடப் பயனாளிகளும் மேற்கூறியவாறு ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர்.

ஏற்கெனவே 400 ஏக்கருக்கு மேல் மல்பெரிச் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 1993-94-ஆம் ஆண்டில் 6000 ஏக்கரில் மல்பெரிச் சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக வருகின்ற ஆண்டில் நிலம் வைத்திருக்கின்ற 4000 பேர்களும், நிலமற்ற ஏழை ஆதிதிராவிட மக்கள் 2000 பேர்களும் பயன்பெறுகின்ற வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

நிலமற்ற ஏழைப் பயனாளிகள் பயன்பெறுகின்ற வகையில் ஒவ்வொரு பயனாளிக்கும் சுமார் ரூ.87,000 வரை செலவு செய்து தகுதி வாய்ந்த ஒரு ஏக்கர் நிலம் வாங்கி அதிலே பட்டுப்புழு வளர்ப்பதற்குத் தேவையான கூடங்கள், குடும்பத்தினர் தங்கத் தேவையான வீட்டு வசதி, மற்றும் பட்டுப்புழு வளர்க்கத் தேவையான ஏனங்கள், இதற்கான பயிற்சி ஆகியவற்றிற்காக ஏற்பாடு செய்யப்படும். தகுதி வாய்ந்த நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் மூலம் 10,000 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன்பெறுவதோடு சுமார் 50,000 ஆதிதிராவிட மக்கள் ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்புப் பெறுவதற்கான வாய்ப்பும் ஏற்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பிற சமுதாயத்தினருக்கு இணையாக அனைத்து அடிப்படை வசதிகளையும், விரைவாகப் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடும், பொருளாதாரத்தில் அவர்கள் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தோடும், நமது முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே 10 அம்ச திட்டமொன்றை அறிவித்தார்கள்.

இத்திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் வருமாறு:-

5 ஆண்டுகளில் 3.5 இலட்சம் ஆதிதிராவிடக் குடும்பங்களுக்கு பொருளாதார மேம்பாடு உதவிகள்



வழங்கப்படும்.

**குறியீடுகள்:**

1991-92 மற்றும் 1992-93-இல் 1,35,000 குடும்பங்கள் பயன்பெறத்தக்க வகையில் உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

10,000 ஆதிதிராவிட விவசாயக் குடும்பங்களுக்குப் பாசனக் கிணறுகள் வெட்டிக் கொடுத்தல்.

தனிநபர் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் வரும் 5 ஆண்டுகளில் 5 ஆயிரம் பேர்களுக்குத் தொழில் தொடங்க நிதியுதவி செய்யப்படும்.

ஐ.டி.ஐ. பயிற்சி பெற்ற 5000 ஆதிதிராவிட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கிக் கொடுத்தல்.

5 ஆண்டுக் காலத்தில் 4 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்படும்.

5 ஆண்டுக் காலத்தில் 3 இலட்சம் கான்கிரீட் வீடுகள் ஆதிதிராவிட மக்களுக்குக் கட்டித்தரப்படும்.

குடிநீர் ஆதாரமற்ற 3776 ஆதிதிராவிடக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்படும்.

1063 ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல், 1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் 1063 குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் ஏற்படுத்தப்படும்.

அனைத்து ஆதிதிராவிடக் குடியிருப்புகளுக்கும் தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

வருகின்ற 5 ஆண்டுகளில் 1.5 இலட்ச ஆதிதிராவிடக் குடியிருப்புகளுக்கு இலவச மின் விளக்கு வசதி செய்து தரப்படும். 1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில், 60,000 குடிசைகளுக்கு இலவச மின் வசதி அமைத்துத் தரப்படும்.

**சாதனைகள்**

31.3.1993 வரை 1,37,598 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

31.3.1993 வரை 10,034 கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டுள்ளன.

1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில், 1727 ஆதிதிராவிடத் தொழில் முனைவோர் உருவாக்கப் பட்டுள்ளனர். 1993-94-ஆம் ஆண்டில் 1500 தொழில் முனைவோரை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 19.6.92 அன்று மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை அம்பத்தூர் தொழில் பேட்டையில் தொடங்கி வைத்துள்ளார்கள்.

1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் 3,86,000 பேர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

31.3.93 வரை 49,409 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

31.3.93 வரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 3024 ஆதிதிராவிடக் குடியிருப்புகள் ஒவ்வொன்றுக்கும், குறைந்தபட்சம் ஒரு குடிநீர் ஆதாரத்தையாவது உருவாக்கி யுள்ளது.

இதுவரை 790 குடியிருப்புகளுக்கு, 418 கி.மீ. தூரமுள்ள இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகளும் விரைவில் முடிக்கப்படும்.

1991-92-ஆம் ஆண்டில் 357 குடியிருப்புகளுக்குத் தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 1992-93-ஆம் ஆண்டிலிருந்து, தன்னிறைவுத் திட்டத் தின் கீழ் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

31.3.93 வரை 60,242 குடிசைகளுக்கு இலவச மின்வசதி செய்து தரப்பட்டுள்ளது.

இருபது அம்சத் திட்டத்தின்கீழ் இத்துறையால் செயல்படுத்தப்படுகின்ற மூன்று திட்டங்கள் 1991-92 மற்றும் 1992-93- ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப் பட்ட விவரங்கள் வருமாறு:-

**திட்ட எண்.6**

கொத்தடிமைகள் மறுவாழ்வுத் திட்டம்

**இலக்கு - 816 சாதனை - 976**

**திட்ட எண்.11(எ)**

ஆதிதிராவிடர் பயன்பெறும் குடும்பங்கள்

**இலக்கு - 5 இலட்சம் சாதனை - 5,11,415**

திட்ட எண்.11 (பி)

**பழங்குடியினர் பயன்பெறும் குடும்பங்கள்**

இலக்கு 18,000 சாதனை - 17,209

தேசியத் தாழ்த்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (என்.எஸ்.எப்.டி.சி.) தான் வழங்கும் நிதி உதவிகளுக்கு உரிய அளவில் அத்தொகை திருப்பித் தருதல் பற்றி மாநில அரசின் உத்தரவாதம் (Guarantee) தேவையென வலியுறுத்தியதை ஒட்டி இந்த ஒவ்வொரு தொழில் தொடங்கும்போதும், மாநில அரசை அணுகி உத்தரவாதம் பெற வேண்டிய சூழ்நிலை எழாதிருக்க வேண்டும் என்பதற்காகவும், அதற்கு உத்தரவாதம் பெறுவதில் எழக்கூடிய தாமதங்களைத் தவிர்ப்பதற்காகவும், ஆதிதிராவிட மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூ.10 கோடிக்கு ஒட்டுமொத்த (Block Guarantee) உத்தரவாதம் வழங்கி உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இது பெரிய அளவில் தொழில் தொடங்க முன் வரும் ஆதிதிராவிடர்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாகும்.

ரூ.8.795 இலட்சம் செலவில் இராமநாதபுரும் மாவட்டத்தில் 99 ஆதிதிராவிட விவசாயிகள் பயன்பெறும் வகையில் 16 சமுதாயக் கிணறுகள் முழு மானியமாக வழங்கப்பட்டுள்ளன.

7.42 கோடி மானியத்துடன் 42,211 கறவை மாடுகள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

240 ஆதிதிராவிடர்களுக்கு ஓட்டுநர் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு அளிக்க ரூ.9,60,000 போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசு பொறுப்பேற்ற பின்பு மிகவும் பின்தங்கிய பகுதியான தர்மபுரி மாவட்டம், பர்கூரில் இருளர் என்ற பண்டைய பழங்குடியின மக்களுக்கு 63 வீடுகள் கட்டுவதற்கு ரூ.9.30 இலட்சம் செலவில் கட்டித்தர முடிவெடுக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1991-92 மற்றும் 1992-93-இல் ரூ.4 கோடி செலவில், காலணி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆதிதிராவிடர்களுக்கு 4000 ஸ்டீல் பங்க்ஸ் (Steel Bunks) மற்றும் தோல் தையல் மிஷின்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் 1990-91 வரை 862 மாணவ-மாணவியர் விடுதிகள் இயங்கி வந்தன. 1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் புதிதாக 70 விடுதிகள் தொடங்கப்பட்டன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மொத்தமுள்ள 932 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான விடுதிகளில் ரூ.12.33 இலட்சம் செலவில் நூலகங்கள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. அதேபோல, 1993-94-ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 1223 பள்ளிகளிலும், நூலகங்கள் திறக்கப்பட உள்ளன.

1991-92-ஆம் ஆண்டில் நலப் பள்ளியில் பயிலுகின்ற 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவ-மாணவியர்களுக்கு, முக்கிய வினா-விடைகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன. அதேபோல் நலப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவ-மாணவியர்க்கும் 1992-93-ஆம் ஆண்டு முக்கிய வினா-விடை ஏடுகள் வழங்கப்பட்டன.

ஆசிரியர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சி அளித்து அவர்களுடைய திறனை வளர்க்க வேண்டும் என்பதற்காக 1991-92-ஆம் ஆண்டு செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., தென்னார்க்காடு, திருச்சி ஆகிய மூன்று மாவட்டங்களில் இத்தகைய பயிற்சி மையங்கள் நடத்தப்பட்டன. வருகின்ற ஆண்டுகளில் இத்தகைய பயிற்சி மையங்கள் பிற மாவட்டங்களிலும் நடத்தப்படும். மேலும் பொதுத் தேர்வுகளில் 75 சதவிகிதம், அதற்கு மேலும் மாணவர்களை வெற்றி பெறச் செய்கின்ற மேல்நிலை மற்றும் உயர்நிலை தலைமை ஆசிரியர்களுக்குத் தலா ரூ.1500-ம் 60 சதவிகிதம் முதல் 74 சதவிகிதம் வரை வெற்றி பெறச் செய்வோருக்கு தலா ரூ.1000-ம் தங்களது பாடங்களில் 100-க்கு 100 வெற்றி எய்திட வைக்கும் பாட ஆசிரியர்களுக்குத் தலா ரூ.750- ம் ஊக்கத் தொகையாக வழங்கவும் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது.

இதன் பயனாக 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் நலத்துறைப் பள்ளிகளில், தேர்ச்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 1990- 91-ஆம் ஆண்டில் 33.6 சதவிகிதமாக இருந்தது, 1991-92-ஆம் ஆண்டில் 59 சதவிகிதமாகவும், 1992-93-ஆம் ஆண்டில் 62 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது.

ஏற்கெனவே இயங்கி வருகின்ற விடுதிகளில், 1991-92 மற்றும் 1992- 93-ஆம் ஆண்டுகளில் 2000 மாணவ, மாணவியர்கள் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1993-94-ஆம் ஆண்டில் புதிதாக 20 நல விடுதிகள் திறக்கப்பட உள்ளன. அத்தோடு ஏற்கெனவே இயங்கி வரும் விடுதிகளிலும் 100 மாணவர்கள் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பழங்குடியின மக்கள் கல்விமேம்பாட்டிற்காகத் தமிழ்நாட்டில் 217 உண்டு-உறைவிடப் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய உண்டு-உறைவிடப் பள்ளிகளில் கல்வித் தரத்தை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு திருச்சி மாவட்டம் பச்சைமலைப் பகுதியில், உள்ள பல்வேறு உண்டு- உறைவிடப் பள்ளிகளை இணைத்து 'டாப்செங்காட்டுப்பட்டி' என்ற இடத்தில் பெரிய அளவில் ஒரு மேல்நிலைப் பள்ளியை உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்



★ தீண்டாமையைத் தாக்குவது உயர்வு தாழ்வு வேற்றுமையைத் தாக்குவதாகும். தீண்டாமை ஒழிந்தால், அதே விநாடியில் சாதிமுறை பரிசுத்தமாகி விடும்.




தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதற்கேற்ப நிடுநிலைப் பள்ளியாக இருந்த மேற்படி பள்ளி 1992-93-ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது. இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்த உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். இப்பள்ளியின் செயல்பாட்டைப் பார்த்த பின்னர், பழங்குடியினர் மிகுதியாக வாழும் பகுதிகளில் உள்ள உண்டு-உறைவிடப் பள்ளிகளும் அவற்றின் தகுதிக்கேற்ப உயர்நிலைப் பள்ளிகளாகவோ, மேல் நிலைப் பள்ளிகளாகவோ உரிய காலத்தில் நிலை உயர்த்தப்படும்.

மற்றும் 1991-92-ஆம் ஆண்டில் ரூ.18 இலட்சம் செலவில் எட்டு உண்டு- உறைவிடப் பள்ளிக்கூடங்கள் கட்ட உத்தரவிடப்பட்டு, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 1991-92-இல் பழங்குடியினர் நலத்திட்டப் பகுதிகளில் 8 புதிய பள்ளிகள் திறப்பதற்கு அடிப்படைத் தேவையான கட்டடங்கள் கட்ட ரூ.40 இலட்சமும், 1992-93-ஆம் ஆண்டில் 7 பள்ளிகள் திறப்பதற்காக ரூ.49 இலட்சமும் அனுமதிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்துறையில் இயங்குகின்ற மாணவ-மாணவியர்கள் விடுதிகளுக்குப் படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்ற திட்டத்தின் கீழ் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 1991-92-ஆம் ஆண்டில் ரூ.2.3 கோடி செலவில் புதிய 7 (2 மாணவர் 5 மாணவியர்) விடுதிக் கட்டடங்கள் கட்ட உத்தரவிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடந்து வருகின்றன. 1992-93-ஆம் ஆண்டில் ரூ.300 இலட்சம் செலவில் 12 மாணவர் விடுதிக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு ரூ.3.26 கோடி செலவில் 19 புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணை இடப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.

கல்வித்துறையின் கீழ் இயங்கி வருகின்ற நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிட மாணவ-மாணவியர்களுக்கு 1991-92 நிதியாண்டில் ரூ.14 கோடியும், 1992-93-ஆம் ஆண்டில் ரூ.15.31 கோடியும் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 1990-91-ஆம் ஆண்டு வழங்கப்பட்டதைவிட சுமார் ரூ.2 கோடியும் மற்றும் 1991-92-இல் வழங்கப்பட்டதைவிட 1992-93-இல் ரூ.1.31 கோடியும் அதிகம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 7 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.



# இந்து சமய அறநிலையத் துறையின் இணையிலாப் பணிகள்

மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர்

**திரு வெ. நடேசன் பால்ராஜ்**

**ஆலயப்பணிக்கோர் அற்புதத் திட்டம்- இதர மாநிலங்களும் பின்பற்றும் வகையில் ஆலய சீரமைப்புத் திட்டம்.**

- **சிதைந்த கோயில்களைச் சீர்படுத்த முதலமைச்சரின் கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்புத் திட்டம் - டாக்டர் புரட்சித்தலைவியின் தூய புனிதத் திட்டம் - மக்களின் நெடுஞ்காலத் தேவையைப் பூர்த்தி செய்யும் திட்டமாகும். ஆலயங்களில் உள்ள விலை மதிப்பற்ற சொத்துக்களைப் பாதுகாக்க ஆலய பாதுகாப்பிற்குத் தனிப்படை.**



**மா**ண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் அரசு பொறுப்பேற்ற இரண்டாண்டுகளில் இந்து சமய அறநிலையத் துறையில் ஏற்பட்டுள்ள சாதனைகள் பலப்பல.

தேர்தலில் அளித்த வாக்குறுதிகளின்படி தமிழ்நாடு திருக்கோயில்களின் நிர்வாக மேம்பாட்டைக் கருதி திருக்கோயில் நிர்வாக வாரியம் அமைக்கப்பட்டது. மேற்படி நிர்வாக வாரியத்தால், 19 மாவட்டங்களிலும், மாவட்டக் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

20 ஆண்டுகளுக்கு முன்பாக களவுபோன புகழ் பெற்ற, பத்தூர், அருள்மிகு நடராசர் திருவுருவச் சிலை தமிழ்நாட்டிற்குத் திரும்பக் கொண்டு வரப்பட்டது. மேற்படி திருக்கோயிலை ரூ.7 இலட்சம் செலவில் புதுப்பித்து, குடமுழுக்கு விழா நடத்த ஏற்பாடுகள் மற்றும் நித்திய பூசை நடத்த ரூ.1.60 இலட்சம் வைப்பு நிதி ஏற்படுத்தி, அதன் வட்டியினைக் கொண்டு நித்ய பூசைகள் செய்யும் ஏற்பாடு செய்யப்பட்டது.

திருவாரூரில் உள்ள, உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் ரூ.9 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதி செய்யப்பட்டது. மேலும், ரூ.5 இலட்சம் செலவில் ஜெனரேட்டர் ஒன்றும் அமைக்க அனுமதிக்கப்பட்டது.

திருக்கோயில் பணியாளர்களின் குடும்பநல நிதி உதவி ரூ.10,000 என இருந்ததை, ரூ.20,000 ஆக உயர்த்தி வழங்கவும், அதன்பின்னர் ரூ.20,000-லிருந்து ரூ.30,000 ஆக உயர்த்தி வழங்கவும் ஆணையிடப்பட்டது. இந்த அரசுப் பொறுப்பேற்றபின், 125 குடும்பங்களுக்கு இத் திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

பல திருக்கோயில்களில், பணியாளர்கள் சம்பளம்கூட கொடுக்க வசதியில்லாமல், இருப்பதைத் தொடர்ந்து, மேற்படி பணியாளர்களுக்குச் சம்பளப் பாக்கிகளைக் கொடுக்க ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டது. மேற்படி நிதியிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து, கடந்த 2 ஆண்டுகளில், திருக்கோயில் பணியாளர்களின் சம்பளப் பாக்கி வழங்கும் திட்டத்தின்கீழ், 2,533 பணியாளர்களுக்கு 34.66 இலட்சம் ரூபாய் சம்பளம் வழங்கப்பட்டது.

தமிழகத்தில் முதன் முறையாக, வேத ஆகமங்களைக் கற்றுச் சிறப்புறும்பொருட்டு வேத ஆகமக் கல்லூரி நிறுவிட அறிவிக்கப்பட்டது. அர்ச்சகர்களுக்கு, புத்தொளிப் பயிற்சித் திட்டம் அறிவிக்கப்பட்டது. உபரி நிதி உள்ள திருக்கோயில்களிலிருந்து, நிதிமாற்றம் செய்து, ரூ.8 இலட்சம் நிதி ஏற்படுத்தி, மாநிலத்தில், 10 இடங்களில் அர்ச்சகர்களுக்குப் புத்தொளி பயிற்சித் திட்டம்

வழங்கும் திட்டம் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் 346 அர்ச்சகர்கள் பயன்பெற்றுள்ளனர்.

ஓதுவார்களுக்கு, ஏற்கெனவே, வழங்கிவரப்படும் ஓய்வூதியத்தினை 250-லிருந்து ரூ.300 ஆக உயர்த்தி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

வேத பாராயணம், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் பாடுவோர் மற்றும் அரையர்சேவை செய்வோர்களுக்கு 100 பேர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் புதிய திட்டம், உத்தரவிடப்பட்டு, ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற தகுதிவாய்ந்த 500 அர்ச்சகர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் மாத ஓய்வூதியம் ரூ.300 என்று வழங்க அரசாணைப்படி உத்தரவு வழங்கப்பட்டு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி தேவஸ்தானம் போர்டுக்கு ஆண்டு தோறும் ரூ.13.70 இலட்சம் அரசு மானியம் வழங்கப்பட்டு வந்தது. நிதிப்பற்றாக்குறை காரணமாக, இந்த மானியத்தை உயர்த்த வேண்டும் எனக் கேட்கப்பட்டதன் அடிப்படையில், முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ. ஒரு கோடி முதலீடு செய்து, அதன் வட்டியிலிருந்து ஆண்டுக்கு ரூ.10 இலட்சம் மேற்படி போர்டுக்கு வழங்க ஆணையிடப்பட்டது. மேலும், ஆண்டுதோறும் கூடுதலாக ரூ.4 இலட்சம் ஆகக் கூடுதல் ரூ.14 இலட்சம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதுவரை ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு காலப் பூசை நடைபெறவும் வசதியில்லாத திருக்கோயில்களில், ஒரு காலப் பூசை நடைபெற நிரந்தரவைப்பு நிதி ஏற்படுத்த திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின்படி, திருக்கோயில் சார்பில் ரூ.6,250 நிதி திரட்டப்பட்டதால், பாக்கி ரூ.18,750 முதல்வர் திருக்கோயில் பாதுகாப்பு நிவாரண நிதியிலிருந்து அளித்து, மொத்தம் ரூ.25,000 நிரந்தர வைப்பு நிதி ஏற்படுத்தப்படும் என்ற திட்டம் மாற்றி அமைக்கப்பட்டுச்செயல்படுத்தப்பட உள்ளது.

திருக்கோயில்களில் நடைபெறும் திருட்டு, மற்றும் சிலை உடைப்பைத் தடுக்கும் பொருட்டு, 1000 இரண்டாம் நிலைக் காவலர்கள், மற்றும் 3000 முன்னாள் இராணுவத்தினர் கொண்ட ஒரு திருக்கோயில் பாதுகாப்புப் படை ஏற்படுத்தப்பட்டது. இப்படையில், இதுவரையில், 2,016 திருக்கோயில்களில் காவலர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்கள், நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

திருக்கோயில்களில் நடைபெறும், திருட்டினைத் தவிர்க்கும் பொருட்டு, எச்சரிக்கை மணி பொறுத்தும் திட்டம் அறிவிக்கப்பட்டு, திருக்கோயில் நிர்வாக வாரியத்தினால் 337 திருக்கோயில்களில் எச்சரிக்கை மணி பொறுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆட்சி ஏற்பட்டபின், திருக்கோயில்களுக்கு வரவேண்டிய குத்தகைப் பாக்கிகளை வசூலிக்க வருவாய் நீதிமன்றங்களில், 10,927 வழக்குகள் ரூ.765 இலட்சங்களுக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதுவரை, 2,119 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.2.5 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, 5 இடங்களில் வருவாய் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருந்தது. 1992-93-இல் மேலும், ஆறு வருவாய் நீதிமன்றங்கள் அமைக்க இந்த அரசினால் ஆணையிடப்பட்டுள்ளது. தற்போது 11 இடங்களில் வருவாய் நீதிமன்றங்கள் உள்ளன.



தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியத்தினால் 291 திருக்கோயில்களுக்கு, ரூ.48.86 கோடி மதிப்பிற்கு வரவு- செலவுத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியத்தினால், திருக்கோயில்களில் உள்ள, தணிக்கை ஆட்சேபணைகளில் 770 பத்திகள் சம்பந்தப்பட்ட ஆட்சேபணைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. ரூ.7 கோடி திட்டத்தின்கீழ், ஒருகாலப் பூசைக்காகத் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.2,500 வழங்கப்பட்டு வந்ததை ரூ.3,500 ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது.

திருக்கோயில்களில் நடைபெறும், இலவசத் திருமணங்களுக்குச் செலவிடப்பட்டு வந்த ரூ.1,250-ஐ ரூ.1,500 ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது.

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகத்திற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி நியமிக்கப்பட்டார். சிவகங்கை மற்றும் வேலூர் ஆகிய இரண்டு கோட்டங்களில் இரண்டு துணை ஆணையர் அலுவலகம் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு இரண்டு உதவி ஆணையர் அலுவலகம் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. தலைமையிடத்தில், வழக்குகளைக் கவனிக்க உதவி ஆணையர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

திருக்கோயில் நிர்வாக வாரியத்தால், 203 திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டனர். மாவட்டக் குழுக்களால் 2,632 திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டனர். சமயபுரம் மற்றும் திருவேற்காடு திருக்கோயில்கள் துணை ஆணையர் நிலையிலிருந்து, இணை ஆணையர் நிலைக்கு உயர்த்தப்பட்டன. அதேபோல், கள்ளழகர் திருக்கோயில் உதவி

ஆணையர் நிலையிலிருந்து, துணை ஆணையர் நிலைக்கு உயர்த்தப்பட்டது. ஆலய மேம்பாட்டுத் திட்டம் ரூ.5 கோடி வைப்பு நிதி வட்டியிலிருந்து வசதி இல்லாத திருக்கோயில்களின் ஒருகாலப் பூசை நடைபெற 1991-92-இல் 547 திருக்கோயில்களுக்கு ரூ.13.67 இலட்சமும், 1992-93-ஆம் ஆண்டில் 265 திருக் கோயில்களுக்கு ரூ.9.27 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. ஆலய மேம்பாட்டுத் திட்டம் கிராமப்புறத் திருக் கோயில்கள் திருப்பணிக்கான ரூபாய் ஒரு கோடி வைப்பு நிதி வட்டியிலிருந்து திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் 1991-92-ஆம் ஆண்டில் 66 திருக்கோயில்களுக்கு ரூ.16.50 இலட்சமும், 1992-93-ஆம் ஆண்டில் 95 திருக்கோயில்களுக்கு ரூ.23.15 இலட்சமும் வழங்கப் பட்டுள்ளது.

ஆலயங்களின் திருப்பணி மற்றும் பராமரிப்புக்காக ஆண்டுதோறும் ரூ.45 இலட்சம் மானியமாக வழங்கப் பட்டு வருகிறது. 1991-ஆம் ஆண்டில், 1991-92-க்கு, கும்பகோணத்தில், நடைபெற்ற மகாமகத் திருவிழா 8 ஆலயங்களின் திருப்பணிக்காக ரூ.12.50 இலட்சம் அரசு மானியமாக வழங்கப்பட்டது. மேலும், காமராசர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், அருள்மிகு நாச்சியார் திருக்கோயில், இராஜகோபுரத் திருப்பணிக்காக ரூ.11 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, மொத்தத்தில் ரூ.72.50 இலட்சம் அரசு மானியமாக வழங்கப் பட்டுள்ளது. இது கடந்த ஐந்தாறு ஆண்டுகளில் எப் போதுமே இந்த அளவிற்குக் கொடுக்கப்படவில்லை. 1991-ஆம் ஆண்டில் பொது நல நிதியிலிருந்து திருக் கோயில் திருப்பணிக்காக ரூ.17.01 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது. 1992-ஆம் ஆண்டில் 34 திருக்கோயில் களின் திருப்பணிக்காக ரூ.19.39 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

முதன்முதலாகத் தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியம் அமைக்கப்பட்ட பிறகும், அதற்கு முன்பாகவும், 1991-ஆம் ஆண்டில் 611 திருக்கோயில் திருப்பணி வேலைகள் ரூ.10.35 கோடியில் நடைபெற்று வந் துள்ளது. 1992-ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட பணிகள்: திருப்பணிகள்: 257, மதிப்பீடுத்தொகை ரூ.190.74 இலட்சம், கட்டுமானப் பணிகள்: 110, மதிப்பீடுத் தொகை: ரூ.226.83 இலட்சம். மேலும் 103 வேலை களுக்கு ரூ.3.82 கோடிக்கு அங்கீகரிக்கப்பட்டதில், 44 பணிகள் ரூ.220.96 இலட்சத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

கும்பகோணத்தில், நடைபெற்று முடிந்துள்ள மகாமகத் திருவிழாவினை ஒட்டி, 19 திருக்கோயில்களில், 11 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்யப்பட்டு குட முழுக்கு விழா நடைபெற்றுள்ளது. அதற்காக அரசு மானியமாக ரூ.12.50 இலட்சமும், ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 இலட்சமும், திருக்கோயில்கள் உபரிநிதியிலிருந்து ரூ.12 இலட்சமும், முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி யிலிருந்து ரூ.5.77 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

புராதன வரலாற்றுச் சிறப்புமிக்க ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களால் பாடப்பெற்ற 19 சைவத் திருக்கோயில்களுக்கும், 16 வைணவத் திருக்கோயில்களுக்கும் திருப்பணிக்காக முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் 1988-ஆம் ஆண்டிலிருந்து போதிய நீர் இன்மையால், நடத்த இயலாமலிருந்த தெப்பத் திருவிழாவினை நடத்துவதற்கு இந்த அரசு திட்டம் தீட்டி, ரூ.35 இலட்சம் செலவில் திருக்குளத் திருப்பணி வேலைகள் செய்து, குளத்திற்குள் தண்ணீர் தேக்கி 1993-ஆம் ஆண்டில் தெப்பத்திருவிழா நடத்தப்பட்டுள்ளது.

உத்தரகோசமங்கை, அருள்மிகு மங்களநாத சுவாமி திருக்கோயில் திருப்பணிக்காக முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது திருப்புடைமருதூர், அருள்மிகு நாரம்புநாதசுவாமி திருக்கோயில் திருப்பணிக்காக பொதுநல நிதி மற்றும் ரூ.5 கோடி வைப்பு நிதி வட்டியிலிருந்தும் ரூ.7 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மதுராந்தகம், அருள்மிகு கோதண்டராமசுவாமி திருக்கோயில், திருப்பணிக்காக முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ. 5 இலட்சம் வழங்கப்பட்டு குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது. கும்பகோணம், நாதன்கோவில், அருள்மிகு ஜகந்நாதப் பெருமாள் திருக்கோயில் திருப்பணிக்காக முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டம் அருள்மிகு அவிநாசிலிங்கேஸ்வரர் திருக்கோயிலுக்கு ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய தேர் செய்து முடிக்கப்பட்டு தேர்த்திருவிழா நடைபெற்றது. இத்தேர்த் திருப்பணிக்காக ரூ.5 கோடி வைப்பு நிதி வட்டியிலிருந்து ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், கீழ்நிலக்கோட்டை, அருள்மிகு நாச்சியார் திருக்கோயிலுக்கு ரூ.4 இலட்சத்திற்கு உபயமாகத் தேர் செய்து முடிக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் வட்டம், இளையனார் வேலூர் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குப் புதிய தேர் ரூ.4.15 இலட்சத்தில் செய்யப்பட உள்ளது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் மாவட்டம், சிவகங்கை தேவஸ்தானத்தைச் சேர்ந்த எழுவங்கோட்டை, அருள்மிகு வில்வநாத சுவாமி திருக்கோயில் திருப்பணி ரூ.7.40 இலட்சத்தில் நடைபெற்று வருகிறது.

திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வர் திருக்கோயில் சங்குதீர்த்த குளம் தெப்பத் திருவிழாவினை முன்னிட்டு, ரூ.1.07 இலட்சம் செலவில் திருப்பணி நடைபெற்றுள்ளது.

பட்டுக்கோட்டை, நாடியம்மன் திருக்கோயில் இராஜகோபுரத் திருப்பணிக்காக ரூ.3 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தென்திருப்பேரை அருள்மிகு மகரநெடுங்குழைநாதர் திருக்கோயில் திருப்பணிக்காக



ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

பல்நோக்கு பலமாடிக் கட்டடங்கள், அங்காடிகள் மற்றும் திருமண மண்டபங்கள் திருக்கோயில் வருமானங்களில் இருந்தும் கடன் வாங்கியும், கட்டப்பட்டு வருகின்றன. இவைகளின் மூலம், திருக்கோயில்களுக்கு நல்ல வருவாயினை ஈட்டித்தர வழி செய்யப்பட்டுள்ளது. சென்னை, இராயப்பேட்டை, அருள்மிகு சித்திபுத்தி விநாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள இடத்தில் பல்நோக்கு வர்த்தக அங்காடி கட்டுமானப் பணி முதல்கட்டமாக ரூ.50 இலட்சத்தில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக, கட்டுமானப் பணி ரூ.100 இலட்சத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

மயிலை, அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் சார்பில், கிரீன்வேஸ் சாலையில், ரூ.90 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் சார்பில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டிலும், அழகர் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில், மதுரை நகரில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டிலும், திருச்சி மலைக்கோட்டை தாயுமான சுவாமி திருக்கோயில் சார்பில் இரண்டு வணிக வளாகங்கள் ரூ.55 இலட்சம் மதிப்பிலும், கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் வளாகத்தில், 72 அங்காடிகள் ரூ.10 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 96 கடைகள் ரூ.20 இலட்சம் செலவில் கட்ட மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலின் சார்பில் இரண்டு கல்யாண மண்டபங்கள் ரூ.48.50 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. வடபழநி, அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலின் சார்பாக ரூ.47.50 இலட்சம் செலவில் 2 திருமண மண்டபங்களும், திண்டுக்கல் மற்றும் காரைக்குடி ஆகிய இடங்களிலும் ரூ.16.50 இலட்சம் செலவில் திருமண மண்டபங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. திருவிடந்தை, அருள்மிகு நித்தியகல்யாண சுவாமி திருக்கோயில் சார்பில், ரூ.6 இலட்சம் செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கடலூர், அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில் சார்பில் ரூ.12 இலட்சம் செலவிலும், உப்பிலியப்பன்கோவில், அருள்மிகு வெங்கடாசலபதி சுவாமி திருக்கோயில் சார்பில் ரூ.6 இலட்சம் செலவிலும் கல்யாண மண்டபங்கள் கட்டப்படவுள்ளன.

புதுக்கோட்டை சமஸ்தான திருக்கோயில் பராமரிப்பிற்காக ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த அரசு உதவித் தொகை ரூ.5.30 இலட்சம் இந்த அரசு பதவி ஏற்றவுடன் ரூ.9.30 இலட்சமாக உயர்த்தி ஆணையிடப்பட்டு வழங்கியது.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான நகர்ப்புறங்களில் உள்ள கட்டடங்களுக்கு நியாயமான வாடகை நிர்ணயம் செய்வதற்கு நியாய வாடகைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மண்டைக்காடு, அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில் கன்னியாகுமரி மாவட்டம், திருவிழா இலட்சக் கணக்கான மக்கள் குழுமி, பொங்கல் வைத்து வழிபடும் திருக்கோயிலாகும். பொதுநல வசதிக்காக திருக்கோயில் மதிற்சுவரை ஒட்டி மூன்று புறமும், பொங்கல் மண்டபம் ரூ.2,40,000 செலவில் அமைக்கவும், ஐந்து அறைகள் கொண்ட தங்குமிடம் ரூ.2,20,000 செலவில் கட்டு மானம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் தொடங்கும் நிலையில் உள்ளன.

மேலும், மயிலை, அருள்மிகு மாதவப் பெருமாள் திருக்கோயில் திருக்குளமும், திருப்பணி செய்யப்பட்டு, இவ்வாண்டு தெப்பத் திருவிழாவும் மீண்டும் தொடங்கப் பட்டுள்ளது.

அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை.

திருக்கோயிலின் கருவறை, முகமண்டபம் மற்றும் மகாமண்டபம் ஆகியவைகளை கருங்கல் திருப்பணியாகப் புதியதாக உரிய சிற்ப சாத்திர விதிகள்படி, மாற்றிய மைக்க ரூ.37 இலட்சம் அளவில் மதிப்பீடு செய்யப்பட்டு பணிகள் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தினரால் செய்யப் பட்டு வருகின்றது. மேலும், பல திருப்பணிக்காகப் புதிய ராஜகோபுரம் கட்டுதல், புதிய படிக்கட்டுகள் அமைத்தல், போதிய அங்காடிகள், அலுவலக அறைகள், பக்தர்கள் குடிநீர் வசதி செய்தல், திருமதில் அமைத்தல் மற்றும் உயர்நிலைப் பள்ளி கட்டடம் கட்டுதல் ஆகியவை உள்ளடக்கி ரூ.6 கோடி மதிப்பில் பணிகள் மேற் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி. சுற்றுப்பிரகார மண்டபம் ரூ.23 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும், தங்கும் அறைகள், தண்ணீர் வசதி, குடில்கள், போதிய சாலை வசதிகள், இவைகளை அமைக்கத் திட்டமிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில், பெரிய பாளையம். சென்னைக்கு அருகில் அமைந்துள்ள இத் திருக்கோயில் சிற்ப சாத்திர, முறைப்படி திருந்தி அமைக் கவும், நான்குபுறமும், மதிற்சுவர் மற்றும் கோபுரங்கள்

கொண்டதும், புதிய மகாமண்டபம், சபாமண்டபம் இவைகளுடன் கூடியதாகவும் அமைக்க ரூ.70 இலட்சம் மதிப்பில் பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. முதற்கட்ட பணிகள் சுமார் 20 இலட்சத்திற்கு மேற் கொள்ளப்பட்டு தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப் படைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

அருள்மிகு வடபத்ரசயனர் திருக்கோயில், ஸ்ரீவில்லி புத்தூர். தமிழக அரசின் சின்னமாக குறிக்கப்பட்ட பெருமை வாய்ந்த திருக்கோயில் ராஜகோபுரம் வலு விழந்து இருந்ததை, புதுப்பிக்க வல்லுநர்குழு தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில், முதற்கட்டமாக ரூ.49 இலட்சம் மதிப்பில் கல்காரம் மற்றும் இராச கோபுரம் வலுவூட்டும் பணிகள் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு முடிவடையும் தறுவாயில் உள்ளது. இரண்டாவது கட்டமாக, கோபுரத்தினைப் புதுப்பித்தும், வண்ணம் வைக்க உத்தேசமாக ரூ.45 இலட்சம் அள விற்குத் தேவைப்படலாம். இரண்டாவது கட்டப் பணி களுக்கான விலைப்புள்ளிகள் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளது.

மேலும், குறிப்பிடத்தக்க முக்கியத் திருப்பணிகள் நடைபெற்றுள்ள திருக்கோயில்கள் விவரம்:

1. அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை தெற்கு மற்றும் மேற்கு கோபுரத் திருப்பணிகள் .. ரூ.16 இலட்சம்.

2. அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்-இரண்டாம் பிரகார கல் திருப்பணி .. ரூ.16 இலட்சம்.

3. அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு, சென்னை .. ரூ.60 இலட்சம்.

4. அருள்மிகு கோட்டைமாரியம்மன் திருக்கோயில், சேலம் - இராசகோபுரம் .. ரூ.10 இலட்சம்.

5. அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் - தியான மண்டபம் கட்டுதல் .. ரூ.10 இலட்சம்.

6. அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், உறையூர் - பிரகார மண்டபம் கட்டுதல் .. ரூ.10 இலட்சம்.

மேற்கண்ட திருப்பணிகள் மட்டுமன்றி, பொதுநல வசதிகளை அளித்து திருக்கோயில் வருவாயினைப் பெருக்கு வதற்காகத் திருமண மண்டபங்கள் கட்டுமானம் மேற் கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளன.

திருக்கோயில்களின் சார்பில் இடங்களில் கல்யாண மண்டபம் கட்டும் பணிகளுக்கு உபரி நிதியுள்ள திருக் கோயில்களில் நிதி உதவி பெற்றோ, அல்லது கடனாகப் பெற்றோ கல்யாண மண்டபங்கள் கட்டப்படும் என்று ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டு, 20 இடங்களில் திருமண மண்டபங்கள் இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட உள்ளது. இந்த அரசு பொறுப்பேற்றபின், திருக்கோயில்களில் 1991-இல் நடைபெற்ற குற்றங்களின் எண்ணிக்கை 404 ஆக இருந்தது. இந்த அரசு எடுத்த நடவடிக்கையினால் 1992-இல் 208-ஆகக் குறைந்துள்ளது.

திருக்கோயில்களில், காலங்காலமாகப் பயன்படுத்தப் பட்டு வந்த பழங்காலத்து இசைக் கருவிகள் தற்போது வழக்கொழிந்து வருவதைத் தடுக்க வேண்டும் என்றும், இவைகள் மீண்டும் திருக்கோயில்களில் பாதுகாத்துப் பயன்படுத்தப்படவேண்டும் என்ற நோக்கத்திலும், பஞ்ச முக வாத்தியம், எக்காளம், பாரிநாயனம், உடுக்கை, ஜெயகண்டி, பேரி, மத்தளம் மற்றும் யாழ் ஆகிய இசைக் கருவிகளை வாசிக்கும் திறமை வாய்ந்த இசைக் கலைஞர் களை இசைவித்து, அவர்கள் மூலம் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

திருக்கோயில்களில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் நாதஸ்வரம் மற்றும் தவில் ஆகியவற்றைப் பயிற்றுவிக்கும் பள்ளி ஒன்று பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் நடந்து வருகிறது. இந்தப் பள்ளியில் திருக்கோயில்களில் பயன்படுத்தக் கூடிய இதர இசைக் கருவிகளை- குறிப்பாக, பழங்கால இசைக் கருவி களை இசைக்கப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

பழங்காலத்து இசைக் கருவிகளைத் திருக்கோயில் களில் வாசித்து வந்து தற்போது வயது முதிர்வினால் ஓய்வுபெற்று வறுமையில் வாழும் இசைக் கலைஞர்களில் 100 நபர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.300 வீதம் ஓய்வூதியம் அரசு நிதியிலிருந்து வழங்கப்படவுள்ளது.

மதுரை, மீனாட்சியம்மன் திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில் 1962-அம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட கலைக்கூடம் தற்போது பழுதடைந்துள்ளது. இந்தக் கலைக்கூடத்தினை ரூ.10 இலட்சம் செலவில் புதுப்பித்து திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் கண்டுகளிக்கும் வகையில் புதுப்பிக்கப் பட உள்ளது.

பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம், பண்ணாரியில் அமைந்துள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் சார்பில் மேற்படி பகுதியில் வாழும் மலைவாழ் மக்கள், பின்தங்கிய வகுப்பினர் ஆகிய வகுப்பைச் சேர்ந்த பெண்கள், பயன்பெறும் வகையில் பெண்களுக்கான பாலிடெக்னிக் ஒன்று திருக்கோயில் உபரிநிதியிலிருந்து தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திருக்கோயில் பணியாளர்களுக்கு ஒரு சிறப்பு சேமநல நிதித் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத் தினால், பணியிலிருந்து ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அவர்களால் செலுத்தப்படும் தொகையுடன் ரூ.500 சேர்த்து வழங்கப்படும் என்ற திட்டம் ஏற்படுத்தப்பட வுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 8,000 பணியாளர்கள் பயன்பெறுவார்கள்.

உதவி ஆணையர் மற்றும் அதற்குமேல் நிலையிலுள்ள செயல் அலுவலர்கள் பணிபுரியும் திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள், 15 ஆண்டுக் காலத்திற்கு மேலாகப் பதவி உயர்வு ஏதுமின்றி, இருந்து வரும் பணியாளர்களுக்குத் தேர்வுநிலை ஊதியம் வழங்கும் திட்டம் இடப்பட்டுள்ளது. இதனால், ஓராயிரம் திருக்கோயில் பணியாளர்கள் பயன்பெறுவார்கள்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை

மண்வளம், நீர்வளம் ஆகியவற்றை அறிந்து மா, தென்னை, சவுக்கு, முந்திரி, தேக்கு போன்ற பயன்தரும் மரங்களை வனத்துறை, ஊரக வளர்ச்சித்துறை உதவியைக் கொண்டு பயிர் செய்யவும், அத்தகைய நிலங்களிலிருந்து பெறப்படும் பலன்களைப் பயிர்செய்யும் துறையும், திருக்கோயிலும் சம அளவில் பங்கிட்டுக் கொள்ளும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இந்து சமய அறநிலையத் துறையின் மண்டல மற்றும் கோட்ட அலுவலர்கள் தங்களது சொந்தக் கட்டடங்களில் இயங்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், தஞ்சாவூர், துணை ஆணையர் அலுவலகம் ரூ.20 இலட்சத்தில் கட்டப்படவுள்ளது. இந்த நிதியாண்டில் ரூ.10 இலட்சம் ஒதுக்கீச்செலவிடப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலிருந்தும் பக்தர்கள் வந்து புண்ணிய நீராடி வழிபாட்டினை மேற்கொள்ளும் புகழ்பெற்ற இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் அமைந்துள்ள தீவினை அழகுபடுத்தவும், வருகை தரும் பக்தர்களுக்கு அனைத்து வசதிகளை ஏற்படுத்தித்தரவும் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது.

பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி குன்றின்மீது அமைந்துள்ளது. இத்திருக்கோயிலைச் சுற்றி அமைந்துள்ள மலைப்பகுதி, மலை அடிவாரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்கள் ஆகியவற்றை அழகுபடுத்தவும், அங்கு வருகை தரும் பக்தர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தவும், ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது.

திருக்கோயில் சம்பந்தப்பட்ட கலைகளை விளக்கிக் காட்டும் பழம் பொருட்களையும், இந்து சமயத்தினை விளக்கிக் காட்டும் படங்களையும், உலோகத்திருமேனிகளையும், பழங்காலத்து நகைகள், புகைப்படங்கள், வாகனங்கள் ஆகியவைகளின் எழில்களைச் சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கும் வகையில் திருக்கோயில் கலைக்கூடம் ஒன்றினை மகாபலிபுரம் சாலையில் ரூ.30 இலட்சம் செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள அனைத்து முக்கியத் திருக்கோயில்களில் பக்தர்களின் வசதிக்காக ஒருங்கிணைந்த பயணிகள் தங்கும் விடுதிகள் ஒன்றினைத் திருக்கோயில் அருகாமையிலேயே அமைக்கும் திட்டம் ஒன்று இடப்பட்டுள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல் 30.5.93 வரை 190 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன. சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் மற்றும் கோவை, மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆகிய இரண்டு திருக்கோயில்களிலும் தங்கரதத் திருப்பணி வேலை செய்யப்பட்டு வருகிறது.


தமிழரசு

புதிய சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.72
அரையாண்டுச் சந்தா ... ரூ.36

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு',
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க

# மீனவர் மேன்மையுற... பிற்பட்டோர் நலம் பெற...
## - அரசு ஆற்றும் அரும்பணிகள்

மாண்புமிகு பிற்பட்டோர் நல, மீனளத்துறை அமைச்சர்

**திரு டி. ஜெயக்குமார்**

> **ஒவ்வொரு ஆண்டும் 1000 நபர்களுக்கு இலவசமாகத் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி தரப்படுகிறது. இதற்காகும் செலவை அரசே ஏற்கிறது.**
>
> **ரூ.228 கோடி மதிப்புள்ள கடல் பொருள் ஏற்றுமதி செய்து தமிழகம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது.**

**ந**ல்ல ஆட்சி என்பது அன்பு, ஆதரவு, பற்றுதல், பதவி, வலிவு, வளம் போன்றவற்றின் காரணமாக யாரொருவர் பக்கமும் சாராமல் அதே நேரத்தில் மக்கள் மீது அன்பும் ஆதரவும் ஈகைத் தன்மையும் காட்டி ஆட்சியைச் செம்மையாக நடத்துவதேயாகும். இதுபோன்ற ஆட்சியை மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கோலோச்சி வருவதால்தான் தமிழகத்தில் நல்லாட்சி மலர்ந்து, முக்களாட்சியாக, ஏழை எளிய மக்களின் முகங்களில் புன்னகை மலரும் நம்பிக்கையான ஆட்சியாகத் திகழ்ந்து வருகிறது.



பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மக்கள் அனைத்து வகையிலும் மேம்பாடு அடைந்துள்ளனர். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசில் எய்தியுள்ள சாதனைகளின் விவரங்களில் முக்கியமான சிலவற்றினை மட்டும் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க அனைத்து விடுதிகளிலும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே உள்ள விடுதிகளைத் தவிர ரூ.77.68 இலட்சம் செலவில் மாணவ மாணவியருக்கென 38 தங்கும் விடுதிகள் புதிதாகத் திறக்கப்பட்டு உள்ளன. இந்த ஆண்டும் 20 புதிய விடுதிகள் திறக்கப்படவிருக்கின்றன. வாடகைக் கட்டடங்களில் இயங்கும் விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் இயங்க ரூ.123.69 இலட்சம் செலவில் 13 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டும் 11 விடுதிகளுக்கு அனுமதி வழங்கப்படவிருக்கின்றது.

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ மாணவியருக்கு அளிக்கப்படும் சலுகைபோன்று, பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கும் இவ்வரசால்தான் இலவசத் தொழிற்படிப்பு வசதிகள் செய்துதரப்பட்டுள்ளன. அகில இந்தியப் பணிகளுக்கான தனிப்பயிற்சி நிலையத்தில் அனுமதி பெற இருந்த பெற்றோர் வருமான வரம்பு விலக்கப்பட்டுவிட்டது. மாணவ மாணவியரின் பொது அறிவை வளர்க்கும் பொருட்டு துறையின் அனைத்து விடுதிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளேடுகள் வழங்கும் புதுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. எல்லா மாணவ மாணவியர் விடுதிகளிலும் ரூ.15 இலட்சம் செலவில் சிறிய நூலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மண்பாண்டங்கள் செய்ய, வலுவிழந்த கையினால் சுற்றிச் சுற்றி வாடும் குயவர்களுக்கு மின்விசையால் இயங்கும் சக்கரம் ரூ.5 இலட்சம் செலவில் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

10 நடுநிலைப் பள்ளிகள் ரூ.11.19 இலட்சம் செலவில் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி இலவசமாக அளிக்கப்படுகிறது. இதற்காகும் செலவை அரசே ஏற்கிறது. 50 நபர்களுக்கு ரூ.4.34 இலட்சம் செலவில் 'மரைன் ரேடியோ' பயிற்சி தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம்

தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் 26.3.93 முதல் இயங்கத் தொடங்கிவிட்டது. இவ்வாணையம் தன்னுடைய நடைமுறை விதிகளை வரைவு செய்யும் பணியில் தற்பொழுது ஈடுபட்டுள்ளது.

இவ்வாணையத்திற்குக் கொடுக்க வேண்டிய மனுக்களை வட்டாட்சியர் அலுவலகங்களிலோ அல்லது மாவட்டாட்சியர் அலுவலகங்களிலோ கொடுக்கலாம். அல்லது அவ்வலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடலாம். மேலும், மனுக்களை, சென்னையிலுள்ள இவ்வாணையத்தின் அலுவலகத்திற்குக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்:-

**உறுப்பினர் செயலர்,**
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம்,
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக அலுவலகம்,
807, அண்ணாசாலை, 5-வது மாடி,
சென்னை-600 002.

ஒவ்வொரு ஆண்டும் 1000 நபர்களுக்கு இலவசமாகத் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயற்சி தரப்படுகிறது. இதற்காகும் செலவை அரசே ஏற்கிறது. 500 மாணவ மாணவியருக்கு இலவசமாக அரசின் செலவில் கணிப்பொறி பயிற்சி அளிக்கப்படுகிறது. மாணவ மாணவியருக்கு வழங்கும் உணவுக் கட்டணம் ரூ.180, ரூ.160, ரூ.120 என்ற விகிதங்களில் உயர்த்தப்பட்டு தொழிற்பயிற்சி, கல்லூரி மற்றும் பள்ளி மாணவ மாணவியருக்கு வழங்கப்படுகின்றன.

மதுரை மாவட்டத்தில் செக்கானூரணி, நாட்டார்மங்கலம், இராஜதானி ஆகிய மூன்று இடங்களில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டு உள்ளன. மாநில அளவில் விடுதிகளில் கூடுதலாக 500 மாணவ மாணவியரைச் சேர்த்துக் கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு கூடுதலாக ரூ.6.85 இலட்சம் தொடர் செலவினம் ஏற்படும். பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மேம்பாடு பெற, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்துக்குக் கடன் அளிக்க வசதியாகச் சமவிகிதப் பங்குத்தொகையாக ரூபாய் ஒரு கோடி வழங்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கென்று 25 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு, கைவினைப் பொருட்கள், ஊறுகாய், ஜாம் போன்றவற்றைத் தயாரிக்கப் பயிற்சி அளிக்கவும், இதனால் பெண்களின் வாழ்க்கைத்தரம் உயரவும், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 20 சதவிகித விளிம்புத் தொகை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 80 சதவிகிதத் தொகையை வங்கிகள் கடனாக வழங்கும்.

மாணவ மாணவியர் துறையின் இலவச உதவிகளைப் பெற பெற்றோரின் வருமான வரம்பு ரூ.12,000-லிருந்து ரூ.15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ரூ.15.30 இலட்சம் செலவில் சீர்மரபினர் பள்ளிகளில் கூடுதலாக நான்கு வகுப்பறைகள் கட்டப்படவுள்ளன.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைகள் வழங்கும் திட்டத்தில் நில எடுப்பில் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்து விரைவாகப் பயனாளிகள் வீட்டு மனைகளைப் பெறத் தனியாருடன் பேசித் தீர்த்தல் முறையில் எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் பயிற்சி பெற உதவித்தொகையை ரூ.500-லிருந்து ரூ.750 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அகில இந்தியப் பணிகளுக்கான தனிப்பயிற்சி மையம் சொந்தக் கட்டடத்தில் இயங்க சாலிக்கிராமத்தில் அரசு நிலம் பெறப்பட்டு ரூ.35 இலட்சம் செலவில் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ மாணவியருக்கு ஊக்கமளிக்கும் வகையில் பரிசுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ மாணவியருக்கு ஊக்கமளிக்கும் வகையில் பரிசுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விடுதிகளில் தங்கிப்படிக்கும் மாணவ மாணவியருக்கு ரூ.61.92 இலட்சம் செலவில் ஆண்டில் இரண்டு முறை சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் மாணவ மாணவியருக்கு இலவசப் புத்தகங்கள், எழுது பலகைகள் ரூ.24.92 இலட்சம் செலவில் வழங்கப்படுகின்றன. முடித்திருத்தகம், சலவையகம், நடமாடும் சலவையகம், அமைக்க உதவி செய்யப்பட்டு வருகிறது. சலவையாளர்களுக்கும், முடித்திருத்துவோர்க்கும், கல்லுடைப்போருக்கும் இலவசத் தொழிற் கருவிகள் வழங்கப்படுகின்றன.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மிகப் பிற்படுத்தப்பட்டோர் அனைவருக்கும் குடும்பம் ஒன்றுக்கு இலவசமாக 3 சென்ட் வீட்டுமனை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இதற்கென ரூபாய் ஒரு கோடி செலவு செய்யப்படுகிறது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனம், வடிமுனையுடன் கூடிய ஆழ்துளைக் கிணறு, சென்டிரிபியூகல் டீசல் பம்பு செட், சென்டிரிபியூகல் மின்சார பம்பு செட், மின்தெளிப்பான் மற்றும் மிதி வண்டி, ஒரு இணை காளை மாட்டுடன் மாட்டு வண்டி, ஒரு இணை காளை மாட்டுடன் டயர் பொருத்திய மாட்டு வண்டி, ஒரு இணை உழவு மாடு, கிணறு ஆழப்படுத்துதல், செயற்கை வைரம் வெட்டி மெருகேற்றுதல், இறால் வளர்ப்புப் பண்ணை ஆகிய திட்டங்களைத் தமிழ்நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டிற்கெனச் செயல்முறைப்படுத்த மொத்தம் ரூ.4.89 கோடி தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி நிறுவனத்திடம் கடனாகக் கோரி இதுவரை ரூ.1.54 கோடி பெறப்பட்டுள்ளது. இதுபோன்ற திட்டங்களுக்கு நிதி உதவி வேண்டுவோர் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொரு

ளாதார மேம்பாட்டு நிறுவனத்தை அணுகலாம்.

மீன்வளத் துறையில் மாண்புமிகு இதயதெய்வம் அவர்களின் அரசால் எய்தியுள்ள சாதனைகளின் விவரங்களைச் சுருக்கமாக இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். கீழ்க்காணும் திட்டங்களின் வாயிலாக, மீனவ மக்களின் கண்ணீர் துடைக்கப்பட்டு, நலங்கள் பல பெருகியுள்ளன.

இலங்கைக் கடற்படையினரால் இன்னலுறும் பாக் ஜலசந்தி பகுதியில் மீன் பிடிக்கும் மீனவர்களின் துயர் துடைக்க ரூ.7.5 கோடி செலவில் 1000 மீனவர் குடும்பங்களுக்குப் புனர்வாழ்வுத் திட்டம். கடல் மீனவர்களுக்கு ரூ.357 இலட்சம் செலவில் 2,100 இலவச வீடுகள் கட்ட உன்னதத் திட்டம். ஆண்டுதோறும் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் மரணமடைவோருக்கு ரூ.21,000 ஆகவும், ஊனமுற்றோருக்கு ரூ.10,500 ஆகவும் உயர்த்தியுள்ளது.

மீன்பிடிப்பு இல்லாத மாதங்களில், மீனவர்களுக்கு, அரசால் அளிக்கப்பட்ட பங்குத்தொகை ரூ.90-லிருந்து ரூ.720 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 63 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 10,000 மகளிருக்கு 30,000 இலவசக் கூடைகள் வழங்குதல். ஐந்து கடலோர மாவட்டங்களில் 34 கிராம மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு ரூ.16 கோடி செலவில் கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம்.

மீனவர்கள் விசைப்படகுகள் வாங்க அரசு மானியம் ரூ.50 இலட்சம். நன்னீர் மீன்குஞ்சு உற்பத்தி செய்ய மீன் வளர்ப்போருக்கு ரூ.12.5 இலட்சம் மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது. நன்னீர் இறால் குஞ்சு உற்பத்திக்கு ரூ.17.50 இலட்சம் மானியம். தனியார் இறால் வளர்ப்பிற்கு நில ஒதுக்கீடு, வங்கிக்கடன், அரசு மானியம் அளித்தல்.

மீனவ மாணவ மாணவியருக்கு ஆண்டுதோறும் கல்வி உதவித்தொகை வழங்குதல்.

தூத்துக்குடியில் ரூ.7.2 கோடி மூலதனத்தில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இறால் வளர்ப்புத் தொழில் மையம். மண்டபத்தில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் முத்து வளர்ப்பு இத் திட்டத்தில் வெற்றிகரமான முத்து வளர்ப்பு.



மானிய விலையில் டீசல் வழங்கும் திட்டம். சென்னை மீன்பிடித் துறைமுகத்தில் 100 டன் ஐஸ் உற்பத்தி நிலையம். சென்னைக்கு அருகேயுள் நீலங்கரையில் ரூ.25 இலட்சம் செலவில் இறால் குஞ்சு பொறிப்பகம் நவீனப்படுத்துதல். கடல் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தியை ரூ.4.05 இலட்சம் டன்னாக உயர்த்திடத் திட்டங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கன.

ரூ.228 கோடி மதிப்புள்ள கடல் பொருள் ஏற்றுமதி செய்து தமிழகம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது என்பதையும், மீனவர்களுக்குக் கூடுதல் வசதிகள் செய்து தரவேண்டி தூத்துக்குடி மீன்பிடித் துறைமுக அபிவிருத்திப் பணிகளுக்காக ரூ.31 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. என்பதையும் பெருமையோடு குறிப்பிட வேண்டும்.

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள பூம்புகார், வெள்ளப் பள்ளம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கோடிமுனை வள்ளவிளைக் கிராமங்களில் கரையோர வசதிகள் ரூ.30.01 இலட்சம் செலவில் அமைப்பதற்காக அரசு ஒப்பளித்துள்ளது. நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ் 1315 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்குவதற்கு மானியமாக ரூ.103.43 இலட்சம் ஒப்பளிக்கப் பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தில் ரூ.54 இலட்சம் செலவில் மீன் இறங்கும் தளம் கட்டி முடிக்கப்பட்டு 220 விசைப்படகுகள் அங்கு நிறுத்தப்படுகிறது. சென்னை மீன் பிடி துறைமுகத்தில் மீனவர்களின் வசதிக்காக வலை பழுதுபார்க்கும் இடம் அமைப்பதற்காக ரூ.2 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

ஏழை மீனவர்களின் நலனைக் கருதி, சென்னையில் சமூகக் கூடம் அமைப்பதற்கு ரூ.5 இலட்சம் ஒப்பளிக்கப் பட்டுள்ளது.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ஒரு உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை புதிதாகத் தொடங்கப்பட்டு, 28.7.92 முதல் இயங்கி வருகிறது. மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் மேலும் ஒரு உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.17 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் திருச்சினாங்குப்பம் கிராமத்தில் 492 அடுக்கு மாடிக் கட்டடங்கள் அமைப்பதற்கு ரூ.2.37 கோடி அரசு ஒப்பளிப்பு வழங்கி வேலை துரிதமாக நடைபெற்று வருகிறது.

சென்னையில் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்குவதற்காக ஒரு சிறிய ஊர்தி (Mini Van) வாங்குவதற்கு அரசு ரூ.2.50 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. வீட்டுக்கு ரூ.17,000 என்றிருப்பதை ரூ.26,000 என உயர்த்தியதால் கூடுதலாக ரூ.2 கோடி வரை செலவு ஆகிறது.

மீன் மகளிர் கூட்டுறவுச் சங்கங்களை வலிமைபடுத்தி, மீனவப் பெண்களுக்குக் கடன் வழங்க ரூ.20 இலட்சம் கடனுதவி வழங்கத் திட்டம். மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை வலிமைபடுத்த ஒவ்வொரு மாவட்டக் கூட்டுறவு வங்கியிலும் தனிப் பிரிவு ஏற்படுத்தி, குறைந்த வட்டியில் கடன் வழங்கி மீனவர்கள் வாழ்வை வளம் படுத்தும் திட்டம் ஆகியவை குறிப்பிடத் தக்க அம்சங்களாகும்.

மேலும் இத்துறையில் அரசு ஆற்றி வரும் அரும்பணிகளாவன:

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பங்குத்தொகை அளிக்க ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மீனவர் தொழில் செய்யாத வறட்சிக் காலங்களில் மீனவர் சேமிப்பு நிவாரணத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மீனவருக்கும் 4 மாதங்களுக்கு ரூ.270 வீதம் மொத்தம் ரூ.1080 வழங்க ஒதுக்கப்பட்ட தொகை ரூ.6.50 கோடி.

முகத்துவாரத்தை ஒட்டியுள்ள மீனவர்

கள் கடல் மீனவர்களாக அறிவிக்கப்பட்டு கடல் மீனவர்களுக்கான அனைத்துச் சலுகைகளும் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட அடிப்படையில் கடலோரப் பகுதிகள் முன்னேற்றத் திட்டம் வகுக்கப்பட்டு அனைத்து மீனவக் கிராமங்களும் எல்லா வசதிகளையும் பெற சீரிய திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

தொழில் செய்ய முடியாத நிலையில் உள்ள மீனவ முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கத் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 100 மீன் அங்காடிகள் முக்கியமான நகரங்களில் தொடங்கப்பட உள்ளன.

மீனவர் கிராமங்களில் மக்கள் தொடர்பு முகாம்களை நடத்தி அவர்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடலோரத்திலிருந்து கடலில் தொழில் செய்யும் விசைப்படகுகள் மற்றும் நாட்டுப் படகுகளோடு தொடர்பு கொள்ளக் கடலோரங்களில் மிக உயர்திறன் உள்ள ரேடியோ தொலைபேசி அமைக்கவும், படகுகளுக்கு 'வாக்கி-டாக்கி' தரவும் திட்டமிடப்பட்டுள்ளது.

காரங்காடு மீனவக் கிராமத்தில் 11 எக்டேர் நீர்ப்பரப்பில் இறால் பண்ணை மற்றும் பயிற்சி நிலையம்.

கடல் மீன் விற்பனைத் திட்டத்தின் கீழ் ரூ.14.35 இலட்சம் செலவில் சென்னை நடுக்குப்பத்தில் மீன் அங்காடி ஏற்படுத்தப்பட்டு 50 சைக்கிள்கள் மூலமும், குளிர் சாதன வசதியுடைய ஊர்தி மூலமும் மீன் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

ரூ.100 இலட்சம் செலவில் விரால் மீன் வளர்ப்புத் திட்டம்.

இலங்கையிலிருந்து மீட்கப்பட்ட தமிழக மீனவர்களுக்குத் தலா ரூ.3 இலட்சம் வீதம் நிவாரண உதவிகள் வழங்கி சொந்தமாகத் தொழில் செய்யும் நிலைக்குயரப் படகுகள் வாங்க ரூ.36 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனளம் ஆகிய துறைகளின் கீழ், அரசு பல அரிய திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றி வருகின்றது.

## பிற்பட்ட சமுதாய மாணவர்கள் பயன்பெற...

- தற்போது தமிழக அரசின் கீழ் பிற்பட்ட வகுப்பினருக்காக 426 பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளும், மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்காக 247 பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளும், சீர்மரபினருக்கு 111 விடுதிகளும், ஆக மொத்தம் 784 விடுதிகள் இயங்கி வருகின்றன. இவை தவிர ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் தனியே கல்லூரி மற்றும் பள்ளி விடுதிகள் நடத்தப்படுகின்றன.

பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மேலும் அதிகமாகப் பயனடைய வேண்டும் என்கின்ற விருப்பத்தின் காரணமாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இந்தக் கல்வி ஆண்டிலிருந்து இந்த விடுதிகளில் மேலும் 500 மாணவ மாணவியர்களுக்கான புதிய இடங்களை உருவாக்க ஆணையிட்டுள்ளார். இதில் பிற்பட்ட வகுப்பினருக்கான கல்லூரி மற்றும் பள்ளி விடுதிகளில் 300 இடங்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்கான விடுதிகளில் 200 இடங்களும் வழங்கப்படும்.

- தற்போது தமிழக அரசால் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவிகள் தங்கிப் பயில்வதற்காக நடத்தப்பட்டு வரும் கல்லூரி மற்றும் அரசுப் பள்ளி விடுதிகளில், மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டுக் குடும்ப வருமானம் ரூ.12,000-த்திற்கு மிகாமல் இருந்தால் மட்டும் விடுதிகளில் சேர்ந்து தங்கியிருக்க அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு வருமான வரம்பு 1989-ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்டது.

பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களிடமிருந்து பெறப்பெற்ற கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இத்தகைய பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் சேர்ப்பதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பை ரூ.12,000-த்திலிருந்து ரூ.15,000 வரை என உயர்த்தி ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணை 1993-94 கல்வி ஆண்டிலிருந்து அமலுக்கு வரும். இதன் காரணமாக, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர் பயன் பெறுவார்கள்.

# சுற்றுலாத்துறையில் புரட்சி!

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்

**திரு எஸ். நாகூர்மீரான்**

**மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் சுற்றுலாவைத் 'தொழில்' என அறிவித்து, தொழில் துறைக்கு வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளையும் குறிப்பாக, சலுகை விலையில் நிலம், முதலீட்டு மானியம், விற்பனை வரித் தள்ளுபடி, ஆடம்பர வரித் தள்ளுபடி மற்றும் சலுகை மின் கட்டண விலை போன்றவற்றை அறிவித்ததன் மூலம் சுற்றுலாத்துறையில் புரட்சி எற்படுத்தியுள்ளார்கள்.**

புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில், சிறுபான்மை மக்கள் பெற்ற நன்மைகள் என்ன என்பவை குறித்து எண்ணிப்பார்க்கிறேன். புரட்சித்தலைவி அவர்களின் சீரிய தலைமையில், தமிழகத்தில் 1,500 உலமாக்கள் உதவித் தொகை பெறுகிறார்கள்.

வக்பு வாரியக் கட்டடம் கட்டுவதற்கு ஆரம்ப நிதி உதவியாக ரூபாய் ஐந்து இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், முஸ்லீம் மக்களின் மையவாடிக்குச் சுற்றுச் சுவர் கட்ட ரூ.5 இலட்சம் நிதி உதவியும், பள்ளிவாசல்களை சீர் அமைப்பதற்கு ரூ.3 இலட்சமும், 100 புதிய உலமா பென்ஷன் வழங்க ரூ.3 இலட்சமும், இஸ்லாத்தின் இறுதிக் கடமையை நிறைவேற்ற 'மக்கா' செல்லும் புனிதப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு வசதிசெய்து கொடுத்திட ஆண்டுக்கு ரூ.2.25 இலட்சமும் வழங்கப் பட்டுள்ளது.



ஹஜ் செல்லும் யாத்திரிகர் நலம் காத்திட தமிழகம் முழுவதும் எல்லா மாவட்டத்திற்கும் பிரநிதித்துவமும், வக்பு வாரியத்திற்குத் தமிழகத்தில் பரவலாக பிரதிநிதித்துவமும் வழங்கப்பட்டுள்ளது. சிறுபான்மை நலக் கமிஷனுக்குப் பாதர்செயத் என்ற பெண்மணியைத் தலைவர் ஆக்கியது குறிப்பிடத்தக்கது.

இவையெல்லாம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் மலர்ந்த சீரிய திட்டங்கள். சிறு பான்மை மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதங்கள்!

**சுற்றுலாத்துறைக்குத் தந்த புரட்சித் திட்டங்கள்**

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் சுற்றுலாத் துறைக்குப் பல்வேறு புரட்சிகரமான திட்டங்களைத் தந்தார்கள். மேலும் சுற்றுலாவைத் 'தொழில்' என அறிவித்து தொழில்துறைக்கு வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளையும் குறிப்பாக, சலுகை விலையில் நிலம், முதலீடு மானியம், விற்பனை வரித் தள்ளுபடி, ஆடம்பரவரித் தள்ளுபடி மற்றும் சலுகை மின் கட்டண விலை போன்றவற்றை அறிவித்ததன் மூலம் சுற்றுலாத் துறையில் புரட்சி ஏற்படுத்தியுள்ளார்கள். சுற்றுலாத்துறையில் தனியார் முதலீடு அதிகரிக்க வாய்ப்பு அதிகம் இதன்மூலம் உள்ளது.

முட்டுக்காடு முதல் பாண்டிச்சேரி வரையிலுள்ள பகுதியைச் சிறப்புச் சுற்றுலாத்தலமென அறிவித்து, பல புதிய திட்டங்கள் வகுக்க வழிசெய்துள்ளார்கள். முக்கியமாகச் சுற்றுலாத் தலங்களுக்குச் சுற்றுலா வளர்ச்சிக்கெனச் சிறப்புக் குழு அமைத்து அவற்றின் மேம்பாட்டுக்கு வழிவகுத்துள்ளார்கள்.

சுற்றுலாத்துறைக்கு அதிக ஒதுக்கீடு செய்து பல புதியத் திட்டங்கள் அமல்படுத்த வழி செய்துள்ளார்கள். சுற்றுலா விழாக்களை அறிமுகப் படுத்தி வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிக நாட்கள் தங்கவும், உள்ளூர் மக்கள் வேலை வாய்ப்பைப் பெறவும் ஆவன செய்துள்ளார்கள்.

இப்படி இரண்டாண்டு ஆட்சியில் ஏற்றமிகு சாதனைகள். இன்னும் விண்முட்டும் சாதனைகள் கண்டிடக் காத்திருக்கும் தங்கத் தலைவியின் தலைமையில் தரணி போற்றப் பாடுபடுவோம்!

# வளரும் கிராமத் தொழில்

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்

**திரு பி. ஈஸ்வரமூர்த்தி**

**புரட்சித்தலைவி ஆட்சிக் காலத்தில், அதிக முன்னேற்றம் அடையும் விதத்தில் புதிய கிராமத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, செயற்கை வைரம் பட்டை தீட்டுதல் தொழிலுக்கான 18 கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புதிய கதர் அங்காடிகள் பல திறக்கப்பட்டுள்ளன. கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனையும் உயர்ந்துள்ளது. இலட்சக் கணக்கான கைவினைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.**



கிராமத் தொழில்களில் முக்கியமாக, புரட்சித்தலைவி ஆட்சிக் காலத்தில் அதிக முன்னேற்றம் அடையும் விதத்தில் புதிய கிராமத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக செயற்கை வைரம் பட்டை தீட்டுதல் தொழிலுக்கென 18 கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவை:

திருச்சி மாவட்டத்தில் ஸ்ரீரங்கம், மணச்சநல்லூர், அல்லித்துறை, மருங்காபுரி, கரூர் ஆகிய இடங்களிலும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில், திருநெல்வேலியிலும், தர்மபுரி மாவட்டத்தில் மத்தூர், பர்கூர், காவேரிப்பட்டினம் ஆகிய இடங்களிலும், செங்கல்பட்டு- எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் வங்கனூரிலும், வட ஆர்க்காடு- அம்பேத்கர் மாவட்டத்தில் அம்மூரிலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம், விழுப்புரம், உளுந்தூர்ப்பேட்டை, மரக்காணம் ஆகிய இடங்களிலும், திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் திண்டுக்கல், வேடசந்தூர் ஆகிய இடங்களிலும், செயற்கை வைரம் பட்டை தீட்டுதல் தொழிலுக்கெனக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

மின்னணுப் பொருட்கள் உற்பத்தித் தொழில்களுக்காக 7 கூட்டுறவுச் சங்கங்கள் வாணியம்பாடி, வாலாஜாபேட்டை, திருவொற்றியூர், திருவான்மியூர், அடையாறு, இராயபுரம், தெலுங்குபாளையம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுச் செயல்படுகின்றன.

சிறிய அளவில் இருந்த கதர்ப் பட்டு உற்பத்தி புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியின் கீழ் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளில் குறிப்பாக 1990-91-இல் இதன் உற்பத்தி ரூ.804.04-இலட்சமாகவும் 1991-92-இல் ரூ924.84 இலட்சமாகவும் 1992-93-இல் 1263.64 இலட்சமாகவும் இருந்தது. இதனை மேலும் விரிவுபடுத்திட 1993-94- ஆம் ஆண்டிற்கு கதர் பட்டு உற்பத்தி இலக்கு ரூ.1500 இலட்சமாக உயர்த்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே 179 கதர் அங்காடிகள் செயல்பட்டு வந்தன. அதனை மேலும் விரிவுபடுத்தி, கதர் மற்றும்கிராமப் பொருட்கள் விற்பனையைப் பெருக்கிட 23 புதிய கதர் அங்காடிகள் கீழ்க்கண்ட இடங்களில் திறக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| பெருந்துறை | .. | (தாராபுரம்) |
| பாலக்காடு | .. | (கோயம்புத்தூர்) |
| எடப்பாடி | .. | (நாமக்கல்) |
| மஞ்சூர் | .. | (ஊட்டி) |
| திருப்புவனம் | .. | (சிவகங்கை) |

| | | |
|---|---|---|
| ஆர்.எஸ். மங்களம் | .. | (இராமநாதபுரம்) |
| காரியாபட்டி | .. | (விருதுநகர்) |
| ஆலங்குளம் | .. | (விருதுநகர்) |
| சாத்தான்குளம் | .. | (தூத்துக்குடி) |
| கருங்கல் | .. | (நாகர்கோவில்) |
| அருமனை | .. | (நாகர்கோவில்) |
| கீழக்கடை | .. | (இராமநாதபுரம்) |
| நாசரத் | .. | (சிதம்பரனார்) |
| தொண்டி | .. | (இராமநாதபுரம்) |
| நன்னிலம் | .. | (நாகப்பட்டினம்) |
| செம்பனார்கோயில் | .. | (நாகப்பட்டினம்) |
| சேத்துப்பட்டு | .. | (திருவண்ணாமலை) |
| ஆவடி | .. | (காஞ்சிபுரம்) |
| அம்பத்தூர் | .. | (காஞ்சிபுரம்) |
| பல்லாவரம் | .. | (காஞ்சிபுரம்) |
| கண்ணமங்கலம் | .. | (திருவண்ணாமலை) |
| புளியபட்டி | .. | (ஈரோடு) |
| டி.வி.ரோடு | .. | (கோயம்புத்தூர்) |

மேலும் 25 புதிய கதர் அங்காடிகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ரூ.50 இலட்சம் முதலீட்டில் பாலியஸ்டர் மற்றும் பருத்தி இரண்டையும் சேர்த்து பாலியஸ்டர் பட்டைகள் தயாரிக்கும் அலகுகள் வாரியத்தினால் சேலம் சென்ன கிரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 100 பாலியஸ்டர் கிராமிய நூற்பு நிலையங்களில் 3000 நூற் போர் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் கிராமிய நூற்பு நிலையங்கள் மற்றும் கதர் உற்பத்திக் கிளைகளில் பணியாற்றும் நூற்போர் மற்றும் நெய்வோர் 1991-ஆம் ஆண்டில் தினக்கூலியாகச் சுமார் ரூ.10 மற்றும் ரூ.20-ம் முறையே பெற்று வந்தனர். 1.9.91 முதல் 15 சதவிகிதம் அவர்களுக்குக் கூலி உயர்வு செய்யப்பட்டு அமல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி நூல் நூற்போர் ரூ.12-ம் நெய்வோர் ரூ.23-ம் தினக் கூலியாகப் பெறுகின்றனர். இதற்குக் கதர் ஆணைக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இவர்களுடைய கூலியை மேலும் 15 சதவிகிதம் உயர்த்திடும் வகையில் கதர் ஆணைக்குழு அனுமதி அளித்துள்ளதின் பேரில் 1.12.1992 முதல் நூல் நூற்போர்க்கு ரூ.14 வரையிலும் நெய்வோர்க்கு ரூ.26 வரையிலும் தினக்கூலியாக உயர்த்திக் கொடுக்கத்திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 34,500 நூற்போர் மற்றும் 6,750 நெய்வோரும் பயன டைவர்.

முந்தைய ஆண்டில் 271.88 கோடியாக இருந்த கதர் மற்றும் கிராமத் தொழில் உற்பத்தி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் 1991-92-இல் ரூ.300 கோடியாகவும் 1992-93-இல் ரூ.330 கோடியா கவும் உயர்ந்துள்ளது.

கதர் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனையும் ரூ.305.62 கோடியிலிருந்து புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் 1991-92-இல் 339.10 கோடியா கவும், 1992-93-இல் 368.82 கோடியாகவும் உயர்ந் துள்ளது.

புரட்சித்தலைவியின் ஆட்சியின் கீழ் கதர் மற்றும் கிராமத் தொழில்களின் மூலம் 1.4.93 முடிய 11.93 இலட்சம் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப் பட்டு வருகிறது. அவர்களில் 4.35 இலட்சம் பெண் கைவினைஞர்களும் 2.58 இலட்சம் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினர்களும் அடங்குவர். புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் மட்டும் 1,73,000 பேருக்குக் கூடுதலாக வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் ஏற்கெனவே 7370 நபர்கள் கதர் மற்றும் கிராமத் தொழில்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தனி நபர் உதவி மூலம் வேலை வாய்ப்பைப் பெற்று வருகின்றனர்.

ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு 12 கதிர் நூற்பு மையங்களும் ரூ.1.44 இலட்சம் மதிப்பீட்டில் 2 தேனீ வளர்ப்பு மையங்களும் செயல்பட்டு வருகின்றன.





பர்கூர் தொகுதியில் மேலும் 6 கதிர் கொண்ட 6 புதிய நூற்பு மையங்கள் ரூ.3.77 இலட்சம் மதிப்பீட்டில் தொடங்கத் திட்டமிடப்பட்டது. இதில் 3 மையங்கள் மேலப்பட்டி, களர்பதி, சாமல்பட்டி ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன. இது போன்ற கிராமத் தொழில்களின் கீழ் 20 தோல் தொழில் கைவினைஞர்களுக்கு ரூ.50,000 மதிப்பீட்டில் 5 காலணி பணக் கூடங்கள் மத்தூரில் 3-ம் பர்கூரில் 2-ம் தொடங்கப்பட்டு செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

ஏற்கெனவே இப்பகுதியில் இயங்கி வரும் 23 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 676 நபர்கள் பயன் அடைந்து வருகின்றனர். மேலும் 4 புதிய கூட்டுறவுச் சங்கங்கள் பர்கூர், மத்தூர், ஊத்தங்கரை, கண்டனூர் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுச் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

இதில் செயற்கை வைரம் பட்டை தீட்டுதல் தொழிலின் கீழ் 120 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு 2 கூட்டுறவுச் சங்கங்களில் பயன் பெறுகின்றனர். இதுவன்றி செங்கல் தயாரிப்போர் மற்றும் சுண்ணாம்பு தயாரிப்போர் தொழில் கூட்டுறவு முன்னேற்றத்திற்காக 2 கூட்டுறவுச்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் 76 கைவினைஞர்கள் பயன் பெறுகின்றனர்.



★ பிறருக்கு ஒழுக்கத்தைப் பற்றிச் சொல்லுவதைவிடத் தன்னிடத்து அது எவ்வளவு இருக்கிறது என்று ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்கவேண்டும்.

- தந்தை பெரியார்

பனைத் தொழிலின் கீழ், இப்பகுதியில் ரூ.12.16 இலட்சம் மதிப்பீட்டில் 401 கைவினைஞர்கள் மத்தூரில் இயங்கி வரும் பனைப் பெருவளத் திட்டத்தின்கீழ் பயன் பெற்று வருகின்றனர். இதுவன்றி 10 பனைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து 120 கைவினைஞர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டு பனந்தும்பு சேகரிக்கும் தொழிலில் ஈடுபடுத்தப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

பர்கூர் தொகுதியில் தனிப்பட்ட கைவினைஞர்களுக்குக் கதர் ஆணைக் குழுவின் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின்கீழ், நிதி உதவி ஏற்கெனவே 36 கைவினைஞர்களுக்கு வழங்கி அதன் மூலம் 111 பேர் ரூ.2.35 இலட்சம் மதிப்பீட்டில் பயன் அடைந்து வருகின்றனர்.

இப்பகுதியில் கூடுதலாக 238 நபர்களுக்கு ரூ.21.62 இலட்சம் மதிப்பீட்டில் தொழில் தொடங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 31.3.1993 வரையில் 225 நபர்களுக்குப் பல்வேறு தொழில்களின் கீழ் நிதி வழங்கிட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது இயங்கி வரும் இருளர் புளி தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ.4.50 இலட்சம் மானியமாக அரசிடமிருந்து பெற தக்க நடவடிக்கை தனியே எடுக்கப்பட்டு வருகிறது.


# தமிழரசு

**16.7.93 இதழ்**

**திருநெல்வேலி**

**கட்டபொம்மன்**

**மாவட்டச் சிறப்பிதழாக**

**மலர்கிறது!**



- வரலாற்றுக் குறிப்புகள்
- வளர்ச்சிப் பணிகளின் சிறப்புகள்
- திருப்பும் பக்கமெல்லாம் தேன்சிந்தும் செய்திக் கதம்பம்!
- மண்வாசனை மணக்கும் சிறுகதை... மற்றும் கவிதை!
- மாவட்டம் குறித்து முழுமையாகத் தெரிந்து கொள்ள முத்தான வாய்ப்பு!

**தமிழரசு**

படிக்க — பயன்பெற — பாதுகாக்க



ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

